# நெல்லிக்கனி



## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## கரவெட்டி

## 2008

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

கரவெட்டி

# நெல்லிக்கனி



J/ NELLIADY MADHYA MAHA VIDYALAYAM

KARAVEDDY

# Nellikkani

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | நெல்லிக்கனி |
| பதிப்புரிமை | :- | மலர்க்குழு<br>யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| ஆசிரியர் | :- | மலர்க்குழு |
| வெளியீட்டுத்திகதி | :- | 25 ஒக்டோபர், 2008 |
| பக்கங்கள் | :- | xxi + - 28 - + - 85 - |
| அளவு | :- | 210 mm x 298 mm |
| வெளியீட்டாளர் | :- | மலர்க்குழு,<br>யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,<br>கரவெட்டி. |
| அச்சுப்பதிப்பு | : | "லக்சுமி ஓஃப்செற்" பதிப்பகம்,<br>நாவலர் மடம்,<br>நெல்லியடி. |

## கனியினுள்ளே .......


நல்லாசிகள். i - iv

நல் வாழ்த்துக்கள். v - xxi

மலர்க்குழுவிடமிருந்து ....

அதிபரின் இதயத்திலிருந்து ....

மனங்கனிந்த நன்றிகள்...

1921 இலிருந்து மக்கள் கல்லூரியாக .... -1- - -28-

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் மத்திய மகா வித்தியாலயம் 1 - 3
- *கலாநிதி. மா. கருணாநிதி*

ஆரம்பப்பிரிவில் கணிதம் கற்பித்தல் - ஜப்பானிய அணுகுமுறை 4 - 11
- *M.அப்துல்வாஹித் (ஆலோசகர் - "ஜெய்கா" செயற்றிட்டம்)*

நேர்த்தெறிப்புக்குழுவும் சீர்மிய உளவியலும் 12 - 15
- *வாழ்நாள் பேராசிரியர் முனைவர்.சபா ஜெயராசா*

தேசியவாதமும் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகளும் 16 - 24
- *பேராசிரியர். செல்லையா கிருஷ்ணராசா*

***Essentials in second language learning and the factors affecting second language learning.*** 25 - 32
- K.Sanmuganathan *(Lecturer)*

சட்டக் கல்வியின் முக்கியத்துவமும் தேவையும் 33 - 35
- *பொ.குமாரசாமி (சட்டத்தரணி)*

ஆசிரியர்களின் வகிபாகம் : சிறப்பான மாற்றத்தை நோக்கி.. 36 - 39
- *பேராசிரியர். மா.நடராஜசுந்தரம்.*

பாடசாலைக் கலாசாரம் 40 - 46
-- *கலாநிதி.த.கலாமணி*

பொதுத்தேவைகளுக்கான காணித்தேவைப்பாடும் கொள்வனவு முறைகளும் 47 - 48
- *அ.க.நடராஜா (சட்டத்தரணி)*

ஆசிரியர்களுக்கான சுய முகாமைத்துவம் - முன்னேற்றத்திற்கான வழிமுறை 49 - 55
- *மா.சின்னத்தம்பி (முதுநிலை விரிவுரையாளர்)*

***The Place of Literature in Learning*** 56 - 57

- *V. Sivarajasingam (Ret. Asst. Commissioner)*

மாணவர்களின் சுய கற்றற்றிறன் விருத்தியில் பாடசாலை நூலகம் 58 - 61

- *இரஞ்சிதமலர் அருளானந்தன் (ஆசிரியர்)*

அன்புள்ள மாணவனுக்கு.. 62

- *ஐ.சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)*

க.வீ. மேதையா? 63 - 64

- *வ.அ.தங்கமயில் (நிலஅளவையாளர்)*

அன்னையின் அற்புதக் கீதம் 65 - 68

- *சி.வே.ஞானசம்பந்தன் (ஆசிரியர்)*

மதுரைப் பண்டிதர் சச்சிதானந்த மாமேதை 69 - 73

“சச்சி” எங்கள் சர்வகலாசாலை 74 - 75

- *வை.க.தவமணிதாசன்*

காரைக்காலம்மையார் அருளிச்செய்த பதிகங்களின் திறனாய்வு 76 - 80

- *உ.பிரணவதர்சன் (மாணவன்)*

உலகமயமாக்கல். 81 - 83

- *த.அருணன் (மாணவன்)*

மதுவிலக்கு 84

- *செ.மயூரா (மாணவி)*

திருப்பிப்பாருங்கள் 85

- *ந.ஜெயக்குமார் (மாணவன்)*



# நல்லாசிகள்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

அன்புசார்பெருந்தகையீர் :

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் "நெல்லிக்கனி" என்னும் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த பாடசாலையாகும். பல நன் மாணாக்கர்களை உருவாக்கி கல்விக்கும் கல்வியோடு சேர்ந்த ஒழுக்கத்திற்கும் பணியாற்றிய பெருமைக்குரியது. இதன் வரலாறு அனைவரும் அறிந்துகொள்ளவேண்டிய விடயமாகும். இவ்வரலாற்றை "நெல்லிக்கனி" என்னும் பெயருடன் மலர் வெளிவருவது அனைவருக்கும் மகிழ்சியைத் தருவதாகும். மனிதவாழ்வின் கண்ணெனப் போற்றும் கல்வியை வளர்ப்பதற்கு இப்பாடசாலை அயராது உழைத்துள்ளது பெருமைக்குரிய விடயம்.

இதனையே வள்ளுவர்,

"கண்ணுடையோர் என்பார் கற்றார் – முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்"

தமிழரின் தனிப்பெரும் சொத்தாகிய கல்வியினைக் கற்பதற்கு இன்றுபோல் என்றும் பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்து கல்விச் சமுதாயத்திற்கு உதவ வாழ்த்துகின்றோம். இன்று வெளிவரும் "நெல்லிக்கனி" ஆன்மாவுக்கு இன்பத்தையும் உடலுக்குப் பலத்தையும் தருவதாக! யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விப் பணிக்காக இணைந்துகொண்ட ஆசிரிய, மாணவர்களை பாராட்டுகின்றோம். பாடசாலை பல வளர்ச்சிகளைக் கண்டு நன்மாணவர்களை உருவாக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



# நல்லாசிகள்

***சுவாமி சித்ரூபானந்தா***

***ஸ்ரீராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம்,***
***பருத்தித்துறை.***

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் கரவெட்டி, நெல்லிக்கனி என்ற பெயர் சூட்டிய மலர் வெளியிட உள்ளதாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதார்"

- திருக்குறள்-

இன்றைய நவீன உலகில் கல்வியுடன் சேர்ந்து ஆன்மீகக்கல்வி மிகவும் அவசியம் என்கிறார் சுவாமி விவேகானந்தர். இது நம்மிடை மிகவும் இல்லையென்றே கூறலாம். பணத்தைத்தேடும் கல்வி சமுதாயத்துக்கும் உலகிடை வாழ் மக்களுக்கும் என்றும் பயன்தராது. ஆகவே இப் புகழ் பூத்த வித்தியாலயம் இதனை மையமாக வைத்து எதிர்காலத்தில் திட்டம் தீட்டி செயல்படுத்தவேண்டும் என்பது அடியேனது பேரவா.

இதனைச்சார்ந்த சகலருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.





# நல்லாசிகள்

***பிரம்மஸ்ரீ கிரியாரத்னா சுப்ர கௌரிபால சிவாச்சாரியார்***

**பிரதம குரு,**
**தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில்,**
**நெல்லியடி,**
**கரவெட்டி.**

கல்வித் தெய்வமாகிய சரஸ்வதித்தாயின் உறைவிடமாகப் பெரும் புகழ் சூடி நிற்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வரலாற்றையும், சிறப்புகளையும் கூறும் வண்ணம் “நெல்லிக்கனி” எனும் பெயர் தாங்கி பாடசாலை வெளியீடாக நூல் வெளிவருவது அறிந்து பெருமிதம் அடைகிறேன். கல்லூரியின் உயர்வையும், புகழையும் பேசும் வண்ணம் “நெல்லிக்கனி” எனும் பெயர் சூடி மலர் வெளிவருவது எமது ஊருக்கே பெருமை சேர்க்கின்ற ஒன்றாகும்.

மேலும் இப்பாடசாலை அதிபர் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய திருவாளர் செ. சேதுராஜா அவர்களும், அவர் சார்ந்த ஆசிரியர்களும் பாடசாலைக்காக ஆற்றிவரும் பெரும்பணி போற்றுதலுக்குரியதாகும். எதிர்வரும் நன்னாளில் மலரப்போகும் மலருக்கு எனது ஆசிகளைக் கூறுகின்றேன். அது மாத்திரமல்ல அதிபர் ஆசிரியர்களுக்கும், மாணவ மணிகளுக்கும் நூல் வெளியீடு சம்பந்தமாகச் சிந்திக்கின்ற ஒவ்வொரு அன்பு உள்ளங்களுக்கும், உபதேச குருநாதராக விளங்குகின்ற ஸ்ரீ தடங்கன் புளியடி முருகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது அன்பு கலந்த அருளாசிகளைக் கூறி அமைகிறேன்.

சுபம்.

“இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க”





# நல்லாசிகள்

வண. சி. ஆனந்தகுமார்
பங்குத் தந்தை,
கரவெட்டி.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது வரலாற்று ஆவணமாக "நெல்லிக்கனி" என்னும் படைப்பினைப் பிரசவிப்பதை அறிகையில் பேருவகை கொள்கின்றோம். இம்முயற்சி நல் விளைவுகளைத் தரவும், பலரது ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்குத் தூண்டுதலாக இருக்கவும் எல்லாம் வல்லோனை இறைஞ்சுகின்றோம்.

வேர்கள் மறக்கப்பட்டு, வரலாறு புதைக்கப்படும் யுகத்தில் நாம் வாழ்கின்றோம். தப்பிப் பிழைத்தலுக்கு என்ன வழியென சாதாரண விலங்குகளைப் போல் தேடித் தவித்து அலைந்து திரிகின்றோம். மனிதவாழ்வின் ஊற்று, உச்சம் பற்றி சிந்திக்க முடியாதோராய், சிந்தனை தடைப்பட்டு, வாழ்வு பிறழ்ந்து எங்கோ எதுக்கோ அலைகின்றோம். இவ்விமுவையில் எமது அடுத்த சந்ததி!!!

இத்தகைய சூறாவளியின் மத்தியில் இம் மகா வித்தியாலயம் எடுக்கும் இம்முயற்சி மிகவும் போற்றத்தக்கது. இதற்குத் தூண்டுகோலாயிருந்தவர்கள் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

இவ்வாக்கத்தைப் பிரசவிக்கும்போது ஏற்படும் வலியை சகித்து, காலத்தால் சிறந்த நற்செயல் செய்த ஒவ்வொருவரையும் அன்புடன் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம். அவர்களது சிந்தனை மேலும் சிறக்க, இவ்வித்தியாலயத்தின் புகழ் மேலும் ஓங்க இறைவனை வேண்டுகின்றோம்.





# நல் வாழ்த்துக்கள்

**உயர்திரு. கந்தையா அரியநாயகம்**

மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

யாழ்ப்பாண மாவட்டத்தில், வடமராட்சிப் பிரதேசத்தில் புகழ் பூத்து மிளிரும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கல்விச் சமூகம் "நெல்லிக்கனி" எனும் கல்விப் புலம் சார்ந்த நூலினை வெளியிடுவதனை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் அந்நூலிற்கு வாழ்த்துச் செய்தியொன்றை அளிப்பது மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையானுழை"

எனும் திருவள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிக்கிணங்க அமைந்த ஆக்கமே இந்நூலாக பரிமாண வளர்ச்சி பெற்றுள்ளது என்றால் அது மிகையாகா. "நெல்லிக்கனி" பல மாணவ மணிகளினதும், கல்வியியலாளர்களினதும் கையாக்கத்தின் பெயரில் வெளிவந்துள்ளது. இந்நூலானது இக்கல்லூரியின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் ஆவணமாக மட்டுமல்லாது, மாணவர்களின் ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வெளிக் கொண்டுவரும் ஊடகமாக அமைந்திருப்பது பெருமை தருவதாக உள்ளது.

மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளை மட்டுமன்றி, கல்விசாரா வேறு செயற்பாடுகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவது பாடசாலைகளினதும், கல்விக் கூடங்களினதும் கடமையும் பொறுப்புமாகும். ஒரு மாணவன் கல்விசாரா ஏனைய ஆற்றல்களையும் வளர்ப்பதன் மூலமே ஆளுமைமிக்கவனாக சமூகத்தில் காலடி பதிக்க முடியும். அவ்வாறான ஏனைய ஆற்றல்களை வளர்ப்பதன் பிரதான களமாக பாடசாலை விளங்குகின்றது. ஒவ்வொரு மாணவனின் ஆளுமை வளர்ச்சிக்கும் கல்விக் கூடங்களின் பங்கு மிக அவசியமானதாகும். யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் "நெல்லிக்கனி" இச்சேவையை சிறப்புற செய்கின்றது என்பதில் ஐயமில்லை.

இக்கல்லூரியின் முயற்சியானது இத்துடன் வரையறைக்கு உட்பட்டு நின்றுவிடாமல், தொடர்ந்தும் பல முயற்சிகளை எடுத்து ஆக்க வளர்ச்சியுடன் நடைபோட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன், இந்நூல் சிறப்புற வெளிவரப் பங்காற்றிய பாடசாலைக் கல்விச் சமூகத்திற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும், மன மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

க.அரியநாயகம்
மாவட்ட நீதிபதி,
பருத்தித்துறை.



# நல் வாழ்த்துக்கள்

**திரு. இ. இளங்கோவன்**

செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வட மாகாணம்,
திருகோணமலை

***நெல்லிக் கனியாய் திகழ........***

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கௌரவ கல்வி அமைச்சர் C.W.W. கன்னங்கர அவர்களின் முன்னெடுப்பில் சகல வசதிகளோடு உருவாக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயமாகும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் விடுதி வசதிகளுடன் கூடி இருந்தமையால் அகில இலங்கை ரீதியாக தரம் 8 இல் புலமைப்பரிசில் சித்தியடைந்த ஏழை மாணவர்களை சேர்த்து கற்பித்து பெருமை பெற்ற கல்விக் கோயிலாகும்.

மலையகம், தென்னகம், மன்னார், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டு, தேசிய சேவை பயிற்சி வழங்கி அவர்களை ஆளாக்கிய பெருமை கொண்டது.

நீண்ட காலத்தின் பின்னர் மத்திய மகா வித்தியாலயத்தின் நடந்த பாதை, நடக்கும் பாதையை ஆவணம் ஆக்கும் முயற்சியே "நெல்லிக்கனி" எனும் வெளியீடாகும். அதியமான் ஒளவைக்குத் தந்த அரிய"நெல்லிக்கனி" போல் சுவையானதாகவும் அறிவுப் பெருக்காகவும் அமைந்து மாணவர்களுக்கும், வரலாற்றினைத் தேடுபவர்களுக்கும் ஊற்றாக அமைகின்றது.

இச் சஞ்சிகை வெளியீட்டில் முன் நின்று உழைத்த அதிபர், ஆசிரியர், மாணவர்களைப் பாராட்டுவதுடன் "நெல்லிக்கனி" தொடர்ந்தும் உள்ளங்கையில் கிடைக்க அவாவி நிற்பதுடன், மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.இளங்கோவன்.
செயலாளர்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு. க. கணேஷ்**
*அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

"அறிவு ஒளிர சால்பு சிறக்க" என்ற மகுட வாசகத்தின் கீழ் ஒன்றுபட்டு உழைக்கும் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி "நெல்லிக்கனி"யை உலகுக்களிப்பது உவந்து போற்றுதற்குரியது. இது அதியமான் ஔவைக்களித்த கனியை நினைவூட்டுகின்றது.

நீடுழி வாழ வழி சமைக்கும் "நெல்லக்கனி" நல்லாரோக்கியத்திற்கு வித்தாவது போல் இம் மலரில் மணங்கமழும் கல்விப்புலத்தின் செழுமை நுகர்வோர் உள்ளத்தினைப் பண்படுத்தி பயன்பெற வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்வுக்கான கல்வியாகவும், கல்வியாளர் சமூகத்திற்குப் பயன் நிறைந்த நல்வளர்ச்சியை ஏற்படுத்த வல்லவர்களாக வாழவும், வளரவும் வேண்டும் என்ற சிந்தனைக்கு விருந்தாக இம்மலர் செழுமையுற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்வைப் பயன்நிறைவுடையதாக்குவதன் ஊடாக வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் "நெல்லிக்கனி" பல்லாண்டு காலம் நீடூழி நிலைத்து நிலைபேறான அபிவிருத்திக்கு வித்திட உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க. வளர்க.

க.கணேஷ்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்
யாழ்ப்பாணம்



# நல் வாழ்த்துக்கள்

**வாழ்நாள் பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை**

பணிப்பாளர்,
ஊடக வளங்கள்மற்றும் பயிற்சி மையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய "நெல்லிக்கனி" என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச பாடசாலைகள் ஒருசிலவே நிறுவப்பட்டன. பெரும்பாலான பாடசாலைகள் சமய சார்பு நிறுவனங்களாலும் தனியார்களினாலும் நிறுவப்பட்டன. இப்பின்புலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னணி அரச பாடசாலையாக 1940 களிலிருந்து திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரியில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பெற்று குறிப்பாக வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. கீழ் வகுப்புக்களில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் H.S.C வகுப்புக்களில் குறிப்பாக விஞ்ஞானப் பிரிவுகளில் வடமாகாணம் முழுவதையும் சேர்ந்த புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களும் இக்கல்லூரியில் கல்வி பயின்றனர். 1950 களில் இக்கல்லூரியிலிருந்து விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பலர் முதலாந்தரத்தில் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெற்றுள்ளமை சிறப்பானதாகும். 1960களின் பின்னர் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான அனுமதி ஏனைய பாடசாலைகளுக்கும் விரிவாக்கப்பட்டதன் விளைவாக இக்கல்லூரி தனது முதன்மைநிலையைச் சற்று இழக்க நேரிட்டது. எனினும் இக்கல்லூரியின் அமைவும் இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களது அயராத சேவையும் காரணமாகத் தொடர்ந்தும் வடமராட்சியில் ஒரு முன்னணிப் பாடசாலையாக இது திகழ்ந்து வருகின்றது.

இவ்வித்தியாலயத்தின் கல்வி வரலாற்றில் இங்கு பயின்றுவந்த பெண் பிள்ளைகளைப் பிரித்தெடுத்து வடமராட்சி மகளிர் வித்தியாலயம் உருவாக்கப்பட்டபோதும் பின்னர் நாட்டு நிலைமையினால் ஏற்பட்ட சில குறிப்பிட்ட தாக்கங்களினாலும் இப்பாடசாலையின் பலம் பாதிக்கப்பட்டதெனினும் தன்னலங்கருதாத அர்ப்பணிப்பான அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் அயராத முயற்சியினால் இக்கல்லூரி மீண்டும் நல்ல நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளமையையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரி இன்னும் சில ஆண்டுகளில் நூற்றாண்டு காணவிருக்கும் நிலையில் காலத்திற்குக் காலம் பல சவால்களுக்கு முகங்கொடுத்து கல்லூரிச் சமூகம் ஆற்றிவரும் பங்களிப்பினைப் பாராட்டுவதோடு "நெல்லிக்கனி" மலரினை ஆக்குவதற்கு பாடுபட்ட அதிபர், மலர்க்குழு ஆகியோருக்கு வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.
கல்விப்பணி தொடரட்டும்.

பொ.பாலசுந்தரம்பிள்ளை.
வாழ்நாள் பேராசிரியர்.



# நல் வாழ்த்துக்கள்

பேராசிரியர்.நா.சண்முகலிங்கன்

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நெல்லிக்கனியின் வரவு நெஞ்சுக்கு மகிழ்ச்சி தருகின்றது.

வடமராட்சி கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக் கண்களில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் இடம் குறிப்பிடத்தக்கது.

எங்கள் புலமை மரபுக்குப் பெருமை தரும் பல அறிஞர்களையும், சமூகப் பயனான ஆளுமைகளையும் எமக்களித்த கல்விச்சாலையின் வரலாற்று ஆவணமாய் பதிவுபெறும் நெல்லிக்கனியின் உருவாக்கத்திற்காய் உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

"அதியமான் ஔவைக்குத் தந்ததான்" ஆற்றலுடன் நெல்லிக்கனியின் ஆக்கங்கள் நிலைபேறான பயன்களை சமூகத்திற்காக்க என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர். நா.சண்முகலிங்கன்
துணைவேந்தர்,

# நல் வாழ்த்துக்கள்



**திரு. வீ. இராசையா**

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்
திருகோணமலை.

மனிதனின் மறுக்கப்படவொண்ணா பிறப்புரிமையாகிய கல்வி மனிதவள மேம்பாட்டிற்கும் அதனால் விளையும் மகிழ்ச்சிகரமான மனிதவாழ்வுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இலங்கையின் பொதுக்கல்விச் செயன்முறையின் ஆதாரமாக விளங்கும் பாடசாலைகளின் அபிவிருத்தி நிலைமைகள், கீர்த்திநாமங்கள், சாதனைகள் என்பன கல்வி வளர்ச்சியின் குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு பாடசாலையின் கல்விக் கலாசாரம் என்பது இக்குறிகாட்டிகளோடு பின்னிப்பிணைந்துள்ளது. இவ்வகையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் கடந்தகால மற்றும் நிகழ்கால வளர்ச்சிப்போக்கினை வரலாற்று ஆவணமாக்கும் நோக்கிலும் வருடாந்தப் பரிசளிப்புவிழாவினைச் சிறப்பிக்கும் வகையிலும் நீண்டகாலத்தின் பின்னர் கல்லூரிச்சமூகத்தினால் வெளியிடப்படும் “நெல்லிக்கனி” மலருக்கான வாழ்த்துக்களை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் வசதிபடைத்தோருக்கும் வாய்ப்புக் கிடைத்தோருக்கும் வசதிமிக்க பாடசாலைகளால் தரம் கூடிய கல்வி வழங்கப்பட்டுவந்தது. வறிய, கிராமப்புற மக்களுக்கு இவ்வசதிகள் கிடைக்கவில்லை. இம்மக்களுக்கு குறைந்தளவில் வழங்கப்பட்டுவந்த கல்விதானும் தரம் குறைந்ததாகவே காணப்பட்ட சூழலில் பொருளாதாரத்தில் நலிவுற்ற கிராமப்புறங்களைச் சேர்ந்த இச்சிறார்களுக்கும் வள வசதிகளுடன்கூடிய தரமான கல்வியை வழங்கும் முற்போக்கான சமூகநோக்குடன் உருவாக்கப்பட்ட இக்கல்லூரியின் சேவையும் புகழும் நாடளாவியரீதியில் உயர்ந்து நிற்கின்றன. இக்கல்லூரியில் கல்வி பயின்றவர்கள் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்பதவிகளில் உள்ளனர். பாடவிதானச் செயற்பாடுகளின் சிறப்புடன் விளையாட்டுக்கள், கடேற், சாரணியம் முதலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளூடாக ஆளுமைமிக்க நல்ல மாணாக்கர்களை உருவாக்கி சமூகத்திற்கு உயர் பங்களிப்பை நல்கிய இக்கல்லூரியின் பழைய மாணவனாக வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். ஆண், பெண் மாணவர்களுக்கான தரமான விடுதி வசதிகளையும் பூரணத்துவமுடைய விவசாயப் பண்ணையினையும் தொழில்நுட்ப அலகினையும் கொண்டு விளங்கிய இக்கல்லூரியில் இலங்கையின் சகல பிரதேசங்களிலிருந்தும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் தரம்மிக்க கல்வியைப் பெற்றுவந்தனர். துறைசார்ந்த மன்றங்களினூடாக மாணவர்களது ஆளுமை விருத்திசெய்யப்பட்டது. அக்காலத்தில் “வசந்தம்”, “சிந்தனை” ஆகிய பெயர்களில் தரமான ஆக்கங்களைக்கொண்ட சஞ்சிகைகள் வெளிவந்து ஒளிபரப்பின.

தற்போது இக்கல்லூரி மீண்டும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளமை மன மகிழ்வைத் தருகின்றது. பொதுப் பரீட்சைகளிலும் விளையாட்டுக்கள், மொழித்திறன் போட்டிகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் - கணிதம் சார்ந்த போட்டிகளிலும் இக்கல்லூரி மாணவர்கள் வலய, மாவட்ட, மகாண மற்றும் தேசிய மட்டங்களில் வெற்றிபெற்று வருடாவருடம் தமது திறன்களை வெளிக்காட்டி வருகின்றனர். மாணவர்களது ஒழுக்கமும் ஆளுமை விருத்தியும் மேம்படுவதற்காக இக்கல்லூரியின் வளவசதிகளையும் வாய்ப்புக்களையும் இப்பிரதேச மக்கள் பயன்படுத்தி வருவது திருப்தியளிக்கின்றது. இந்நிலையில் இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகம் “நெல்லிக்கனி” என்னும் மலரினை காலத்தின் தேவைகருதி வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும். “நெல்லிக்கனி” நிலைபெறவும் பரிசளிப்பு விழா சிறப்புறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

“அறிவு ஒளிர சால்பு சிறக்க”

வீ.இராசையா.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

வடக்கு மாகாணம்,

திருகோணமலை.



# நல் வாழ்த்துக்கள்

***திரு. வே. தி. செல்வரத்தினம்***

***மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,***
***யாழ்ப்பாணம்.***

வடமராட்சியின் மையத்தில் அமைந்து வடமராட்சியின் சகல பகுதிகளிலுமிருந்து வரும் மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும் கலாலயமாக யா / நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் திகழ்கின்றது. நவோதயப் பாடசாலையான இவ்வாலயம் மாணவர்களுக்கு கலை, கவின்கலை, விஞ்ஞானம், மொழிகள், தொடர்பாடற்கல்வி, எண் என்பனவற்றைப் போதித்து கல்வி அடைவில் உச்ச எண்ணிக்கையைப் பொதுப் பரீட்சையிற் காட்டியுள்ளதைப் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டும். அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாட்டில் முக்கியமாக விளையாட்டில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிற் சாதனைகள் பலவற்றைப் புரிந்து இப்பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிக் காத்து வருகின்றது. நவீன கல்விச் சிந்தனையான தேர்ச்சி மையக் கல்வியையும் தேடலுடனான கற்றலிலும் சிறப்பான முறையிற் கற்று உலகமயமாக்கலில் ஒன்று சேர்கின்றது என்றால் மிகையாகாது. மனிதத்தின் ஐந்து வகுதிகளான உடற்றகமையின் பலமும், மூளையின் சமநிலையும், ஒழுக்கத்தின் சீரிய தன்மையும், புத்தியில் கூர்மையும் ஆன்மீகத்தில் உயர்வாகவும் உள்ள வளர்ச்சி இங்குள்ள ஆசிரியர்களாலும், நெறிப்படுத்தும் அதிபரினாலும் வழங்கப்படுகின்றது. “நெல்லிக்கனி” என்னும் சஞ்சிகையை வெளியிடும் இக் காலத்தில் இப்பாடசாலைக்காக உழைக்கும் ஆசிரியர்களையும் அதிபரையும் பாராட்டுவதை ஒரு பேறாகக் கருதுகின்றேன். யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சகல வளங்களையும் பெற்று மாணவர்களின் தேர்ச்சிகள் வளர உழைக்க பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிச்சை நிலை முனியாது கற்கை நன்றே”

வே.தி.செல்வரத்தினம்.
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு. வ. செல்வராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

கலாநிதி C.W.W கன்னங்கராவின் சிந்தனையில் உதித்த முத்துக்களிலொன்றான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் "நெல்லிக்கனி" மலருக்கு வாழ்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தொகுதிதோறும் மத்திய மகா வித்தியாலயமொன்றைத் தோற்றுவிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைத் தொகுதியில் இப்பள்ளிக்கூடம் உருவாக்கப்பட்டது. "கல்வி நிறுவனமொன்றின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டியது எதிர்காலப் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய விதத்தில் சிறுவர்களைச் சமூகமயமாக்குவதாகும்." என டெர்கயிம் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் இப்பள்ளிக்கூடம் சமூகமயமாக்கற் செயற்பாட்டைச் செவ்வனவே நிறைவேற்றியுள்ளது. பொதுக்கல்விச் செயற்பாட்டை வலுப்படுத்தி, வளமான மாணவர்களைச் சமூகத்திற்கு வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டுள்ளது. ஜோன் டூயி குறிப்பிட்டது போன்று "சமூகத்தின் ஒரு சிறுமாதிரி உருவமாக" இப்பள்ளிக்கூடம் விளங்குகிறது.

பள்ளிக்கூடம் எனும் உருவுக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் மிளிரும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் "நெல்லிக்கனி" இரசமாகி இனிக்க வாழ்த்துகிறேன்.

வ.செல்வராசா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.



# நல் வாழ்த்துக்கள்

***திரு. சி. சத்தியசீலன்***

**பிரதேச செயலர்,**
**கரவெட்டி.**

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தினால் வெளியிடப்படும் "நெல்லிகனி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட இக்கல்லூரியானது பல கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கிப் பெருமையினைப் பெற்றிருக்கின்றது. இக்கல்லூரியினை கடந்த காலங்களில் சிறப்பாக வழிநடத்திச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பும் தற்போதைய அதிபர் திரு. S.சேதுராஜா அவர்களின் கடின உழைப்பும், விடாமுயற்சியும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையும் காரணமாக, கல்விச் செயற்பாடுகளிலும், புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் இக்கல்லூரி சிறப்புற்று விளங்குவதைக் காண முடிகின்றது. இக்கல்லூரி மாணவர்கள், கல்வியிலும் விளையாட்டுப்போட்டிகளிலும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பது இக்கல்லூரியின் திறமைக்குச் சான்றாக உள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கத்தின் இலங்கைக்கிளை, வெளிநாடுகளிலும் செயற்பட்டு வரும் கிளைகள் என்பன இக்கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி வருவது கல்லூரியினுடைய செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாகவுள்ளது என்பதை குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இக்கல்லூரி எதிர் காலத்தில் இன்னும் பல சாதனைகளையும், பெருமைகளையும் பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டி பிரார்த்திப்பதுடன் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.



# நல் வாழ்த்துக்கள்

திரு. இ. வரதீஸ்வரன்
பிரதேச செயலர்,
பருத்தித்துறை.

வடமராட்சி மண்ணின் புகழ் பூத்த பாடசாலைகளில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முக்கியமானதொன்றாகும். ஆரம்பக்கல்வி முதல் உயர் கல்விவரை இப்பாடசாலையிலேயே நான் கல்வி பயின்றவன் என்றவகையில் இப்பாடசாலையின்மீது தனி மதிப்பும் மரியாதையும் எனக்குண்டு. தற்போது இப்பாடசாலை பொதுக்கல்வித் துறையிலும் சாதனைகள் புரிந்து வருவதையிட்டு பெருமைப்படுகின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிபரும் ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும், புலம் பெயர்ந்து வாழ்கின்ற பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் ஆர்வத்துடன் மேற்கொண்டுவரும் ஆக்கபூர்வமான பங்களிப்புக்களினால் இப்பாடசாலை தற்போது புதிய பரிமாணத்தில் வளர்ச்சியடைந்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வேளையில் "நெல்லிக்கனி" எனும் மலரினை இப்பாடசாலைச் சமூகம் வெளியிடுவதை எண்ணி மகிழ்வடைகிறேன். இம்மலரானது இப்பாடசாலைகளின் வரலாற்று ஆவணமாகவும் கல்விச் சமூகத்திற்குப் பயனுள்ள நூலாகவும் அமைய எனது நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இ.வரதீஸ்வரன்,
பிரதேசசெயலர்,
பருத்தித்துறை.



# நல் வாழ்த்துக்கள்

திரு. க. அம்பலவாணர்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

யா/நெல்வியடி மத்திய மகா வித்தியாலயம் வெளியிடும் நெல்லிக்கனி மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள இப்பாடசாலை கல்விமான்களையும் விளையாட்டு வீரர்களையும் உருவாக்கியிருக்கின்றது. வசதியான விடுதிகளைக் கொண்டிருந்த காரணத்தால் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கல்வி கற்று கல்வி மான்களாக உருவாகியிருக்கின்றனர். 1967 – 1969 காலப்பகுதியில் இப் பாடசாலையில் கல்வி கற்ற காலம் பொற்காலமாகும். தன்னலமற்ற தகைமை மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலினால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இம் மலருக்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

இலங்கையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மத்திய மகா வித்தியாலயமாக இது விளங்குகின்றது. கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. கல்விச்சிறப்பும் ஆளுமையும், ஆற்றலும் கொண்ட அதிபர் சேதுராஜா அவர்களது அயராத உழைப்பினாலும், தகைமையும் சேவை மனப்பாங்கும் உள்ள ஆசிரியர்களின் பணியினாலும் சகல வளங்களுடனும், சாதனைகளுடனும் நிமிர்ந்து நிற்கின்றது. கடந்த கால வரலாற்றையும் சாதனைகளையும் தாங்கி வருகின்ற இம்மலரானது பாடசாலைச் சமூகத்தவரிடையேயும் மாணவர்களிடையேயும் புதிய வேகத்தை நிச்சயமாக ஏற்படுத்தும்.

க.அம்பலவாணர்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.



# நல் வாழ்த்துக்கள்

**செல்வி.தி.பெரியதம்பி**

*முன்னாள் மாகாணக்கல்விப்பணிப்பாளர்.*

“நெல்லிக்கனி” மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் உவகையடைகின்றேன்.

கிராமப்புற மாணவர்கள் சமகல்வி வாய்ப்பினைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் யாழ் மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட நான்கு மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றாக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் உருவாக்கப்பட்டது. விசாலமான நிலப்பரப்பில் நிர்வாக அலகு, வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், தொழிற்கூடங்கள், விடுதிகள், விளையாட்டு மைதானம் என்பவற்றை உள்ளடக்கி பொலிவுடனும் சிறப்புடனும் விளங்கியது. புலமைப்பரிசில் பெற்று விடுதியில் தங்கி கல்வி கற்ற பல கிராமப்புற மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி வைத்த வரலாற்றுப் பெருமை இம்மகாவித்தியலாளத்திற்கு உண்டு.

பின்னர் மேற்கூறிய வசதிகளுடன் சிறந்த விவசாய அலகு ஒன்றையும் பாடசாலைத் தோட்டத்தையும் கொண்டதாகச் சிறப்புப் பெற்றது. தற்போது சமகால கல்விச்செயற்பாடுகளுக்கு ஏற்ப சிறந்த நூலகத்தையும் தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல் அலகு ஒன்றினையும் கொண்டு விளங்குகின்றது. விளையாட்டுத்துறையிலும் பல வெற்றிகளை ஈட்டிவருகின்றது. பரீட்சைப் பெறுபேறுகளிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது. பலம் வாய்ந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினையும் பழைய மாணவர்கள் சங்கத்தினையும் பக்க பலமாக கொண்டு பல அபிவிருத்தி வேலைகளை பாடசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் தற்போது பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுவரும் இம்மகாவித்தியாலயம் மேலும் வளர்ச்சி கண்டு சிறந்த சமூக சிற்பிகளை உருவாக்க வேண்டும்என்று பிரார்த்திக்கின்றேன்.

செல்வி. தி. பெரியதம்பி
முன்னாள் மாகாணக்கல்விப்பணிப்பாளர்.



# நல் வாழ்த்துக்கள்

***திரு. சி. சிவராசா***

***ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,***
***யாழ்ப்பாணம்***

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வெளியிடும் "நெல்லிக்கனி" மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் முன்னாள் கல்வி அமைச்சரும், இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படுபவருமான C.W.W. கன்னங்கரா அவர்களால் 1946ம் ஆண்டுக்காலத்தில் இப்பாடசாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. அன்று தொடக்கம் இற்றைவரை பல்லாயிரக்கணக்கான சான்றோர்களை இவ்வித்தியாலயம் உருவாக்கியுள்ளது.

இப்பிரதேசத்தில் 1987இல் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இவ்வித்தியாலயத்தின் முகப்பில் அமைந்த மாடிக்கட்டிடத்தொகுதி, நூல்நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நிர்வாகத்தொகுதி, வகுப்பறைகள் ஆகியன தரைமட்டமாயின. பல பெறுமதியான ஆவணங்களும் சாம்பலாகின. அழிவுற்ற ஆவணங்களைத் தொகுக்கும் நோக்கில் "நெல்லிக்கனி" எனும் மலர் வெளிக்கொணரப்படுகின்றது. இதுவோர் வரலாற்று ஆவணமாக அமையுமென்பதில் சந்தேகமில்லை. இம்மலர் வெளிவருவதற்கு உதவிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உதவிய சான்றோர்களை நினைவுகூறுதல் சாலப்பொருத்தமாகும். தற்போதைய அதிபர் உயர்திரு S.சேதுராஜா அவர்களின் சலியாத உழைப்பால் இவ்வித்தியாலயம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டு வருவதைக் காணும் போது பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவர்கள் காலத்தில் இவ் வித்தியாலயம் சகல துறைகளிலும் மிளிர வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஏனைய ஆர்வலர்கள் பல்வேறு வழிகளில் இதன் வளர்ச்சிக்கு உழைப்பதை நானறிவேன். அவர்களின் ஒத்துழைப்புக்கும், பங்களிப்புக்கும் எனது பாராட்டுக்கள். மேன்மேலும் இவ்வித்தியாலயம் வ்ளர ஆண்டவன் அருள்பாலிப்பாராக.

வாழ்க ! வளர்க !

சி.சிவராசா.
ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு. இ. ஐயாத்துரை**

தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாகும். ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்தக் கல்லூரி யாழ்மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் கல்விப்பணி செய்தது மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த மாணவர்களுக்கும் கல்விப் பணி செய்து சிறப்படைந்து பெருமைபெற்றுள்ளது. மேற்படி மத்திய மகா வித்தியாலயம் அன்று தொடக்கம் இன்றுவரை அறிஞர்கள் பலரையும் கல்விமான்கள் பலரையும் பல்துறை விற்பன்னர்கள் பலரையும் உருவாக்கி வருகின்றமை எல்லோரும் நன்கறிந்த விடயமாகும். இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாகத் திகழ்ந்தவர்கள் - திகழ்பவர்கள் இக் கல்லூரி கண்ட சிறப்புமிக்க அதிபர்களும் தன்னலங்கருதாது சேவையாற்றும் ஆசிரியர்களுமெனில் மிகையாகாது.

இக்கல்லூரி தனது சிறப்புமிக்க வரலாற்றுத் தடத்தில் பல ஏற்றங்களையும் இறக்கங்களையும் கண்டிருக்கின்றது. 1987 ஆம் ஆண்டிலும் 1991 ஆம் ஆண்டிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கைப் பெரிதும் பாதித்தன. ஆயினும், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தின் விடாமுயற்சியால் இவையெல்லாம் வெற்றிகொள்ளப்பட்டன. வடமராட்சியில் இதுவரை தேசியக் கல்லூரி ஒன்றேனும் இல்லையென்ற குறை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை தேசியப் பாடசாலை என்னும் நிலைக்குத் தரமுயர்த்துவதன் மூலம் தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பது எனது விருப்பம்.

இம் மகாவித்தியாலயத்திற்கு வரலாற்று ஆவணம் ஒன்று இல்லையென்பது நெடுநாள் குறையாகும். இதனையுணர்ந்து தீர்த்துவைக்கும் முயற்சியில் செயற்படும் பாடசாலை அதிபரின் முயற்சி எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

எனவே பொதுக் கல்வித்துறையில் புகழ்பூத்த யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வரலாற்று ஆவணமாகவும், அதன் தற்போதைய வளர்ச்சிப் பரிமாண வெளிப்பாடுகளையும் கல்விப் புலம் சார்ந்த தற்கால ஆக்கங்களையும் தாங்கிய "நெல்லிக்கனி" என்னும் மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்கள்.

வாழ்க நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்!
வளர்க அதன் பணி !

இ.ஐயாத்துரை.
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்



# நல் வாழ்த்துக்கள்

***திரு. மு. சுந்தரலிங்கம்***

*செயலாளர்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*

யா /நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இப் பரிசளிப்புநாளில் “நெல்லிக்கனியை” வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த ஆறு வருடகாலமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து செயலாளராகவும் உறுப்பினராகவும் மீண்டும் தற்போது செயலாளராகவும் பணிசெய்யும் வாய்ப்புக்கிடைத்தமையை பெரும்பேறாகக் கருதுகின்றேன். அதிபர் திரு. செ.சேதுராஜா அவர்கள் அதிபராக கடமை ஏற்ற பின்பு பாடசாலையில் பற்றாக்குறையாக இருந்த பல தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நிறைந்த பலன்களை தந்துள்ளன. ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இந்த ஆறு வருடகாலத்திற்குள் எத்தனையோ பல ஆண்டுகளுக்கான இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது எனலாம். தற்போது, கல்வி, விளையாட்டு மட்டுமல்லாது இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களது ஈடுபாடு, பங்களிப்பு, பெறுபேறு மிகவும் வளர்ச்சியுற்றுக் காணப்படுகின்றது.

ஏழைப்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு மத்திய மகா வித்தியாலயங்கள் உருவாக்கப்பட்டன. எமது வித்தியாலயம் அதன் குறிக்கோளில் இருந்து பிசகாது வசதி குறைந்த பிள்ளைகளையும் கல்வித்தரம் குறைந்த மாணவர்களையும் உள்வாங்கி அவர்களை மேல்நிலைப்படுத்தும் பணியை சிறப்புறவே செய்துவருகின்றது. அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

சிலரது பொது - தூரநோக்கு அற்ற தன்மையினால் தேசியப் பாடசாலையாக உருவாகும் நிலை தவறவிடப்பட்டு விட்டது. கல்விமான்களும், உயர்பதவிகளில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் வடமராட்சியை சேர்ந்தவர்கள் பலர் இருந்தும் தேசியப் பாடசாலையொன்றை வடமராட்சியில் உருவாக்கக் கூடிய சூழலும் வளங்களும் இருந்தும் தவறிவிட்டமை ஒரு வரலாற்றுத் தவறாகும். இது மிகவும் கவலைக்குரிய செயலாகும். ஆனாலும், தற்போதைய அதிபரின் காலத்திலேயே நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தேசியப் பாடசாலை அளவிற்கு வளர்ந்து சகல வளங்களிலும் தன்னிறைவு காணும் என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை.

இன்றைய விழாவில் பரிசில்களைப் பெறும் மாணவமாணவிகளுக்கும், நிதியங்கள் மூலம் ஒவ்வொரு வருடமும் நிதியுதவி செய்து வரும் அன்புள்ளங்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளிலும் கல்வி வளர்ச்சிக்கும் பௌதீகவளங்களின் வளர்ச்சிகளுக்கும் உதவிசெய்தவர்களுக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் இன்றைய விழாவினை முன்னின்று நடாத்தும் பழைய மாணவர் சங்கத்தினர்க்கும் அபிவிருத்திச்சபை சார்பாக நன்றிகளை கூறுவதுடன் விழாச்சிறப்புற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு.சுந்தரலிங்கம்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு.சி.சிற்றம்பலம்**

முன்னாள் அதிபர்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
கரவெட்டி.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாகும். ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்தக் கல்லூரி யாழ்மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் கல்விப்பணி செய்தது மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த மாணவர்களுக்கும் கல்விப் பணி செய்து சிறப்படைந்து பெருமைபெற்றுள்ளது. மேற்படி மத்திய மகா வித்தியாலயம் அன்று தொடக்கம் இன்றுவரை அறிஞர்கள் பலரையும் கல்விமான்கள் பலரையும் பல்துறை விற்பன்னர்கள் பலரையும் உருவாக்கி வருகின்றமை எல்லோரும் நன்கறிந்த விடயமாகும். இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாகத் திகழ்ந்தவர்கள் - திகழ்பவர்கள் இக் கல்லூரி கண்ட சிறப்புமிக்க அதிபர்களும் தன்னலங்கருதாது சேவையாற்றும் ஆசிரியர்களுமெனில் மிகையாகாது.

இக்கல்லூரி தனது சிறப்புமிக்க வரலாற்றுத் தடத்தில் பல ஏற்றங்களையும் இறக்கங்களையும் கண்டிருக்கின்றது. 1987 ஆம் ஆண்டிலும் 1991 ஆம் ஆண்டிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கைப் பெரிதும் பாதித்தன. ஆயினும், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தின் விடாமுயற்சியால் இவையெல்லாம் வெற்றிகொள்ளப்பட்டன. வடமராட்சியில் இதுவரை தேசியக் கல்லூரி ஒன்றேனும் இல்லையென்ற குறை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை தேசியப் பாடசாலை என்னும் நிலைக்குத் தரமுயர்த்துவதன் மூலம் தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பது எனது விருப்பம்.

இம் மகாவித்தியாலயத்திற்கு வரலாற்று ஆவணம் ஒன்று இல்லையென்பது நெடுநாள் குறையாகும். இதனையுணர்ந்து தீர்த்துவைக்கும் முயற்சியில் செயற்படும் பாடசாலை அதிபரின் முயற்சி எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

எனவே பொதுக் கல்வித்துறையில் புகழ்பூத்த யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வரலாற்று ஆவணமாகவும், அதன் தற்போதைய வளர்ச்சிப் பரிமாண வெளிப்பாடுகளையும் கல்விப் புலம் சார்ந்த தற்கால ஆக்கங்களையும் தாங்கிய "நெல்லிக்கனி" என்னும் மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்கள்.

வாழ்க நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்!
வளர்க அதன் பணி !

சி.சிற்றம்பலம்,
முன்னாள் அதிபர்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு. து. வாசுதேவன்**

**தலைவர்,**
**பழைய மாணவர் சங்கம் – லண்டன் கிளை,**
**லண்டன்**

எம்மையெல்லாம் வாழவைத்த கல்லூரித் தாயின் பாதம் பணிந்து “நெல்லிக்கனி” மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்லூரி மக்கள் கல்லூரியாக மலர்ந்து எமக்களித்த கல்வியும் அனுபவங்களும் எமது வாழ்வில் மறக்கமுடியாதவை. ஒரு கல்லூரிக்கு இருக்கவேண்டிய சகல வளங்களையும் வசதிகளையும் கொண்டு விளங்கிய எமது கல்லூரி நாடெல்லாம் கொடிபரப்பி ஞான மலர்களைப் பூத்த வரலாற்றுப் பெருமை கொண்டது. கல்லூரி மைந்தர்கள் உலகெல்லாம் புகழ்பரப்பி வாழ்ந்துவரும் நிலையில் இடைப்பட்ட காலத்தில் கல்லூரிக்கேற்பட்ட நலிவுகள் எமக்கெல்லாம் மிக்க வேதனையளித்தன. இன்று அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால் மீண்டும் ஒளிபெற்று வரும் கல்லூரிச் செயற்பாடுகளைக் கண்டும் கேட்டும் அறிந்தும் வருகின்றோம். யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மீண்டும் கோலோச்சும் காலம் வெகுதூரத்திலில்லை.

கல்லூரியை வளப்படுத்த ஆர்வத்தோடும் மிக்க மகிழ்வோடும் உதவிகள் புரிந்துவரும் லண்டனில் வாழும் பழைய மாணவர்களுக்கும் லண்டன் கிளையின் நிர்வாக உறுப்பினர்களுக்கும் எனது தனிப்பட்ட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாமனைவரும் கல்லூரியின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு என்றென்றும் துணைநிற்போம் எனவும் வெகுவிரைவில் 400 மீற்றர் ஓடுதள வசதியுடைய மைதானத்தை ஏற்படுத்துவோம் எனவும் உறுதிகூறி கல்லூரியின் வரலாறு கூறும் “நெல்லிக்கனி” மலருக்கு லண்டன் வாழ் பழைய மாணவர்கள் அனைவர் சார்பாகவும் வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

து.வாசுதேவன்.
தலைவர்,
பழைய மாணவர் சங்கம் – லண்டன்.

# மலர்க்குழுவிடமிருந்து ...

மாணவர்களை ஏதிர்கால இயங்குதிறன்மிக்க மனிதர்களாக உருவாக்கும் பணியில் பாடசாலைகளின் பங்கு மகத்தானதாகும் வாழ்வதற்கான திறன்களையும் மானிட உயர்பண்புகளையும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் கலைக்கூடங்களாக திகழும் கல்லூரிகளின் வரலாறுகள் கல்விப்புலங்களில் என்றென்றும் நின்றுநிலை பெறுவனவாகும் இவ்வகையில் வரலாற்றுப்புகழ் மிக்க யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஒரு மாபெரும் கலைக் கோவிலாக விளங்குகின்றது. இக் கல்லூரியின் உருவாக்கமும், வளர்ச்சியும் அதன் சேவைக்கும் ஏனையஅமைப்புக்களால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளை விடவும் வேறுபட்டனவாகும். இலவசக்கல்வியின் ஈடிணையற்ற அடையாளமாகவும் கிராமத்துப் பல்கலைக் கழகங்களாகவும் கல்விக் கொள்கை வகுப்போராலும் கல்வியியலாளர்களாலும் கருதப்படுகின்ற இலங்கையின் மத்திய மகாவித்தியாலயங்களில் கல்விப்பாரம்பரியம் மிக்க வடமராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட ஒரேயொரு மத்திய மகாவித்தியாலயமாகிய இக்கல்லூரி இப்பிரதேசமக்களது சொத்தாகும். இக்கல்லூரியினை மேலும்மேலும் அபிவிருத்தி செய்து பயன்பெற வேண்டியது அனைத்து மக்களது தலையாய கடமையாகும்.

மக்கள் கல்லூரியான இக்கல்லூரியின் வரலாறும் வளர்ச்சிகளும் தொகுத்து ஆவணப்படுத்தவேண்டிய அவசியம் பற்றி நீண்ட காலமாக பலரும் சிந்தித்த போதிலும் இப்போதுள்ள பாடசாலை முகாமைத்துவமும் பழையமாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இதனை முதன்மைப்படுத்தி பயிற்சிகளை முன்னெடுத்ததன் விளைவாக இந்த நூல் மலர்ந்துள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் இக்கல்லூரியின் ஆவணங்கள் பல இழக்கப்பட்டுள்ள போதிலும் கிடைக்கப்பெற்ற ஆவணஆதாரங்களுடனும், கல்லூரியின் மூத்த ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளிடமும், பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் இந்த வரலாற்று ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக பழையமாணவர்கள், ஆசிரியர்கள் பலர் முன்னைய புகைப்படங்கள், தகவல்கள் பலவற்றை தந்துதவியுள்ளனர். அவர்களது உதவிகள் காலத்தால் மறக்க முடியாதவையாகும். இம்மலரின் கதையினை வலுவூட்டும் வகையில் பல கல்வியியலாளர்கள் தமது ஆக்கங்களை அளித்துள்ளனர். பெரியோர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், சமயப்பெரியார்கள் இம்மலருக்கான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி ஊக்கமளித்துள்ளனர். பாடசாலை அதிபர், பிரதிஅதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள் தமது மேலான பங்களிப்பினை நல்கியுள்ளனர். இந்த மலரின் உருவாக்கத்தினை திட்டமிடலிலும் எமது கல்லூரியின் தகவல் தொடர்பாடற் பிரிவே முழுமையாக ஈடுபட்டது. மலருக்கான அட்டைப்படத்தினையும் ஏனைய வடிவமைப்புக்களையும் எமது கல்லூரி ஆசிரியரும் பழைய மாணவர்சங்க செயலாளருமாகிய திரு.வீ.சுதர்சன் அழகுற மேற்கொண்டுள்ளார். இதன் அச்சுப்பதிப்பு மற்றும் புத்தக ஆக்கத்தினை "லட்சுமி ஓஃப்செற்" பதிப்பகத்தினர் கவர்ச்சிகரமாக செய்துமுடித்துள்ளனர். இம்மலர் வெளியிடுவதற்கு பல பெரியார்களது உதவிகள் பெறப்பட்டன. ஆசிரியர்களும் பணியாளர்களும் தட்டச்சில் பொறிக்கும் பணியில் ஈடுபட்டனர். பாடசாலை அதிபரது ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் ஊக்குவிப்புகளும் இதற்கு உந்துதலாக அமைந்துள்ளன. இவர்கள் அனைவருக்கும் மலர்குழுவினராகிய நாம் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இம் மலர் குறிப்பிடும் வரலாற்றுச் சுவடுகளில் குறைபாடுகள் தகவல் இடைவெளிகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் காலங்களில் அவை சீர்செய்யப்பட்டு புதிதாக இது மலரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். "நெல்லிக்கனி" வருடாவருடம் கனியும்.

மலர்க்குழு.

யா/நெல்லியடி ம.ம வித்தியாலயம்.

# அதிபரின் இதயத்திலிருந்து .....

கற்கமறுப்பவன் வாழ மறுக்கிறான் என்பது கல்வித் தத்துவங்களின் இன்றைய சாராம்சமாகும். "கல்வியினால் எல்லாம் ஆகும்" என்பதுவும் இன்றைய அனுபவக்கல்வி வாக்கு. கற்பவருக்கே இன்றைய உலகம் சொந்தமானது என்பது கடினமாகக் கூறப்படுகின்ற யதார்த்த உண்மை. இவ்வகையில் இந்தக் கல்விச் சித்தாந்தங்களை மடியில் சுமந்து கல்வி நடவடிக்கைகளை இன்று முனைப்புடன் முன்னெடுத்து வரும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 21ம் நூற்றாண்டில் கல்வியிலக்குகளை அடைவதில் தரரீதியானதும் அமைப்பு ரீதியானதுமான செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதும் வடமராட்சியின் மையப்பகுதியில் நடுநாயகமாக அமைந்து கல்விப்பணியும், பொதுப்பணியும் ஆற்றிவரும் இக்கல்லூரியானது தனது 87 ஆண்டு கால வரலாற்றில் கடந்து வந்த பாதைகள் அழகும், இன்பமும், தளர்வும், துன்பமும் நிறைந்தவையாகும். சமூகநீதிக் கல்வியில் கொள்கைவழி உருவாக்கம் பெற்ற இக்கல்லூரியின் வளர்ச்சியும் தளர்ச்சியும் எமது கல்வி சமூகத்தின் வளர்ச்சியினையும் தளர்ச்சியினையும் பறைசாற்றும். பல ஏற்ற இறக்க பாதைகளின் மத்தியில் இன்று இக்கல்லூரி மீண்டும் எழுகின்றது எனின் மிகையாகா. இக்கல்லூரியின் இன்றைய பாடசாலைச் சமூகம் மீண்டும் விழிப்புற்று மேற்கொள்ளும் ஆக்கங்களினால் நன்மையாக விளைந்துள்ளன. இந்நிலையில் இக்கல்லூரியின் வரலாற்றுத் தடத்தினை பதிவு செய்யும் நன் நோக்கில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவசங்கத்தினர், பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் முயற்சியால் முகிழ்க்கும் "நெல்லிக்கனி" அனைவரையும் வாழவைக்கும் மருந்தாக அமையட்டும்.

..............................

(செல்லத்துரை சேதுராஜா.)

அதிபர்

## மனங்கனிந்த நன்றிகள் ...

யா/நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தின் வரலாறு கூறும் "நெல்லிக்கனி" பூத்துக் காய்த்துக் கனியாகி எம் கைகளில் கிடைப்பதற்குப் பலரும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்துள்ளனர். கல்லூரி வரலாற்றுக் குறிப்புக்களையும் புகைப்படங்களையும் சேகரித்து தந்துதவிய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகளது மகத்தான பணிகளைப் பாராட்டுகின்றோம். இம்மலருக்கான ஆக்கங்களைப் பல கல்விமான்கள் ஆக்கி எமக்களித்துள்ளனர். அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம்மலர் உருவாக்கத்திற்கு எமது ஆசிரியர்களும் பணியாளர்களும் அயராது பணியாற்றியுள்ளனர். அவர்களது பணிகளும் பாராட்டப்படவேண்டியனவாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இம்மலருக்கான ஆசிச் செய்திகளையும் வாழ்த்துரைகளையும் வழங்கிய சமயப் பெரியார்கள் சமூகப்பெரியார்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

நெருக்கடியான காலகட்டத்திலும் "நெல்லிக்கனி"யினை அழகுறப் பதிப்பித்து புத்தகமாக்கி எமக்களித்த நாவலர்மடம், நெல்லியடி "லக்சுமி ஓஃவ் செற்" பதிப்பகத்தாருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலாக்கத்திற்கும் வெளியீட்டிற்கும் உறுதுணையாகத் தொழிற்பட்ட பழைய மாணவர் சங்கத்தினருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் எமது மேலான நன்றிகள்.

- மலர்க்குழு -

# 1921 இலிருந்து....




மக்கள் கல்லூரியான

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

# எமது கல்லூரி முதல்வர்



திரு.செல்லத்துரை சேதுராஜா அவர்கள்

## எமது கல்லூரியின் பிரதி முதல்வர்



**திருமதி. மகேஸ்வரி மகேந்திரா அவர்கள்**

*SLTS - I , B.Sc., PGDE.*

## முதல்வர், பிரதி முதல்வருடன் எமது பகுதித் தலைவர்கள்



*திரு. ஐ. செல்வராஜா, திருமதி. ம. மகேந்திரா(பிரதி முதல்வர்), திரு. செ. சேதுராஜா (முதல்வர்), திருமதி. இ. சிவராஜா, திருமதி. ம. நற்குணலிங்கம், திரு. அ. அரியரத்தினம்.*

# எமது கல்லூரியின் ஆசிரிய அணி - 2008



முன்வரிசை (இடமிருந்து வலமாக) :

திரு.ச.சரவணபவன், திரு.நா.மகேந்திரன், திருமதி.ச.இராஜசுந்தரம், திருமதி.ம.நற்குணலிங்கம், திருமதி.இ.சிவராஜா, திருமதி.ம.மகேந்திரா (பிரதி முதல்வர்), திரு.செ.சேதுராஜா (முதல்வர்), திரு.அ.அரியரத்தினம், திரு.ஐ.செல்வராஜா, திரு.க.கிருஷ்ணகுமார், திரு.த.பாலகுமார், திரு.இ.குகதாசன், திரு.ச.உருத்திரகுமார்.

இடைவரிசை (இடமிருந்து வலமாக) :

திருமதி.லீ.வேலும்மயிலும், திருமதி.பு.துரைசிங்கம், செல்வி.க.தயா, செல்வி.செ.தயாசந்திரிகா, திருமதி.க.விக்கினராஜா, திருமதி.ச.பசுபதிராஜா, திருமதி.ஜெ.குகதாசன், செல்வி.ஸ்.ராஜினி, திருமதி.சா.ஸ்ரீஸ்குமார், திருமதி.தே.துஷயந்தன், திருமதி.வ.தேவானந், செல்வி.செ.வாசுகி, திருமதி.ம.விக்னேஸ்வரன், திருமதி.இ.அருளானந்தன், திருமதி.சி.சுரேஷ், திருமதி.வா.ஸ்கந்தபாபு, செல்வி.ம.கௌரி, செல்வி.வீ.யாழினி, திருமதி.வ.சுதாஸ், திருமதி.சூ.ஸ்ரீபவன், திருமதி.ர.நகுலன்.

பின்வரிசை (இடமிருந்து வலமாக)

திரு.சீ.அமரஜோதி, திரு.பொ.செல்வகுமார், திரு.கு.தெட்சணாமூர்த்தி, திரு.இ.சுகேந்திரன், திரு.சி.மதுசூதனன், திரு.செ.ஞானச்செல்வன், திரு.இ.இராஜசீலன், திரு.வீ.சுதர்சன், திரு.பா.தணிகைவேள், திரு.கு.அம்பிகைபாகன், திரு.த.ரஜனிகாந், திரு.இ.சண்முகதாஸ், திரு.பா.அரியதாஸ்.

இடம்பெற்றிராதோர் :

திருமதி.ம.உதயகுமாரன், திரு.ஸ்ரீ.தனேந்திரன், திருமதி.தி.தவநேசன், செல்வி.த.உமா, திருமதி.டொ.மன்மதநாயகம், திருமதி ச.சுதர்சன், திருமதி.அ.மதியுகநாதன்.

# நெல்லிக்கனி வெளியீட்டுக் குழு



**முன்வரிசை** (இடமிருந்து வலமாக) :
திரு.ஐ.செல்வராஜா, திருமதி.ம.விக்னேஸ்வரன், திருமதி.ம.மகேந்திரா (பிரதி முதல்வர்), திரு.செ.சேதுராஜா (முதல்வர்), திருமதி.இ.சிவராஜா, திருமதி.பு.துரைசிங்கம், திருமதி.கு.பொன்னையா, திரு.அ.அரியரத்தினம்,

**பின்வரிசை** (இடமிருந்து வலமாக)
திரு.ச.உருத்திரகுமார், திரு.இ.குகதாசன், திரு.வீ.சுதர்சன், திரு.இ.இராஜசீலன், திரு.த.பாலகுமார், திரு.ச.சரவணபவன், திரு.க.கிருஷ்ணகுமார்.

## கல்லூரியின் முகாமைத்துவக்குழு - 2008



*முன் வரிசை* (இடமிருந்து வலமாக): திருமதி.வ.தேவானந், திருமதி.ம.நற்குணலிங்கம், திருமதி.இ.சிவராஜா, திருமதி.ம.மகேந்திரா(பிரதி முதல்வர்), திரு.செ.சேதுராஜா (முதல்வர்), திரு.ஐ.செல்வராஜா, திரு.அ.அரியரத்தினம்

*பின்வரிசை* (இடமிருந்து வலமாக): திரு.ச.சரவணபவன், திரு.க.கிருஷ்ணகுமார், திரு.த.ரஜனிகாந், திரு.இ.இராஜசீலன், திரு.வீ.சுதர்சன், திரு.த.பாலகுமார், திரு.ச.உருத்திரகுமார், திரு.இ.குகதாசன்.

## கல்விசாரா அலுவலர்கள்



முன்வரிசை : திரு.செ.கந்தசாமி (காவலாளி), திருமதி.கு.பொன்னையா(ஆய்வுகூட உதவியாளர்), திரு.செ.சேதுராஜா(முதல்வர்), திருமதி.ம.மகேந்திரா(பிரதி முதல்வர்), செல்வி.சி.சிவாஜினி

பின்வரிசை : செல்வி.த.அனுஷ்யந்தி (H.N.D.A பயிலுநர்), செல்வி.சா.ஆர்த்திகா (கணனி ஆய்வுகூட உதவியாளர்), செல்வி.செ.சுதர்சினி (H.N.D.A பயிலுநர்), திரு.மு.ஜெயக்குமார் (ஆய்வுகூட உதவியாளர்), திரு.த. துரைராசா (தோட்டப் பராமரிப்பாளர்- தற்காலிகம்), திரு.சி. அருளானந்தம் (அலுவலக உதவியாளர்), திரு.வ. சிவசுந்தரம் (காவலாளி)

இடம்பெற்றிராதோர் :திருமதி.வ.கணேசமூர்த்தி (விடுதி மேற்பார்வையாளர்) திரு.ஆ.கந்தசாமி (சமையற்காரர்), திரு.ஆ.தவராசா (தோட்டத்தொழிலாளி)



முன்னாள் முதல்வர்
**திரு.சி.சிற்றம்பலம்** அவர்கள்



முன்னாள் பிரதி முதல்வர்
**திருமதி.பி.சண்முகம்** அவர்கள்



மாணவ முதல்வர்கள் - 2008



சாரணர் அணி - 2008

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



முன் வரிசை:-திருமதி.இ.சிவராசா திருமதி.ச.பசுபதிராசா திரு.வே.சுப்பிரமணியம்திரு.க.கிருஷ்ணகுமார்(பொருளாளர்)
திரு.செ.சேதுராஜா(அதிபர்/தலைவர்) திரு.மு.சுந்தரலிங்கம்(செயலாளர்) திரு.அ.அரியரத்தினம் திரு.வே.வீரபத்திரபிள்ளை
திரு.N.செவ்வேள் திரு.சி.தங்கராஜா
பின் வரிசை:-திரு.க.சச்சிதானந்தம் திரு.த.பாலகுமார் திரு.கு.தெட்சணாமூர்த்தி திரு.ச.உருத்திரகுமார் திரு.கி.சிவச்செல்வம்
திரு.ச.நாகதீபசோதிரூபன் தி.K.T.புவனேந்திரன் திரு.சி.பிரபாகரன்திரு.ஆ.ஜெயக்குமார்
இடம் பெறாதோர்:- திரு.K.கிருஷ்ணயோகன் திரு.சா.சிறீஸ்குமார்

## பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் (தாய்ச்சங்கம்)



முன் வரிசை:-திரு.அ.அரியரத்தினம்(கண.ஆய்வு) திரு.வே.வீரபத்திரபிள்ளை(து.தலைவர்) திரு.இ.ஜயாத்துரை(தலைவர்)
திரு.ச.ஸ்ரீராமச்சந்திரன்(து.தலைவர்) திரு.ச.சரவணபவன்(து.தலைவர்)
பின் வரிசை:-திரு.ந.நவரட்ணராஜா திரு.கி.கிருஷ்ணயோகன் திரு.சோ.புஸ்பாகரன் திரு.வீ.சுதர்சன்(செயலாளர்)
திரு.க.ஸ்ரீஸ்குமார்(பொருள்)திரு.ச.உருத்திரகுமார் திரு.சி.யோகலிங்கமிறீ
இடும் பெறாதவர்கள்:-திரு.க.ராமஜெயம்(து.தலைவர்) திரு.சி.மகேந்திரன்(து.தலைவர்) திரு.தெ.சுகந்தன்(து.செய)
செல்வி.சு.மலர்விழி(து.செய) திரு..சி.பிரபாகன்திரு.த.சுந்தரபாரதி திரு.வே.கமலநாதன திருமதி.ச.விஜயந்தி திரு.வே.குருபரன்
திரு.சி.அகிலதாஸ் திரு.க.முத்துக்குமாரு திரு.சு.விஜயகுமார் திரு.தி.செல்வராஜா திரு.வே.முருகானந்தசோதி

## பழைய மாணவர் சங்கம் - லண்டன் கிளையினர்



# ெ ழு அதிபர்களின் வரிசையில் ....

## பெற்றுக்கொள்ள முடிந்த நிழற்படங்கள்



திரு.S.சேதுராஜா அவர்கள்
(2001.12.02 - இலிருந்து)



திரு.S.சிற்றம்பலம் அவர்கள்
(1992.02.05 - 2001.12.02)



திரு.V.அருளானந்தம் அவர்கள்
(1991.03.20 - 1992.02.05)



திரு.K.நடராஜா (பதில் அதிபர்) அவர்கள்
(1991.01.24 - 1991.03.20)



திரு.S.றோய்காந்தராசா அவர்கள்
(1982.07.21 - 1991.01.24)



திரு.K.குணரட்ணம் அவர்கள்
(1975.05.08 - 1982.07.21)



திரு.V.K.நல்லையா அவர்கள்
(1973 - 1975)



திரு.K.சிவசிதம்பரம் அவர்கள்
(1967 - 1972)



திரு. S.இரத்தினசபாபதி அவர்கள்
(1961 - 1967)

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## முப்பரிமாணத் தோற்றம் - 2008




1. இரு மாடிக் கட்டடம் (நிக்கொட்)
2. ஆராதனை மண்டபம் (நிர்மாண வேலைகள் முடிவுறாத நிலையில்)
3. "ட" மண்டபம்
4. கற்றல் வள நிலையம் (நூலகம், ஆய்வுகூடம், த.தொ.தொ.நு.அலகு )
5. ஆண்கள் விடுதி
6. மைதான விஸ்தரிப்பிற்கென கொள்வனவுசெய்யப்பட்ட காணி
7. விளையாட்டு மைதானம்
8. திறந்தவெளி மேடை
9. செயற்பாட்டறைத்தொகுதி
10. மலசலகூடம் (பெண்கள்)
11. பெண்கள் விடுதி
12. கூடைப்பந்தாட்டத்திடல்
13. விவசாயநிலம் (பண்ணை)
14. விவசாய ஆய்வுகூடமும் வகுப்பறைகளும்
15. பௌதிக, இரசாயன ஆய்வுகூடங்கள்
16. கந்தையா மண்டபம்
17. சிற்றுண்டிச்சாலை
18. சைக்கிள் தரிப்பிடங்கள்
19. மலசலகூடம் (ஆண்கள்)
20. அதிபர் விடுதி
21. ஆசிரியர் வள நிலையம் (வடமராட்சி வலயம்)
22. பிரதான நீர்த்தாங்கி
23. மலசலகூடத் தொகுதி (பழையது)
24. அழிவுற்ற நிலையிலுள்ள கட்டடம் (ஆய்வுகூடம்)
25. அழிவுற்ற நிலையிலுள்ள கட்டடம் (இராஜலிங்கம் மண்டபம்)

# எமது கல்லூரியின் அடையாளச் சின்னங்கள்




இலச்சினை



கொடி



கழுத்துப் பட்டி




மாணவ முதல்வர் சின்னம்




வகுப்பு முதல்வர் சின்னம்

## மக்கள் கல்லூரியான
# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

"கல்வி மக்களின் பிறப்புரிமை" என்னும் கோட்பாடு வலுப்பெற்று இன்று உலக நாடுகள் அனைத்திலும் அதன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன. அனைவருக்கும் கல்வி எனும் சுலோகம் உலகளாவியரீதியில் ஓங்கியொலித்து அதன் பயணத்தின் இலக்கை எய்திவிட முயன்ற இபத்தோராம் நூற்றாண்டு நிறைவடைந்து "அனைவருக்கும் தரமான கல்வி" என்னும் புதிய நூற்றாண்டின் கல்விச் சுலோகத்தின்வழி இன்றைய கல்வி நடவடிக்கைகள் எல்லா நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்வியின் பழமைப் பாரம்பரியமும் நிகழ்கால, நவீன போக்குகளும் எதிர்கால நோக்குகளும் (Vision) பற்றி அனைத்து நாடுகளும் சிந்தித்துச் செயற்பட்டு வருகின்ற இன்றைய காலகட்டத்தில் கல்வி வழங்கும் நிறுவனங்களான பாடசாலைகள் தமக்கேயுரிய பாரம்பரியக் கலாசாரங்களுடனும் தர மற்றும் வளரீதியான ஏற்றத் தாழ்வுகளுடனும் ஒரே இலக்குடைய கல்வி அபிவிருத்தியை நோக்கிப் போராடிக் கொண்டிருக்கின்றன. பாடசாலைகளின் கீர்த்திநாமங்கள் காரணிகளினடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்றபோதிலும் சில கல்லூரிகளின் கீர்த்திநாமங்களுக்கு சமூகநோக்குடைய வலுவான காரணிகள் அடிப்படையாக அமைகின்றன. இவ்வகையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் கீர்த்திநாமம் (Goodwill) முற்றுமுழுதாக சமூக மேம்பாட்டினை, சமத்துவத்தினை, சாமானிய பண்பினை அடிப்படையாகக் கொண்டு விளங்கிவந்துள்ளதென்பது அதன் வரலாற்றினையும் வளர்ச்சிப்போக்குகளையும் பார்க்கின்றபோது உணர்ந்துகொள்ளலாம். கல்வியின் மக்கள்மயமான நவீனசிந்தனைகளுக்கு இசைவான சுட்டிகளைக்கொண்ட இக்கல்லூரியின் வரலாற்றுப் பாதையினை ஆவணப்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வகையில் இதுவரை எம் நூலாக்கக்குழுவினால் முயன்று பெறப்பட்ட ஆவணங்களையும் குறிப்புக்களையும் கல்லூரிச் சமூகத்தினரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வரலாற்றுத் தொகுப்பினை ஆக்கியுள்ளோம். இவற்றில் இதுவரையெம் கைகளுக்கு எட்டாத தகவல்கள், ஆவணங்கள், குறிப்புக்கள் ஏதுமிருப்பின் ஆர்வமுடையோர் அவற்றினை எமக்கு வழங்கின் அடுத்துவரும் மலரில் அவை சேர்க்கப்பட்டு வரலாற்று ஆவணம் சீர்செய்யப்படும்.

இக்கல்லூரியானது அதன் உருவாக்கத்திலேயே நல்ல கனதியான காரணத்தையும் சிறப்பான திட்டமிடலினையும் ஏற்றத்தாழ்வற்ற சமூகநோக்கினையும் கொண்டதாக அமைந்தது. 1921 ஆம் ஆண்டிலே இப்பிரதேசத்தில்மாதிரிப் பாடசாலையொன்றை அமைப்பதற்கு விளைந்த அரச அதிகாரிகளும், சமூகப் பெரியாரும், சமூகவியலாளர்களும் வடமராட்சிப் பிரதேசத்தின் மையப்பகுதியான கட்டைவேலி, கரவெட்டி வடக்கு பிரதேசத்தினைத் (தற்போது நெல்லியடி) தெரிவுசெய்தனர். அரச தலையீட்டுடனான இம் மாதிரிப் பாடசாலை அமைப்பிற்கு முன்னோடியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்கப் பாடசாலைகள் குழுவின் (The Committee of Government Schools) தலைவர் 1918.08.09 இல் விடுத்திருந்த கோரிக்கையின்பேரில் நில அளவை நாயகத்தின் (Survior General) 1919.02.05ஆம் திகதிய ஆரம்ப நில அளவைத் திட்டத்தின் பிரகாரம் இப்பகுதியில் 01 ஏக்கர் 3 றூட், 28.1 பேர்ச் நிலம் பாடசாலை தாபிப்பதற்கென சுவீகாரம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதற்கட்டமாகச் சுவீகரிக்கப்பட்ட நிலத்தில் இக்கல்லூரியானது 1921 இல் தாபிக்கப்பட்டது. சமயச் சார்பு மிஷனரிமார்களும் தனியார்கள் சிலருமே பாடசாலைகளை நிறுவிய காலகட்டத்தில் அரசாங்கத்தினால் இலங்கையில் நிறுவப்பட்ட ஒருசில அரச பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாக அமைந்தமை வரலாற்றுப் புகழுடையதாகும். புவியியல்ரீதியில் ஆய்வுசெய்யப்பட்டு வடமராட்சியின் மையப்பகுதியில் திட்டமிடப்பட்ட வகையில் அமைக்கப்பட்ட

இப்பாடசாலையின் அமைப்பும் சூழலும் இன்றும் அழகொளிர்வதாகும். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1945 வரை இதன் செயற்பாடுகள் பற்றிய ஆவண அறிக்கைகள் போதியளவு கிடைக்கப்பெறாமை இவ்வரலாற்றுத் தொகுப்பில் ஒரு இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது.

1940 களில் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்த மத்திய மகா வித்தியாலயங்களின் உருவாக்கம் இப்பாடசாலைகளின் வரலாற்றிலும் ஓர் மாபெரும் ஏற்றத்தினை உண்டாக்கிற்று. அக்காலத்தில் இலங்கையின் கல்வி அமைச்சராகவும் கல்வியை மக்கள் மயப்படுத்தும் நோக்குடைய தேசிய கல்விக்குழுவிற்குத் தலைவராகவுமிருந்த "இலவசக் கல்வியின் தந்தை" எனப் போற்றப்படும் கலாநிதி. C.W.W.கன்னங்கரா அவர்கள், கிராமப்புற வறிய கெட்டித்தனம்மிக்க மாணவருக்குத் தரமானதும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் சார்ந்ததுமான கல்வியை வழங்கும் நோக்குடன் இலங்கை முழுவதிலுமாக அக்காலத்திலிருந்த தேர்தல் தொகுதிகளுக்கு ஒவ்வொன்றாக 54 மத்திய கல்லூரிகளை சகல வள வசதிகளுடனனும் ஆரம்பிக்க ஆவன செய்தார். இவ்வகையில் வடமராட்சிப் பிரதேசத்திற்கென மாதிரி அரச பாடசாலையாகவிருந்த இப்பாடசாலை 1946 இல் மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. இக்கல்லூரியின் செயற்பாடுகளுக்கென மீண்டும் 1947 இல் இரண்டாம் கட்டமாகச் சுற்றாடலிலுள்ள 03 ஏக்கர் 02 றூட், 30.5 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டதுடன் அடுத்துவந்த 10 ஆண்டுகளில் பிரமாண்டமான இருமாடி வகுப்பறைக் கட்டடங்கள், பௌதிக, இரசாயன, உயிரியல் ஆய்வுகூடங்கள், ஆண், பெண்களுக்கான தனித்தனி மாணவர் விடுதிகள், நூல் நிலையம், தொழில்நுட்பச் செயற்பாட்டறைகள், விவசாயப் பண்ணை, நிர்வாக அலகுக்கான கட்டடம், விளையாட்டு மைதானம், அதிபர் விடுதி முதலான அனைத்து அம்சங்களும் உயர்தரத்தில் உருவாக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் புலமைப்பரிசில் பெறும் கெட்டித்தனம்மிக்க மாணவர்கள் இக்கல்லூரியில் அனுமதிபெற்று விடுதிகளில் தங்கியிருந்து கல்வி பயின்றனர்.

கிராமப்புற மக்களுக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் யாழ். மாவட்டத்தில் நிறுவப்பட்ட நான்கு மத்திய மகா வித்தியாலயங்களில் யா/ நெ.ம.ம.வித்தியாலயம் மாத்திரமே அக்காலத்தில் சிரேஷ்ட உயர்நிலை வகுப்புக்களில் (HCS) விஞ்ஞானப் பிரிவினைக் கொண்டிருந்தது. யாழ் குடாநாட்டில் ஏனைய மத்திய மகா வித்தியாலயங்களிலிருந்து மாணவ, மாணவியர் விஞ்ஞானத்தில் உயர்கல்வி பெறுவதற்காக இக்கல்லூரியில் அனுமதி பெற்று தமது கல்வியை தொடர்ந்தனர். இவர்களில் அநேகமானவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாயும் உருவாகியதுடன் சிலர், வெளிநாடுகளில் உயர் விஞ்ஞானிகளாகவும் பதவிவகித்தனர். அக்காலத்தில், இக்கல்லூரியில் பணியாற்றுவதற்கென பெரும்பாலான ஆசிரியர்கள் நாளாந்தம் யாழ் நகரிலிருந்து வருகை தந்தனர். பல கல்விமான்கள் வினைத்திறன் மிக்க அதிபர்களாக இக்கல்லூரியில் அடுத்தடுத்து பதவி வகித்து கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

அக்காலத்தில் திட்டமிட்ட புறக்கிருத்திய செயற்பாடுகளில் இக்கல்லூரி இப்பிரதேசத்தில் முதன்மையான கல்லூரியாக திகழ்ந்தது. கடேற் தொண்டர் படையணி, சாரணர் படையணி என்பவற்றோடு கால்பந்து, கிரிக்கட் முதலான பெருவிளையாட்டுகளும் தடகள் விளையாட்டுக்களும் சிறப்பான முறையில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு ஏதுவாக 1959 இல் 3ம் கட்டமாக சுற்றாடலில் உள்ள 2 ஏக்கர் 5 றூட் 6.6 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டது. இக்கல்லூரியின் வள வசதிகளை பெருக்குவதில், வடமராட்சி பிரதேசத்தின் புகழ் பூத்த பாராளுமன்ற உறுப்பினரும், சமூக நீதிக் கொள்கையாளரும் பிரபல பொதுவுடமையாளருமான திரு.பொன்.கந்தையா அவர்கள் சிறப்பான பங்காற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த மத்திய மகா வித்தியாலயத்தின் உருவாக்கம் அமைப்பு சமூக நீதியான கல்விக் கொள்கை என்பவற்றில் மிக்க விளக்கமும்

வெளிச்சமும், தூரநோக்கும் உள்ள ஒரு கல்விமானாகவும் அரசியல் வாதியாகவும் செயற்பட்டு அவரிட்ட அத்திவாரத்தில் இக்கல்லூரி இன்றும் தலைநிமிர்ந்து நிற்பதனை அவதானிக்கலாம். கம்பீரமான இருமாடி வகுப்பறைக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம் தொழில் நுட்ப ஆய்வுகூடம் முதலியவற்றை அமைத்து ஏழை, மற்றும் நடுத்தர வருமான மக்களின் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை ஊட்ட அவர் வழிசமைத்தார். இக்கல்லூரியி ல் அவரது பங்களிப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். அவரது பெயரில் திறந்து வைக்கப்பட்ட இருமாடிக்கட்டடம் இக்கல்லூரியில் இன்றும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதைக்காணலாம்.

அன்றைய இக்கல்லூரியின் கல்வி செயற்பாடுகள் ஏனைய பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளை விடவும் முன்னேற்றகரமான வேறுபாடுகளைக் கொண்டிருந்தன. விடுதிகளில் தங்கியிருந்து கல்விபயிலும் மாணவர்களின் புறக்கிருத்தியச் செயற்பாடுகள் இங்கே விசேடமாகக் குறிப்பிடத்தக்கனவாகும். புலமைப்பரிசில் பெற்ற உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட மாணவர்களே பெரும்பாலும் விடுதிகளில் தங்கியிருந்தனர். ஆண், பெண், இருபாலாருக்கும் தனித்தனி விடுதிகள் இயங்கி வந்தன. பெரும் எண்ணிக்கையான பாடசாலைப் பணியாளர்களும், உத்தியோகத்தர்களும் கடமையாற்றி வந்தனர். விவசாயப் பண்ணையிலிருந்து விடுதிகளுக்கு தேவையான காய்கறிகளும் பாற் பொருட்களும் பெருமளவில் பெறப்பட்டன. வருடத்தில் ஒருமுறை விடுதியில் தங்கியிருந்து கற்கும் மாணவர்களுக்கான அகில இலங்கை கல்விச் சுற்றுலாவிற்கு இலவசமாக ஒழுங்குகள் செய்யப்பட்டன. 1971 இல் இக்கல்லூயின் வடக்கு புறமாகவுள்ள, அன்று செல்லையா பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட தனியாரால் நிறுவப்பட்ட பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை நலிவுற்று அப்பாடசாலையின் கட்டிடம் பயன்பாடற்று இருந்தமை காரணமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் க.பொ.த (உ.த) கலைப்பிரிவு அங்கு மாற்றப்பட்டதுடன் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தின் இணைக்கப்பட்டது. ஆண், பெண் மாணவர்கள் அடங்கலாக 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வந்த இக்காலகட்டத்தில் பல புகழ் பூத்த கல்விமான்கள் அதிபர்களாக இருந்து அரும்பணியாற்றினார். கலாநிதி.S சிவப்பிரகாசம், திரு. இரத்தினசபாபதி, திரு.மு.சிவசிதம்பரம் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கோர்.

1977 இல் நாட்டில் அரசியல் பிரச்சினைகள் முனைப்படைந்திருந்த நிலையில், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.த. இராசலிங்கம் அவர்கள் தனது அரச நிதி ஒதுக்கீட்டின் மூலம் அழகானதும் நவீனத்துவமுடையதுமான ஆராதனை மண்டபத்தினை கல்லூரிக்கென அமைத்துக் கொடுத்தார். பாடசாலை, மற்றும் கல்வித்திணைக்கள நிகழ்வுகள் மட்டுமின்றி சமூகத்தின் பொது நிகழ்வுகள் பலவும் இவ்வாராதனை மண்டபத்தில் கோலாகலமாக அரங்கேறின.

1987 வரையில், பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்புற்று இருந்த இக்காலங்களில் பல புகழ்மிக்க அதிபர்களும் ஆசிரியர்களும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இக்காலக்கட்டத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சியில் அரும்பணியாற்றிய அதிபர்களில் திரு.K.குணரத்தினம், திரு.V.K.நல்லையா, திரு.S.றோய்க்காந்தராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

கால ஓட்டத்தில் இக்கல்லூரியின் பெண் மாணவர்களின் வகுப்புப் பிரிவுகள் இணைக்கப்பட்ட செல்லையா பள்ளிக்கூட கட்டிடத்தில் இயங்கவைக்கப்பட்டன. 1987இல் வடமராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் இக்கல்லூரியின் கட்டுமானங்களில் பெரும்பாதிப்புக்கள் ஏற்பட்டன. கல்லூரியின் பிரதான நிர்வாகக் கட்டடம் இராசலிங்கம் ஆராதனை மண்டபம், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் முதலான வளங்கள் முற்றாக சேதமடைந்தன. இதன் பின்னர் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் பலவீனமடைந்ததுடன் உயர் நிலையில் இருந்த புறக்கிருத்தியங்களும் வெகுவாய் பாதிப்புற்றன. இதற்கு முன்னைய காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே சிறப்பாக செயற்பட்டு வந்த இக்கல்லூரியின் கடேற் தொண்டர் படையணியின்

செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. வருடா வருடம் தியத்தலாவை வரை பயிற்சி பெற்ற கடேற் தொண்டர் படையணிக்கு 1960 களில் 2ம் லெப்டியை திரு T.பாலேந்திரன், திரு. அருளையா ஆகியோர் ஆற்றிய பணிகள் இன்றும் நினைவு கூறப்படுகின்றன. 1987இன் பின்னர் இக்கல்லூரியின் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தளம்பலுற்று நலிவடைந்த நிலையில் நாட்டு சூழ்நிலை காரணமாக மாணவர் பலர் புலம் பெயர்ந்த காரணங்களினால் குறிப்பாக ஆண் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமையால் ஆண் மாணவர்களது எண்ணிக்கை வெகுவாய் குறைவடைய நேரிட்டது. இந்நிலையில் இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்விக் கொள்கை மாற்ற நல்வாய்ப்புக்களால் ஒரு தேசியக் கல்லூரியாக பிரகடனப்படுத்தப்படவிருந்த இக்கல்லூரியானது கல்வித்தீர்க்க தரிசனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினால் இக்கல்லூரியின் பெண்கள் பிரிவை தனிப்பாடசாலையாக 1991 இல் பிரிந்ததன் விளைவாக பலவீனம் அடைய நேரிட்டது. அத்துடன் வடமராட்சி பிரதேசத்திற்கு கிடைக்கவிருந்த தேசிய பாடசாலை ஒன்றிற்கான சந்தர்ப்பமும் இல்லாமல்போயிற்று.

கல்லூரி வளங்கள் பல இழக்கப்பட்டமை பாடசாலை இரண்டாக பிரிக்கப்பட்டமை ஆகிய பெரும்பாதிப்புக்குள்ளான இக்கல்லூரியானது 1990 களிலும் அதன் பின்னரும் இங்கு பணியாற்றிய அதிபர்களினதும் ஆசிரியர்கள் பணியாளர்களினதும் அர்ப்பணிப்புள்ள சேவைகளினாலும் பழைய மாணவர் சங்கம் பெற்றோர்கள், நலன் விரும்பிகளினதும் அக்கறை மிக்க விழிப்புணர்வு செயற்பாடுகளினாலும் மீண்டும் தனது முன்னைய முதன்மை நிலையை அடைவதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது. குறிப்பாக 1992 இல் இக்கல்லூரி அதிபர் பதவியை பொறுப்பேற்ற திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்களது காலத்தில் இக்கல்லூரியன் கல்வி நடவடிக்கைக்கும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் ஏறுமுகம் கண்டன. பல்கலைகழகம் செல்லும் மாணவர்களது எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத்தொடங்கியது. இணைபாடவிதான செயற்பாடுகள், சிறப்பாக உதைபந்தாட்டம் உடற்பயிற்சி என்பவற்றில் இக்கல்லூரி அணிகள் மாகாணமட்டம் வரை சாதனைபடைத்தன. இக்காலத்தில் திரு.கி.நடராசா பிரதி அதிபராகவும் திருமதி. பிறேமாவதி சண்முகம் உபஅதிபராகவுமிருந்து பாடசாலை அபிவிருத்திக்கு கனதியான பங்காற்றினர். இக்காலத்தில் பாடசாலை வகுப்பறைக்கட்டடம் புதிய நூலகம், க.பொ.த உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன புதிதாக அமைக்கப்பட்டதுடன் அதிபர் விடுதியும் புணரமைக்கப்பட்டது. தொழில்நுட்ப கூடத்திற்கென புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. G.T.Z நிறுவன ஆதவுடன் இருபுதிய மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலை தண்ணீர்த் தாங்கி புணரமைக்கப்பட்டதுடன் தெற்குப்புற திறந்த வெளியரங்கில் மேடையமைக்கப்பட்டது. நீண்ட காலமாக தடைப்பட்டிருந்த மின்சார வசதி பெறப்பட்டதுடன் விளையாட்டு மைதான வடக்குப் புறத்தில் நிழல் மரங்களும் உண்டாக்கப்பட்டன.

இக்காலத்தில் கல்லூயின் வளவின் வடமேற்கு மூலையில் வடமராட்சி கல்விப் பிரதேசத்திற்கான ஆசிரிய வளநிலையம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். 2001 டிசம்பரில் புதிய அதிபர் திரு.செ.சேதுராஜா அவர்கள் பதவியேற்றதை தொடர்ந்து இக்கல்லூரியின் மாணவர் தொகையும் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் மேலும் அதிகரிக்கத் தொடங்கியதுடன் கல்லூரியின் பௌதிக வளங்கள் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. மொத்த மாணவர் தொகை 700லிருந்து 1100 ஆக அதிகரித்துள்ளதுடன் அதுவரை கனிஷ்ட இடைநிலைப் பிரிவுகளில் மிகவும் சிறிய எண்ணிக்கையிலிருந்த பெண்மாணவரது தொகை க.பொ.த (உ.த) வகுப்புகள அடங்கலாக கல்லூரியின் மொத்த மாணவர் தொகையில் 1/3 ஆக அதிகரித்துள்ளமை கல்லூரி முன்னைய செழிப்பு நிலைக்கு மீள்வதனைக் காட்டிநிற்கின்றது. ஒரு தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, மத்திய கல்வி அமைச்சு வரை அதற்கான சிபார்சுகள் சென்றடைந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக அது தாமதமடைந்துள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு சமூக நீதித் திருப்பு முனையாக அமைந்த 54 மத்திய மகா வித்தியாலயங்களில் பெரும்பாண்மையானவை தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப்பட்டு வசதி, வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இக்கல்லூரியினையும் தேசிய ரீதியில் ஓர் உயர்கல்லூரியாக மிளிரச் செய்தல் வேண்டும் என்னும் உயர்நோக்கில் தற்போதைய பாடசாலை முகாமைத்துவம் முயன்று வருவதுடன், மக்களின் தரமான வாழ்வுக்குத் தரமான கல்வி வழங்கப்படுதல் வேண்டும் என்னும் அடிப்படையில் தரமான கல்விக்கான கள,வள, வசதிகளையும் திறன்களையும் பெருக்குவதிலும் ஒழுக்கம், ஒழுங்கு சார்ந்த புதிய கல்லூரிக் கலாசாரத்தினை ஏற்படுத்துவதிலும் இப்போதைய அதிபரும் முகாமைத்துவக் குழுவினரும் ஆசிரியர்கள், பணியாளர்களும் பழைய மாணவர்களும் மற்றும் பெற்றோர் நலன்விரும்பிகளும் முயன்றுவருகின்றனர். கல்வித்திணைக்கள அலுவலர்களும் ஏனைய அதிகாரிகளும் அரசியல்சார்ந்த பிரமுகர்களும் இம்முயற்சிகளுக்கு அனுசரணையாக இருந்துவருகின்றனர். இக்கல்லூரி வளங்கள் யாவும் மணவர்களது கல்வி அபிவிருத்திக்காக முறையாகப் பிரயோகிக்கப்படுவதுடன் இப்பிரதேச மக்களது ஒட்டுமொத்தமான பொதுத்தேவைக்காகவும் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டும்வருகின்றன.

பாடசாலையின் கட்டுமானம், சுற்றுப்புறம், கற்பித்தலில் மேம்பாடு பாடசாலைக் கலாசார மேம்பாடு என்பவற்றிற்காக கடந்த 5ஆண்டுகளில் பல வகையான ஆக்கச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வளப்பெறுகை, வளப்பாவனை, கல்விவெளியீடுகள், இணைப்பாடவிதானப் பங்குபற்றல்கள், அடைவுச் சாதனைகள் முதலிய தரமேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

**கட்டடங்கள்**

- பாடசாலையின் தென்மேற்குப் பகுதியில் 125' x 25' இருமாடிக் கட்டடம் நிக்கொட் நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்டது. இதன் மேற்றளங்களில் வகுப்பறைகளும் கீழ்த்தளத்தில் கணனி ஆய்வுகூடம் மற்றும் கணனி விரிவுரை மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டத்தொகுதி 2004 ஓகஸ்டில் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் திரு.R.தியாகலிங்கம் அவர்களாலும் நிக்கொட் செயற்றிட்டப் பணிப்பாளர் திரு.T.லங்காநேசன் அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டன.
- புதிய நூலகக் கட்டடத்தின் மிகுதி வேலைகள் 2004 இல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் பூர்த்தியாக்கப்பட்டதுடன் மத்திய கல்வி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் நூலகத் தளபாடங்கள், நூலகக் கணனி என்பனவும் பெறப்பட்டதுடன் பல்வேறு வழிவகைகள் மூலம் சுமார் மூவாயிரம் நூல்களும் பெறப்பட்டு 2004 இல் இந்நூலகம் திறந்துவைக்கப்பட்டது.
- 2004இல் உலகவங்கியின் G.E.P 2 நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகு உள்ளக இணைப்புடனான 10 கணனிகளுடன் ஆய்வுகூடம், விரிவுரை மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான திரு.வீ.இராசையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்தினத்தில் கல்லூரிக்கான இணையத் தளமொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- 2004இல் SEMP நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் கட்புல - செவிப்புல அறை (Audio - Video) அமைக்கப்பட்டது.
- பாடசாலை நலன்விரும்பியான வர்த்தக முனைவர் திரு.ஆ.இராஜகோபால் அவர்களால் (ஜமுனா ட்ரேடர்ஸ்) கிறிக்கற் ஆடுகளம் அமைக்கப்பட்டு அவராலேயே திறந்துவைக்கப்பட்டது. ஆடுகளம் அமைப்பதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் M.நடராஜசுந்தரம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு.D.M.வேதாபரணம் ஆகியோர் வழங்கினர்.

- 2004இல் மத்திய கல்வி அமைச்சின் மத்திய மகா விஜத்தியாலயங்களுக்கான நிதியொதுக்கீட்டில் மாணவர் விடுதிகள் (ஆ,ண்,பெண்) புனரமைக்கப்பட்டு ஆண்களுக்கான மாணவர் விடுதி மீண்டும் இயக்கப்பட்டது. இம்மாணவர் விடுதிக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களையும் கணனி விரிவுரை மண்டபத்திற்கான இருக்கைகளையும் நிக்கொட் நிறுவனம் வழங்கியிருந்தது.

- 2004 இல் கல்லூரியின் இருபுறத்திலும் அமைந்துள்ள வாயிற்கதவுகளில் பெயர் வளைவுகள் அமைக்கப்பட்டன. பாடசாலை நலன்விரும்பியும் பெற்றாருமான திரு.சி.தங்கராஜா அவர்கள் இவற்றை அன்பளிப்பாக அமைத்துக்கொடுத்தார்.

- 2004 இல் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் இரண்டு சைக்கிள் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டன.

- 2005 இல் மத்திய மகா வித்தியாலய நிதியொதுக்கீட்டில் அதிபர் அலுவலகமும் பாடசாலை உள்ளக வீதிகளும் புனரமைக்கப்பட்டன.

- 2005 இல் தெற்குப்புறத் திறந்தவெளியரங்கிற்கு கூரை அமைக்கப்பட்டது.

- 2006 இல் யாழ்மாவட்ட நாடுமன்ற உறுப்பினர்களான திரு.M.K.சிவாஜிலிங்கம், திரு.மு.சிவநேசன், திருஇமாவை சேனாதிராஜா, திருமதி.பத்மினி சிதம்பரநாதன், திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின்மூலம் கூடைப்பந்தாபட்ட அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2006 இல் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிதியயொதுக்கீட்டில் (1 மில்லியன்) கந்தையா மண்டபக் கட்டடத் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

- 2006இல் மத்திய கல்வி அமைச்சின் GEP - 2 செயற்றிட்டத்தின்கீழ் 15 மில்லியன் நிதியொதுக்கீட்டில் 140'x55' அளவினைக்கொண்ட ஆராதனை மண்ப மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இதன்கீழ்த்தளத்தில் பன்நோக்கு வகுப்பறைகளும் மேற்றளத்தில் ஆராதனை மண்டபமும் அமைந்துள்ளன. அதன் மிகுதி வேலைகளுக்கான நிதியொதுக்கீட்டு எதிர்பார்ப்புடன் அவை பயன்படுத்தப்பட்டு வருகனின்றன.

- 2007 இல் பாடசாலையின் இரு வாயில்களுக்கும் அழகான வாயிற்கதவுகள் அமைக்கப்பட்டன. வடக்குப்புற வாயிற்கதவினை திரு.க.குகதேவன் (சுதா ஹாட்வெயர்) அவர்களும் தெற்குப்புற வாயிற்கதவினை திரு.த.கணேசலிங்கம் மற்றும் திரு.பொ.கௌரீசன் அவர்களும் அமைத்துக்கொடுத்தனர்.

- 2007 இல் இரண்டு மலசலகூடங்களும் ஐ.நா.சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதிய உதவியுடன் புனரமைக்கப்பட்டதுடன் கல்லூரியின் வடமேற்குப்புறமாகவுள்ள சுமார் 75மீந்நர் எல்லைப்புற மதிற்சுவரும் அமைக்கப்பட்டது.

- 2008 இல் உலக உணவுத் திட்டத்தில் வேலைக்கான உணவு செயற்றிட்டத்தின்கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முன்னெடுத்த வேலைத்திட்டத்தினால் பாடசாலைச் சுற்றுப்புறம் என்பன மண்ணிட்டு நிரப்பிச் சீர் செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

- 2008இல் பாடசாலை முகப்பு கொங்கிறீற் வேலியமைத்துப் அழகுபடுத்தப்பட்டுள்ளதுடன் வாயிற்கதவும் முன்வீதியும் செப்பனிடப்பட்டுள்ளன.

- 2008இல் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியின் கீழ் பாடசாலை முகப்பில் அழகான சரஸ்வதிவதி சிலையும் அழகு மாடமும் அமைக்கப்பட்டுள்ளன. "ரூபின்ஸ்" ஸ்தாபினத்தார் இவற்றினை அழகுற அமைத்தனர்.
- 2008இல் நவோதயப் பாடசாலை அபிவிருத்தித்திட்ட நிதியொதுக்கீட்டில் (1மில்லியன்) புதிய ஆராதனை மண்டபக் கீழ்த்தள மிகுதி வேலைகள் மற்றும் மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.
- 2008இல் ஹற்றன் நஷனல் வங்கியினர் ஓர் கிரிக்கற் புள்ளிப் பலகையினை அமைத்துத் தந்தனர்.

**உபகரணங்கள்/ சேவைகள்**

- 2003 இல் திரு.ஐ.இரவீந்திரன் அவர்களால் ஒரு தொகுதி ஒலிபெருக்கிக் கருவிகள் வழங்கப்பட்டன.
- 2004இல் லண்டனில் வதியும் பழைய மாணவரான திரு.இ.ஜெயக்குமார் அவர்களினால் ஒரு போட்டப் பிரதி இயந்திரம் *(Photo Copy Mechine - Canon)* அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 2004இல் லண்டனில் வதியும் பழையமாணவரான திரு.தி.பாலகுமார் அவர்கால் ஒரு தொலைநகல் இயந்திரம் *(Fax Mechine)* அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 2004இல் லண்டனில் வதியும் திரு.செ.செல்வச்சந்திரன் அவர்களால் ஒலிபெருக்கிக்கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
- 2004இல் லண்டனில் வதியும் பழைய மாணவர் சங்கத்தினால் ஒரு பல்லூடக எறியி *(Multi Media Projector)* வழங்கப்பட்டது. இதற்கு கல்லூரியின் நலன்விரும்பி திரு.ந.பாஸ்கரன் அவர்கள் கனடாவில் வதியும் பழைய மாணவர்கள் சிலரின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
- 2004 இல் பழைய மாணவர் சங்கத்தினர் அதிபர் அலுவலகத்திற்கான அழகிய மேசை, சுழல் நாற்காலி என்பவற்றையும், பழைய மாணவரும் கிராம அலுவலருமான திரு.சி.பிரபாகரன் அழகிய மின்விசிறி ஒன்றையும் அன்பளிப்புச் செய்தனர்.
- 2004 இல் பழைய மாணவரான திரு.சி.அகிலதாஸ் ("நெல்லைசில்க்ஸ்") ஒரு தொலைக்காட்சிப் பெட்டியினையும் காட்சி அலுமாரியினையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.
- 2004இல் நெல்லியடி திரு.ஆ.பாலகிருஷ்ணன் அவர்களால் (கலைவாணி களஞ்சியம்) 25 பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கப்பட்டன.
- 2005இல் லண்டன் பழைய மாணவர்களான திரு.வை.ஸ்ரீதரன், திரு.து.வாசுதேவன், திரு.ஐ.இரவீந்திரன் ஆகியோரால் 20 கணனிகள், இரண்டு லேசர்பொறிகள், ஒரு தொலைநகல் பொறிகள் என்பன வழங்கப்பட்டன. இவற்றுக்கான துறைமுகவரி, போக்குவரத்துச்செலவு என்பன பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டன.
- 2005இல் கணனி ஆய்வுகூடத்தின் கணனி மேசைகள் (சுவரில்) பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டன.
- 2008இல் கனேடிய பழைய மாணவர் சங்கத்தினர் சுமார் நாலரை இலட்சம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளையும் கோலவுடைகளையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன் அதன்

முதற்கட்டமாக இரண்டரை இலட்சம் பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளைப் பழையமாணவர் சங்கத்தினர்மூலம் கொள்வனவு செய்து வழங்கியுமுள்ளனர். இவற்றுள் பெண் மாணவர்களுக்கான பூரண பாண்ட் வாத்தியத் தொகுதி உள்ளடங்கும்.

- நிக்கொட் நிறுவனத்தால் ஆராதனை மண்டபத்திற்கென 350 பிளாஸ்டிக் கதிரகள் வழங்கப்பட்டன.
- 2003இல் பழைய மாணவர் சங்கத்தினால் தொலைபேசி இணைப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது. (தொலைபேசி இல : 021 226 3017)
- 2003 இல் பழைய மாணவர் சங்கத்தினால் மூன்றுநிலை மின்சார இணைப்பு பெறப்பட்டது.
- 2004இல் தகவல் தொடர்பாடல் நிலையத்திற்கான தொலைபேசி இணைப்பு பெறப்பட்டது.

  (021 226 4141)
- 2004இல் இரண்டாவது மற்றும் மூன்றாவது மூன்று நிலை மின்சார இணைப்பு வசதிகள் பெறப்பட்டன. (விடுதிகள், நூலகம், கணனிப்பிரிவு மற்றும் முன்மண்டபம்)
- 2004இல் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.விநாயகமூர்த்தி அவர்களின் நிதியொதுக்கீட்டின்கீழ் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் பெறப்பட்டன.
- 2004 இலிருந்து பாடசாலை விளையாட்டுக்குழுவினால் பாடசாலைச் சிற்றுண்டிச் சாலைச் சேவை வழங்கப்பட்டுவருகின்றது.
- லண்டனில் வதியும் திரு.செ.செல்வச்சந்திரன் மற்றும் அவரின் சகோதரரான செ.இராசேந்திரன் (N.S.R) அவர்களும் இணைந்து 2004 ஆம் ஆண்டிலிருந்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர் மற்றும் கணனி உதவியாளருக்கான ரூபா. 8000/- மாதாந்த வேதனமாக வழங்கிவருகின்றனர்.
- 2005இல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கத்தினால் கட்டட இடிபாடுகளை அகற்றும் மாபெரும் பணி நிறைவேற்றப்பட்டது.
- 2005 இல் பழைய மாணவரும் பொறியியலாளருமான திரு.க.தவராஜா அவர்களின் உதவியுடன் உள்ளக வீதி மின் விளக்குகள் அமைக்கப்பட்டன.
- 2005 இல் யாழ் மாவட்ட காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு.தி.மகேஸ்வரன் அவர்களினால் பாடசாலைக்கென “பாண்ட்” உபகரணங்கள் சில வழங்கப்பட்டன. மேலும் இவரால் எமது பாடசாலைக்கென வழங்கப்படவிருந்த ஒரு பஸ் வண்டி, சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் எமது பாடசாலைத் தேவைகளின் போது சலுகைக்கட்டண அடிப்படையில் சேவை வழங்குதல்வேண்டும் என்னும் நிபந்தனையும் எழுத்துமூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- 2006 இலும் 2007இலும் பரந்துபட்ட நீர்வசதி வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- 2006இல் நெல்லியடியின் பிரபல வர்த்தகரும் பாடசாலை நலன்விரும்பியுமான திரு.சு.சண்முகசுந்தரம் அவர்களினால் பாடசாலைக்கென ஒரு முச்சக்கர வண்டி (ஓட்டோ) அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 2006 இல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.மு.சிவாஜிலிங்கம் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின்கீழ் உள்ளக ஒலியமைப்பு (Internal Sound System) ஏற்படுத்தப்பட்டது.

- 2007இல் விவசாயப் பண்ணை புனரமைக்கப்பட்டு மீண்டும் விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2007இல் முன்னைநாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி.தி.பெரியதம்பி அவர்களின் முயற்சியினால் யாழ் மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

- 2008 இல் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினால் சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும், விளையாட்டு அணிகளுக்கான கோலவுடைகளும் பாதணிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

- இவைதவிர பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகிடமிருந்து பின்வரும் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

| அன்பளிப்புச் செய்தோர் | பொருள்/ உதவிகள் |
|---|---|
| திரு.நா.தெய்வேந்திரம் | ரூ. 25000 பெறுமதியான புத்தகங்கள் |
| திரு.அ.சோமசுந்தரம்பிள்ளை | ரூபா.25000 பெறுமதியான புத்தகங்கள், |
| திரு.ஆ.ஜெயக்குமார் | வீதி செப்பனிட்டமை |
| பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் | கிரிக்கற் உபகரணங்கள். |
| பழைய மாணவர் சங்கம் | கிரிக்கற் ஆடுகளவிரிப்பு |
| திரு.க.நாகராஜா (ஜனனி) | உதைப்பந்தாட்ட அணி கோலவுடை |
| பழைய மாணவர்சங்கம் | உதைபந்தாட்ட அணி கோலவுடை |
| திரு.மா.இளங்குமரன் (லண்டன்) | உதைபந்தாட்ட அணி பாதணிகள் |
| திருமதி.இ.சிவராஜா (ஆசிரியை) | பாண்ட் வாத்திய அணி மேலங்கி (ஆண்கள்) |
| திருமதி.செ.பாலசிங்கம் (ஆசிரியை) | மேடைத் திரைச்சீலை |
| திரு.து.வாசுதேவன் (லண்டன்) | ஒரு தொலைக்காட்சிப்பெட்டி |
| திரு.ஆனந்தராசா (சேவாலங்கா) | சமையற்பாத்திரங்கள், உபகரணங்கள். |
| பழைய மாணவர் சங்கம் | 60 பாடசாலைக் கொடிகளும் கொடிக்கம்பங்களும் |
| கட் - நெல் ப.நோ.கூ.சங்கம் | நூலகத்திற்கான ஒருதொகுதி நூல்கள் |
| திரு.S.பாலகுமார் (விரிவுரையாளர்) | ஒரு தொகுதி நூல்கள் |
| சிவஸ்ரீ.பஞ்சநாதக் குருக்கள் | ஒரு தொகுதி நூல்கள் |
| திரு.மு.இராஜகோபால் | 10 பிளாஸ்டிக் கதிரைகள் |
| திரு.ஆனந்தராசா (சுவிஸ்) | சிற்றுண்டிச் சாலை குளிர்சாதனப் பெட்டிக்காக ரூபா.25000/- |
| திரு.செ.இராசேந்திரம் | நூலகம் - ரூபா.15000/- |
| திரு.ந.பாஸ்கரன் | நூலகம் ருபா.10000/- |
| திரு.மு.சுந்தரலிங்கம் | நூலகம் ருபா.5000/- . |
| திரு.அ.க.நடராஜா | நூலகம் ருபா.3000/- . |
| திரு. ஆ. இராஜேந்திரம் (பி.க.ப) | நூலகம் ருபா.5000/- . |
| யாழ். உதைபந்தாட்டச் சங்கம் | மேசைப்பந்தாட்ட மேசை 01 |

| | |
|---|---|
| இலங்கைவங்கி - நெல்லியடி | மாணவர் காலணிகள் 50 |
| ஹற்றன் நஷனல் வங்கி (நெல்) | வகுப்பறைகளுக்கான ஜன்னல் திரைச்சீலை |
| திருமதி.இந்திராணி சிவபாலன் | மாணவர் தலைவர்களுக்கான இலச்சினை. |
| திரு.S.விஜயகாந்தன் (லண்டன்) | ரூபா. 500 நன்கொடை |
| Dr.கௌரிபாலன் (லண்டன்) | ரூபா.10000/- நன்கொடை |
| Dr.V.R.தவராஜகுலசிங்கம் (லண்டன்) | ரூபா. 10000/- |
| திரு.I.பொன்னுத்துரை (லண்டன்) | ரூபா.10000/- |
| வதிரி புனித அந்தோனியார் ஆலயம் | ருபா.10000/- |

இவை தவிர பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்கள் வருடாவருடம் வழங்குகின்ற நிதிப்பங்களிப்புக்கள் மூலமாக வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் கல்லூரியின் ஏனைய நிகழ்வுக்கான உதவிகளும் காத்திரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சிறப்பாக கல்லூரியின் வள மேம்பாட்டிலும் கணனி வள நிலையத்திற்கான உபகரணங்களுக்கான சேவைகளையும் உபகரணங்களையும் விருத்தி செய்வதிலும் பழைய மாணவர் சங்கம் மற்றும் அதன் லண்டன்,கனேடிய கிளையினர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வதியும் ஏனையபழைய மாணவர்களின் பங்களிப்பும் காத்திரமானவையாகும். வருடாந்தப் பரிசளிப்பு விழாக்களுக்கான பரிசில்களையும் புலமைப்பரிசில் நிதி ஏற்பாடுகளையும் பழைய மாணவர் சங்கத்தினரே மேற்கொண்டுவருகின்றன.

**விளையாட்டு மைதான விஸ்தரிப்புச் செயற்றிட்டம் :**

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தினை 400 மீற்றர் தட வசதியுடையதாகவும் மைதானத்தின் கிழக்குப்புறமாகவுள்ள யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி வரையும் விஸ்தரித்தல் வேண்டும் என்பது கல்லூரிச் சமூகத்தின் நீண்டகாலக் கனவாகும். இதற்கான முன்முயற்சிகள் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நிலையில் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் மேற்கொண்ட அயராத முன்முயற்சியினால் அக்கனவு நிறைவேறும் காலம் கனிந்துள்ளது. லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.து.வாசுதேவன் அவர்கள் இதற்கு முன்னோடியாக தனது பெற்றோர் மூலம் தனது சகோதரியின் நினைவாக ஒரு பரப்புக் காணியினை அன்பளிப்பாக வழங்கியதுடன் அடுத்த கட்டமாக லண்டன் கிளையினர் பதினொரு இலட்சம் செலவில் 3 1/2பரப்புக் காணியினை திரு.க.சந்திரகுமார் அவர்களிடமிருந்து 2008இல் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். அத்துடன் மேலும் மைதானத்தின் தெற்குப்புறமாக கிழக்கே பிரதான வீதி வரையுள்ள காணிகளை கொள்வனவு செய்யும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வருட இறுதிக்குள் இந்த இலக்கு எய்தப்பட்டு விளையாட்டு மைதான விஸ்தரிப்பு பூர்த்தியாகும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

**கல்லூரியின் விளையாட்டுத்துறை.**

தரமான கல்வியை வழங்குதல் என்னும் இலக்குடன் கல்லூரியின் விளையாட்டுத்துறைச் செயற்பாடுகள்முன்னெடுக்கப்படுகின்றன. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் திரு.சு.இராஜசீலன் அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவையாலும் ஆசிரியர் திரு.தணிகைவேல் அவர்களது பங்கிப்பினாலும் அனேகமான மாணவர்கள் மெய்வல்லுநர் போட்டிகளிலும் பெருவிளையாட்டுக்களிலும் குறிப்பிடத்தக்க அடைவுகளைப் பெற்றுள்ளனர்.

2004இல் உதைபந்தாட்டத்தில் 17 வயது, 19 வயது ஆகிய இரு அணிகளும் மாவட்டச் சம்பியன்களாயின. தற்போது பெரு விளையாட்டுக்களின் எண்ணிக்கை பரவலாக்கப்பட்டு அதிக எண்ணிக்கையான மாணவர்களது பங்குபற்றுதலுடன் 17 பெரு விளையாட்டு அணிகள் இக்கல்லூரியில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் சவால்தரும் அணிகளாகப் பரிணமித்துள்ளன. இவற்றுக்குத் தேவையான விளையாட்டு உபகரண வசதிகளில் பெரும்பாலானவை பெறப்பட்டுள்ளன.

**மாணவர் ஒழுக்க சீர்மியம்:**

கல்வியில் தரம் என்பது தாரக மந்திரமாகிவிட்ட இன்றை காலகட்டத்தில் தரமான கல்வி என்பது தனியாகப் பரீட்சை அடைவுகளின்பாற்பட்டதன்று. அது மாணவர்களது ஒழுக்க விழுமியங்களுடனும் நெருங்கிய தொடர்புடையதாகும். இவ்வகையில் இக்கல்லூரி மாணவர்களினது ஒழுக்கம் மற்றும் ஒழுங்கு தொடர்பான உயர்பண்புக்குறி இலக்கினை நோக்கிய பயணம் தொடர்கின்றது. இவை தொடர்பில் இக்கல்லூரியில் நல்ல சமிக்கைகள் தெனபடுகின்றன. கல்வி அடைவுகளுக்கு வழங்கப்படும் கனதிக்குச் சமமாக அல்லதூ அதற்கு மேலாக மாணவர்கது ஒழுக்க விருத்திக்கு உயர் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

**மாணவர் விசேட செயற்பாடுகள் :**

மாணவர்களது தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்யும் பொருட்டு பல செயற்பாடுகள் மன்னெடுக்கப்படுகின்றன. மாணவ தலைவர் முறை, சாரணர் படையணி, போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, மாணவர் மன்றங்கள் (ஆங்கில மற்றும் தமிழ்) நூலகசேவை, கணனிப் பயிற்சிகள், விவசாயப் பயிற்சிகள் முதலியவை இவற்றுள்ளடங்கும் .இவற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மாணவருக்கு வழிகாட்டுகின்றனர். மாணவ்களது நடையுடை பாவனை மற்றும் மனப்பாங்குகளில் சிறப்பான முனனேற்றங்கள் ஏற்படடு வருகின்றன. பாடவிதான, இணைப்பாடவிதான அடைவுகளிலும் சிறந்த பெறுபேற்றை வெளிக்காட்டிவருகின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் பங்களிப்பு**

இக்கல்லூரியின் ஒட்டுமொத்தமான அபிவிருத்திக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகள் உறுதுணையாக அமைந்துள்ளன. 1990களில் திரு.க.விஜயகுமார் (கிராம அலுவலர்) அவர்கள் செயலாளராகவிருந்து குறிப்பிடத்தக்க பணியாற்றி வந்தார்.அதன் பின்னர் கடந்த 5ஆண்டுகளில் திரு.மு.சுந்தரலிங்கம், திரு.சி.தங்கராசா ஆகியோர் செயலாளர்களாகவிருந்து அனைத்துப் பெற்றோர்கள் நலன்விரும்பிகளதும் உதவியைப் பெற்று பல அபிவிருத்திச்செயற்பாடுகளுக்குக் காரணகர்த்தாக்களாக தொழிற்பட்டனர். ஒரு ஆரோக்கியமான பாடசாலைச் சமூக உறவு இக்கல்லூரியில் நிலவுவது பாடசாலை அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு உறுதுணையாயின.

**பழையமாணவர் சங்கம்**

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளின் தேவைகள் பல்கிப்பெருகியுள்ளன. அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் தனித்து அரச வளஏற்பாட்டுடன் மாத்திரம் தமது தேவைகளை நிறைவு

செய்து அபிவிருத்தி காண்பது கடினமாகும். பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பும் கல்வி தொடர்பான விழிப்புணர்வும், தீர்க்க தரிசனத்தினாலுமே இவைசாத்தியமாகும். பாடசாலைச்சமூகங்களின் பங்குதாரர்களில் பழையமாணவர்களே பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதில் வலுவுள்ள சக்திகளாக விளங்குகின்றனர். இவ்வகையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழையமாணவர் சங்கத்தினர் பாடசாலை நிர்வாகத்துடன் நல்ல புரிந்துணர்வுடன் பாடசாலை அபிவிருத்திப் பணிகளில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். பாடங்களை கற்பித்தல் வளவாளர், காணிக்கொள்வனவு, விளையாட்டுக்கான வளங்கள் முதலானவற்றை வழங்குவதிலும் பரிசளிப்பு விழா பாடசாலை அழகுபடுத்தல் முதலியவற்றிலும் அண்மைய ஆண்டுகளில் அதிகளவில் அர்ப்பணிப்புடன் கருமமாற்றி வருகின்றனர். பழையமாணவர் சங்கத்தின் தலைவராகவிருந்த திரு.வே.வீரபத்திரபிள்ளை (உதவி அரசாங்க அதிபர்), செயலாளராகவிருந்த திரு.சி.பிரபாகரன் (கிராம அலுவலர்) மற்றும் தற்போதைய தலைவர் திரு.இ.ஐயாத்துரை (ஓய்வுநிலை அரசாங்க அதிபர்), செயலாளர் திரு.வீ.சுதர்சன் (ஆசிரியர்) மற்றும் உபதலைவர்கள், அங்கத்தவர்கள் பாடசாலையின் பன்முகப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் தமது உச்சஅளவிலான உழைப்பினை வழங்கி வந்திருக்கின்றனர். அதேபோன்று பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையினர் அதன் தலைவர் திரு.து.வாசுதேவன், செயலாளர் திரு. S.யோகநாதன் ஆகியோர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினரும் பாடசாலைக்கான உபகரணங்களை வழங்குவதிலும், காணிக்கொள்வனவிலும் அதிதீவிர பங்காற்றி வருகின்றனர். பழையமாணவர் சங்கத்தின் கனடியக் கிளையின் தலைவர் திரு.C.அம்பிகாவரன், செயலாளர் திரு.K.குலராஜேந்திரம் உள்ளிட்ட பழையமாணவர் சங்க அங்கத்தவர்ளும் பாடசாலை அபிவிருத்தியில் காத்திரமான பங்காற்றி வருகின்றனர்.

## கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில்......

- மாதிரி அரச பாடசாலையாக - 1921
- மத்திய மகா வித்தியாலயமாக - 1946
- நவோதயப் பாடசாலையாக - 2005

| | | |
|---|---|---|
| கல்வி வலயம் | - | வடமராட்சி |
| கல்வி கோட்டம் | - | கரவெட்டி |
| பாடசாலை வகை | - | மத்திய மகா வித்தியாலயம் 1AB (ஆண், பெண்) |
| மொழிமூலம் | - | தமிழ் , ஆங்கிலம் |
| வகுப்பு வீச்சு | - | தரம் 6 - தரம் 13 |
| குறியீட்டு இலக்கம் | - | 1008001 |
| பாடசாலை தொகைமதிப்பு இல. | - | 9269 |
| தொலைபேசி | - | |
| அலுவலகம் | - | 021 226 3017 |
| த.தொ.தொ.நு.நிலையம் | - | 021 226 4141 |
| தொலைநகல் | - | 021 226 3017 |
| இணையதள முகவரி | - | www.nmmv.com |

## எமது அதிபர்கள் வரிசையில்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.V.சிதம்பரப்பிள்ளை | - | |
| 02. | திரு.T.சிதம்பரப்பிள்ளை | - | |
| 03. | திரு.S.காசிநாதர் | - | |
| 04. | திரு.S.துரையப்பா | - | |
| 05. | திரு.V.சின்னையா | - | |
| 06. | திரு.R. இராசயினார் | - | |
| 07. | திரு.S.துரையப்பா | - | |
| 08. | Dr.S.சிவப்பிரகாசம் | - | |
| 09. | திரு.A.T.சபாரத்தினம் | - | |
| 10. | திரு. S. இரத்தினசபாபதி | - | |
| 11. | திரு.K.சிவசிதம்பரம் | - | (1967 - 1972) |
| 12. | திரு.V.K.நல்லையா | - | (1973 - 1975) |
| 13. | திரு.K.குணரட்ணம் | - | (1975.05.08 - 1982.07.21) |
| 14. | திரு.S.றோய்காந்தராசா | - | (1982.07.21 - 1991.01.24) |
| 15. | திரு.K.நடராஜா (பதில் அதிபர்) | - | (1991.01.24 - 1991.03.20) |
| 16. | திரு.V.அருளானந்தம் | - | (1991.03.20 - 1992.02.05) |
| 17. | திரு.S.சிற்றம்பலம் | - | (1992.02.05 - 2001.12.02) |
| 18. | திரு.S.சேதுராஜா | - | (2001.12.02 இலிருந்து ) |

## எமது ஆசிரியர்கள் வரிசையில் .....

எமது கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் முழுவரினதும் பெயர்களைப் பெறமுடியாதிருந்த போதிலும் 1975ஆம் ஆண்டிலிருந்து இக்கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றனர். எனினும் 1975 ஆம் ஆண்டில் கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள் இக்கல்லூரியில் நியமனம் பெற்ற ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| இல. | ஆசிரியப் பெருந்தகைகள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | திரு.த. பாலேந்திரன் | 1961 |
| 2 | திரு.க. இரங்கநாதன் * | 1962 |
| 3 | திரு.ஆ. இராசரத்தினம் * | 1963 |
| 4 | திரு.த.சிதம்பரப்பிள்ளை | 1969 |
| 5 | திருமதி. மேரிஅன்னமலர் யுவக்கிம் | 1969 |
| 6 | திரு.ச. றோய்காந்தராஜ் | 1970 |
| 7 | திரு.த. கிட்டினன் | 1970 |
| 8 | திரு.செ. ஏரம்பசர்மா * | 1971 |
| 9 | திருமதி.செ. மயில்வாகனம் * | 1971 |
| 10 | திருமதி.நா.செல்வராஜா | 1971 |
| 11 | திரு.S.K. பரம்சோதி | 1972 |
| 12 | திரு.சி.இராமலிங்கதேவர் | 1972 |
| 13 | திரு.பொ. ஆறுமுகம் | 1972 |
| 14 | திரு.சி. அம்பிகாவரன் | 1973 |
| 15 | திரு.க. இராசையா * | 1973 |
| 16 | திரு.சி.தங்கராசா | 1973 |
| 17 | திருமதி.ய. கந்தவனநாதன் | 1973 |
| 18 | திருமதி.மீ. சந்திரசேகரம் | 1973 |
| 19 | திரு.ம. இராமச்சந்திரன் | 1974 |
| 20 | திரு.க. வல்லிபுரநாதன் * | 1974 |
| 21 | திரு.வீ. நடேசு * | 1974 |
| 22 | திருமதி.சு.சறோஜினிதேவி | 1974 |
| 23 | திரு.க. குணரத்தினம் * | 1975 |
| 24 | திரு.க. குணபாலசுப்ரமணியம் | 1975 |
| 25 | திரு.வி.இராமலிங்கம் | 1975 |
| 26 | திருமதி.ச. சிவஞானசுந்தரம் | 1975 |
| 27 | திரு.த. அருமைத்துரை | 1975 |
| 28 | திருமதி.ம. மகேந்திரா | 1976 |
| 29 | திருமதி.சி. சிறீஸ்கந்தராசா | 1976 |
| 30 | திரு.J.C. சிவஞானசுந்தரம் * | 1977 |
| 31 | திரு.சி.நடராசா | 1977 |
| 32 | திரு.ந. அழகரத்தினம் | 1977 |
| 33 | திரு.க.நவரத்தினம் | 1977 |
| 34 | திரு.சா. யோகராசா | 1977 |
| 35 | திருமதி.க.ரகுபதி | 1977 |
| 36 | திருமதி.பி.சண்முகம் | 1977 |
| 37 | திருமதி.க.செல்வரத்தினம் | 1977 |
| 38 | திருமதி.அ. கோமளபுஸ்பராணி | 1977 |
| 39 | செல்வி.வே. புவனேஸ்வரி | 1977 |
| 40 | செல்வி.தே.முருகேசபிள்ளை | 1977 |
| 41 | திருமதி.S. சிவனேசன் | 1977 |
| 42 | திரு.கி. நடராசா | 1978 |
| 43 | திரு.அ. விஜயநாதன் | 1978 |
| 44 | திருமதி.செ. பாலசிங்கம் | 1978 |
| 45 | திருமதி.சி. வேதநாயகி | 1978 |
| 46 | செல்வி.ந. வசந்தி | 1978 |
| 47 | திரு.ச. தேவராஜன் | 1978 |
| 48 | திரு.க.பாலசுப்ரமணியம் | 1978 |
| 49 | திரு.A. தர்மலிங்கம் | 1978 |
| 50 | திரு.P.சிவகுருநாதன் | 1978 |
| 51 | திரு.M. இராமச்சந்திரன் | 1978 |
| 52 | திரு.K.V. நாதன் | 1978 |
| 53 | திரு.S. ஆனந்தராசா | 1978 |
| 54 | திரு.S ஆனந்தராஜா | 1978 |
| 55 | திரு.K. குலசேகரம் | 1978 |
| 56 | திரு.A. எம்பெருமான் | 1978 |
| 57 | திரு.K. இலங்கநாதன் | 1978 |
| 58 | திரு.K.சிதம்பரப்பிள்ளை | 1978 |
| 59 | திருமதி.K.G.மனுநீதி | 1978 |
| 60 | திரு.S.சுந்தரலிங்கம் | 1978 |
| 61 | திரு.K.செல்வரட்ணம் | 1978 |
| 62 | திருமதி.N.பாலேந்திரன் | 1978 |
| 63 | திரு.S. பாலகிருஷ்ணன் | 1978 |
| 64 | திருமதி.S.அருள்லிங்கம் | 1978 |
| 65 | திரு.K.P. அருளானந்தம் | 1978 |
| 66 | செல்வி.M. சின்னையா | 1978 |
| 67 | திரு.S.சிவம் | 1979 |
| 68 | திரு.P. சிவசெந்தில்நாதன் * | 1979 |
| 69 | திரு.M. நிக்ளாப்பிள்ளை * | 1979 |
| 70 | திரு.S. தம்பிராஜா | 1979 |
| 71 | திரு.S. கருணானந்தம் | 1979 |
| 72 | திருமதி.S.புஸ்பலிங்கம் | 1979 |
| 73 | திரு.V. நவரட்ணம் | 1979 |
| 74 | திரு.S. கருணேஸ்வரன் | 1979 |
| 75 | திரு.B. வெற்றிவேல் | 1980 |
| 76 | திரு.S. விநாயகமூர்த்தி | 1980 |
| 77 | திரு.V. கைலாயபிள்ளை | 1980 |
| 78 | திரு.S. மனோகரன் | 1980 |
| 79 | திரு.B. இராமகிருஷ்ணர் | 1980 |
| 80 | திரு.A.K. குணசிங்கராசா * | 1980 |
| 81 | திரு.K. வல்லிபுரநாதன் * | 1981 |
| 82 | திரு.M. புவனேந்திரன் | 1981 |
| 83 | திருமதி.V. மகேந்திரன் | 1981 |
| 84 | செல்வி.ப.செகராசசிங்கம் | 1981 |
| 85 | திரு.K.சிவபாதம் | 1981 |
| 86 | திரு.M.பொன்னம்பலம் | 1981 |
| 87 | திருமதி.S. சங்கரப்பிள்ளை | 1981 |
| 88 | செல்வி.G. நவரத்தினராசா | 1981 |
| 89 | திருமதி.E.M. நவரத்தினராசா | 1981 |
| 90 | செல்வி.V. ராதாசந்திரவதி | 1981 |

| | | |
|---|---|---|
| 91 | திரு.K. சிவானந்தன் * | 1982 |
| 92 | செல்வி.S. பொன்னம்பலம் | 1982 |
| 93 | திருமதி.R.குலவீரசிங்கம் | 1982 |
| 94 | திரு.N. வரதராசா | 1982 |
| 95 | திரு.V. சிவசுப்ரமணியம் | 1982 |
| 96 | திரு.S. பாலேந்திரன் | 1983 |
| 97 | திரு.K. சதாசிவமூர்த்தி | 1984 |
| 98 | திரு.V. வல்லிபுரம் | 1984 |
| 99 | திருமதி.S. பாலேந்திரா | 1984 |
| 100 | திருமதி.S. சிவமூர்த்தி | 1984 |
| 101 | திரு.K.S. குமாரதாசன் | 1984 |
| 102 | திரு.P. உருத்திரராசா | 1984 |
| 103 | திருமதி.K. தங்கலட்சுமி | 1984 |
| 104 | செல்வி.T. சறோஜா | 1985 |
| 105 | திருமதி.P. பாலசுப்ரமணியம் | 1985 |
| 106 | திரு.N. குலேந்திரராஜா | 1985 |
| 107 | திரு.T. நாகேந்திரராசா | 1985 |
| 108 | திரு.V. செல்வராசா | 1985 |
| 109 | திரு.K. குலராஜேந்திரம் | 1985 |
| 110 | திரு.B. வேணுகோபால்வாணிதர்சன் * | 1985 |
| 111 | திருமதி.S. குணரட்ணம் | 1985 |
| 112 | திரு.K. சிதம்பரப்பிள்ளை | 1985 |
| 113 | திரு.R. ஞானசேகரம்பிள்ளை | 1985 |
| 114 | செல்வி.A. கந்தசாமி | 1986 |
| 115 | செல்வி.R.D.குமாரசாமி | 1986 |
| 116 | திருமதி.V. தேவச்சந்திரன் | 1986 |
| 117 | திரு.S. சிவபாதசுந்தரம் | 1987 |
| 118 | திரு.K. ராமஜெயம் | 1987 |
| 119 | திருமதி.J. வாமதேவன் | 1987 |
| 120 | செல்வி.M. நடராசா | 1987 |
| 121 | திரு.V. சிவசுப்பிரமணியம் | 1988 |
| 122 | திரு.V. பாலசுப்பிரமணியம் | 1988 |
| 123 | திரு.V. கிருஷ்ணபிள்ளை | 1989 |
| 124 | திரு.I. செல்வராசா | 1989 |
| 125 | திரு.V. கணபதிப்பிள்ளை | 1989 |
| 126 | திருமதி.R. சோமசுந்தரம் | 1989 |
| 127 | செல்வி.G. சிதம்பரநாதன் | 1989 |
| 128 | செல்வி.Y. கணபதிப்பிள்ளை | 1989 |
| 129 | திருமதி.I. யோகராசா | 1989 |
| 130 | திரு.R. குகதாசன் | 1989 |
| 131 | திரு.A. அரியரத்தின்ம் | 1989 |
| 132 | செல்வி.S. சதாசிவம் | 1989 |
| 133 | செல்வி.S. சோதிமயம்சோதி | 1989 |
| 134 | செல்வி.B. கிருபாகரன் | 1989 |
| 135 | திரு.R. ராகவன் | 1990 |
| 136 | திரு.K. ஈஸ்வரதேவன் | 1990 |
| 137 | திருமதி.S. இராசசுந்தரம் | 1990 |
| 138 | செல்வி.S. செல்வராணி | 1990 |
| 139 | செல்வி.K. அனுசியா | 1990 |
| 140 | செல்வி.R. வெண்மதி | 1990 |
| 141 | செல்வி.C. தமயந்தி | 1990 |
| 142 | திருமதி.S. பசுபதிராஜா | 1990 |
| 143 | திரு.T. நாகேந்திரராசா | 1990 |
| 144 | திரு.S. மகேந்திரன் | 1992 |
| 145 | திரு.இ. ஸ்ரீரங்கநாதன் | 1992 |
| 146 | செல்வி.ம. செல்லத்துரை | 1992 |
| 147 | திரு.த. பாலகுமார் | 1992 |
| 148 | திரு.பொ. இரட்ணராஜா | 1992 |
| 149 | திருமதி.ம நற்குணலிங்கம் | 1992 |
| 150 | செல்வி.த. குமுதினி | 1992 |
| 151 | திரு.ச. சரவணபவன் | 1992 |
| 152 | செல்வி.S. கணேஷன் | 1992 |
| 153 | செல்வி.வி. இராசரத்தினம் | 1992 |
| 154 | செல்வி.S. சேனாதிராசா | 1992 |
| 155 | செல்வி.ஆ. சசிகலாதேவி | 1993 |
| 156 | செல்வி.பா. கந்தசாமி | 1994 |
| 157 | திரு.K. கிருஷ்ணயோகன் | 1994 |
| 158 | திருமதி.கு. ஸ்ரீபவன் | 1994 |
| 159 | திரு. க. நித்தியானந்தன் | 1995 |
| 160 | திரு.I. சண்முகலிங்கம் | 1996 |
| 161 | திருமதி.ம. விநாயகமூர்த்தி | 1996 |
| 162 | செல்வி.த. தங்கராசா(சற்குணராசா) | 1998 |
| 163 | செல்வி.த. மங்கயற்கரசி | 1998 |
| 164 | திரு.க. கிருஷ்ணகுமார் | 1998 |
| 165 | திருமதி.கௌ. துரைராசா | 1998 |
| 166 | திருமதி.ம. பிரணவன் | 1998 |
| 167 | செல்வி.நி. வியாகேசு | 1998 |
| 168 | திரு.கி. அழகேந்திரராசா | 1998 |
| 169 | செல்வி.ந. ஜெயபாரதி | 1998 |
| 170 | திரு.சு. குகனேசன் | 1998 |
| 171 | செல்வி.எ.எஸ். ஜெயவதி | 1998 |
| 172 | திருமதி.ச. ஆழ்வாப்பிள்ளை | 1998 |
| 173 | செல்வி.ந. ஜெயகௌரி | 1998 |
| 174 | திருமதி.ம. விக்னேஸ்வரன் | 1999 |
| 175 | திருமதி.வ. சுதாஸ் | 1999 |
| 176 | திருமதி.வி. அரியதாஸ் | 2000 |
| 177 | திருமதி.லீ. வேலும்மயிலும் | 2000 |
| 178 | திரு.நா. மகேந்திரன் | 2001 |
| 179 | திருமதி.க. விக்னராசா | 2001 |
| 180 | திருமதி.J. நடராசா | 2001 |

| | | |
|---|---|---|
| 181 | திரு.வே. புவனேந்திரராசா | 2001 |
| 182 | திருமதி.பு துரைசிங்கம் | 2001 |
| 183 | திரு.செ. சேதுராசா | 2001 |
| 184 | செல்வி.சி. லோகேஸ்வரி | 2002 |
| 185 | திரு.இ. இராஜசீலன் | 2002 |
| 186 | திரு.ச. உருத்திரகுமார் | 2002 |
| 187 | திருமதி.சா. சிறீஸ்குமார் | 2002 |
| 188 | திரு.ஆ சிவநாதன் | 2002 |
| 189 | திருமதி.தே. துஷ்யந்தன் | 2002 |
| 190 | திருமதி.S. சுரேஸ் | 2002 |
| 191 | திரு.இ. உதயசங்கர் | 2003 |
| 192 | திருமதி.இ. சிவபாலன் | 2004 |
| 193 | திருமதி.ம. உதயகுமாரன் | 2004 |
| 194 | திரு.S. சண்முகநாதன் | 2005 |
| 195 | திருமதி.வா. ஸ்கந்தபாபு | 2005 |
| 196 | திரு.வீ. சுதர்ஷன் | 2005 |
| 197 | திரு.செ. மனோகரன் | 2005 |
| 198 | திருமதி.AM.J. நாகராஜா | 2005 |
| 199 | செல்வி.க. தயா | 2005 |
| 200 | திரு.சி. தனேந்திரன் | 2005 |
| 201 | திருமதி.சு. செல்வகுமார் | 2005 |

| | | |
|---|---|---|
| 202 | செல்வி.பொ. றஜனி | 2005 |
| 203 | செல்வி.T.பாலச்சந்திரன்(பிரேமச்சந்திரன்) | 2005 |
| 204 | திரு.N. கண்ணதாசன் | 2005 |
| 205 | திரு.கு. தெட்சணாமூர்த்தி | 2005 |
| 206 | திரு.S. சிறீவிமலகாந்தன் | 2005 |
| 207 | திரு.வே. விநாயகமூர்த்தி | 2005 |
| 208 | செல்வி.த. உமா | 2006 |
| 209 | திருமதி.த. தவனேசன் | 2006 |
| 210 | திரு.S. ஞானச்செல்வன் | 2006 |
| 211 | திருமதி.R. நகுலன் | 2006 |
| 212 | செல்வி.S. றாஜினி | 2007 |
| 213 | திருதி.R. சுகேந்திரன் | 2007 |
| 214 | திரு.R. சண்முகதாஸ் | 2007 |
| 215 | செல்வி.வீ. யாழினி | 2007 |
| 216 | திருமதி.R. அருளானந்தம் | 2008 |
| 217 | திரு.P. செல்வகுமார் | 2008 |
| 218 | திருமதி.V. தேவானந்த் | 2008 |
| 219 | திரு.K. அம்பிகைபாகன் | 2008 |
| 220 | திரு.S. அமரஜோதி | 2008 |
| 221 | திரு.T. றஜனிக்காந் | 2008 |
| 222 | திரு.S. மதுசூதனன் | 2008 |

## எமது கல்லூரியில் முன்னர் பயன்பாட்டில் இருந்தவை

கல்லூரி இலச்சினை




புவியியல் மன்றத்திற்கென
பயன்படுத்தப்பட்ட இலச்சினை



முன்னைய தொலைபேசி இலக்கம் : 892

## எமது கல்லூரிக்கான காணிக்கொள்வனவு தொடர்பான விபரங்கள்.

எமது கல்லூரிக்கென தற்போதுள்ள காணி 1919 , 1947, 1959 ஆகிய ஆண்டுகளில் மூன்று கட்டங்களாகச் சுவீகரிக்கப்பட்டுள்ளது. அக்காணிகளின் வரைபடங்களும், உரிமையாளர்களின் பெயர் விபரங்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

**கட்டம் - 1**




| இல | காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| 1 | கடவாயில் பருத்தி | வள்ளியம்மை கைம்பெண் முருகப்பர் | 0 | 0 | 23.4 |
| 2 | அனுமக்கொடியன் சீமா | ஆழ்வார் கணபதிப்பிள்ளை | 0 | 1 | 0.6 |
| 3 | ஒழுங்கை | - ( Crown - முடிக்குரியது ) | 0 | 0 | 2.6 |
| 4 | அனுமக்கொடியன் சீமா | வேதாத்தை பெண் இளையதம்பி சின்னத்தம்பி, நாகநாதர் சண்முகம், கதிர்காமர் முருகப்பர் மற்றுமவேலுப்பிள்ளை ஆறுமுகம் | 0 | 1 | 15.3 |
| 5 | வண்ணன் சீமா | கந்தர் வேலுப்பிள்ளை | 0 | 0 | 20.7 |
| 6 | .- do - | கந்தர் குமாரசாமி, கந்தர் வைத்திலிங்கம், சின்னக்குட்டி பெண் வேலுப்பிள்ளை தெய்வானை பெண் பொன்னம்பலம் | 0 | 1 | 9.4 |
| 7 | .- do - | பிள்ளைநார் கார்த்திகேசு | 0 | 1 | 21.7 |
| 8 | .- do - | வைரவநாதர் கதிரித்தம்பி, கதிரித்தம்பி குமாரசூரியர், கதிரித்தம்பி சிவகுரு | 0 | 1 | 14.4 |
| | மொத்தம் | | 1 | 3 | 28.1 |

**கட்டம் - 2**




| காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| | | A | R | P |
| வெல்வத்தை | கந்தையா சுந்தரம்பிள்ளை | 0 | 0 | 6.6 |
| ஆராய்ச்சிக் கிணற்றடி | வல்லிபுரம் செல்லையா | 0 | 0 | 28.1 |
| .- do - | கார்த்திகேசு இராசையா | 0 | 0 | 31.9 |
| திலகுப்பதிராயன் கிணற்றடி | வைரவப்பிள்ளை பொன்னையா<br>வைரவப்பிள்ளை கந்தவனம்<br>கதிரித்தம்பி அம்பலவாணி<br>அப்பர் வள்ளிப்பிள்ளை கைம்பெண் ஆழ்வார் சுப்பர், பானுவதி கைம்பெண் கந்தப்பர் , வல்லியப்பர் கார்த்திகேசு, கந்தையா சுந்தரம்பிள்ளை, வைரவி ஆறுமுகம், வைரவி சண்முகம், கார்த்திகேசு இராசையா, வல்லியப்பர் வீரகத்தி, கதிர்காமு கார்த்திகேசு. | 1 | 3 | 23.5 |
| பொச்சி | கனகரட்ணம் பிள்ளையார் கோயில்<br>(தர்மகர்த்தா நாகலிங்கம் கனகசிங்கம்) | 0 | 2 | 25.1 |
| கடவாயில் பருத்தி கொல்லன் குடியிருப்பு பருத்தியோலை | தம்பு சுந்தரம், வைரவி ஆறுமுகம், கந்தப்பர் கிருஷ்ணபிள்ளை, கந்தையா சின்னையா, சிவகுரு பொன்னையா, கார்த்திகேசு மார்க்கண்டு, கந்தப்பர் வேலுப்பிள்ளை, வல்லியப்பர் சின்னத்தம்பி, வல்லியப்பர் வீரகத்தி, சின்னவி வேலப்பன், வைரவி ஆழ்வாபிள்ளை, வேலப்பர் கதிர்காமு, கந்தையா சண்முகம், சின்னையா சுப்பிரமணியம், வேலப்பர் கந்தவனம் | 0 | 2 | 35.3 |
| மொத்தம் | | 3 | 2 | 30.5 |

## கட்டம் - 3




| இல | காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| 1 | எக்கடியான் | A.பொன்னையா (அல்வாய் தெற்கு)<br>S.முருகேசம்பிள்ளை (அல்வாய் தெற்கு)<br>V.கந்தவனம்(கரவெட்டி வடக்கு)<br>V.முருகேசு (கரவெட்டி வடக்கு)<br>V.சின்னத்துரை (கரவெட்டி வடக்கு)<br>M.மார்க்கண்டு (கரவெட்டி வடக்கு)<br>செல்லம்மா கைம்பெண் செல்லத்துரை<br>N.கோவிந்தராஜா (கரவெட்டி வடக்கு)<br>N.ராமகிருஷ்ணன் (கரவெட்டி வடக் | 0 | 2 | 34.4 |
| 2 | எக்கடியான் | (ஒழுங்கை) -do- | 0 | 0 | 5.9 |
| 3 | வடலித் தோட்டம் & விளாப்பு | வைத்திலிங்கம் நடராசா | 0 | 0 | 26.6 |
| 4 | விளாப்பு & பருத்தியோலை | கந்தவனம் இரத்தினசிங்கம்<br>நாகப்பர் வல்லிபுரம்<br>ஆறுமுகம் வேலுப்பிள்ளை | 0 | 0 | 35 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | எக்கடியான் | கனகரட்ண பிள்ளையார் கோவில்<br>Trustees :-<br>S.தியாகராஜா<br>T.சேபாரட்ணம்<br>N.கனகசிங்கம்<br>N.சுப்பிரமணயம் | 0 | 2 | 4.4 |
| 6 | சீமா | K.இராசையா | 0 | 0 | 7 |
| 7 | தேவரவாய்க்கால் | தங்கம்மா பெண் பரிபூரணம்<br>V.பொன்னையா<br>K.வடிவேலு<br>K.ஆறுமுகம் & தெய்வானை பெண் சின்னையா<br>ஆறுமுகம் வேலுப்பிள்ளை<br>கார்த்திகேசு மார்க்கண்டு<br>ஏ.கந்தசாமி ஏரு ஏ.கணபதிப்பிள்ளை | 0 | 2 | 35.1 |
| 8 | தேவரவாய்க்கால் | S.வல்லிபுரம்<br>V.தம்பையா<br>S.கேதப்பர்<br>K.தம்பையா<br>K.சின்னையா<br>V.செல்லையா & சின்னம்மா பெண் சுந்தரம்பிள்ளை | 0 | 1 | 20.2 |
| மொத்தம் | | | 2 | 5 | 6.6 |

இவற்றைவிட நான்காவது கட்டமாக எமது கல்லூரிச் சமூகத்தின் விருப்பின்பேரில் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்புச் செய்யும் நோக்கத்துடன் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் நிதி அநுசரணையோடு திரு.க.சந்திரகுமார் மற்றும் அவரது சகோதரர்களுக்குச் சொந்தமான மூன்றரைப் பரப்புக் காணி *2008.06.18* இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன் கிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது.



## புலமைப் பரிசில்கள் வழங்குநர்களும் இதுவரை பெற்றவர்களும்

| | | |
|---|---|---|
| **மருத்துவம்** | | திருமதி பரஞ்சோதி பாஸ்கரன் நினைவாக வழங்கப்படுகிறது (1994ல் இருந்து ) |
| **வழங்குபவர்** | | திரு.நடேசு பாஸ்கரன் அவர்கள் (தொழிலதிபர்-கொழும்பு ) |
| 1 | பெறுபவர் 1994 | சிவராஜா சுதர்சன் |
| 2 | 1995 | கந்தசாமி பிருந்திக்கா |
| 3 | 1996 | ஆனந்தராஜா சூர்யா |
| 4 | 1997 | இரவீந்திரன் சுரேஸ்குமார் |
| 5 | 1998 | தர்மராசா சண்முகப்பிரியா |
| 6 | 1999 | பாலகிருஷ்ணன் முரளீதரன் |
| 7 | 2000 | இராஜேந்திரன் சந்திரிக்கா |
| 8 | 2002 | மகேந்திரன் வாசுதேவன் |
| 9 | 2003 | இராமஜெயம் ராதை |
| 10 | 2004 | தர்மரட்ணம் காயத்திரி |
| 11 | 2005 | தர்மலிங்கம் கார்த்திகா |
| 12 | 2006 | பாலச்சந்திரன் உமாஜினி |
| 13 | 2007 | விக்னேஸ்வரமூர்த்தி நிஷாந்தினி |

| | | |
|---|---|---|
| **பொறியியல்** | | திருமதி பாக்கியம் ஜயாத்துரை நினைவாக வழங்கப்படுகிறது (1997 ல் இருந்து ) |
| **வழங்குபவர்** | | திரு.இளையதம்பி ஜயாத்துரை அவர்கள் (முன்னாள் அரச அதிபர்) |
| 1 | பெறுபவர் 1997 | சிவசுப்ரமணியம் மணிமேகலை |
| 2 | 1998 | இரட்ணம் ராகுலன் |
| 3 | 1999 | அன்னலிங்கம் ஜெனோசன் |
| 4 | 2001 | சிவபாதம் நிஷாந்தன் |
| 5 | 2002 | விநாயகமூர்த்தி கலயாணி |
| 6 | 2003 | கனகரட்ணம் கிருஷ்ணபவன் |
| 7 | 2004 | தபேந்திரன் தனுஜா |
| 8 | 2005 | பரராஜசிங்கம் திருபன் |
| 9 | 2006 | இராஜகோபால் சௌமியா |
| 10 | 2007 | கலாமணி முரளீதரன் |

| | | |
|---|---|---|
| **முகாமைத்துவம்** | | திருமதி செல்வரட்ணம் ஜயாத்துரை நினைவாக வழங்கப்படுகிறது (1997இருந்து) |
| **வழங்குபவர்** | | திரு ஜயாத்துரை சிவநாதன் அவர்கள் ( மருதம்) |
| 1 | பெறுபவர் 1997 | சின்னராசா முகந்தன் |
| 2 | 1998 | இரட்ணசபா இளங்கீதன் |
| 3 | 1999 | கதிர்காமத்தம்பி சதீஸ் |
| 4 | 2000 | கந்தசாமி பார்த்தீபன் |
| 5 | 2002 | வேலாயுதம் சிவரூபன் |
| 6 | 2003 | சிவராசா நிரோஜன் |
| 7 | 2004 | கணேசமூர்த்தி சுஜீவன் |
| 8 | 2006 | பாலசுந்தரம் புஸ்பாகரன் |
| 9 | 2007 | இராஜன் பிரசாந்தினி |

| | | |
|---|---|---|
| **கலை** | | திரு.இராமநாதன் பஞ்சாட்சரம் நினைவாக வழங்கப்பட்டது.(1997-2001) |
| **வழங்கியவர்** | | திரு.பஞ்சாட்சரம்தயாபரன் அவர்கள் (சிவசக்தி இரும்பகம்) |
| 1 | பெறுபவர் 1997 | ஆறுமுகநாதன் ரூபகாந்தன் |
| 2 | 1998 | வேலாயுதம் ஞானசம்பந்தன் |
| 3 | 1999 | சிவபாலன் விஜிதா |
| 4 | 2001 | சுந்தரமூர்த்தி ரமணன் |
| **வழங்கியவர்** | | பழைய மாணவர் சங்கம் (2002-2004) |
| 1 | பெறுபவர் 2002 | வன்னியசிங்கம் யசோதா |
| 2 | 2003 | தர்மராஜா அஜந்தகுமார் |
| 3 | 2004 | இராஜேஸ்வரன் அகிலன் |
| திரு.பொன்னம்பலம் கந்தசாமி நினைவாக வழங்கப்படுகிறது. (2005ல் இருந்து ) | | |
| **வழங்குபவர்** | | திரு.பொ.குமாரசாமி அவர்கள் (சுட்டத்தரணி) |
| 1 | பெறுபவர் 2005 | பாலசுப்ரமணியம் பிரசாந்தி |
| 2 | 2006 | கனகரட்ணம் சயந்தன் |
| 3 | 2007 | கனகரட்ணம் சுமரதன் |

# பரிசளிப்பு விழா – பரிசுகளுக்கான பிரதான அனுசரணையாளர்கள்

**பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான பரிசில்கள்**

(புலமைப் பரிசில் பெறுவோரைத் தவிர்த்து)

வழங்குபவர் :- திரு.சு.சண்முகசுந்தரம் அவர்கள் (செல்லமுத்தூஸ்)

( 1997ல் இருந்து )

**பாடசாலை மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள்**

திரு.சிதம்பரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா நினைவாக வழங்கப்படுகிறது.

வழங்குபவர் :- திரு சு.ஆறுமுகம் குடும்பத்தினர் (நெல்லியடி)

(2001 இலிருந்து)

**மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய விளையாட்டு வீரர்களுக்கான பரிசுகள்.**

வழங்குபவர் :- திரு.மார்க்கண்டு இளங்குமரன் அவர்கள் (லண்டன்)

(2002 இலிருந்து)

க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பா புலமைப்பரிசில்.

- **சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர் ஒருவருக்கானது.**
- **ஊக்குவிப்பு பரிசுகள் (இருவருக்கு)**

( 2006ம் ஆண்டிலிருந்து )

அமரர். சுப்பிரமணியம் நாகேந்திரன் அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது.

வழங்குபவர் :- திருமதி சந்திரவதனா நாகேந்திரன் அவர்கள்.

# ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாட்டுச் சாதனைகள்

| | போட்டிகள் | மாணவர் பெயர் | பேறு விபரம் |
|---|---|---|---|
| 1 | ஒலிம்பியாட் - 2008 (கணிதப்பிரிவு) | துஷிதா மனோகரன் | மாகாணமட்டம் 1ம் இடம்<br>தேசிய மட்டம் 6ம் இடம் (வெள்ளிப்பதக்கம்) |
| 2 | **Sri Lanka Genius - 2008 (University of Colombo School of Computing)** | விக்னராஜா அரவிந்தன்<br>ஆரண்யா தனபாலசிங்கம்<br>ஹம்சாலினி தங்கவேலாயுதம்<br>பபிதா சிவகணேசமூர்த்தி<br>ஆரண்யா தனபாலசிங்கம் (தேசிய மட்டம் தொலைக்காட்சி சுற்றிற்கு தெரிவுசெய்யப்பட்டவர்) | மாவட்ட மட்டம் 1ம் இடம்<br>மாகாணமட்டம் 2ம் இடம்<br>(தேசியமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்) |
| 3 | "உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்" உலக சிறுவர் தினம் - 2008 (கல்வி அமைச்சு, ஹற்றன் நஷனல் வங்கி) பேச்சுப் போட்டி (ஆங்கிலமொழி மூலம்) | சஞ்சிகா செல்வராஜா | மாகாணமட்டம் 2ம் இடம் (தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்) |
| 4 | **SIR OLIVER GOONETILIKE MEMORIAL AWARD - 2008 For Simple English Speech Contest - 2008)** | Krishnarajah Sairuban | District Level 3rd Place (Selected for National Level) |
| 5 | யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி | தனுஜா தபேந்திரன் | மாவட்ட மட்டம் 1ம் இடம் - 2002 |
| | | விஜிதா தபேந்திரன் | மாவட்ட மட்டம் 2ம் இடம் - 2004 |
| 6 | பவ்ரல் (மனித உரிமைகள்) போட்டி (பொது அறிவு) | சிவலோகசுந்தரம் திருச்செந்தூரன்<br>இராசேஸ்வரன் அகிலன்<br>குட்டித்தம்பி குணாளன்<br>தனுஜா தபேந்திரன் | மாவட்டமட்டம் 1ம் இடம் - 2003<br>தேசியமட்டம் 3ம் இடம் - 2003 |
| | | விநாயகமூர்த்தி காண்டீபன்<br>கலாமணி முரளீதரன்<br>விஜிதா தபேந்திரன்<br>நிஷாந்தி தர்மகுலசிங்கம் | மாவட்ட மட்டம் 2ம் இடம் - 2005 |
| 7 | அறிவு (சக்தி T.V) வினாடிவினாப்போட்டி | கலாமணி முரளீதரன்<br>ஸ்ரீ.ஸ்ரீபாலசுந்தரம் ரிஷபன்<br>குணகரட்ணம் ஜெயநீதன்<br>இராஜலிங்கம் அர்ச்சுனா<br>இராஜரட்ணம் ராஜ்குமார்<br>துவத்துரைராசா ஜெயகரன்<br>சேல்வராஜா ரேணுராஜ் | தேசிய மட்டத்தில் பங்குபற்றியவர்கள் - 2006 |

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இணைப்பாடவிதான செயற்பாடுகள்

**விளையாட்டுத்துறை**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விளையாட்டுத்துறை மிகவும் உன்னத நிலையில் பாடசாலை ஆரம்பமாகிய நாள்தொட்டு தனக்கென தனியிடத்தை தக்கவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் கல்வி பயின்ற பல மாணவர்கள் தேசியமட்டப்போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றிருப்பதுடன் பல சாதனைகளையும் நிலைநாட்டி இருக்கின்றனர். எமது பாடசாலையில் உதைபந்தாட்ட அணியில் விளையாடிய கந்தப்பு ஸ்ரீதரன் **(S.S.P)** ஆகிய மாணவன் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது. மேலும் எமது பாடசாலையில் மாணவர்களுக்குரிய சகல வகையான விளையாட்டுக்களும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

**மைதானம்:-**

எமது பாடசாலையின் விளையாட்டு மைதானம் 200m சுற்றளவை கொண்டது இம்மைதானத்தில் பல வரலாற்று சிறப்பு மிக்க போட்டிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. ஆதில் சீன அணி பங்குகொண்ட உதைபந்தாட்டப்போட்டியினை குறிப்பிடலாம். மேலும் கோட்ட வலய மாவட்ட மட்டபோட்டிகள் பிரதேசசெயலக மட்டத்திலான போட்டிகள் இளைஞர்சேவைகள் மன்றப்போட்டிகள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தற்பொழுது இந்த மைதானம் லண்டன் பழையமாணவர் சங்கத்தின் உதவியுடன் விஸ்தரிக்கப்பட்டு 400m சுற்றளவு கொண்ட மைதானமாக அமைப்பதற்கான சகல பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் விளையாட்டுத்துறை மேலும் விருத்தியடைய வழி செய்கின்றது.

**உதைபந்தாட்டம்:-**

எமது பாடசாலை உதைபந்தாட்ட அணிகள் உதைபந்தாட்டதுறையில் தமக்கென ஒரு தனியிடத்தை தக்க வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எமது அணிகளில் இடம்பெற்ற வீரர்கள் கழகங்கள் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றவற்றில் சிறந்த வீரர்களாக திகழ்வது காணக்கூடியதாக உள்ளது.

எமது உதைபந்தட்டஅணிகள் 2002ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மாவட்டபோட்டிகளில் பங்குபற்றி வருவது குறிப்பிடத்ததக்கது 2003ம் ஆண்டு எமது 16 வயது பிரிவு அணி மாவட்டமட்டத்தில் 1ம் இடத்தினையும் 2004 ம் ஆண்டில் 16 வயது 18 வயது இரு பிரிவு அணிகளும் மாவட்டமட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**கிறிக்கெற்:**

எமது பாடசாலையில் 1960காலப்பகுதிகளிலிருந்து வன்பந்து கிரிக்கெற் அணி அமைக்கப்பட்டு போட்டிகளில் பங்கபற்றிவந்தது பின்னர் சூழ்நிலை காரணமாக இயங்க முடியாமல் போனது துரதிஸ்டமானது பின்னர் மீளவும் 2004 ம'ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு திரு.இராஜகோபால் அவர்களின் உதவியுடன் புதிய ஆடுகளம் அமைக்கப்பட்டு13,15,17,19 வயதுப்பிரிவு அணிகள் போட்டிகளில் பங்குபற்றி வருவதுடன் யாழ்மாவட்ட பிரபல பாடசாலைகளையும் வெற்றி கொண்டு சிறந்த முறையில் விணையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

**எமது பாடசாலையில் மென்பந்தாட்ட கிரிக்கெற் அணியும் நல்ல பலம் வாய்ந்த அணியாக திகழ்வதுடன் மாவட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றது .2002 ம் ஆண்டு இலங்கைரீதியில் மத்திய** மகாவித்தியாலயங்யளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் 2ம் இடத்தைப் பெற்று கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**கரப்பந்து:**

எமது பாடசாலையில் ஆண். பெண் இருபாலருக்குமான அணிகள் வலய, மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றிவருவது குறிப்பிடத்தக்கது

**கூடைப்பந்தாட்டம்**

எமது பாடசாலையில பாராளமன்ற உறுப்பினர்களின் நிதியுதவியுடன் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டு 2007ம் ஆண்ட முதல் போட்டிகளில் பங்குபற்றிவருகின்றது.

**வலைப்பந்தாட்டம்**

எமது பாடசாலையில் நீண்டகாலமாக வலைப்பந்தாட்டஅணி இல்லாதிருந்தது காணப்பட்டது தற்போது வலைப்பந்தாட்ட அணிகள் உருவாக்கம் பெற்றுள்ளது.

**சதுரங்கம்**

பாடசாலையில் சதுரங்க அணிகள் தமக்கென.ஓர் தனியிடத்தினை தொடர்ந்தும் தந்கவைத்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பெண்கள் சதுரங்க அணி 2004,2005,2006 காலப்பகுதிகளில் தேசியமட்டம் வரை பங்குபற்றி சாதனைபடைத்தது குறிப்பிடத்தக்கது. ஆண்கள் சதுரங்க அணியும் மாவட்மடடங்களில் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

**மேசைப்பந்தாட்டம்**

எமது பாடசாலையில் மேசைப்பந்தாட்ட அணி 2005 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட மாகாண மட்டங்களில் வெற்றிகளைப் பெற்றமை குறிபிட்டதக்கது

**பூப்பந்து:**

எமது பாடசாலையில் பூப்பந்து அணி 2005 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட போட்டி வரை பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

**எல்லே:**

எமது பாடசாலையில் எல்லே அணி 2008 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**உடற்பயிற்சி**

எமது பாடசாலையில் உடற்பயிற்சி அணி 1992 ம' ஆண்டு மாவட்டமட்டத்தில் 1ம் இடத்தினை பெற்றதுடன் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றது.

**மெய்வல்லுனர்.**

எமது பாடசாலையில் மெய்வல்லுனர் அணிகள் சிறந்த தடகள வீரர்களைக் கொண்ட அணியாக திகழ்ந்து வருகின்றது. எமது பாடசாலையில் வீரர்கள் இன்று அன்று தொடக்கம் இன்றுவரை தேசியமட்டம் வரை போட்டிகளில் பங்குபற்றி வருகிறது.

**வேறுதுறைகள்:**

நெல்லியடி ம.ம.வி மெய்வல்லுனர் விளையாட்டு அணிகள் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தில் அங்கம்வகிப்பதுடன் அச்சங்கத்தினால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியதுடன் தேசியமட்ட போட்டிகளிலும் பங்குபற்றுகின்றது.

கிறிக்கட் அணி இலங்கைப்பாடசாலைகள் கிறிக்கட் சங்கத்தில் அங்கம் வகிப்பதுடன் அதன் போட்டிகளிலும் பங்குபற்றுகின்றது.

உதைபந்தாட்ட அணி இலங்கைப்பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிப்பதுடன் அதன் போட்டிகளிலும் பங்குபற்றுகின்றது.

இளைஞர் சேவை மன்றம், பிரதேச செயலகம், வங்கிகள் போன்றவற்றால் நடாத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றி சமூகசெயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதுடன் தமது திறைமைகளையும் வெளிக்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

**கடேட் :**

எமது பாடசாலையில் கனிஸ்ட, சிரேஸ்ட கடேட் அணிகள் உருவாக்கப்பட்டு சிறந்தமுறையில் இயங்கிவந்ததுடன் தியாத்தலாவையில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதுடன் தமது சேவைகளை திறம்பட மேற்கொண்டுவந்தது, இவ்வணியில் இடம்பெற்ற மாணவர்கள் பலர் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர், தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக கடேட் அணி தொடர்ந்து இயங்கமுடியாமல் உள்ளது.

**சாரணியம் :**

எமது பாடசாலை ஆரம்பித்த காலம்தொடக்கம் சாரணிய சேவை சிறந்தமுறையில் செயற்பட்டு வருகின்றது, மேலும் மாவட்ட, தேசிய பாசறைகளில் பங்கு பற்றுவதுடன், சாரணிய விளையாட்டுக்கள், ஆலய உற்சவகால சேவைகள், சமூகசேவைகளில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது

**விவசாயம் :**

எமது பாடசாலையின் விவசாயத்துறை சிறப்பாக செயற்பட்டு வருவதுடன், இந்த வருடம் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான விவசாயபோட்டியில் மாவட்ட, மாகாண மட்டங்களில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தகது.

**வீதிப்போக்குவரத்து:**

2003ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வீதிப்போக்குவரத்து கண்காணிப்பு சேவையினை ஆண், பெண் மாணவர்கள் சிறந்தமுறையில் செயல்ப்பட்டு வருகின்றனர்'

வலய. மாவட்ட. மாகாண. தேசியமட்ட பெருவிளையாட்டு போட்டிகளின் முடிவுகள் - கடந்த 3 ஆண்டுகள்

| விளை யாட்டுக்கள் | வயதுப்பிரிவு | 2006 | | | | 2007 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | வலயம் | மாவட்டம் |
| உதை பந்தாட்டம் | 17 வயது | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - | - | - |
| | 19 வயது | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 1ம் இடம் | பங்குபற்றியமை |
| மேசைப் பந்தாட்டம் | 19 வயது ஆண் | 1ம் இடம் | 2ம் இடம் | பங்கு பற்றியமை | - | 1ம் இடம் | 2ம் இடம் |
| | 15 வயது பெண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 1ம் இடம் | பங்குபற்றியமை |
| சதுரங்கம் | 15 வயது ஆண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 2ம் இடம் | 2ம் இடம |
| | 19 வயது ஆண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | - | - |
| | 15 வயது பெண் | 3ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 2ம் இடம் | - |
| | 19 வயது பெண் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | பங்கு பற்றியமை | 1ம் இடம் | 3ம் இடம் |
| கிரிக்கெட் | 19 வயது ஆண் | 1ம் இடம் | 3ம் இடம் | - | - | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| பூப்பந்து | 19 வயது ஆண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| | 19 வயது பெண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | - | - |
| கரப்பந்து | 15 வயது ஆண் | 3ம் இடம் | - | - | - | 3ம் இடம் | - |
| | 17 வயது ஆண் | 3ம் இடம் | - | - | - | - | - |
| | 19 வயது ஆண் | - | - | - | - | - | - |
| | 15 வயது பெண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| | 17 வயது பெண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| | 19 வயது பெண் | - | - | - | - | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| கூடைப்பந்து | 19 வயது ஆண் | - | - | - | - | - | - |

| விளையாட்டுக்கள் | வயதுப்பிரிவு | 2008 | | | |
|---|---|---|---|---|---|
| | | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| உதைபந்தாட்டம | 17 வயது | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 19 வயது | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| மேசைப்பந்தாட்டம் | 19 வயது ஆண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 15 வயது பேண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| சதுரங்கம் | 15 வயது ஆண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 19 வயது ஆண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 15 வயது பெண் | 1ம் இடம் | 3ம் இடம் | - | - |
| | 19 வயது பெண் | 1ம் இடம் | 3ம் இடம் | - | - |
| கிரிக்கெட் | 19 வயது ஆண் | 1ம் இடம் | 3ம் இடம் | - | - |
| பூப்பந்து | 19 வயது ஆண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 19 வயது பெண் | - | - | - | - |
| கரப்பந்து | 15 வயது ஆண் | - | - | - | - |
| | 17 வயது ஆண் | - | - | - | - |
| | 19 வயது ஆண் | - | - | - | - |
| | 15 வயது பெண | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 17 வயது பெண | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - |
| | 19 வயது பெண | - | - | - | - |
| கூடைப்பந்து | 19 வயது ஆண் | 1ம் இடம் | பங்குபற்றியமை | - | - |



# 2008 இல் எமது விளையாட்டு அணிகள்



13 வயது - உதைபந்தாட்ட அணி



15 வயது - உதைபந்தாட்ட அணி



17 வயது - உதைபந்தாட்ட அணி



19 வயது - உதைபந்தாட்ட அணி



13 வயது - கிரிக்கற் அணி



15 வயது - கிரிக்கற் அணி



17 வயது - கிரிக்கற் அணி



19 வயது - மென்பந்து கிரிக்கற் அணி

# 2008 இல் எமது விளையாட்டு அணிகள்



15 வயது சதுரங்க அணி



19 வயது சதுரங்க அணி



19 வயது சதுரங்க அணி



15 வயது சதுரங்க அணி



பூப்பந்து அணி



பூப்பந்து அணி



மேசைப்பந்து அணி



மேசைப்பந்து அணி

# 2008 இல் எமது விளையாட்டு அணிகள்



15 வயது - கரப்பந்தாட்ட அணி



17 வயது - கரப்பந்தாட்ட அணி



19 வயது - கரப்பந்தாட்ட அணி



15 வயது - கரப்பந்தாட்ட அணி



17 வயது - கரப்பந்தாட்ட அணி



19 வயது - கரப்பந்தாட்ட அணி



கூடைப்பந்தாட்ட அணி

# 2008 இல் எமது விளையாட்டு அணிகள்



மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மெய்வல்லுநர் அணி



கல்லூரியின் பெண்கள் கிரிக்கற் அணி



மாகாண மற்றும் தேசியமட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மெய்வல்லுநர் அணி



எமது விளையாட்டுக்குழு -2008

# நிகழ்வின் நிழல்கள்


நூலக திறப்புவிழா - 2004


நூலக வாரம் - 2003


வாசிப்பு வாரம் - 2004


விளை. உபகரணக் கையளிப்பு - 2005


மாணவர் விடுதி ஆரம்பம் - 2004


இல்ல மெய்வன்மைப் போட்டி - 2005


இல்ல மெய்வன்மைப் போட்டி - 2006


"ஜீனியஸ் - 2008" இல் வெற்றிபெற்ற அணி அதிபருடன்



புகைப்படக் கண்காட்சி - 2005


நூலக வாரம் - 2004



அகில இலங்கை கணித : ஒலிம்பியாட்" போட்டியில் மாவட்ட, மகாண மட்டங்களில்முதலாமிடத்தையும் தேசிய மட்டத்தில் ஆறாமிடத்தையும் பெற்று சாதனை படைத்த தரம் 6 மாணவி செல்வி. துஷிதா மனோகரன்


"ஜீனியஸ் - 2008" இல் வெற்றிபெற்றஅணியும் பயிற்றுவித்த ஆசிரியர்களும்

# நிகழ்வின் நிழல்கள்


புதிய கட்டடத் திறப்புவிழா -2004



புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து அதிதிகள் மாணவர்களுடன்


கணனி அலகு திறப்புவிழா - 2004


மாணவர் விடுதி ஆரம்பம் - 2004


கிறிக்கற் ஆடகளம் ஆரம்பம் -2004


ஆங்கிலமொழிமூல வகுப்பு ஆரம்பம்-2003


மாணவர் விடுதி திறப்புவிழா - 2004



ஓட்டோ கையளிப்பு - 2005


பரிசளிப்பு விழா - 2004



பஸ்வண்டிக் கையளிப்பில் அதிதிர்


ஆய்வுகூடத் திறப்புவிழாவில் அதிதிகள் - 2003


ஆசிரியர்தினம் - 2007


மாகாண மட்டத்திற்குத் தெரிவான உதைபந்தாட்ட அணி - 2004



எமது கல்லூரியின்
சிறப்புமிகு கீதத்தை
இயற்றிய பெருந்தகை
**பண்டிதர் க.வீரகத்தி** அவர்களுக்கு
கல்லூரிச் சமூகம்
தலைசாய்த்து வணங்குகின்றது.

## சாதனையாளர்கள்

### க.பொ.த (சா.த) 10A



தனபாலசிங்கம்
ஆரண்யா
2007



கனகரட்ணம்
கிருஷ்ணபவன்
1999



சிவானந்தன்
ரகுவரன்
2006



ராமஜெயம்
ராதை
1999



கலாமணி
முரளீதரன்
2004

### க.பொ.த (உ.த) - 3A,4A



கனகரட்ணம் சயந்தன்
கலை (2006) 3A



தர்மலிங்கம் கார்த்திகா
உயிரியல்(2005) 3A



இராஜேஸ்வரன் அகிலன்
கலை (2004) 3A



சிவபாலன் தயாளினி
கலை (2004) 3A



சிவபாதம் நிஷாந்தன்
கணிதம் (2001) 3A



சுந்தரமூர்த்தி ரமணன்
கலை (2001) 3A



சிவபாலன் விஜிதா
கலை (1999) 4A

புகைப்படம்
கிடைக்கவில்லை

புலேந்திரன் ஜெமில்குலம்
வர்த்தகம் (1996) 4A

# சிரேஷ்ட மாணவர் தலைவர்கள்



சிவானந்தன் ரகுவரன்
உயிரியல்
2008-2009



மாசிலாமணி நிரோசன்
வர்த்தகம்
20007-2008



கலாமணி முரளீதரன்
கணிதம்
2006-2007



சிவசுப்பிரமணியம்
கம்சன்
கணிதம்
2005-2006



பரராசசிங்கம் நிருபன்
கணிதம்
2004-2005



ரவீந்திரநாதன் அரவிந்தநாத்
கணிதம்
2003-2004



சுந்தரமூர்த்தி சுரேந்திரன்
கணிதம்
2002-2003



கனகரட்ணம் கிருஷ்ணபவன்
கணிதம்
2001-2002



சிவராஜா கதீசன்
உயிரியல்
2000-2001



பரராசசிங்கம் மயூரதன்
கலை
1999-2000



அன்னலிங்கம் ஜெனோசன்
கணிதம்
1998-1999



சிவசுப்பிரமணியம்
ஞானசுகாதீபன்
கணிதம்
1997-1998



இரவீந்திரன்
சுரேஷ்குமார்
உயிரியல்
1996-1997



சிவக்கொழுந்து அகிலன்
கணிதம்
1995-1996



சூரியகுமார் விமலன்
வர்த்தகம்
1994-1995



சிவராசா சுதர்சன்
உயிரியல்
1994



செல்வலிங்கம்
செந்தில்குமரன்
கணிதம்
1993



தவராசா தவரூபன்
கணிதம்
1992-1993



நவரட்ணம் மணிவண்ணன்
கலை
1991-1992



எமது கல்லூரியை வளப்படுத்தி வாழவைத்த
பெருந்தகை
உயர்திரு.பொன்.கந்தையா (பா.உ) அவர்கள்




கல்லூரியின் ப.மா.சங்கத்தினால் அமைக்கப்பட்ட
பாரம்பரியமிக்க அன்றைய (1970களில்) விளையாட்டரங்கு



மறைந்துபோன அழகிய முன்மண்டபத்தின் முன்னே
அன்றைய ஆசிரியர் குழாம் (1980களில்)



அழகிய மண்டபத்தினை அமைத்துக்கொடுத்த
உயர்திரு. இராஜலிங்கம் (பா.உ) அவர்கள்
அதே மண்டபத்தில்.



பழைய மாணவர், கடற்படை அதிகாரி திரு.வே.இராமநாதன்
விளையாட்டுவிழாவில் பிரதம அதிதியாக....



அன்றைய மாணவ தலைவர்கள்

# நிகழ்வின் நிழல்கள்



கல்லூரியின் அன்றைய (1964இல்) வகுப்பொன்றின்
மாணவ, ஆசிரிய அணியினர்



எமது கல்லூரியின் புகழ் பரப்பிய அன்றைய கடேற் தொண்டர் படையணியணிகள்
பொறுப்பாசிரியர் திரு. T.பாலேந்திரன் மற்றும் அதிபர் திரு. சிவசிதம்பரம் அவர்களுடன்



# இலங்கையின் கல்வி வளர்ச்சியில் மத்திய மகா வித்தியாலயம்



**கலாநிதி .மா.கருணாநிதி**
பணிப்பாளர்,
தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையம்,
கல்விப் பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிலவிய கல்வி முறையானது சமூகவகுப்பு அடிப்படையிலான பாகுபாட்டுக்கு வழிகோலி இருந்தது. கல்வியை ஜனநாயகப் படுத்துதல் வேண்டும் என்ற கருத்து மேலெழத் தொடங்கியது. சமூகரீதியாகப் பின்தங்கியிருந்த மக்களுக்கான கல்வி வாய்ப்புக்களைத் திறந்துவிடும் நோக்கில் கல்விச்சமவாய்ப்பு மற்றும் கல்வியில் நியாயத் தன்மை என்ற சம தர்மக்கொள்கைகள் முதன்மை பெறத்தொடங்கின. 1939 ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நிகழ்ந்த முக்கியமான கல்விசார் அபிவிருத்திகள் காலனித்துவக் கொள்கை யினின்றும் விலகித்தேசிய வாதக் கொள்கைகள் உருவாக இடமளித்தன. ஆங்கிலமொழியில் கல்வியைப் பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கற்றோர் குழாம் இவ்வாறான தேசிய நோக்கிலான சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களில் ஈடுபடத்தொடங்கிய வேளையில் கல்விசார் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு இலங்கை மக்கள் மத்தியில் உருவாக்கப்படலாயிற்று.

1942ல் C.W.W. கன்னங்கரா அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட விசேட கல்விக்குழு 1943 ல் வெளியிட்ட அறிக்கையில் விதந்துரைக்கப் பட்டுள்ள விடயங்கள் கல்வியை ஜனநாயகப படுத்தும் முயற்சிக்கும் இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கும் அடித்தளமிட்டன.

- பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரையில் இலவசக்கல்வி
- ஆரம்ப நிலையில் தாய்மொழிக்கல்வி மொழியாதல்
- மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுதல்

மேற்கூறிய விடயங்களுடன் மத சார்புடைய பாடசாலைகளின் செல்வாக்கினை மட்டுப்ப டுத்துதல், கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் மூலம் தராதர மேம்பாடு போன்றவையும் முக்கிய மானவையாகக் கருதப்பட்டன. இத்தகைய்வற்றை நடைமுறைப்படுத்துவதில் தேசிய மட்டத்தில் மத்திய மகா வித்தியாலயங்கள் பெரிதும் பங்களிப்பு செய்துள்ளன. 1940 களில் ஆரம்பத்திலிருந்து தொகுதிகள் தோறும் மத்திய மகா வித்தியாலயம் என்ற அடிப்படையில் 53 பாடசாலைகள் நிறுவப் பட்டமை முக்கியமானதொரு விடயமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, யாழ்/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முக்கியமான கல்வி நிறுவனங்களாக விளங்கின.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிலவிய கல்விமுறையில் ஓர் இரட்டைத்தன்மை இடம் பெற்றிருந்தது, கட்டணம் அறவிடும் பாடசாலைகள் உயர்தரமான கல்வியை வழங்கியதுடன் உயர் வகுப்பினைச் சேர்ந்த பிள்ளைகள் அக்கல்வியின் பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பளித்தன. மறுபுறத்தில் கட்டணம் அறவிடாத உள்ளூர்ப் பாடசாலைகள் சுயமொழியில் கற்பித்ததுடன் ஒப்பீட்டளவில் இழிவான கல்வியையும் (எண், எழுத்து, வாசிப்பு) வழங்கின. இந்த இரட்டைத் தன்மையானது கல்வியின் அடிப்படையில் சமூகப் பாகுபாடுகள் ஏற்படுவதற்கு வழிகோலின. இப் பாகுபாடுகளை நீக்கி சம வாய்ப்பினை வழங்கும் நோக்கில் இலவசக்கல்வி அறிமுகமான கால கட்டத்தில் அதன் உடனடி நன்மைகளை உயர் வகுப்பினரே அனுபவித்தனர். இலவசக்கல்வியின் பயன்களை இலங்கையர் அனைவரும் அனுபவிக்க வேண்டுமானால் அக்கல்வியானது இன, மொழி, சமூகவகுப்பு மற்றும் பொருளாதார வேறு

பாடுகளின்றி கல்வியைப் பெறும் வாய்ப்புக்களை விரிவாக்குதல் வேண்டும் என்பது இலவசக் கல்வித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. தரமான இலவசக்கல்வியை வழங்கும் ஏற்பாடுகளில் பாடசாலை முறைமையில் கொண்டு வரப்பட்ட முக்கிய மாற்றங்களில் ஒன்றாக மத்திய மகா வித்தியாலங்கள் தோற்றம் பெற்றன.

மதசார்புடைய ஆங்கிலப்பாடசாலைகளில் கட்டணம் செலுத்திக் கல்வியைப் பெறமுடியாத கிராமப் பிள்ளைகளுக்கு அப்பாடசாலைகளுக்கு இணையாக கல்வியை வழங்குவதற்கு மத்திய பாடசாலைகள் ஏற்பாடுகளைச் செய்திருந்தன. சமூக பொருளாதார நிலைமை காரணமாக மத்திய பாடசாலைகளில் சேர்ந்து கல்வி பயில்வதற்குத் தடைகள் இருந்தவேளையில் ஆற்றலுள்ள பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் கிராமப்புற மாணவர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். வீட்டிலே கற்பதற்கான வசதிகள் அற்ற பிள்ளைகளுக்கு பெற்றோரின் விருப்பத்துடன் மத்திய மகா வித்தியாலயங்களில் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்குரிய வாய்ப்புக்களும் வழங்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையின் கல்வியில் நிலவிய இன்னொரு வேறுபாடு மத நிறுவனங்கள் நடத்தி வந்த பாடசாலைகளின் தராதரத்திலும் கல்வித் தராதரத்திலும் மாவட்ட அடிப்படையில் வேறுபாடுகள் நிலவின. குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி மாவட்டங்களைப் போல ஏனைய மாவட்டங்களில் போதியளவில் கல்வி விருத்தியடையவில்லை. இவ்வேறுபாடுகளை நீக்குவதிலும் மத்திய மகா வித்தியாலயங்கள் கணிசமான பங்கினை ஏற்றன. மத்தியமகா வித்தியாலங்கள் இத்தகைய நோக்கங்களை நிறைவு செய்தமையாலேயே கிராமப்புறங்களில் அமைந்த பல்கலைக்கழகங்கள் என்றும் அவை அழைக்கப்பட்டன.

மத்திய பாடசாலைகள் கலைத்திட்டம் தொடர்பான சில தெளிவான இலக்குகளைக் கொண்டிருந்தன. அவற்றுள் மத்திய பாடசாலைகள் பண்பாட்டு அறிவுக்கும் செயல்முறைப் பயிற்சிக்கும் இடமளிக்கத்தக்க வகையிலான கலைத்திட்டத்தை கொண்டிருக்க வேண்டும். அதனுள்ளே பண்பாட்டு அறிவை ஊட்டக்கூடிய வகையில், சித்திரம், சங்கீதம் செயல்முறை விஞ்ஞானம் ஆகியனவும் செய்முறைப் பயிற்சிக்கு ஏற்றவாறு விவசாயம், வர்த்தகம், கைவேலை, மனையியல் போன்ற பாடங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்பதுவும் முக்கியமானவை. கலைத்திட்ட மாற்றங்கள் பற்றி சிந்திக்கும் பொழுது இலங்கையில் நிலவிய கல்வி முறைமையானது பிரித்தானியர் ஆட்சிக்கால நிர்வாக அமைப்புக்கும் வர்த்தக தேவைகளுக்கும் ஏற்றவாறு இளைஞர்களை ஆயத்தம் செய்வதனையும், சில பரீட்சைகளில் உயர்தரமான வினையாற்றலை வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டுவதாகவும், அவ்வாறு தேர்ச்சி அடைந்தோருக்குப் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை பெறக் கூடிய வசதிகளை செய்து கொடுப்பதாகவும் அமைந்தது.

மேலும், மத்திய பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கலைத்திட்டமானது மாணவர்களின் திறமையையும் அவர்களுடைய வாழ்விடச் சூழலில் காணப்படும் தொழில்களை அடிப்படையாக கொண்டு வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியவர்களாக மாணவர்கள் உருவாக்கப்படல் வேண்டும் என்னும் குறிக்கோளையும் கொண்டிருந்தது. மேலே கன்னங்கரா குழுவின் விதந்துரையின் அடிப்படையில் ஆரம்பக் கல்வியின் பின்னர் பிள்ளைகளொரு தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுவதன் மூலம் ஒன்றில் பல்கலைக்கழகத்திற்கு இட்டுச் செல்லும் அறிவுசார் கல்விக்கும் அல்லது செய்முறைப் பயிற்சியில் ஈடுபடக் கூடிய விவசாயம், வர்த்தகம் என்பவற்றை கற்பிக்கும் கல்லூரிகளுக்கும் செல்லக் கூடிய வகையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தும் ஏற்பாடுகளும் இருந்தது. அவ்வேறுபாட்டின்படி தொழிற்கல்வியைப் பயிலக்கூடிய வாய்ப்புக்கள் மத்திய மகா வித்தியாலயங்களில் கிடைத்தமை கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. சிரேஷ்ட பாடசாலை சான்றிதழைப் பெற்ற மாணவர்கள் உயர்தராதரப் பத்திர வகுப்பில் தமது ஆற்றலுக்கு ஏற்ற துறைகளைத் தெரிவு செய்து பயிலும் வகையில் துறைரீதியாக பிரிக்கப்பட்ட பொழுது விஞ்ஞானம் மற்றும் கலைப்பிரிவுடன் வர்த்தகம், விவசாயம் போன்ற தொழிற்துறைகளுக்கு இட்டுச் செல்லும் பாடங்களைக் கற்கும் வாய்ப்புக்கள் மத்திய மகா வித்தியாலயங்களில் இருந்தன.

இன்னொரு முக்கிய விடயமாக, கிராமப்புறப் பாடசாலைகள் விஞ்ஞானக் கல்வியை வழங்கக்

கூடிய ஆயத்த நிலையில் இருக்கவில்லை. விஞ்ஞான கல்வியை முன்கொண்டு சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க கூடிய காரணத்தினால் கிராமப்புற மக்கள் மத்தியிலும் அக்கல்விக்கு கூடுதலான கேள்வி இருந்தது. ஆயினும் பாடசாலைகளில் போதிய வசதிகள் இல்லாமையாலும் ஆசிரியர் பற்றாக்குறையினாலும் அனேகமான பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி வளம்பெறவில்லை. இக்குறைபாடுகளைப் போக்கும் வகையில் மத்திய மகா வித்தியால யங்களில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைக்கப் பட்டும் விஞ்ஞான ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டும் விஞ்ஞானக் கல்வியை பெறும் ஆக்கபூர்வமான முயற்சிகள் பரவலாக்கப்பட்டன.

கல்வி சமூகநகர்விற்கான ஒரு கருவியாக கருதப்பட்ட காலத்தில் சமூகநகர்விற்கு மத்திய மகா வித்தியாலயங்களின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது. மத்திய மகா வித்தியாலயங்களில் தாய்மொழியில் கல்விகற்று (கூடுதலாக 1960 களில்) பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பல்வேறு துறைகளிலும் பட்டம் பெற்றவர்கள் அரசதுறையில் பல்வேறு முக்கியமான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆங்கிலமொழியில் கற்றவர்களுக்கு கிட்டிய இத்தகைய உயர்தொழில் வாய்ப்புக்கள் உள்ளூர் மொழிகளில் கற்றவர்களுக்கும் கிடைக்கச் செய்வதில் மத்திய மகா வித்தியாலயங்களுக்கு கணிசமான பங்குண்டு.

அண்மைக்காலக் கல்விச் சீர்திருத்தங் களின் விளைவாக பாடசாலை அமைப்பு முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை பற்றி நாம் அறிந்துள்ளோம். முன்பிருந்த மத்திய மகா வித்தியாலங்களுக்குரிய அந்தஸ்து இப்பொழுது 1AB பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னொரு வகையிலே கல்வி நிருவாகம் பன்முகப் படுத்தப்பட்டதன் பின்னர் 1984 இலிருந்து தேசிய பாடசாலைகள் என்ற பெயருடன் பாடசாலைகள் நிறுவப்பட்டதுடன் அவை மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டும் ஏனைய பாடசாலைகள் மாகாண நிருவாகத்தின் கண்காணிப்பிற்கும் மேற்பார்வைக்கும் உள்ளாயின. இப்பாடசாலைகளுக்கான வளஒதுக்கீட்டில் நியாயத் தன்மை பேணப்படல் வேண்டும் என்ற கொள்கை முன்வைக்கப்பட்டாலும் நடைமுறையில் பாரபட்சம் உள்ளதால் பாடசாலைகளுக்கிடையில் சமமின்மை காணப்படுகின்றது. பாடசாலை வகைபற்றிய தீர்மானங்களில் அரசியல் தலையீடு இடமளிப்பதால் வசதிகள் மற்றும் மாணவர் வினையாற்றலில் குறைவான பாடசாலைகள் பெயரளவில் தேசிய பாடசாலை அந்தஸ்தினைப் பெறுகின்றன. இலங்கையில் காணப் படுகின்ற சில தேசிய பாடசாலைகளின் வினையாற்றல்கள் 1C பாடசாலைகளிலும் பார்க்கக் குறைந்த மட்டத்தில் உள்ளமையை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையின் அண்மைக் கால புள்ளி விபரங்களின் படி ஏறக்குறைய 686 , 1AB பாடசாலை களும் தேசிய பாடசாலைகளும் செயற்படுகின்றன. ஒப்பீட்டளவில் பௌதீக மற்றும் மனித வளங்களை அதிகளவில் கொண்டிருக்கும் இப்பாடசாலைகளின் தராதரம் அன்றைய மத்திய மகா வித்தியாலய ங்களுடன் ஒப்பிடக் கூடிய நிலையில் இல்லை யென்ற கருத்து பரவராக நிலவிவருகின்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மிக நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது. 1920 களில் இப்பாடசலை முன்மாதிரிப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. நிகரிலாத கலையினூற்றுக் குருகுலபீடமாக விளங்கிய இக்கல்லூரியில் 1950 தொடக்கம் 1980 கள் வரையில் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்து கற்றனர். இவர்கள் பல்வேறு துறைகளில் உயர் கல்வி பெறுவதற்குப் பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பையும் பெற்றனர். பல்கலைக் கழகங்களுக்குச்செல்ல முடியாதவர்கள் மாற்றாக மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் பயின்றனர். இவ்வாறு செல்வதற்கு பாடசாலையில் இருந்த வசதிகள் குறிப்பாக வகுப்பறை வசதிகள் விஞ்ஞானகூடம், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான வசதிகள் போதிய மனிதவளம் என்பன யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் இக்கல்லூரி ஒரு முன்னணிப் பாடசாலையாகச் செயற்படுவதற்கு வழிகோலியிருந்தன. அத்தகைய பணி இன்றும் தொடர்ந்து வருவது முக்கியமானதொரு விடயமாகும்.

*References:-*


1. *Bikas C.Sanyal et al (1983) University education and graduate employment in srilanka. UNESCO/paris, Marga Institute, Colombo.*
2. *Education in Ceylon (1968) Centenary volume 1 Ministry of Education.*
3. *Jayasuriya, J.E (1969) Education in ceylon: Before and After Independence, Colombo.*
4. *Sessional Paper XXIV, 1943; Report ofthe special committee on education.*

# ஆரம்பப் பிரிவில் கணிதம் கற்பித்தல் – ஜப்பானிய அணுகுமுறை



**எம். அப்துல் வாஹித்.**
Specialist Trained Teacher Certificate ( Maths),
B.Ed, M.Ed.
ஆலோசகர்; ஜெய்க்கா செயற்றிட்டம்; கல்வி அமைச்சு,
முன்னைநாள் பணிப்பாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

ஒரு நாட்டின் விருத்தி பல துறைகளில் தங்கியிருந்த போதிலும் அவை அனைத்துக்கும் மூலகர்த்தாவாக அமைவது கல்வித்துறை. கல்வித் துறையில் முன்னேற்றம் காண்பது ஏனைய துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கான அடிப்படைத் தளமாக அமையும். கல்வித் துறையில் முன்னேற்றம் காணவேண்டுமாயின், மாணவர்களுக்கு ஆரம்பப்பிரிவில் சிறந்த அத்திவாரமிடப்பட வேண்டும். சிறந்த அத்திவாரமிடுவதாயின் அத்திவாரமிடுபவர்கள் - அதாவது ஆசிரியர்கள்- மாணவர்களைப் பற்றி, அவர்களது சிறப்பு ஆற்றல்களைப் பற்றி அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். அது தவிர ஆசிரியர்கள் எப்போதும் ஓர் ஆய்வாளராகவும் தொழிற்பட வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு மாணவரினதும் நடத்தைக் கோலங்களைக் கவனமாக உற்றுநோக்கி அவர்களின் வெவ்வேறு நடத்தைக் கோலங்களுக்கான காரணங்களைத் தேடி அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். கலைத்திட்டம் வடிவமைப்பவர்களுடன் ஆசிரியர்களின் அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். அன்றேல் வடிவமைக்கப்பட்ட கலைத் திட்டங்களின் பொருத்தப்பாட்டினைச் சரிவர அறிந்து கொள்ள முடியாமற் போய்விடும். எமது நாட்டைப் பொறுத்தவரையில், இதுவரை இருந்து வந்த கலைத்திட்டங்கள் எல்லாவற்றிலுமே கணித பாடத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி பெற்றால் மட்டுமே உயர்தர வகுப்புக்களில் கல்வியைத் தொடர முடியும். தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியும். அந்த அளவுக்கு கணிதம் கட்டாய பாடமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இன்றும் அதேநிலை தொடர்கின்றது. தவிர, தற்கால உலகில் நாளாந்த நடவடிக்கைகளுடனும் கணிதம் பின்னிப்பிணைந்துள்ளது. இவ் வகையில் கணிதத்தின் முக்கியத்துவம் யாவராலும் உணரப்பட்டுள்ளது. இருப்பினும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத காரணத்தினால் உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பை இழந்தோர் பல்லாயிரக் கணக்கானோர் உள்ளனர். இதனால் தொழில் வாய்ப்பை இழந்தோர் இன்னும் பலர். கணித பாடத்தில் சித்தியடையவில்லை என்பதற்காக அவர்களுள் பொதிந்துள்ள ஏனைய திறன்களும், ஆற்றல்களும் முடக்கப்பட்டு, ஏன் சமூகத்தில் அவர்களுக்குரிய கணிப்பும் மறுக்கப்பட்ட நிலையிலுள்ளோர் பல்லாயிரம் பேர் உள்ளனர். இந் நிலைமையை மாற்ற வேண்டிய தேவை மட்டுமன்றிப் பொறுப்பும் எம் அனைவருக்கும் உண்டு.

கணித பாடத்தின் தரத்தைக் குறைப்பதன் மூலம் அதில் சித்தியடைபவர்களின் வீதத்தைக் கூட்டுவது இப்பிரச்சினைக்குத் தீர்வாகி விட முடியாது. மாறாகக் கணித பாடத்தின் தரத்தை உயர்த்தி, அதன் மூலம் கல்வித் தரத்தை முன்னேற்ற வேண்டும். அப்படியாயின் கணித பாடத்தில் பெரும்பாலானோர் சித்தியடையத் தவறுவதற்கான காரணங்களைக் கண்டறிய

வேண்டும். அண்மைக்கால அவதானங்களின்படி, கூட்டல், கழித்தல் செய்கைகளுக்காகக் கைவிரல்களைப் பயன்படுத்துபவர்கள் கணிசமான அளவில் உள்ளனர். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கு அடிப்படைக் கணிதச் செய்கைகளிலும் பாண்டித்தியம் அடையாத மாணவர்கள் பலர் ஆரம்பத் தரங்களில் மட்டுமல்ல இடைநிலைத் தரங்களில்கூட இருப்பது தெரியவந்துள்ளது. கணிதம் கற்பிக்கும் போது இவர்கள் இந்த அடிப்படைச் செய்கைகளில் அதிக நேரத்தைச் செலவிடுவதனால் ஆசிரியர்களுடன் சேர்ந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது பின் நிற்கின்றனர். நாளுக்கு நாள் இவ்வாறான பின்னடைவுகள் ஒன்று திரண்டு இறுதியில் கணித பாடத்தை வெறுக்கின்ற அளவுக்குத் தள்ளப்படுகின்றனர். இது தவிர கணித பாடத்தை மாணவர்கள் வெறுப்பதற்கு வேறு பல காரணங்களும் இருக்கலாம். இவற்றையறிந்து பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் இடர்ப்படும் சந்தர்ப்பங்களை அறிவதற்காக ஆய்ந்தறி சோதனைகளை வடிவமைப்பது, அவற்றை நிர்வகிப்பது, பேறுகளைப் பகுப்பாய்வு செய்வது, பின்னர் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதில் எல்லாம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது. பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி, தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் என்பவற்றுக்கான பாடவிதானத்தில் இவை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இவை பாடசாலைகளில் பொதுவாக நடைமுறையில் இல்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பாடசாலைகளில் போதிய வசதி இல்லாமை, இதற்கேற்ப பிரத்தியேக நேரம் இல்லாமை என்பவற்றுடன் பாடவிதானத்தை உரிய காலப்பகுதிக்குள் முடித்துவிட வேண்டும் என்ற ஆசிரியர்களின் தேவை என்பன சில காரணங்களாகும். இருப்பினும் கிடைக்கும் வசதிகளைக் கொண்டு சிறிய அளவிலாவது பரிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கணித பாடத்தில் சித்தியெய்தத் தவறும் மாணவர்களின் எண்ணிக்கையை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம். குறைபாடுகள் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவற்றை நிவர்த்திப்பதற்கான ஒரு நடவடிக்கையே இதுவாகும். இதை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதை இயன்றளவு குறைத்துக் கொள்ள வேண்டும். எனவே குறைபாடுகள் இன்றி, மாணவர்களுக்கு இடர் ஏற்படுவதை முடியுமானவரை குறைத்துக் கற்பித்தலை மேற்கொள்வது தான் சிறந்த வழிமுறையாகும். அதற்கு ஆரம்பப் பிரிவில் பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பிரயோகித்து மேற்சொன்ன நான்கு அடிப்படைக் கணிதச் செய்கைகளிலும் திடகாத்திரமான அத்திவாரமிட்டு அதில் மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை அதி உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

## தரம் 1 இல் கணிதம்.

ஆரம்பப்பிரிவில் அடிப்படைக் கணித்தல் திறன்களை விருத்தி செய்வதற்குத் தயார்ப்படுத்தும் ஒரு நிலையாகத் தரம் 1 கருதப்படலாம். இதனால் இது முக்கியமானதொரு பருவமாகும். எண்கள் தொடர்பான கருத்துநிலை எண்ணக்கருக்கள் தரம் 1 மாணவர்களின் விளங்கும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். இதனால் தரம் 1 மாணவர்கள் எண்களை ஒரு விசித்திர உலகாகவே தமது புலனுறுப்புக்களினால் அறிகின்றனர். எனவே தரம் 1 இல் மாணவர்களுக்கு உண்மைப் பொருட்களின் எண்ணிக்கைக்கும் கருத்து நிலையிலுள்ள குறியீடுகளுக்கும், எண் குறியீடுகளுக்குமிடையிலான தொடர்பினை ஏற்படுத்துவதில்

ஆசிரியர்கள் கூடிய கவனஞ்செலுத்துதல் வேண்டும். உதாரணமாக – ஆரம்பத்தில் பூக்கள், பழங்கள், வாகனங்கள், பறவைகள் போன்ற சுற்றாடலில் காணக்கூடிய மாணவர்கள் விரும்பும் காட்சி நிலைப் பொருட்களைப் பயன்படுத்திப் பின்னர் அவற்றைக் கறுப்பு வட்டம் (●) அல்லது நட்சத்திரங்கள் (★) போன்ற குறியீடுகளுக்கு மாற்றிப் பின்னர் கருத்து நிலையிலுள்ள எண் குறியீடுகளுக்கு இட்டுச் செல்லும் செயன்முறையில் தரம் 1 ஆசிரியர்கள் கூடிய கவனஞ்செலுத்துதல் வேண்டும். கணித எண்ணக்கருக்கள், கருத்து நிலையானவை என்பதும் மாணவர்கள் கணிதத்தை விளங்கிக் கொள்வதில் சிரமப்படுவதற்கான ஒரு காரணமாகும். எனவே தரம் 1 இல் மேற்படி செயன்முறையில் ஆசிரியர்கள் போதிய கவனஞ்செலுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கற்றலின் விளைவுகளில் கட்புலனூடான விளைவுகள் பெரும் செல்வாக்குச் செலுத்துவதை ஆசிரியர்கள் அறிந்திருத்தல் வேண்டும். சிறியதொரு பொருட்கூட்டம் இருக்கும் போது அதனை ஒவ்வொன்றாக எண்ணிக் கணக்கிடுவதற்குப் பதிலாக ஒரே பார்வையில் விரைவாகக் கணக்கிடும் திறனை விருத்தி செய்வதும் மிக முக்கியமானதாகும். இதுவும் காட்சி நிலையிலிருந்து கருத்து நிலைக்குச் செல்லும் ஒரு செயன்முறையாகையால் இதனைத் தாமதப்படுத்தாது உரிய வேளையில் மிகப் பக்குவமாகச் செயற்படுத்துதல் வேண்டும்.

## கூட்டல், கழித்தல் செய்கைகள்.

கூட்டல், கழித்தல் செய்கைகள் கணித பாடத்துக்கு மட்டுமன்றி அன்றாட வாழ்விலும் எல்லாத் தரப்பினருக்கும் தேவையானவையாகும். பெருக்கல், வகுத்தல் செய்கைகளுக்கும் கூட்டல், கழித்தல் செய்கைகள் அவசியம். கூட்டல் கழித்தல் செய்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் கூட்டல் எண்பிணைப்புக்கள், கழித்தல் எண் பிணைப்புக்கள் என்பவற்றில் மாணவர்களுக்குப் போதிய பயிற்சியளித்தல் வேண்டும். தற்போது நமது பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படும் கூட்டல், கழித்தல் செய்கைகளுக்கு மாணவர்கள் பல எண்பிணைப்புக்களை ஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும். கீழே காட்டப்படுவது மாணவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய கூட்டல் பிணைப்புக்களாகும்.

| + | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 9 |
| 2 | | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 8 |
| 3 | | | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 7 |
| 4 | | | | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 6 |
| 5 | | | | | 10 | 11 | 12 | 13 | 14 | 5 |
| 6 | | | | | | 12 | 13 | 14 | 15 | 4 |
| 7 | | | | | | | 14 | 15 | 16 | 3 |
| 8 | | | | | | | | 16 | 17 | 2 |
| 9 | | | | | | | | | 18 | 1 |
| | | | | | | | | | | 45 |

இதன்படி 45 கூட்டல் பிணைப்புக்களை ஞாபகத்தில் வைத்திருந்தால் மட்டுமே கூட்டல்களைத் திருத்தமாகப் பிழையின்றிச் செய்ய முடியும். இவ்வாறே மாணவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய கழித்தல் பிணைப்புக்களைப் பின்வருமாறு காட்டலாம்.

| - | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | | | | | 9 |
| 2 | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | | | | 9 |
| 3 | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | | | 9 |
| 4 | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | | 9 |
| 5 | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | 9 |
| 6 | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | 9 |
| 7 | | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | 9 |
| 8 | | | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | 9 |
| 9 | | | | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | 9 |

81

இதன்படி 81 கழித்தல் பிணைப்புக்களை ஞாபகத்தில் வைத்திருந்தால் மட்டுமே கழித்தல்களைப் பிழையின்றிச் செய்ய முடியும். இதற்கமைய மாணவர்கள் மொத்தமாக (45 + 81) 126 கூட்டல், கழித்தல் பிணைப்புக்களை ஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதிலுள்ள கஷ்டத்தினாலேயே பெரும்பாலான மாணவர்கள் கூட்டல், கழித்தல்களில் இடர்ப்படுகின்றனர்.

ஜப்பானிய கூட்டல், கழித்தல் முறைகளுக்கமைய 126 கூட்டல், கழித்தல் பிணைப்புக்களை மாணவர்கள் ஞாபகத்தில் இருத்திக்கொள்ள வேண்டியதில்லை. மாறாக அவர்கள் எண் சேர்க்கைகள், எண் பிரிக்கைகள் (Composition & Decomposition) என்பதனைப் பயன்படுத்திக் கூட்டல், கழித்தல்களைச் செய்கின்றனர். உதாரணத்துக்கு 8 + 5 ஐ நோக்குவோம்.

8 ⟹ 8

+ 5 ⟹ 2 + 3

10

13

முதலில் 10 ஐப் பெறுவதற்கு 8 உடன் 2 ஐக் கூட்டிப் பின்னர் 5 இல் மீந்திருக்கும் 3 ஐ 10 உடன் கூட்டி 13 பெறப்படுகின்றது.

இங்கே 8 + 2 சமன் 10 எனப் பெறப்படுவது எண் சேர்க்கை என்றும் 5 ஐ 2 ஆகவும் 3 ஆகவும் உடைத்துப் பெறுவது எண்பிரிக்கை எனவும் சொல்லப்படும். இம் முறையில் செய்வதற்கு 8 + 5 = 13 என்ற எண் பிணைப்பினை மாணவர்கள் ஞாபகத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய தேவையில்லை. மற்றுமொரு உதாரணத்துக்காக 7 + 8 ஐப் பார்ப்போம். இங்கு 8 என்பது 3 + 5 எனப் பிரிக்கப்படுகின்றது. எனவே 7 + 8 என்பது 7 + (3 + 5) எனப் பிரித்தெழுதப்பட்டு, சேர்த்தி விதிக்கமைய (7 + 3) + 5 எனப் பெறப்பட்டு 15 விடையாகப் பெறப்படுகின்றது. இதன்படி 9 + 2, 9 + 3 …… போன்ற ஓரிலக்க எண்கள் இரண்டைக் கூட்டும் போது ஈரிலக்க எண்ணொன்றை விடையாகப் பெறும் எண் பிணைப்புக்களை மாணவர்கள் ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டிய தேவை அற்றுவிடுகின்றது. இவ்வாறே கழித்தலின் போதும் எண் சேர்க்கை, எண் பிரிக்கைகளைப் பின்வருமாறு பயன்படுத்தலாம். உதாரணத்துக்கு 15 – 8 ஐ நோக்குவோம்.




இங்கு 15 என்பது 10 + 5 எனப் பிரிக்கப்படுகின்றது. 10 இலிருந்து 8 கழிக்கப்பட்டுப் பெறப்படும் மீதி 2 ஐ 5 உடன் கூட்டி 7 என்ற விடை பெறப்படுகின்றது. 12 – 7 என்பதை ( 2 + 10 ) – 7 எனப் பிரித்துப் பின்னர் 2 + (10 – 7) என எழுதிப் பின்னர் 2 + 3 = 5 என்ற விடை பெறப்படுகின்றது. இங்கு 11 – 9, 11 – 8 ….. போன்ற 20 க்குட்பட்ட ஈரிலக்க எண் ஒன்றிலிருந்து ஓரிலக்க எண்ணொன்றினைக் கழித்து ஓரிலக்க எண்ணை விடையாகப் பெறும் எண் பிணைப்புக்களை மாணவர்கள் ஞாபகத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய தேவை அற்றுவிடுகின்றது. இந்த வகையில் பார்க்கும் போது எந்தவொரு கூட்டல், கழித்தல் செய்கையையும் செய்வதற்குத் தேவையான எண் பிணைப்புக்களைப் பின்வருமாறு காட்டலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 1 + 9 | 2 + 8 | 3 + 7 | 4 + 6 | 5 + 5 | 5 |
| 9 | 1 + 8 | 2 + 7 | 3 + 6 | 4 + 5 | | 4 |
| 8 | 1 + 7 | 2 + 6 | 3 + 5 | 4 + 4 | | 4 |
| 7 | 1 + 6 | 2 + 5 | 3 + 4 | | | 3 |
| 6 | 1 + 5 | 2 + 4 | 3 + 3 | | | 3 |
| 5 | 1 + 4 | 2 + 3 | | | | 2 |
| 4 | 1 + 3 | 2 + 2 | | | | 2 |
| 3 | 1 + 2 | | | | | 1 |
| 2 | 1 + 1 | | | | | 1 |

25

இந்த வகையில் மாணவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய எண் பிணைப்புக்களின் எண்ணிக்கை 25 மட்டுமே. இந்த பிணைப்புக்களை எவ்வாறு மாணவர்கள் மனதில் பதிக்கலாம்? இதற்கு மின்னலட்டைகளைப் (Flash Cards) பயன்படுத்துவது மிகவும் பயன்தரக்கூடியது.

## மின்னலட்டைகளை எவ்வாறு பயன்படுத்துவது?

0 முதல் 10 வரையுள்ள எண்களை தனித்தனி அட்டைகளில் பெரிதாக (A4 அளவில்) எழுதி அல்லது அச்சிட்டு அவற்றை லமினேட் செய்து வைத்துக் கொள்ளலாம். 2 முதல் 10 வரையுள்ள எண்பிணைப்புக்களை விரைவாகப் பதிய வைப்பதற்கு இவ் அட்டைகளைப் பயன்படுத்தலாம். உதாரணத்துக்காக – 7 இன் பிணைப்புக்களைக் கற்ற பின்னர் பயிற்சி செய்வதாக வைத்துக் கொள்வோம். ஆசிரியர் 2 என்ற அட்டையைக் காட்டினால், 7 ஐப் பெறுவதற்கு இன்னும் எத்தனையைக் கூட்ட வேண்டும் என்று – அதாவது 5 என்று - மாணவர்கள் கூற வேண்டும். 4 ஐக் காட்டினால் 3 என்று கூற வேண்டும். 9 இன் பிணைப்புக்களின் பயிற்சி செய்வதற்கு ஆசிரியர்கள் 4 ஐக் காட்டினால் 5 எனவும் 3 ஐக் காட்டினால் 6 எனவும் மாணவர்கள் கூற வேண்டும். இவ்வாறு தேவையான எல்லாப் பிணைப்புக்களுக்கும் இதனைப் பயன்படுத்தலாம். முதலில் ஆசிரியர் எத்தனையைப் பெறவேண்டும் என்பதை மாணவர்களுக்குக் கூறி, கரும்பலகையில் அதனைப் பெரிதாகவும் தெளிவாகவும் எழுதிவிட்டு இப்பயிற்சியினை ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்தல் அட்டைகளை ஒன்றன் பின் ஒன்றாக ஆறுதலாகக் காட்ட வேண்டும். சரியான எண்பிணைப்புக்களை பதியவைப்பது மிக முக்கியமாதலால் விரைவாகச் செய்து பிழையான எண் பிணைப்புக்களை மாணவர் மனதில் பதியவைத்துவிடக் கூடாது. கணிதத்தில் விரைவாகச் செய்ய வேண்டிய தேவையிருந்தாலும்கூடத் திருத்தமாகப் பிழையின்றிச் செய்வது அதைவிட முக்கிய தேவையாகும். சரியான எண்பிணைப்புக்களை ஏற்படுத்திய பின்னர் மின்னலட்டையைக் காட்டும் நேரத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே சென்று இறுதியில் மிக விரைவாக மின்னுவதைப் போல் காட்டி மறைக்கலாம். இதனை நாளாந்தம் சில நிமிடங்களுக்காவது செய்வது மிகுந்த பலனையளிக்கும்.

இதே மின்னலட்டைகளைப் பெருக்கல் வாய்ப்பாட்டினைப் பயிற்றுவிப்பதற்கும் பயன்படுத்தலாம். ஒரே நேரத்தில் இரு இலக்கங்களை ஆசிரியர் காட்டுதல் வேண்டும்.
இவ்விரு இலக்கங்களினதும் பெருக்கத்தினை மாணவர்கள் கூறுதல் வேண்டும்.

## பெருக்கல், வகுத்தல் செய்கைகள்.

வகுத்தல் செய்கை கூட்டல், கழித்தல், பெருக்கல் ஆகிய மூன்று செய்கைகளையும் அடக்கியுள்ளதால் வகுத்தலை மாணவர்களுக்கு அறிமுகஞ்செய்யும் முன்னர் அவர்கள் கூட்டல், கழித்தல், பெருக்கல் செய்கைகளில் உன்னத தேர்ச்சி மட்டத்தை பெற்றுள்ளார்களா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். கூட்டல், கழித்தல் செய்கைகளைப் பிழையின்றிச் செய்ய வேண்டுமாயின் மாணவர்கள் எண்சேர்க்கை, எண்பிரிக்கைகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இதே போன்று பெருக்கல் செய்கையைப் பிழையின்றிச் செய்ய வேண்டுமாயின் பெருக்கல் வாய்ப்பாட்டில் மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பெருக்கல்

வாய்ப்பாட்டில் தேர்ச்சி பெறத் தவறுவது கணித பாடத்தின் ஏனைய அலகுகளிலும் பாதிப்பினை ஏற்படுத்திவிடும். எனவே மாணவர்கள் பெருக்கல் வாய்ப்பாட்டில் தேர்ச்சி பெற்றிருப்பதை ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏலவே குறிப்பிட்டது போல் மின்னலட்டைகளைப் பயன்படுத்தி பெருக்கல் திறன்களை வளர்த்துக் கொள்ளலாம். இது தவிர கூட்டல், கழித்தல், பெருக்கல் செய்கைகளில் மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை மேலும் உறுதி செய்து கொள்வதற்கும் மாணவர்களின் கணித்தல் வேகத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் ஜப்பானியர்கள் அறிமுகப்படுத்தியுள்ள 100 சதுரக் கணித்தல்களில் மாணவர்களை நாளாந்தம் ஈடுபடச் செய்யலாம். உதாரணத்துக்காகக் கழித்தல் செய்கைகளுக்கான 100 சதுரக் கணித்தல் கீழே தரப்பட்டுள்ளது.

| - | 11 | 10 | 18 | 15 | 16 | 14 | 19 | 12 | 17 | 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | |

இங்கே நிரலிலும் நிரையிலும் 10 எண்கள் வீதம் உள்ளதால் (10 X 10) 100 செய்கைகளை மாணவர்கள் செய்ய வேண்டியிருக்கும். இதற்கான இலக்கு நேரம் 2 நிமிடமாகும். நேர இலக்குக் கொடுக்கப்படும் போது விரைவாகச் செய்ய வேண்டும் என்பதற்காக மாணவர்கள் தவறான விடைகளை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். திரும்பத் திரும்ப இப் பயிற்சியைச் செய்வதன் மூலம் பிழையான பிணைப்புக்கள் மாணவர்கள் மனதில் பதிந்து விடக்கூடிய ஆபத்து இங்கிருப்பதால் திருத்தத் தன்மைக்கு முன்னுரிமை வழங்குவதில் ஆசிரியர்கள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். இப் பயிற்சிகளை நாளாந்தம் செய்வதன் மூலம் கூட்டல், கழித்தல், பெருக்கல் என்பவற்றில் மாணவர்களின் தேர்ச்சியை உயர்மட்டத்தில் பேணலாம். இம் மூன்று செய்கைகளிலும் உயர் தேர்ச்சி பெறுவது வகுத்தல் செய்கைக்குச் செல்வதற்கு முன்தேவையாகும்.

ஓரிலக்க எண்களால் வகுக்கும் வகுத்தல்களை மூன்றாக வகைப்படுத்தலாம். பின்வரும் வகுத்தல்கள் மூன்று வகைகளுக்குமான ஒவ்வொரு உதாரணங்களாகும்.

(i) 7 | 42 (ii) 7 | 43 (iii) 7 | 41

முதலாவது வகை வகுத்தலில் மீதி ஏதும் இல்லை. இது பெருக்கலின் நேர் மாறாகக் கருதப்படலாம். வாய்ப்பாடு தெரியுமாயின் இதனை எளிதாகச் செய்து விடலாம். இரண்டாவது வகையில் மீதி உண்டு. மீதியைப் பெறுவதற்கு 43 இலிருந்து 42 ஐக் கழிக்க வேண்டும். இது கொண்டு செல்லலற்ற கழித்தலாகும். இதனைச் செய்வதில் மாணவர்களுக்குப் பொதுவாக இடர் ஏற்படுவதில்லை. எனினும் இதனைப் பிழையின்றிச் செய்வதற்குப் பெருக்கல் வாய்ப்பாட்டிலும் கழித்தல் செய்கையிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மூன்றாம் வகை வகுத்தலில் மீதி உண்டு. இருப்பினும் இரண்டாம் வகை வகுத்தலிலும், இது சற்று வேறுபட்டது. மீதியைக் காண்பதற்கான (41 – 35) கழித்தல், கொண்டு செல்லலுடனானது. இது ஒப்பீட்டளவில் கடினத்தன்மை கூடியது. இவ்வகை வகுத்தல்களைச் செய்ய முடியுமாயின் மாணவர்களுக்கு அடிப்படைக் கணிதச் செய்கைகள் அனைத்தையுமே சிரமமின்றிச் செய்யமுடியும். எனவே - கூட்டல், கழித்தல், பெருக்கல் என்பவற்றில் போதிய தேர்ச்சி பெற்ற பின்னர் மூன்றாம் வகை வகுத்தலில் மாணவர்களில் போதிய தேர்ச்சி பெறுவது கணிதத்தை தொடர்ந்து கற்பதற்கான அத்திவாரமாகும். சுருக்கமாகக் கூறுவதாயின் எண் சேர்க்கைகள், எண் பிரிக்கைகள் என்பவற்றுடன் பெருக்கல் வாய்ப்பாட்டிலும் மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெறுவது உயர்தரக் கணித்தல்களுக்கு நல்ல அத்திவாரமாக அமைவது மட்டுமன்றி ஏனைய பாடங்களை கற்பிப்பதற்கும் இது வசதியளிக்கும்.

---

## வாழ்க்கைக்கு ஒரு குறி இலக்கு

"உங்களிடமுள்ள ஆற்றலை அடித்து எழுப்ப வேண்டுமெனின்
உங்கள் வாழ்க்கைக்கு ஒரு குறி இருக்கவேண்டும்.
"குறி" என்றால் "மோட்சம்" குறித்த விருப்பம் ஒன்றுதான் என்றில்லை.
வாழ்க்கையிலே வெளிப்படையான தெளிவான நோக்கம் இருக்க வேண்டும்.
ஒரு சிறிய தற்காலிக விருப்பம் ஒரு நோக்கம் ஆகாது.
நீங்கள் கைக்கொண்டுள்ள செயல்கள் அனைத்திலுமே வெற்றி பெற வேண்டும்
என்ற ஆசை இருந்தால் மட்டும் போதாது.
ஏற்றுக் கொண்ட செயலை குறித்த நேரத்திலே சரியான முறையிலே
செய்து முடிக்கவேண்டும் என்னும் நோக்கம் மிகவும் தேவையானதாகும்.
செயல்திட்டம் ஒன்று இல்லாதிருந்தால்
உங்கள் விளைவிக்கத்தக்க மனத்தின் ஆற்றல்
மற்றும் நேரமும் பயனற்று வீணாகிவிடும்."

*சுவாமி ஜகதாத்மானந்தா*
(வாழக்கற்றுக் கொள்)



# நேர்த்தெறிப்புக் குழுவும் சீர்மிய உளவியலும்

**வாழ்நாள் பேராசிரியர். முனைவர். சபா. ஜெயராசா**

நேர்த்தெறிப்புக்குழு (Encounter Group) என்பது பொது உளவியலிலும் சீர்மிய உளவியலிலும் விதந்து பேசப்படும் பொருளாகின்றது. முற்றுப்பெறாத, ஆனால் பயன்தரும் ஓர் உளப்பிணி நீக்கல் அனுபவத்தை நேர்த்தெறிப்புக்குழுவால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட முடியும் என்பது அதன் பரிமாணங்களில் ஒன்றாகின்றது.

குறிப்பிட்ட தொழில் சார்ந்ததும் குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்ததுமான தளங்களின் அடிப்படையில் நேர்த்தெறிப்புக்குழு உருவாக்கம் பெறுகின்றது. பயிற்சிக்குழுக்கள், மனவெழுச்சிகளை நெறிப்படுத்தும் குழுச்செயற்பாடுகள், மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்ட செயலமர்வுகள், குறிப்பிட்ட இலக்குகளுடன் ஆய்வுகூடங்களிலே தொழிற்படும் குழுக்கள், ஒரே இலக்குடைய கலை இலக்கியக் குழுக்கள், குறிப்பிட்ட நோக்குடைய விழிப்புணர்வுக் குழுக்கள் முதலியவை ஒரு வகையில் நேர்த் தெறிப்புக்குழுவுக்கு ஒப்புமையாகக் கூறக்கூடியவை.

நேர்த்தெறிப்புக்குழு உடல்சார் இடைவினைகளைச் செம்மைப்படுத்துவதாகவும், சொல் சார்ந்த இடைவினைகளை உள்ளடக்கிய உறுவிளையாட்டுக்களைக் (Games) கொண்டதாகவும் அமையும். இங்கே குறிப்பிடப்படும் உறுவிளையாட்டு என்பது சாதாரண விளையாட்டுக்களில் இருந்து வேறுபடுகின்றது. உளநெருக்குவாரங்களைத் தணிக்கும் சொல் சார்ந்த கருத்தாடல்களும் உடல் வினைப்பாடுகளும் இங்கே சிறப்புப்பெற்றிருக்கும்.

குழு இயக்கவியலை நன்கு விளங்கிக் கொள்ளலும், தனியாள் இலக்குகளைத் தொடர்புபடுத்தும் நோக்குடையும் சிறப்புப் பெற்றிருக்கும். தமது உணர்வுகளையும் அவை தொடர்பான பிறரது புலகாட்சிளையும் உறுநோக்குகளையும் அவற்றின் பரிமாற்றங்களையும் உணர்வு பூர்வமான நெறிப்படுத்தல்களையும் கொண்டதாக நேர்த்தெறிப்புக்குழு அமையும். அவற்றின் வழியாகப் பின்னூட்டற் செயல்முறையினை வளர்த்துக்கொள்ளலும் முன்னெடுக்கப்படுகின்றது.

நேர்த்தெறிப்பு என்பது ஓர் இயக்கமாக ஆரம்பகாலத்தில் வளர்ச்சி கொள்ளலாயிற்று சமூக உளவியலாளர் கேட்லிவினும் றொனால்ட்லிப்பிப் என்பாரும் இதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர். குறிப்பிட்ட தொழில் நடைமுறைச் சட்டம் ஒன்றினை நடைமுறைப் படுத்துவதற்குரிய ஏற்புடைமைகளை உருவாக்கிக் கொள்வதற்கு குழுவின் இயக்கவியல் எவ்வகையில் உதவமுடியும் என்ற பரிசோதனைகளை அடியொற்றிய முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர். அந்த வகையில் சிறுகுழுக்கள் உருவாக்கப்பட்டு, உற்று நோக்குனர்கள் விஞ்ஞான பூர்வமாக இடைவினைகளை அவதானிக்கலாயினர். அவ்வாறு உற்றுநோக்கிய அனுபவங்களை மாலை வேளைகளில் ஒன்றுகூடிக் கலந்து பகிர்ந்து கொண்டனர். உற்றுநோக்கியவர்களும் உற்று நோக்கப்பட்டவர்களும் பங்குகொள்ள நேர்ந்த பொழுது, இரு சாராரும் செயலூக்கம் மிக்க

"பங்குபற்றுனர்களாக" மாறியதுடன் பின்னூட்டற் செயல்முறையிலும் அவர்கள் இணைந்து ஈடுபடக் கூடியதாக இருந்தது. அந்த அனுபவங்களை அடியொற்றி எழுகை கொள்ளும் உணர்வுகளுக்குப் பயிற்சி வழங்கும் முறைமை உருவாக்கம் பெற்றது. கல்வி மற்றும் வர்த்தகம் தொடர்பான இடர்களை எதிர்கொள்வோருக்கு உதவும் வகையில் இந்தத்திட்டம் மேலும் விரிவாக்கம் பெறலாயிற்று. அதன் வழியாக உருவாக்கம் பெற்ற கோட்பாட்டையும் நடைமுறைகளையும் அடிப்படைகளாகக் கொண்டு தேசிய பயிற்சி ஆய்வு கூடங்கள் (National Training Laboratories) உருவாக்கம் பெறலாயின.

அவற்றின் தலைவர்களாகக் கல்வி சார்ந்த அறிஞர்களும் புலமைசார்ந்த உளவியலாளரும் கடமையாற்றினர். குழுக்களை நெறிப்படுத்துதல் அவர்களின் தலையாய கடமையாயிற்று. ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே அணுகுமுறையினைத் தமது குழுக்களிலே செயற்படுத்தவில்லை. அதேவேளை அவர்களின் பேச்சும், தொனிப்பும், உடல்மொழியும் அசைவுகளும் சைகைகளும் அந்தக்குழுக்களின் இயக்கத்திலே சிறப்பிடம் பெற்றிருந்தன. 1946தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரை இவ்வகைச் செயற்பாடுகள் உளவியற்பிணி நீக்கலிலே தொடர்ந்து கொண்டிருந்தன.

1960ஆம் ஆண்டுக்குப்பின்னர் அந்த இயக்கத்திலும் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. கலிபோர்னியாவில் இயங்கிவந்த எசாலென் நிறுவனம் (Esalen Institute) இத்துறையை வளம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்திய மரபிலே தோற்றம் பெற்ற காடுறை ஆச்சிரம வாழ்க்கையை அடியொற்றி அந்நிறுவனம் செயற்படலாயிற்று. கீழைத்தேய மற்றும் மேலைத்தேய பண்பாடுகளின் செழுமைமிக்க திரட்டல்களை உறைவிடமாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நுண்மதி சார்ந்ததும் மறைஞானம் சார்ந்ததுமான செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. உளவியல், கீழைத்தேய அருள்நிலையியல், சென்பௌத்தம், யோகநெறி, ஆடல், உடல்உராய்வுக்கலை (Message) உளப்பிணி நீக்கல் முதலாம் துறைகளில் வல்லுனர்கள் அங்கே வரவழைக்கப்பட்டுச் செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையம் நிகழ்த்துமாறு கூறப்பட்டனர்.

இவ்வாறாக ஏற்பட்ட பட்டறிவை அடியொற்றி வில்லியம் சூட்ஸ், பிரெட்டிறிக் பேர்ல்ஸ், எசாலின் ஆகியோர் நேர்த்தெறிப்புக்குழு நிலைப்பட்ட உளப்பிணி நீக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். பன்முகப்பட்ட உளநிலை உறுவிளையாட்டுக்கள் அங்கே பயன்படுத்தப்பட்டன. அந்த உறுவிளையாட்டுக்கள் அதீத மனவெழுச்சிகளைத் தூண்டும் வகையிலும் உணரும் வகையிலும் நெறிப்படுத்தப்படத்தக்க வகையிலும் உருவாக்கப்பட்டன. கோபம், அன்பு, பரிவு, சார்ந்திருத்தல், நம்பிக்கை முதலாம் நுண் உணர்வுகள் குழுச்செயற்பாட்டுப் பாவனைகளால் தூண்டிவிடப்பட்டன. சோகத்தினால் ஒருவர் விழும்பொழுது மற்றவர் கைகொடுத்து அரவணைத்துத் தூக்கிவிடுதல் போன்ற பல்வகை உறுவிளையாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன.

உளவியற் செயற்பாடுகள் தழுவி அமைக்கப்பட்ட அவ்வாறான நேர்த் தெறிப்புக் குழுக்கள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலும் சிறப்படையத் தொடங்கின. பாடசாலைகள், வளர்ச்சி நடுவன் நிலையங்கள், உதவும் நிலையங்கள், வழிபாட்டு நிலையங்கள் முதலியவற்றில் நேர்த்தெறிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு உளச்சுகம் தேடும் நடவடிக்கைகளும், நுண்ணுணர்வுகளுக்குப் பயிற்சி தரும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்ல் ரெஜர்ஸ் உட்பட அதனை உருவாக்கியோர் நேர்த்தெறிப்புக்குழு இயக்கத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டு புதிய மானிடப்புரட்சியின் எல்லைகளாக அதனைச் சிறப்பித்தனர். பொறிமுறையாக உருவாக்கம் பெற்றுவரும் உணர்வுகுன்றிய வாழ்க்கை முறை உடைந்து சிதறும் குடும்ப நிலவரம், அன்னியமாகிச் சிதறும் மனித உணர்வுகள், மனித மாண்புகளின் வீழ்ச்சி, போட்டி முறைமையின் வழியாக மேலெழும் உளநெருக்கீடுகள் போன்ற அனைத்துச் சமூக எதிர்மறைக் கோலங்களுக்கும் நேர்த்தெறிப்புக்குழு இயக்கமுறைகளாற் சுகம் கண்டு கொள்ளமுடியும் என்ற அதீத நம்பிக்கை அவர்களிடத்திலே காணப்பட்டது.

குழுநிலையாக உளச்சுகம் தேடுதல் புதிதாக உருவாக்கம் பெற்ற ஓர் உளவியற் கண்டுபிடிப்பு அன்று. தொன்மையான கூட்டுவாழ்க்கையும், கூத்தும் சடங்குகளும் அக்காலத்து மக்களின் புலக்காட்சியிலும் சிந்தனைகளிலும் ஊடுருவிய செல்வாக்குகளை விளைவித்தன. அவ்வாறான அடிப்படைத்தளங்களை அறிந்து கொள்ளாது குழுநிலைப்பட்ட உளச்சுகம் தேடலையும், நாடலையும் மேலைப்புலத்துக் கண்டுபிடிப்புக்கள் என்று கூறுதல், அறிவியல் அபத்தமாகி விடுகின்றது. தமிழர் மானிடவியல் அறிகையில் குழு என்பது "பட்டி" மற்றும் "அட்டி" என்ற எண்ணக்கருக்களால் அழைக்கப்பட்டது. அவற்றின் வழியாக உளச்சுகம் பெறல், "தேறல்" என்று குறித்துரைக்கப்பட்டது.

நவீன நேர்த்தெறிப்புக்குழுவினால் ஈட்டப்படக்கூடிய நன்மைகளாகப் பின்வருவன சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. பிறர் ஒருவரைக் காட்டிலும் சக நண்பரால் உளத் தாக்கத்தின் விசைகளையும் விளிம்புகளையும் ஆழ்ந்து அறிந்த கொள்ளமுடியும்.
2. குழுவின் இயக்கத்தை அடியொற்றி ஒருவர் தமக்குரிய மாற்றுப் புலக்காட்சிகளையும், எதிர் நியமங்களையும் திருத்தி அமைக்க முடியும்.
3. ஒடுங்கி உறைந்த உணர்வுகள் விரிந்த உணர்வுகளாக மாற்றம் பெறும் ஏற்புடைமைகள் குழுநிலையில் வளர்ச்சியடைய முடியும்.
4. பிணி நீக்கும் நிபுணரும் நேர்த் தெறிப்புக்குழுவில் ஓர் உறுப்பினராகத் தொழிற்படும் பொழுது குழுவழியாகப் பெறும் நன்மைகள் உயர்ச்சி பெறுகின்றன.
5. விடாப்பிடியாக நிற்கும் எதிர்மறைக் கோலங்கள் தளர்ந்து நல்லனவாக நகரும் வாய்ப்பு ஏற்படுகின்றது.
6. குழுவின் பலமும், விசையும் தனிமனித எல்லைகளையும் மீறி விரிந்து நிற்பதாலும், நேர்முக நோக்கங்களை அவர்கள் கொண்டிருப்பதாலும் ஏற்புடைய மாற்றங்களை நோக்கி இலகுவாக நகர்ந்து செல்லமுடியும்.
7. கூட்டுணர்வால் உருவாக்கப்படும் மேன்மையும் இங்கிதமும் முன்னெடுக்கப்படுகின்றது.
8. நேரப்பரிமாணத்தின் இயல்பு மற்றும் எதிர் பரிமாணத்தின் இயல்பு முதலியவற்றைப் பல்வகைக் குழுச் செயற்பாடுகளாற் கண்டறிந்து தொகுப்பு நிலையாக "மூன்றாவது பரிமாணத்தை" உருவாக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்படுகின்றது.
9. உடல் இயக்கம், உள இயக்கம், மனவெழுச்சி இயக்கம் சமூக இயக்கம் ஆகியவை ஒன்றிணைக்கப்படுகின்றன.

பல்வேறு வகையான உளத்தாக்கங்களுக்கு உட்பட்டோர் இவ்வகை நேர்த் தெறிப்புக் குழுச்செயற்பாடுகள் வழியாகச் சுகமும் மேம்பாடும் அடைந்ததாக சீர்மியர் கால் ரொஜர்ஸ் பல சந்தர்ப்பங்களிலே சிலாகித்துப் பேசியுள்ளாம்.

சீர்மியச் செயற் பாட்டில் நேர்த் தெறிப்புக் குழுமுறை பல இடர்களுக்கும் தவறுகளுக்கும் இட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்வரும் குறிப்புக்கள் அவ்வகையிற் சுட்டிக்காட்டப் படத்தக்கவை.

1. வேண்டத்தகாத பல நோய்க் குணங்குறிகளை *(UnwantedSymptoms)* அது உருவாக்கி யுள்ளது.
2. குழுவின் உறுவிளையாட்டுக்கள் உடல் சார்ந்த காயங்களையும் ஏற்படுத்தியுள்ளன.
3. தீவிரமாக உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன. பின்னர் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையும் நெறிப்படுத்த முடியாத நிலையும் தோற்றம் பெறுகின்றன.
4. நேர்த் தெறிப்புக் குழுச்செயற்பாடுகள் சிலரிடத்துத் தீவிர எதிர் நடத்தைகளை அல்லது ஆபத்து விளைவிக்கும் நடத்தைகளை உருவாக்கி விடுகின்றன.

மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது மேலைப் புலத்துச் சீர்மியச் செயற்பாடுகளின் போதாமையும் பலவீனமும் நன்கு வெளிப்படுகின்றன. பின்னைய முதலாளியத்தின் தீவிர வளர்ச்சியும், பறிப்பு நடவடிக்கைகளும், அவற்றால் உருவாக்கப்படும் மனித அவலங்களும், இனச்சுரண்டல்களும் பதகளிப்பைத்தூண்டும் தொடர்பாடல் அமைப்புக்களும் சீர்மியம் நாடுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து வருகின்றன. இந்நிலையிற் சமூக அடிக்கட்டுமானத்தைத் தீர்மானிக்கும் பொருண்மியவலுக்களையும் அதன் வழி எழும் சுரண்டற் கோலங்களையும் மாற்றியமைக்கும் முயற்சிகளை முன்னெடுக்காது சீர்மியத்தால் மட்டும் தீர்வுகாணலாம் என எண்ணுதல் வெறும் கற்பனை உலகச் சஞ்சரிப்பாகவே அமையும்.

ஃஃஃ

---

இலட்சியமற்ற வாழ்வு சுவாரசியமற்ற வாழ்வாகும்.
நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் இலட்சியத்தை மேற்கொள்ள வேண்டும்.
ஆனால் உங்கள் வாழ்வின் தரம்
உங்கள் இலட்சியத்தின் தரத்தைப் பொறுத்ததாகவே அமையும் என்பதை மறவாதீர்கள்.
உங்கள் இலட்சியம் உயர்ந்ததாகவும் தன்னலமற்றும் முற்றும் இருக்கட்டும்.
அப்போது உங்கள் வாழ்வு உங்களுக்கும் பிறருக்கும் மிகப்பயனுள்ளதாகும்.
ஆனால் உங்கள் இலட்சியம் எதுவாயிருப்பினும்
அதை முழுமையாக அடைய வேண்டுமெனின்,
நீங்கள் உங்களுள் முழுமையை அடைந்திருக்க வேண்டும்.
சுயமுழுமையை அடைவதற்கான முதற்படி
தன்னை உணர்ந்து கொள்வதாகும்.

*ஸ்ரீஅரவிந்தர்*
அன்னை
(கல்வி)



# தேசியவாதமும் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகளும்

பேராசிரியர். செல்லையா கிருஷ்ணராசா
M.A.

**பிரச்சினை பற்றிய அறிமுகம்**

எந்தவொரு நாட்டிலோ அல்லது இனங்களுக்குள்ளோ தனித்துவமான முறையில் "அடையாளம் காண்பதன்" அடிப்படையிலேயே தம்மை "ஒரு நாட்டினர்" என்றோ அல்லது "இனத்தினர்" என்றோ இதற்கும் மேலாக "மதத்தினர்" என்றோ குறிப்பிட்டுக் கொள்ள முடியும். ஐந்தறிவு படைக்கப்பெற்ற விலங்குகள் கூட இத்தகைய "தனித்தன்மையை" இனங்காணும் ஆற்றலினால் இனம் இனமாகவும், மொழித்தனித்துவம் மிக்க இறைமை உணர்வடிப்படையிலும் வாழ்ந்து கொண்டிருப்பதனை கண்டுகொள்ள முடிகிறது. இதே போன்றதொரு நிலைமையை தத்தம் பாரம்பரியப்பரப்பில் உருவாக்குகின்ற போக்கில் இன்று உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அப்பால் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆசியநாட்டு மக்கள் மத்தியிலும், அங்கு மொழிவழிச் சிறுபான்மைகளாக, பொருளாதார- பண்பாட்டடிப்படையில் நசிக்கப்பட்டுப்போன ஆனால் வாழத் துடித்துக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியிலும் நன்கு கண்டு கொள்ள முடிகிறது.

நவீன நோக்கில் மேற்கைரோப்பிய நாடுகளில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட "தனித்தன்மை" "தனிமனித வாதம்" போன்ற இயக்கங்களானவை பின்னர் கீழைத்தேய நாடுகளிலும், ஆபிரிக்க நாடுகளிலும் மேற்கைரோப்பிய குடியேற்றவாதிகளினுடைய மேலாதிக்கவாத நடவடிக்கைகளினூடாக நன்கு வேரூன்றிக் கொண்டமையை காணமுடிகிறது. ஆபிரிக்க நாடுகளிலும் கீழைத்தேயங்களிலும் குடியேற்ற வாதிகளினுடைய மேலாதிக்கவாதம் மிகவும் பலமடைந்து, அவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்ட பொழுதிலிருந்தே அவர்களுக்கெதிரான எதிர்ப்பியக்கங்களும், ஒத்துழையாமை மற்றும் போராட்ட வடிவங்களும் தோற்றுவிக்கப்பட்டு, வளர்த்தெடுத்துச் செல்லப்பட்டமையினை "விடுதலை" அடைந்த நாடுகளினுடைய வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அவ்வாறு மேலாதிக்கவாதத்தினால் ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் கிளர்ந்தெழுந்த சமயத்தில் தம்மைத்தாம் தனித்துவம் வாய்ந்த "தேசிய இனத்தினராகவும்" "கௌரவ பிரசையாகவும்" ஒன்றில் மொழிவாரியாகவோ அல்லது இனவாரியாகவோ இதற்கும் மேலாக சமய ரீதியாகவோ அடையாளம் காட்ட வேண்டிய ஒரு முக்கியமான பணி அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக தத்தமது இனம், அதன் தோற்றம், அதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் நீண்ட போக்கு, கலாச்சார ரீதியான வடிவங்களை உள்ளடக்கியிருந்த பகைப்புலம் போன்றவை தொடர்பாக ஆராய்வு நடாத்த வேண்டிய ஓர் இன்றியமையாத பணிக்குள்ளும் அவர்கள் தம்மை

ஈடுபடுத்த வேண்டியவர்களானார்கள். இதனால் தம்மை மேலதிகாரம் செலுத்துபவனுடைய சிறப்பியல்புகளிலும் பார்க்க, தம்மையொத்த, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது பாரம்பரியமானது மிகச் சிறப்பானது என்பதனையும் அது பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்திருந்தது என்பதனை எடுத்துக்காட்டவேண்டிய ஓர் அத்தியாவசிய தேவை உருவாக்கப்பட்ட அப்பின்னணியில் தம்மை இறைமையுள்ள, நாட்டு வரையறையுடனான, சுதந்திரமான பிரஜைகளாக விடுவித்துக் கொண்டும் சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்திய வகையில் சுதந்திர உணர்வுடன் வாழ்வதற்குரிய பண்பாட்டுச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கவும் முடிந்தது. இவ்வாறான பண்பாட்டுச் சுதந்திர உணர்வுடன் கூடிய வாழ்க்கை முறையானது விடுதலையடைந்த நாடுகளில் மொழி, மத, இன அடிப்படையில் ஏதாவதொன்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதனையும் காணலாம். இவ்வாறு மொழி, மத, இன அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூக-பண்பாட்டுப் போராட்ட இயக்கங்களினது பின்னணியில் அவர்களது பண்பாடு பற்றிய விழிப்புணர்வானது தொல்லியல் ஆய்வுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையினை விளக்குவதாகவே இவ்வாய்வுக் கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது.

## தேசியவாதம் என்றால் என்ன?

"தேசிய வாதம் என்பது தனித்துவமானதும், உபகுழுமங்கள் யாவும் இணைக்கப்பட்டதுமான ஒரு நிலையில் சுதந்திரத்தினை அடைந்துகொள்வதற்கும் அதனைப் பாதுகாப்பதற்குமான ஒரு கருதுகோளையுடைய இயக்கம்" என்று குறிப்பிடலாம். சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குவதாயின் தேசிய வாதம் என்பது சிறுபான்மை நிலையில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கருத்தளவிலும், இயக்கநடைமுறையிலும் சர்வதேசத்திற்குத் தம்மை வெளிப்படுத்தமுனையும் முறையிலும் ஒரு நாட்டு அமைப்பினை உருவாக்கிக் கொள்ள விரும்புவோர்களாக செயற்படுவதனையே குறிப்பிடுகின்றது. நாட்டு அமைப்பு என்று குறிப்பிடும் பொழுது அங்கு மூன்று முக்கிய அடிப்படையான நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். ஒன்று. குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான சுயாதிபத்தியத்தையும், தன்னரசாங்கத்தினையும் உருவாக்குகின்ற நிலை, இரண்டு. அங்கீகரிக்கப்பட்ட நிலப்பரப்பில் அல்லது தாயகத்தில் அல்லது பாரம்பரியப்பிரதேசத்தில் அக்குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான ஒற்றுமை உணர்வும், சகோதரத்துவமும் நிலைப்படுத்தப்பட்ட வகை மூன்று. கேள்வியளவிலாவது அக்குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான தனியலகாகக் கொள்ளக் கூடிய பண்பாட்டுத் தனித்துவமும், வரலாறும் வரையப்பட்டுள்ள முறை என்பவையே அவையாகும். இந்த மூன்று அம்சங்களையும் ஆணித்தரமாகக் குறிப்பிடுவதன்மூலம் அப்பிரஜைகளுடைய தன்னாட்சியமைப்பு, தாயக நிலப்பரப்பு, தனித்துவமான சமூக அல்லது இன அந்தஸ்த்து மற்றும் வரலாறு இந்த மூன்று அம்சங்களையுமே எந்தவொரு நாட்டிலும் வளர்ச்சி பெற்ற தேசியவாத இயக்கமொன்றின் அடிப்படையான மூன்று குறிக்கோள்களாக அமையும், அல்லது கொள்ளமுடியும். அவ்வகையில் அவர்கள் அமைக்கவிருக்கும் "நாடு" என்பதற்குரிய மூன்று தூண்களாக அவை அமையும் என்பதனை இங்கு அழுத்திக் கூறவேண்டிய தேவை இல்லையெனலாம்.

தேசியவாதம் என்ற நிலையில் நாடு என்பதற்கு பலவகையான விளக்கங்கள் இன்று

கொடுக்கப்படுவதனையும் காணலாம். பண்பாட்டுப் பகைப்புலம் ஒன்று இன்றியே இன்று தேசியவாதக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் பல இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. Pan Nationalism அல்லது Internationalism என ஆங்கிலத்தில் அழைக்கப்படகின்ற பதங்களுக்கு கொடுக்கப்படுகின்ற "சர்வதேசியவாதம்" என்ற கருத்து அதனை ஓரளவிற்குத் தெளிவாக்குகின்றது. இன்று மத்திய கிழக்கிலும் ஆசியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் தம்மை இஸ்லாம் மத அடிப்படையில் மட்டும் வைத்து சர்வதேசிய மட்டத்தில் பலம் வாய்ந்த ஒரு சமூகக் குழவினராக வெளிப்படுத்த முற்படுவதனை அச் சர்வதேசிய வாதத்திற்குச் சிறந்த உதாரணமாக எடுத்துக் காட்டலாம். இருந்தும் Nation என்பதனைக் குறிக்கப்பயன்படுத்தும் "நாடு" என்ற பதமானது எந்தவொரு தேசியவாத மட்டத்திலும் ஆரம்பத்தில் "ஓர் உருவற்ற ஐதீகமாக" வே (abstract myth) இருக்கும் என்பதனையும் கண்டுகொள்ளலாம். அவ்வுருவற்ற ஐதீக மட்டத்தினுள் "அக்குறிப்பிட்ட பிரிவினரின்" சமூகக் கோட்பாடு, நிலக்கூட்டமைவு குடியேற்ற அலகுகள் என்ற மூன்று அம்சங்களுமே உருகி, ஒன்றாகி, அடங்கிப்போன தன்மையைக் காணலாம். அவ் அடங்கிப்போன தன்மையிலிருந்து படிப்படியாக "அக் குறிப்பிட்ட பிரிவினரை" மீட்டெடுக்கும் (விடுதலைப் போராட்டம் என்ற) வழியிலிருந்தே தேசியவாத இயக்கமொன்றின் வெற்றியையும், தோல்வியையும் தீர்மானிக்க முடியும். அம் மீட்பு வழியானது "அக் குறிப்பிட்ட பிரிவினருள் காணப்படும் பல மட்டத்தினரையும் ஒன்றிணைப்பதாகவும், அதே நேரத்தில் அவ்வவர்க்குரிய நிலைகளில் அவர்களை வைத்து திருப்திப்படுத்துவதாகவும், அவர்கள் தம்மளவில் சுதந்திரமானவர்கள் என்ற எண்ணப்பாட்டினை அவர்கள் தாமாகவே உணரக்கூடிய வகையிலும் போராட்ட நடைமுறை அமையும் போதே எந்வொரு நாட்டிலும் விடுதலைப் போராட்டமானது வெற்றியளிப்பதனைக் காணலாம். ஆனால் சீனாவும் ருஸ்யாவும் இக்கோட்பாட்டிற்கு விதிவிலக்காக இருந்தாலும் அந்நாடுகளின் இன்றைய நிலை மேற்கூறப்பட்ட கருத்தினை மீட்டுருச்செய்கின்றதெனலாம்.

## தேசியவாதத்தினை முன்னெடுத்துச் செல்லும் கருவிகள் (Bearers of Nationalism)

ஒரு தேசியவாதத்தினை முன்னெடுத்துச் செல்லும் கூறுகளை அடையாளம் கண்டு, சமூக - பண்பாட்டு விடுதலைப் போராட்டத்தினை வளர்த்தெடுத்துச் செல்லவேண்டிய ஒரு மார்க்க நிலையை குறிப்பிட்ட அம் மக்கட் கூட்டமானது நன்குணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் கட்டியெழுப்பப்பட்ட மண்வாசைன மற்றும் தாயகப்பற்று உணர்வானது, எந்த விதமான மேற்கட்டுமானமும் இல்லாமல் நாளடைவில் மறைந்து, அழிந்து விடக் கூடிய ஆபத்தும் நேரலாம் (மாயா(MAYA) இன்கா( INCA) நாகரீகங்கள் மத்திய அமெரிக்காவில் நகரங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தாலும் தொடர்பாடலுக்கானதும், ஒன்றுதிரட்டப்பட்ட அறிவினைச் சேமித்து வைத்து, பிற்காலச் சந்ததிக்கு வழங்குவதற்கு ஏதுவானதுமான பரவலான எழுத்துக்களின் உபயோகத்தினை உணர்ந்திருக்காத ஒரு தன்மையினால் அந்நாகரிகங்கள் விரைவிலேயே அழிந்து விட்டன). பல நாடுகளில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்துமிருக்கின்றன. எனவே இச்சந்தர்ப்பத்தில் தேசியவாதத்தினை முன்னெடுத்துச் செல்லும் கூறுகளை

அடையாளம் காண வேண்டிய தேவை ஒன்றுள்ளது எனலாம்.

தேசிய நிலையில் சமூக - பண்பாட்டு விடுதலைக்கான போராட்ட உணர்வினை, அது தோற்றுவிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட நிலையிலிருந்து,காலத்திற்குக்காலம் பல இடங்களுக்கும் நிறுவனங்களினூடாகக் காவிச்செல்லும் முக்கிய கூறுகளுள் “சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள்” அல்லது ஜீவனோபாயத் தொழிலை மேற்கொள்ளுவோர் என்ற நிலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. தேசிய பண்பாட்டு சமூக விடுதலைப் போராட்ட உணர்வினை தோற்றுவித்த நிலப்பரப்பிற்குள்ளேயும், வெளியேயும் அவ்வுணர்வலையைப் பரப்புபவர்களாக அவர்களே தொழிற்படுவர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும். ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன அமைப்பு முறைக்கூடாகவும் தொழிற்றிறமைக்கூடாகவும் அத்தொழிற் தலைவர்கள் சமூக - பண்பாட்டு விடுதலைப்போராட்ட உணர்வுக்கான ஆதரவினை ஈட்டிக்கொள்ள முடியுமாயினும், சமூகத்தில் ஏனைய மட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அவர்களுக்கான கருத்தியல்படிப்படையிலான ஆதரவின் அடிப்படையிலேயே தேசியவாத உணர்வின் பரம்பலை விரிவாக்கிக் கொள்ள முடியும். இதனால் வேறொரு பல்பக்க நோக்கமுடைய இயக்கசக்தியொன்று அல்லது சர்வதேசப்பற்றுடைய இயக்கங்கள் அத்தேசியவாத மக்களின் உணர்வலையை தனது அல்லது தமது கைகளில் முறையே எடுத்து திசைதிருப்பி, மாற்றிவிடக்கூடிய சூழலையும் ஏற்படுத்திவிட முடியும். அவ்வாறான ஒரு சூழலை உருவாக்குவதற்கு உதவியாக பேச்சளவிலேனும் வர்க்கப்பாகுபாடற்ற ஒரு சமூக நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். அவ்வாறான அந்நிலையைத் தோற்றுவிக்க முடியாத பட்சத்தில், அங்கு உருவாக்கப்பட்ட தேசிய வாதக் கொள்கையானது சமூகத்திலுள்ள பல்வேறு மட்டங்களினாலும், முரண்படக்கூடியவகையில் அமைந்த ஒரு முரண்பாட்டு சமூக உறவிற்குரிய வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள வைக்கும் நிலையை சர்வதேச சக்திகள் உருவாக்கலாம். அது இறுதியில் பண்பாட்டுப் போராட்ட உணர்வினையே முற்றாக அழித்தொழிக்கவும் உதவுவதாகலாம். அல்லாவிடில் தேசியவாதக் கருத்துக்களையுடைய பலரை பல கொள்கைகளுடன் ஓரியக்க அமைப்புக்குள்ளேயே உருவாக்க வழிசமைக்கும். அது இறுதியில் இயக்க மறைவுக்கும் காரணமாகலாம். போலந்திலும், ஹங்கேரியிலும் ஏற்பட்ட அனுபவங்களை இங்கு நினைவு கூர்வது மேலே சொல்லப்பட்ட கருத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

தேசியவாத உணர்வினை முன்னெடுத்துச் செல்வோர் என்ற வகையில் மதத் தலைவர்களது பங்களிப்பானது அடுத்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆசியாவின் தேசியவாத நடவடிக்கைகளில் மதத்தலைவர்களே முக்கியமான பங்கினை வகித்திருந்தனர் என்பதனை உதாரணங்களுடன் எடுத்துக்காட்ட முடியும். ஆசியாவிலுள்ள சமூக அமைப்புக்கள் தத்தமது சமய அடிப்படையில் அடையாளம் காணப்பட்டமையினூடாக மதத்தலைவர்கள் அவர்களிடையே தேசியவாத உணர்வினைப் பரப்புபவர்களாகச் செயற்பட்டிருந்தனர். பாகிஸ்தான், பர்மிய நாடுகளில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த மதவடிப்படையிலான தேசிய உணர்வினைச் சிறந்த சான்றாக கொள்ள முடியும். பர்மாவில் Pangyis என அழைக்கப்பட்ட அரசியல் பிக்குமார் அங்கு Say Sab புரட்சி

முறியடிக்கப்பட்டதன் பின்னர் மாணவர்களுடனும், அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் மோதிக் கொண்டமையைக் காணலாம். இந்தோனேசியாவில் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற தேசியவாதம் கூட மதவடிப்படையிலேயே ஆரம்பஉணர்வினைப்பெற்று ஜனநாயக வாதிகளிடையே செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டது.

தேசியவாத உணர்வினை வளர்த்தெடுத்துச் செல்வோர் என்ற வகையில் ஆசியாவில் வர்த்தகர்கள் முக்கியமான ஓரிடத்தினை வகிக்கின்றார்கள். தேசியவாத நடவடிக்கைகளின் ஆரம்பகட்டங்களில் இவர்களது பங்களிப்பு இன்றியமையாததாக விளங்கும். உதாரணமைாகக் குறிப்பிடுவதாயின் இந்தோனேசிய சரேகட் இஸ்லாமிய எழுச்சிக்கும், அனைத்துலக துருக்கிய ஜாடிக் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் வர்த்தகர்களே அடிப்படையாகத் தொழிற்பட்டிருந்தனர். எனவே வர்த்தகர்களுடனான கொள்கையுடன்பாடானது சமூக - பண்பாட்டு விடுதலையுணர்வினை மேலும் வளர்த்து எடுப்பதற்கு உதவுவதாகலாம். பொருளாதார விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் நாடுகளில் வர்த்தகர்கள் பிரதானமான ஒரு கருவியாக நின்று தொழிற்பட்டிருந்தமையை அண்மைக்கால நிகழ்வுகள் பல எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. பண்பாட்டுப்போராட்ட உணர்வலையுடன் மண்வாசனைக்குரிய கலைவடிவங்களுடன் அவர்களை மிக நெருக்கமாகப் பிணைத்து வைத்திருப்பதன் அடிப்படையில் போராட்ட சூழ்நிலைக்கேற்ப பொதுமக்களை போராட்ட வடிவங்களிலிருந்து அந்நியப்படாத வகையில் வைத்திருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும். இது மாத்திரமன்றி, தேசிய மொழி மற்றும் பண்பாட்டு விடுதலைப் போராட்டமானது வெறுமனே அரசியலை மட்டும் கொண்டிருக் காததாலும் பொருளாதார பண்பாட்டு வடிவங்களை மீட்டெடுப்பதற்குரிய முயற்சியாகவும் அமைவதன் காரணத்தினாலும் வர்த்தகர்களின் நெருக்கமான தொடர்பு அடிக்கடி போராட்ட சக்திகளுடன் ஒன்றிணைக்கப்படவேண்டிய தேவையும் ஏற்பட்டுக்கொள்ளும். குறிப்பாக பண்பாட்டு, கலாச்சார அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு வர்த்தகர்களே தலைமை தாங்க வேண்டிய நிலை ஏற்படும். எந்தவொரு நாட்டிலும் பண்பாட்டு விழிப்புணர்வுக்கும் வர்த்தக - வாணிப நடவடிக்கைகளுக்குமிடையே மிகநெருங்கிய தொடர்பிருப்பதனைக் காணலாம். வர்த்தக மார்க்கங்களும், கலாச்சார மையங்களுமே பண்பாட்டினை வளர்த்தெடுத்த தொட்டில்களாக விளங்கின. கலாச்சார விழாவுக்கான கால்கோள், அவற்றின் வடிவம் போன்றவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளுள் வர்த்தகர்களே முக்கிய பங்கு வகிப்பர். அவ்வகையில் வர்த்தகப் பெருமக்கள் விழிப்புணர்வுபெற்ற மக்கட் கூட்டத்தினருள் தம்மையும் இணைத்து, ஒன்றாகக் கலந்து பண்பாட்டு நடவடிக்கைகளுடாக தேசிய சமூக - விடுதலைப் போராட்ட வடிவங்களுடன் கலந்து நிற்பர்.

## போராட்டமும் பண்பாட்டு விழிப்புணர்வும்

தேசியவாதத்தின் மூன்று முக்கிய அடிப்படைகளுள் ஒன்றான பண்பாடானது சமூக விடுதலைப் போராட்ட உணர்வினை ஊட்டி வளர்க்கக் கூடிய பிரதான உந்துசக்தியாக அமைகின்றது. போராட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட அம்மக்கட் கூட்டத்தினரின் எல்லா மட்டத்தினரையும் இணைக்கக்கூடிய ஓர் அடிப்படையாகப் பண்பாட்டு அம்சங்கள் இடம் பெற்றுக் கொள்கின்றன. பாண்பாடு என்று இங்கு குறிப்பிடும்பொழுது அப்பதமான மிகப்பரந்த அடிப்படையிலான கருத்தியலினைக் கொண்டதாய், சுயாதிபத்தியத்தினையும், தன்னரசாங்கத்தினையும்

அமைக்க விரும்புகின்ற அம்மக்கட் கூட்டத்தினரின் பாரம்பரிய தனித்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். பாரம்பரிய தனித்துவத்தினைப் போற்றிப்பாதுகாத்து வளர்த்துவந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்குரிய புத்தூக்கத்தினை இக்கால கட்டத்தில் போராட்ட சக்திகள் வழங்க வேண்டும். அந்நிறுவனங்களினூடாக எஞ்சியிருக்கும் அல்லது தேசியவாத இயக்கத்தில் தம்மை இதுவரைக்கும் பிணைத்துக் கொண்டிருக்காத மக்கட் கூட்டத்தினரையும் மிகவும் இலகுவாகவும், உணர்வு பூர்வமாகவும் பிணைத்துக்கொள்ள முடியும்.

பண்பாட்டு விழிப்புணர்வின் முக்கியமான ஓர் அம்சமாக அமைய வேண்டியது "அச்சுயாதிபத்தியத்தினையும், தன்னரசாங்கத்தினையும்" அமைக்க விரும்புகின்ற அம்மக்கட் கூட்டத்தினரின் சமூகத் தோற்றம் பற்றிய ஆய்வு ஆகும். அச்சமூகத்தினரின் தோற்றம், வளர்ச்சி தொடர்பாக வரலாறு சமூகவியல் ரீதியாக ஆராயப்படும் போது பெற்றுக் கொள்ளப்படும் முடிவுகளே அத்தேசியவாத இயக்கத்தினை மிகவும் பலமுடையதொன்றாக மாற்றியமைக்க உதவும். அச்சமூகத்தினது தோற்றம் பற்றிய ஆய்வுகளானவை மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும் இவை இரண்டுடனும் இணைந்த வகையிலும் அமைந்த கலை வடிவங்களின் அடிப்படைகளில் இருந்தும் ஆராயப்படலாம். இங்குதான் தொல்லியல் ஆய்வுகளின் இன்றியமையாமை எடுத்துக் காட்டப்படுகின்றது.

பிரிந்து செல்லும் தேசியவாத நிலையை உருவாக்குகின்ற ஒரு கூறாகவே அக்குறிப்பிட்ட சமூக வேர்கள் பற்றிய ஆய்வு அமையும். ஒரு புறத்தில் பெரும்பான்மையான சமூக அமைப்பிலிருந்து, அக்குறிப்பிட்ட சமூகத்தின் தோற்றம், இயல்புகள் அமைப்பு என்பன தெளிவான முறையில் வேறுபடுத்தப்பட்டு, தனித்துவமாக அடையாளம் காணப்படக்கூடிய நிலை ஏற்படுமாயின் அதுவே அங்கு தேசியவாத உணர்வினை வலுப்படுத்தும் காரணியாகவும் அமையலாம். அவ்வாறான தனித்துவமான வேறுபாடானது, ஒன்றில் மொழி ரீதியாகவோ அல்லது பழக்கவழக்கங்கள் ரீதியாகவோ அல்லது மத, நிறுவன ரீதியாகவோ கண்டுகொள்ளப்படலாம். இருந்தும் அவை எல்லாம் அவசியம் என்று கொள்வதற்கில்லை. இதற்கும் மேலாக, தன் அயல் சமூக அமைப்பிலிருந்து அக்குறிப்பிட்ட சமூகமானது கலாசாரரீதியில் தன்னைத் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கும்போதுதான் அது தன்னைப் பிரிந்து செல்லும் தேசிய வாத இயக்கப் போக்கினுள் உட்படுத்திக்கொள்ள முடியும் வங்காளம், பையாவ்ரா (Biafra), வ்ளான்டர்ஸ் (Flanders) ஆகிய நாடுகளில் ஏற்பட்டிருந்த தேசியவாத நடவடிக்கைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

"தேசம்", "தேசியவாதம்" என்ற பதங்களுக்கடிப்படையாக "மொழி" மிக முக்கியமான அளவீடாக இருக்க வேண்டும் என Herder என்பவர் வற்புறுத்துகின்றார். குறிப்பிட்ட அம்மக்கட்கூட்டத்தினரின் "தாயக நிலத்தின்" ஆளுமையை அறிவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் தாய்மொழியில் அமைந்த இலக்கிய வடிவங்களே பயன்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிடுவது மொழிக்கும், நிலத்திற்கும் இடையே இருக்கின்ற பாரம்பரியப் பண்பாட்டுப் பிணைப்பினை வெளிப்படுத்துவதற்கேயாகும். (தற்காலங்களில் இலக்கிய விமர்சனக்காரர் அடிக்கடி குறிப்பிட்டுக்கொள்ளும் "இலக்கியமும் மண்வாசனையும்" என்ற தொடர் அதனையே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.) அப்பிணைப்பின் ஊடாக மாத்திரம் தொடர்பு கொள்ளும்போதே மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் தாயகத்துக்குரிய

"தேசியவாதத்தைப்" பெற்றுக்கொள்கின்றார்கள்; அல்லது தாயக மண்ணுக்குரிய உண்மையான பிரஜைகளாக்கப்படுகின்றார்கள் எனலாம். அவ்வகையில் தாய்மொழியில் அமைந்த இலக்கியங்கள் மக்களை "தேசிய தராதரத்தினை" அடையவைக்கும் "சட்டத் தொகுப்புக்கள்" எனக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.. எனவே மொழிவாரியான வேறுபாடுகள் தேசியவாத உணர்வு மேலோங்கிய நிலையில் மொழியியல் அடிப்படையிலான தாயகக் கோட்பாடுகள் வளர்ச்சி பெறுவதற்கும், பிரிந்து செல்லும் விடுதலைப் போராட்ட உணர்வு மேலோங்குவதற்கும் வழிசமைக்கும். (இந்திய உபகண்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள மொழிவாரியான கொந்தளிப்பு நிலை ஒரு வேளை மொழி ரீதியான தாயக நோக்கில் மக்களை தேசியவாத நிலைக்கு முன் தள்ளிவிடக்கூடும்).

நவீன தேசியவாத நடவடிக்கைகளில் மொழி என்பது முக்கியத்துவம் வாய்ந்த கருவியாக பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். இதனால் மொழியில் மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. வளர்ந்துவரும் அறிவியல் துறைகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் மொழியின் கையாள்கை அமைய வேண்டும் என்பதற்காகப் புதிய புதிய சொல்லாட்சிகளை உருவாக்கிக் கொள்கின்ற ஒரு நிலையினையும் மொழி மறுசீரமைப்பு முயற்சிகளில் காணமுடிகிறது. அதே நேரத்தில் மொழியில் தூய்மை பேணும் முயற்சியும் மொழி மறுசீரமைப்பு முயற்சிக்குப் பக்கம் பக்கமாக ஊக்கம் பெற்று வருவதனைக் காணலாம் தமிழ் மொழியை எடுத்துக் கொண்டால் கூட தற்பொழுது இந்த இரண்டு நிலைகளையும் காணமுடிகின்றது. எழுத்துச்சீர்திருத்தம் வேண்டி தமிழ் எழுத்துக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை புகுத்துகின்ற அதே நேரத்தில் பாரம்பரிய அல்லது வழக்கிலிருந்து மறைந்துபோன அல்லது பிரதேசவழக்கிற்குரிய சொல்லாட்சிகளை தமிழ் மொழியில் மீட்கமுனைவது தேசியவாத உணர்வலையில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி நிற்கும் என்றோ, அல்லது வளர்ந்துவரும் அறிவியற்துறை மாற்றங்களோடு ஒரு மொழி என்ற ரீதியில் கருத்துத் தொடர்பு ஊடகமாக எந்தளவிற்குத் தாக்குப்பிடிக்கும் என்றோ கூறமுடியாது. இப்பிரச்சினையானது அம்மொழியைக் கையாளும் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தே சாதகமாகவும் பாதகமாகவும் அமையக்கூடிய வாய்ப்புமுள்ளது.

## தொல்லியல் ஆய்வும் பண்பாட்டு விழுமியங்களும்

தேசியவாத உணர்வு மேலோங்கக்கூடிய அல்லது மேலோங்கிய ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பினுள் அதன் பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரவேண்டிய தலையாய பணி சமூகவிடுதலை முன்னெடுப்பு இயக்கத்துடன் தொடர்புபட்டிருப்பதனைக் காணலாம். போராட்டச் சூழ்நிலையில் அக்குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு விழுமியங்களை முழுமையான வகையில் முறையாக வெளிப்படுத்துவதன் அடிப்படையிலோ அல்லது குறிப்பிட்ட அம்மக்கட் கூட்டத்தினரை அவர்களது பண்பாட்டு நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுத்துவதன் மூலமோ பண்பாட்டு விழிப்புணர்வினை அப்பிராந்தியத்தில் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு அக்குறிப்பிட்ட மக்கட்கூட்டத்தினரின் பண்பாட்டுப் பகைப்புலத்தினை தாயகப் பரப்புடன் இணைத்த வகையில் வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்ட முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில், ஐதீகமாவிலேனும் அக்கருத்துக்களினை நிலைநிறுத்தப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வரலாற்று அடிப்படையில் அம்மக்களினது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்ட முடியாத நிலை ஏற்படுமானால் (உண்மையிலேயே அம்மக்கட் கூட்டத்தினருக்கு நீண்டகால வரலாறு இல்லாதிருக்குமானால்) ஐதீகமளவிலேனும் அவர்கள் அநாதியானவர்கள் என்ற கருதுகோளினை நிலைநிறுத்த முயற்சிக்க வேண்டும். இம்முயற்சி தோல்வியுறுமானால் தேசியவாத உணர்வு நிலையும் மழுங்கடிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படலாம். (இன்று இஸ்ரேலியர் என்றவொரு இனம் தாயகம் அமைத்து, அதற்குரிய புராதன வரலாற்றையும் "படைத்து" பைபிளுடன் தம்மை இணைத்து, சர்வதேசரீதியில் தம்மைத் தனித்துவமான ஓரினமாகக் காட்டிக்கொண்ட வரலாறு அந்த ஐதீகக் கோட்பாட்டினை நிலைநிறுத்துவதாக உள்ளது.

இஸ்ரேலில் இன்று வளர்ச்சி பெற்றிருக்கும் தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகள் யாவும் பைபிள் என்ற புனித நூலுடன் தொடர்புபட்ட வகையில் அமைந்துள்ளமையை யாருமே எளிதில் காணலாம். தம்மை சர்வதேசிய மட்டத்தில் தனித்துவமான ஓரினமாகக் காட்டுவதற்காகப் பைபிளுடன் தொடர்புபட்ட வகையில் இஸ்ரேலியர் தம்மை அமைத்துள்ளமையை யாருமே எளிதில் காணலாம். தம்மை சர்வதேசிய மட்டத்தில் தனித்துவமான ஓரினமாகக் காட்டுவதற்காகப் பைபிளுடன் தொடர்புபட்ட வகையில் தொல்லியல் நடவடிக்கைகளினை யூதர்களும் ஆற்றிவருகின்றனர். எனவேதான் தொல்லியல் ஆய்வுகளானவை ஓரினத்தின் இனப் பழமையை எடுத்துக் காட்டுவதோடல்லாமல், அவ்வினத்தின் பண்பாட்டுப் பரப்பினையும் தாயகக் கோட்பாட்டுடன் இணைத்துக் காட்டுவதாக அமையும். இலங்கைத்தீவினைப் பொறுத்தமட்டில் "சிங்கள பௌத்தம்" என்ற உணர்வு மேலோங்கி வளரக்கூடிய கூடிய வகையில் இந்நாட்டு தொல்லியற் திணைக்களத்தின் நடவடிக்கைகள் யாவும் வரையறுக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இதனை நன்கு அவதானிக்க ஜப்பானிய அறிஞரான Kanzo Saito பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமையை நோக்கத்தக்கதாகும்.

"யூனெஸ்கோவினால் அளிக்கப்பட்ட கலாசார முக்கோணத்திட்டம் என்ற வரத்தினைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட 2000 வருடங்களுக்கும் மேலான பழமை வாய்ந்த பெருந்தொகையான பௌத்தக் கலைக் கருவூலங்களை, இலங்கை அரசாங்கமானது தமிழ்ப் போராளிகளுடனான மோதலில் அரசியல் குண்டாந்தடியாக (Political bludgeon) பயன்படுத்துவதனைக் காணலாம்."

இலங்கையைப் பொறுத்தவரையில் அளவுக்கதிகமான தொல்லியல் அகழ்வுகளை அது மேற்கொண்டு வருவதாகவும், எந்தவிதமான தொல்லியல் ஆய்வு முறைகளின் அடிப்படைகளுமின்றி பயிற்றப்படாத வேலையாட்களைக் கொண்டு, போலி வேலைப்பாடுகளுடன் அப்பணிகளை முடித்து வருவதாகவும் அவ்வறிஞர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது எந்தளவிற்கு தொல்லியல் அகழ்வாய்வினைப் பயன்படுத்தி இலங்கையரசானது "சிங்கள பௌத்த" உணர்வினை மேலோங்க வழிசமைக்கின்றது என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது.

**யாழ்ப்பாண அரசும் தொல்லியலும் :**

இத்தீவினைப் பாரம்பரியமாகக் கொண்டு தொடர்ச்சியாக வாழ்ந்து கொண்டு வரும் தமிழ் மக்களின் வரலாறானது அதே பிராந்தியத்தில் தொடர்ச்சியற்ற முறையில் காணப்படுவதற்குரிய காரணம், இத்தீவின் ஒருபக்கப் பண்பாட்டுப்

பகைப்புலத்தினையே பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் வெளிக்கொணர்வதற்கு பெருமளவு ஆர்வம் காட்டியதனாலாகும். ஆனால் இலங்கைத் தமிழரின் பண்பாட்டுப் பரப்பினையும், வரலாற்றினையும் அவர்களது வரலாற்று மரபின் தொடர்ச்சியான வளர்ச்சியினையும் இணைத்துச் சென்றிருக்கக் கூடிய வரலாற்று மூலங்களை அலட்சியம் செய்துவிட்டிருந்தனர் என்றோ அல்லது அவற்றின் முக்கியத்துவத்தினை உணராமல் கைவிட்டிருந்தனர் என்றோ குறிப்பிடலாம். இதுவே இன்று "யாழ்ப்பாண அரசின்" தொடர்ச்சியற்ற வரலாற்றுத் தன்மை, அதன் வரலாற்றெழுத்தியல் போக்குத் தொடர்பாக நாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினையுமாகும். இப்பிரச்சினையானது அவ்வரலாறு பற்றிய பொதுவான நிலைப்பாடொன்று காணப்படாததிலிருந்தே உருவானது. இதற்குக் காரணம் எம்மவர் மத்தியில் வரலாறு பற்றிய பொதுமையான உணர்வோ, அல்லது வரலாறு தொடர்பான விமர்சன மரபொன்று உருவாகாது இருந்தமையே காரணமாகக் குறிப்பிடலாம்.

இச்சந்தர்ப்பத்தில் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புராதன நகரங்களைப் பற்றியதும் மையங்களைப் பற்றியதுமான முதலாய்வுகளும், அகழ்வாய்வுகளும் பல புதிய கருத்துக்களையும், அடிப்படைத் தகவல்களையும் யாழ்ப்பாண வரலாறு தொடர்ச்சியான முறையில் அமையக்கூடியவாறு தருகின்ற தன்மையைக் காணலாம். இவ்வழியே இலங்கைத் தமிழ் மக்களது தொடர்ச்சியான பூர்வீக வரலாற்றினை இனங்கண்டுகொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டுக் கொள்ளும் எனவும் எதிர்பார்க்கலாம்.


1. *Smith, A.D.,* *An Introduction* :- The Formation of Nationalist Movements. London, 1968.
2. *Kanzo Saito, 'A political dig'* Asahi Shimbur News Service, *Colombo.*
3. *See an, article entitled 'Terrorists are not fighting for Language and Culture,,* The Island. *24th Jan. 1986*

*See an article entitled 'Lalith on a Kingdom of Jaffna,* The Island. 23rd July, 1983


நூல்கள் கிடைத்திருக்கின்றமை வீட்டு வேலையை ஒப்படைப்பதற்கும்,
மாணவர் அடைவை உயர்த்துவதற்கும் நன்கு உதவுகின்றது.
இதற்கு மேலதிகமாக வகுப்பறையில் பாடநூல்கள் இருக்கின்றமை
ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை பல்விகற்பமாக்குதல், சிறு குழுக்களுடனும் தனிப்பட்ட
மாணவர்களுடனும் சேர்ந்து வேலைசெய்தல் என்பவற்றுக்கு அனுமதிக்கின்றது.
வகுப்பறையில் புத்தகங்கள் இல்லாவிடில் ஒரேயொரு இயலுமான கற்றல் - கற்பித்தல் முறை
ஆசிரியர் விரிவுரையும் குழுவாகச் சேர்ந்து இசைத்தலும்,
கருத்தற்ற பாடமாக்கும் முறையுமாகவே அமையும்.

- Favrel -

# Essentials in second language learning and the factors affecting second language learning.



K. Sanmuganathan
Lecturer in English Language
University of Jaffna.

## Introduction.

*Language is an intimate part of social identify. In all settings, language is always the medium and sometimes the object of formal study. English was introduced into the island with the advent of the British in 1796. In the course of time, the English language was firmly implanted in Srilanka in a systematic manner. The use of English became supreme and pervasive in several domains of language use. Under British rule, English was the language of administration. It was the language of higher education and the most popular language of school education. The Christian missionaries were the first to start teaching English in Srilanka.*

*English was the medium of instruction. English had become an indispensable tool for higher education and for intellectual pursuits. English served as a ladder to high positions and without English, no one could have thought of any remarkable achievement in public life. After the independence of our country, the mother tongue was considered the best for one's education especially at the primary level. School children were given the privilege to have their education through Sinhala and Tamil. However, English has been one of the subjects of school curriculum and has been the medium of instruction in the universities and other higher institutions. So the need for English is still being felt strongly. The recent development in science and technology also demands a sound knowledge in English for bettering the prospects of our students and their services in the modern world.*

*So English as a link language plays an important role in our social activities. Thus every one in willy-nilly wants to learn the English language. Especially in the academic domains. Each student is intimidated to plunge into the task of learning English language in order to survive in the competitive life. Consequently, the educational planners are taking a series of efforts to impart the English language among our students in our country. Although English is a foreign language, it is taught as a second language, as the society provides certain English learning situations.*

*At this juncture, it has been noticed that teachers of English language ask themselves why students are unable to excel in learning English*

and why they struggle or ignore it. Teaching English language to our students cannot be considered an easy task. Every teacher of English language finds teaching English one of the most different tasks.

Notwithstanding enough serious efforts have been taken in all aspects of the educational setup, still there are some bottlenecks in the road of learning English language. There are host of factors, which come into play in second language learning. The factors such as teacher's competence, motivation and attitude of learners, teaching methods, instructional materials, the structural similarities and differences between L1 and L2 etc, can be the variables that can significantly affect second language learning and teaching.

## What is meant by Learning?

Learning is defined as a change in behaviour. This behavioural change takes place through learning. It takes place as a result of environmental influences. Each child lives in a physical as well as a human environment. This environment includes the school, home and society at large. There is continuous exchange of influences between the environment and the child. Through this exchange of influences, the child learns various things such as habits, attitudes, skills and ideas. Through practices and exercises and through experience gained from the environment, children develop behavioural changes. Through experiences that the teacher supplies, children acquire new knowledge, skills and attitudes. All those who are involving in teaching should have known this basic concept for their effective teaching in our traditional class rooms.

At the same time, a Language teacher must have known the concept of what the language is. The eminent Linguist, Edward Sapir,

"Language is a purely human and non- instinctive method of communicating ideas, emotions and desires by means of voluntarily product symbols."

The above definition emphasizes a number of important points. They are,

1. That language is essentially a human attribute – all normal human children master the language of their parents during the first five years of their lives. That is, they have the ability to learn from their parents.
2. That language is non – instinctive – human beings have the capacity to learn language but language itself is not instinctive. So, it has to be learnt from the environment.
3. That language is a means of communication. It is an acquired sound behaviour. Not only it is learnt from the society but also it performs a very important function in the society.
4. That language is a system of symbols – it is a system based on sound and meaning. It has four major systems. They are system of sounds, system of words, System of sentence and system of meaning.

*So, Language is an acquired sound behaviour. Not only it is learnt from the society but also it performs a very important function in society. Knowing a language will itself condition one's cultural or social beliefs or views of the world.*

*"Language is a guide to social reality. It powerfully conditions all our thinking about social problems and process. Human beings do not live in the objective world alone; not alone in the world of social activity as ordinarily understood, but are very much at the mercy of the particular language which has become the medium of expression for society. It is quite an illusion to imagine that one adjusts to reality essentially without the use of language and the language is merely an incidental means of solving specific problems of communication. The fact of the matter is that the 'real world' is to a large extent unconsciously built upon the language habits of the group. No two languages are sufficiently similar to be considered as representing the same social reality. The worlds in which different societies live, are distinct worlds not merely the same world with different labels attached ... we see, hear and otherwise experience very largely as we do, because the language habit of our community predispose certain choices of their interpretation."*

*With the pre knowledge of what the learning is and what language is, it is better to see how language learning takes place.*

### How does second language learning take place?

*Language is a fundamental basis of thought. Thought is a kind of behaviour, mainly speech normal infants learning a language come to understand speech before they begin speech production themselves. This notion has been proved by a research done on the area. The children were found that their speech understanding was well in advance of their production ability. The fact children have the ability to understand speech indicates that they must have the thought that is involved in the comprehension of speech and the fact that children learn to understand speech prior to producing it indicates that speech production is not necessary for the development of thought. So, the children are able to construct and utter words and sentences after they gain an understanding of language clues. This reveals that the sound forms of the words of a particular language, the meaning of those words, the syntactic relations in sentence etc can not be learnt by a child without prior exposure and some analysis of their language.*

### What is meant by Second language?

*In a multilingual country like Sri Lanka, each community has a language which is an intimate part of their social identity. This type of language is called native language or first language. However there are other languages included in the school curriculum which is taught in the educational institutions. These languages serve*

*various needs and purposes in and out the country. These languages are called second languages.*

*In learning a language as it is noted at the beginning, Speech understanding should go first before speech is produced. That is, children are not able to utter words and sentences meaningfully until they have had the opportunity to hear and understand the words, phrases and sentences while others speak. This is the necessary condition for an effective learning of a second language. As far as English is concerned, it is necessary that the learners must be exposed to that language in order to learn it. It is further necessary that the speech, to which learners are exposed, must be related to objects, events or situations in the environment. Otherwise, learning will not take place. So, the learners must hear speech sounds in conjunction with the perception of objects, events and situations. Both types of experiences are independent of one another in the sense that the perception (seeing, hearing, feeling etc) of objects, events and situation' are not dependent on the hearing of speech sounds and vice – versa. For examples, seeing a 'cat' or hearing the sound / cæt/ are independent perceptions.*

*In second language learning, there is a question which may arise. Does first language learning change with the learning second language? There are no theories so far, which respond to this question. But A 4 theory has been proposed to date. That is "Osgood's compound – Co – ordinate Bilingual theory which involves only one aspect of functioning, the processing of isolated words. It does not involve the interpretation of phrases and sentences. A compound – Bilingual is said to process second language words through the mediation of first language words having learnt the second language through translation. However it is said to process second language words without first language mediations having learnt the second language through direct experience.*

**Conditions for Second Language learning.**

*When a child learns first language, it is said that the child learns the language under natural conditions. But the conditions for second language learning differ from the first language learning. The most common one being used in second language learning is the school class room. But this is purely not true. A second language can be learnt under natural conditions when a child is taken to live in the foreign language context in which a child can learn a second language without formal instruction by associating with speakers of language. Thus, a second language can be learnt under either natural or planned conditions.*

*The planned condition of the classroom in which a second language is learnt, may be said to include the following major difference with reference to the natural condition.*

***I. Psycho – Social demands of classroom***

*The school classroom requires adjustment of the learner to group process, classroom discipline and procedures. The learner receives*

only a limited amount of individual attention. Regular attendance is required.

**II. Pre selected linguistic data.**

*The teacher generally introduces pre selected target language items. Spontaneity is limited. A planned curriculum is followed with teacher attempting to realize certain goals regarding the language which is to be learnt.*

**III. Grammatical rules presented.**

*The teacher may describe rule in the native language to explain a grammatical structure. The learner is expected to understand, assimilate and later apply the abstract rule.*

**IV. Un real limited situations**

*Structures for language use in the class room are limited in variety and scope as compared to those outside of the class room. The situations which are employed, are often simulated.*

**V. Educational aids and assignments.**

*In order to assist learning and achieve teacher goals, books, writing or a language lab may be used. Work assignments may be given to be completed in the class or at home.*

*With the above said differences between natural and planned learning situation, the development of second language learning varies depending on the situation. Thus, the particular content of the second language grammar, the order in which structure or morphemes are learnt and the type and range of situations for appropriate language use will vary depending on the type of learning situation.*

## The process of second language learning.

***Rule learning:*** *Induction, explication and correction.*

*In learning a language, rules may be learnt in either or two ways, through induction or explication. It is said that learning the rules of a language entirely through explication given in current state of knowledge is not possible. Children can not learn rules through explication for two principal factors. They are,*

1. *Children would enable to understand the language in which rules would be explained because they themselves do not have the target language.*

2. *Only with maturity, children are able to understand an explanation that is by native highly analytical and abstract.*

*The process of induction is one whose essence is learning through self discovery. The learner is not told the rule of the second language. Actually, the process involves two distinct aspects after the learner has been exposed to relevant linguistic*

data, Linguistic data being words phrases and sentences in conjunction with a meaningful context. First, the learner abstracts a rule based on those data and second, the learner develops a basis for its application.

### Correction :

When a language learner is given correction for errors in second language learning, it is communicated in one or two essential ways, one by repetition and the other by explanation. Here, repetition is not specific and requires to use of induction if the correction is to be made. But, explanation is specific and the use of explication by the learner is required if correction is to be made.

For example, a Learner says, "Nobody don't like English". A teacher may correct it saying."
"No body likes English".
In this situation, teacher may use a repetition or an explanation saying like you don't use negative marker 'not' when negation appears with a noun, Depending on the linguistic input of the learner, a teacher can make use of both in correction.

## Memory and Motor skills.

These are the two factors, which are essential in understanding and producing speech in Second Language. It should be kept in mind that without memory, one can not learn a language and at the same time, without motor skills, one would have no means for producing speech. In the learning of grammatical rules by induction, long term memory is essential. The linguistic data, which a learner receives, must be stored for the future use. The ability of persons to develop or control the muscles of the body is an essential component of the speech production process. In order to produce speech, muscles must control the movement of the jaws, lips, tongue, vocal chords and other speech articulators. The defects in memory and motor skills will definitely affect learning a language.

## Factors affecting second language learning.

A teacher must be aware of the factors which affect the Second Language learning to achieve his / her goals. A number of factors, which affect Second Language learning, operate in certain types of learning situation.

1. **Motivation.**

   It is one of the factors which affect second language learning. But, it is not likely to affect the first language learning because the learner is exposed to language in the ordinary course of living. The planned learning situation for Second language learning presents a very different problem.

   There is an element of choice involved in attending class, listening to the teacher, participating activities and in doing assignments. The amount of exposure which one receives and the amount of attention and

effort which one may devote to learning may be affected by one's motivation. For example, dislike of a teacher could seriously affect language learning unless it is balanced by a high degree motivation that enables one to persist.

## 2. Attitudes

A negative attitude toward the second language may affect one's determination and persistence to be involved in the class and its activities. This same negative attitude could impair memory functions and detract from focusing on the target language.

## 3. The influence of the first language

The comments of Krishnaswamy, Verma and Nagarajah. (1992). on the influence of the L1 in second language learning are summarized as follows.

The contrastive analysis hypothesis (CAH) emphasizes the gravitational pull of the mother tongue (i.e., the first language) on the process involved in learning a second language: phonological, morphological, syntactic and semantic. The structuralists' assumption that the learning of a language is actually the learning of a set of linguistic habits, characterizes their view of the learning of a second language too, as the learning of a secondary set of habits; this implies that the primary set of habits must interfere with the secondary set that is learnt, wherever the two sets do not have similarities. This understanding led to the comparison of the linguistic systems of the first and second languages, and to the identification of errors that could be attributed to the difference between the two systems (p93)

It is assumed that learning of second language is facilitated whenever there are similarities between that language and mother tongue. Learning may be interfered with when there are marked contrasts between mother tongue and second language.

The contrastive analysis emphasizes the influence of the mother tongue in learning a second language in phonological, morphological and syntactic .levels. Examination of the differences between the first and second languages helps to predict the possible errors that can be made by L2 learners (Kirisnaswamy, Verma, Nagarajan 1992).

## 4. Other relevant factors

Other relevant factors such as status and cultural background become more potent with the age of the learner and are important considerations in the learning situation. Beyond all these, it has been specified that there are seven main groups of variables, which affect efficiency of learning. It is noticed that efficiency of learning is related to educational objectives as shown in figure 1.




**Figure 1. Behavioural setting for learning**

*Teachers of English Language must be well aware of these factors affecting second Language learning. So that they will be able to devise ways to increase positive motivation and attitudes towards second language learning. In order to make devices for the ways of remedying these factors, a teacher has to do a survey to find out the variables which affect these factors in learning a second language.*

### References.

1. *Edward Sapir, (1949). "The status of linguistics as a science". In selected writings of Edward Sapir in language, culture and personality. University of California Press.*
2. *Danny, D. S. (1982). Psycholinguistics. Language, Mind, World, P165. (A theory proposed by Osgood and Sebade, 1954) USA, New York.*
3. *Charles C. Fries, (1945). Teaching and Learning English as a Foreign Language. University of Michigan Press.*
4. *Croft, K. (1980). Readings on English as a Second Language. Winthrop Publishers, Inc. Cambridge, Massachusetts.*
5. *Lado, R. (1957).Linguistics across cultures: Applied linguistics for language teachers. Ann Arbor, MI: University of Michigan press*
6. *Krishaswamy, S.K. Verma, and Nagarajan. M (1992) Modern Applied Linguistics, Printed by V.N.Rao at Macmillan India Press, Madras 600 041.*



# சட்டக்கல்வியின் முக்கியத்துவமும் தேவையும்.

**பொ.குமாரசாமி.**
J.P.U.M.,
சட்டத்தரணியும் நொத்தாரிசுவும்.

மனித நாகரிக முன்னேற்றத்தின் விளைவாக மனித வாழ்வின் கட்டுக்கோப்பை, பாதுகாப்பை உறுதி செய்ய மனிதனாலேயே பல்வேறு வகையான சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இச்சட்டங்களை நடைமுறைப்படுத்த பல்வேறு விதமான அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. நாட்டுக்கு நாடு சட்டங்களிலும், சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளிலும் சில சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவை யாவும் அடிப்படை நோக்கம் ஒன்றையே கொண்டனவாக இருக்கின்றன. இக்கட்டுரையின் நோக்கம் சட்டங்கள் பற்றியோ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளைப்பற்றியோ ஆராய்வதல்ல. ஒரு காலத்தில் இலங்கையின் தலைநகரமான கொழும்பில் உயர் நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கக் கூடிய "Hulftsdorp" என ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதும் தமிழில் "புதுக்கடை" என அழைக்கப்படுவதுமான இடத்தில் "தடுக்கி விழுந்தால் தமிழ் பிரக்கிராசியில் தான் விழவேண்டும்" எனக் கூறுப்படுகின்ற நிலையிருந்தது. இன்று அந்த நிலைமாறி தேடித்தான் தமிழ்ப் "பிரக்கிராசியை' பிடிக்க வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. தலைநகரத்தில்தான் இந்த நிலை என்றால் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற வடமாகாணத்தில் கூட சட்டத்தரணிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இத்தொழில் இப்பிரதேசத்தில் ஒரு அழிந்து கொண்டு செல்லகின்ற தொழிலாகிவிட்ட சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் எதிர் காலத்தில் மாணவர்கள் இத்தொழிலுக்கான கல்வியை நாடி கற்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதற்கண் இப்பிரதேசத்தில் சட்டத்தரணிகள் பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்ன என்பதை சற்று ஆராய்ந்து பார்க்கலாம். இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களம் ஆக்கப்பட்டு அதன் விளைவாக வடக்கு கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நீதிமன்ற மொழியும் சிங்களமாக்கப்பட்டதால் வடக்கு கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தமிழ்ச் சட்டத்தரணிகளுக்கான மவுசு குறைந்ததின் காரணமாக தலைநகரப்பகுதியில் தமிழ்ச் சட்டத்தரணிகளின் தேவை குறைந்தது. இது ஒரு காரணமாகவும் இப்பிரதேசத்தில் எண்பதுகளின் முற்பகுதி தொடக்கம் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக சில காலங்கள் நீதிமன்றங்கள் செயல்படாமல் இருந்த காலத்தில் பல சட்டத்தரணிகள் புலம் பெயரவும் பல சிரேஷ்ட சட்டத்தரணிகள் இவ்வுலகை நீத்து விடவும் ஏற்பட்ட வெற்றிடம் புதிய சட்டத்தரணிகளின் வரவின்மையால் நிரந்தர வெற்றிடமாகிவிட்டமை மற்றொரு காரணமாகவும் அமைந்துவிட்டது. நீதிமன்றங்கள் இப்பிரதேசங்களில் இயங்கிக் கொண்டிருந்த காலங்களில் சட்டத்தரணிகளுக்கிருந்த செல்வாக்கு புகழ் கீர்த்தி என்பவற்றின் காரணமாக பலர் சட்டத்தரணித் தொழிலுக்கு வர விருப்பம் கொண்டவர்களாக இருந்த காரணத்தினால் தொடச்சியாக புதிய இளம் சட்டத்தரணிகளின் வரவு இருந்து கொண்டேயிருந்தது. மேலும் இப்பிரதேசத்தில் நீதிமன்றங்கள் செயல்படாமலிருந்த காலத்தில் சட்டத்தரணிகளின் தேவை இல்லாமல் உறுதி எழுதும் நொத்தாரிசு தொழில் மட்டுமே சட்டத்தரணிகளின் தொழில் போன்ற ஒரு மாயை ஏற்பட்டு அதன் காரணமாக புதிதாக இத்தொழிலை தேர்ந்தெடுப்பவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்தது. இது ஒருபுறமிருக்க கல்விக் கொள்கைகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களினால் பல்கலைக் கழகங்களில் சட்டத்துறைக்கும், இலங்கை சட்டக் கல்லூரிக்கும் உள்வாங்கப்படும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இக்காரணிகளைத் தாண்டி தற்போதும் சட்டக்கல்வியை மேற்கொள்ளும் பல இளம் சந்ததியினர் பல்வேறு

காரணங்களினால் இப்பிரதேசங்களுக்கு வந்து தொழிலை மேற்கொள்ளாமல் இருப்பதும் எமது பிரதேசங்களில் சட்டத்தரணிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட மேலும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இப்பிரதேசங்களில் நீதிமன்றங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கிய பின்னர் சட்டத்தரணிகளின் தேவை இத்துறையுடன் தொடர்புடையவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தற்போது இப்பிரதேசங்களில் தொழில்புரிகின்ற சட்டத்தரணிகளில் பெரும்பாலனவர்கள் ஐம்பது வயதைத் தாண்டிவிட்டவர்களாக இருக்கிறார்கள். இத்தொழிலுக்கு ஓய்வுபெறும் வயதெல்லை ஏனைய தொழிலில் உள்ளவர்களைப் போல் நிர்ணயிக்கப்பட்டிருக்குமானால் எண்பது சதவீதத்துக்கு கூடுதலான தற்போதைய சட்டத்தரணிகள் ஓய்வுபெற்றிருக்க வேண்டும். இந்த நிலை இன்னும் சில காலங்களுக்கு நீடித்தால் வெகுவிரைவில் இப்பிரதேசத்தில் இத்தொழிலுக்கு பெரிய வெற்றிடம் ஏற்பட்டுவிடும். இது சமுதாயத்தில் பெரிய ஒரு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையாகும். சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தப்பட வேண்டுமானால் வலுவான நீதிநிர்வாக கட்டமைப்பு செயல்பட சட்டத்தரணிகளின் பங்களிப்பு மிக மிக அத்தியாவசியமானதாகும். அந்தந்தப் பிரதேசங்களில் நிரந்தரமாக இருந்து தொழில் புரிகின்ற சட்டதரணிகள் இல்லாத நிலை எற்பட்டால் சாதாரண மக்கள் தமக்கு ஏற்படும் சட்ட ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வு காண உரிய சட்ட ஆலோசனைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் பணவசதி குறைந்த மக்களின் நிலைமை மேலும் மோசமானதாகிவிடும். இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணிகள் இல்லாமல் போனால் தத்தமது சட்டப்பிரச்சனைகளை தாமே பார்க்கலாமென்றும் சட்டத்தரணிகள் தொழில் ஒரு அவசியமற்ற தொழில் என்றும் ஒரு சில கல்விமான்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் அண்மையில் கூறியதாக நான் அறிந்தேன். இது நாய் பார்க்கும் வேலையை கழுதை பார்த்த கதைபோல்தான் ஆகும். எந்த ஒரு தொழிலையும் அந்தந்த தொழிலுக்கு பரிச்சயமும் பயிற்சியும் உள்ளவர்கள் செய்வது போல் அத்தொழிலுக்கு புதியவர் செய்ய முடியாது. எல்லாவற்றையும் புத்தகத்தை வாசித்துவிட்டு அதன்படி செய்யலாம் என்ற சில பேருடைய சிந்தனைகள் தவறானவை. இது சமையற்கலைப் புத்தகத்தைப் பார்த்து சமையல் செய்தவர் இறுதியாக புத்தகத்தில் போடப்படாததால் சமைத்த உணவை அடுப்பால் இறக்கி வைக்காமல் அடுப்பில் விட்டது போன்ற செயல்போன்றுதான் முடியும்.

சட்டத்தரணிகள் என்று கூறுகின்ற பொழுது தனியே சுயமாகத் தொழில்புரிகின்ற சட்டத்தரணிகள் மட்டுமல்ல. ஒருவர் நீதிபதியாக வருவதற்கு முதலில் அவர் ஒரு சட்டத்தரணியாக இருக்க வேண்டும். அத்தொழிலில் குறிப்பிட்டளவு கால அனுபவம் பெற்றிருப்பதும் அத்தியாவசியமானதாகும். இதைவிட அரச சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அரச தனியார் நிறுவனங்களுக்கு சட்ட ஆலோசகர்கள் இருக்கிறார்கள். அதாவது ஒருவர் தனியாக தொழில் புரிய (private practice) விரும்பாதவிடத்து நீதிபதியாகவோ, அரச சட்டத்தரணியாகவோ (state Counsel) அரச, தனியார் நிறுவனங்களில் சட்ட ஆலோசகராகவோ (Legal Officer) தொழில் புரியவும் வாய்ப்பிருக்கிறது.

இத்தொழில் ஒரு சுதந்திரமான தொழில். சட்டத்தரணியாக பட்டம் பெறுபவர் சகல சட்டங்களையும் கற்றுத் தேறித் தான் வெளிவருவார். ஆனால் அவரவர் விரும்பிய துறையினைத் தேர்ந்தெடுத்து தொழில் புரியலாம். உதாரணமாக குடியியல் வழக்குகளை விரும்புபவர் அவற்றை மட்டும் செய்யலாம். குற்றவியல் வழக்குகளை விரும்புபவர் அவற்றை மட்டும் செய்யலாம். இவற்றைவிட வருமானவரி தொடர்பான விடயங்கள் கூட்டுத்தாபனங்கள் தொடர்பான விடயங்கள் தொழில் பிணக்குகள் தொடர்பான விடயங்கள் என்பவற்றையும் தனித்தனியாகச் செய்யலாம். விரும்பினால் சகல பிரிவு வழக்குளையும் கையாளலாம். தனியாகத் தொழில் புரிபவருக்கு தாம் பெற்றுக்கொள்ளும் சலார் தொடர்பில் கட்டுப்பாடுகள் கிடையாது. வழக்கின் தன்மையைப் பொறுத்து தமது சலாரை அறவிட்டுக் கொள்ளலாம். சமூகத்தில் கௌரவமும் கீர்த்தியும் உள்ள தொழில். சமூகத்துப் பலவழிகளிலும் சேவை செய்யக் கூடிய சுதந்திரமான தொழில், நல்ல வருவாய் உள்ள தொழில். உலகளாவிய ரீதியில் பார்க்கின்ற போது முன்னேறிய நாடுகளில் முதல் தர தொழிலாகக் கருதப்படுகின்ற தொழில். இத்தகைய ஒரு தொழில் புரிய எம்மிடையே ஆட்கள் இல்லாத வெற்றிடம் ஏற்படாமல் தடுக்க இளம் சந்ததியினர் சட்டக்கல்வியில் கூடிய நாட்டம் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும்.

ஒரு சட்டத்தரணியாக வருவதற்குரிய வழிவகைகளைப் பற்றிச் சுருக்கமாகத் தற்போது பார்க்கலாம். இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு வருடா வருடம் நடைபெறும் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் அந்தந்த வருடத்துக்கு நியமிக்கப்படும் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலான புள்ளிகளைப் பெற்று அனுமதி கிடைத்தால் மூன்று ஆண்டு கல்வி நெறி. இதற்கான அடிப்படைத் தகுதி க.பொ.த உயர்தர தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழுடன் ஆங்கிலத்திலும் திறமைச் சித்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பரீட்சை நடைபெறும். இறுதி ஆண்டு பரீட்சையில் சித்தி எய்தினால் ஆறு மாத தொழில் பயிற்சிக் காலத்தின் பின்பு உயர் நீதிமன்றில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பின் சட்டத்தரணியாகத் தொழில் புரியலாம்.

இதைவிட இலங்கைப் பல்கலைக்கழக சட்டமாணியாக பட்டம் பெற்ற ஒருவர் சட்டத்தரணியாக வர விரும்புமிடத்து இலங்கைச் சட்டக் கல்லூரியில் தம்மை அங்கு பதிவு செய்து சட்டக்கல்லூரியினரால் குறிப்பிடப்படும் சில பாடங்களுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்று பின்னர் ஆறுமாத கால பயிற்சியின் பின்னர் உயர் நீதிமன்றில் சத்தியப் பிரமாணம் எடுத்து சட்டத்தரணியாகி தொழில் புரியலாம். இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேணடும் அதாவது பல்கலைக் கழக சட்டமாணிப் பட்டம் பெற்றவர் எதற்காகச் சட்டக் கல்லூரியில் சில பாடங்களைத் தோற்ற வேண்டும் என்ற சந்தேகம் ஒருவருக்கு எற்படலாம் பல்கலைக் கழக சட்டமாணிப் பட்டம் ஒரு கல்விசார் பட்டம் (academic qualification). இலங்கைச் சட்டக் கல்லூரி வழங்குவது தொழில்சார் பட்டம் (professional qualification). சட்டத்தரணியாக தொழில் புரிவதற்கான பயிற்சியை வழங்குவதற்காகவே சட்டமாணிகளை சட்டக்கல்லூரியிலும் சில பாடங்களில் சித்தி எய்த வேண்டும் என்ற கட்டப்பாடு உள்ளது. சட்டமாணியாக வருவதற்கு இலங்கைப் பல்கலைக்கழக நுழைவதற்கு எந்தக் குறிப்பிட்ட பாடச்சேர்க்கையில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்த வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. எந்தப் பாடச் சேர்க்கையாயிருந்தாலும் தற்பொழுது பல்கலைக் கழக அனுமதிக்கு கடைப் பிடிக்கப்படும் "Z" score முறைமின் அடிப்படையில் உயர் புள்ளியைப் பெற வசதியதான பாடச் சேர்க்கையினை மேற்கொள்வது நல்லது. ஏனெனில் அண்மைக்கால சட்டமாணி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட உயர் "Z" score பெற வேண்டியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவற்றை விட திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமாணிப் பயிற்சி நெறியில் அல்லது வெளிவாரிப்பட்டப்படிப்பில் சட்டமாணியாக சித்தி பெற்றவர்களும் சட்டக்கல்லூரியில் பதிவு செய்து ஏனைய சட்டமாணிகளைப் போல் சட்டத்தரணிகளாக வந்து தொழில் புரியலாம்.

சில வெளிநாடுகளில் சட்டமாணிகளாக அல்லது அந்நாட்டின் தொழில்சார் பட்டங்களைப் பெற்றவர்களும் இலங்கையில் பதிவு செய்து சட்டத்தரணிகளாக தொழில் புரிவதற்கு இடமிருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்தின் பரிஸ்ரர்கள் அல்லது சொலிசிற்றர்கள் (Barrister or Solicitor) சட்டமாணிகளைப் போல் இலங்கைச் சட்டக் கல்லூரியில் பதிவு செய்து சத்தியப் பிரமாணம் எடுத்த சட்டத்தரணிகளாகத் தொழில் புரிய இடமிருக்கிறது.

எனவே எம்மிளம் சந்ததியினருக்கு நான் இதன் மூலம் வைக்கும் ஒரு அன்பான வேண்டுகோள். சில குறிப்பிட்ட பாடச் சேர்க்கையிலுள்ள கற்கை நெறிகளை மட்டும் க.பொ.த உயர்தர வகுப்புக்கு கண்ணை மூடிக் கொண்டு தேர்ந்தெடுப்பதைத் தவிருங்கள். இதனால் சில கற்கை நெறிகளுக்கான மாணவர் தொகை கூடுவதும் ஓரளவிற்கு போட்டி கூடுவதும் தான் மிச்சம். க.பொ.த உயர்தர வகுப்புக்கான பாடச்சேர்க்கைகளை மேற்கொள்ள முன் பெற்றோர் ஆசிரியர்களுடன் மற்றும் உங்களுக்கு தெரிந்த கல்விமான்களுடன் நன்கு கலந்தாலோசியுங்கள். உங்களுக்கும் நாட்டுக்கும் பயன்படக் கூடிய கற்கை நெறிகளை மேற்கொள்ளக் கூடிய பாடச் சேர்க்கைளை தெரிந்தெடுங்கள். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றினேன் என்ற தகுதி மட்டும் இல்லாமல் அதில் சித்தி பெற்று மேன்மேலும் கல்வி தொடரக் கூடியவர்களாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். இந்தவகையில் இங்கிலாந்து அவுஸ்திரேலியா அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட முதல் தரத் தொழிலாகக் கருதப்படுவதும் எமது பிரதேசத்திற்கு தேவையாக உள்ளதுமான கௌரவமான உயர்தொழிலான சட்டத்தரணித் தொழிலை மேற்கொள்வதற்கான சட்டக்கல்வியை மேற்கொண்டு உங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.



# ஆசிரியர்களின் வகிபாகம்: சிறப்பான மாற்றத்தை நோக்கி.....

பேராசிரியர் மா. நடராஜசுந்தரம்.
முகாமைக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு நாட்டிலும் கல்விக்கும் அதன் அபிவிருத்திக்கும் ஆசிரியர்களின் பங்கு பாராட்டக் கூடியதாக அமைகின்றது. எந்த ஒரு நாடும் தகுதியான, தூண்டக்கூடிய, நம்பிக்கையுடைய ஆசிரியர்களை வேண்டி நிற்கின்றது. ஆனால் இந்த நிலை உண்மையில் இருக்கின்றதா என்ற கேள்விக்கு பதில் காண்பது கடினமாகக் காணப்படுகின்றது. ஆசிரியத் தொழில் புனிதமானதொன்றாகக் காணப்பட்ட பொழுதிலும் எத்தனை பேர் அதனை விரும்பி அத்தொழிலை ஏற்கின்றனர். தொழில்வாய்ப்பு என்ற பேரில் பலர் இந்த சேவையில் இணைகின்றனர். அவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்கின்ற அளவுக்கு அறிந்திருத்தல் வேண்டும் (*Most learn to value themselves*). இன்னொருவரின் ஆளுமையை வளர்ப்பவர் (*Develop personality of another*) என்பதில் கரிசனையாக இருத்தல் வேண்டும். பாடசாலையில் இருக்கும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும், நேர்மையாகவும், பற்றுறுதியுடனும், கட்டுப்பாடு ஒழுங்குமுறையை பேணுபவராகவும், நம்பத்தகுந்தவராகவும், மாணவர்களை வழிநடத்தக்கூடியவராகவும் காணப்படும் பொழுது எதிர்கால தலைவர்களாக வர இருக்கும் எமது மாணவச் செல்வங்களை வழிநடத்துவதில் அதிகளவுக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்க முடியும். ஆசிரியத்தொழில் அதி உயர்ந்த சிறந்த சேவை வழங்கும் நிலையில் காணப்படுவதனால் அதற்கு ஏற்றவாறு இசைந்து வாழ வேண்டும். ஒரு பாடசாலையின் முக்கிய நோக்கம் தரமான மாணவர்களை உருவாக்கி அவர்கள் சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஒழுங்கான நடத்தையை கொண்டவர்களாகவும் அறநெறி சார்ந்த விழுமியங்களையும் மரபு சார்ந்த ஒழுக்கவியல்களை (*Ethics*) பேணுபவர்களாகவும் வளர்த்து எடுப்பதாகும். இதற்கு முன்னோடிகளாக ஆசிரியர்கள் அமைய வேண்டும்.

ஒரு நாடு தனது வளர்ச்சிப் பாதையில் செல்லும் பொழுது உலகளாவிய ரீதியாக ஆசிரியர்களின் பங்களிப்பை மெச்சுவதுடன் அவர்களுக்கான கௌரவத்தையும் கொடுக்கின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இப்படியானதொரு நிலை ஏற்படுகின்றதா என்ற கேள்வியை தேவிக பாலிக வித்தியாலய முன்னாள் அதிபர் தனது பேட்டி ஒன்றில் குறிப்பிடுகின்றார். சிறந்த ஆசிரியை என்ற விருதை அவர் பல தடவைகள் பாடசாலையில் பெற்றிருக்கின்றார். அவருடைய கருத்தின்படி *"He who teaches the child and the whole personlity there of is the best teacher"* பிள்ளையொன்றின் முழு ஆளுமையையும் கருத்தில்க் கொண்டு கற்பிப்பவரே அதிசிறந்த ஆசிரியர்.

எமது நாட்டிற்கு இப்பொழுது தேவைப்படுவது முன்பு கூறியது போல தரமான, தூண்டக்கூடிய, நம்பிக்கையுடைய ஆசிரியர்களாகும். ஒரு ஆசிரியர் பிள்ளைகளுக்கு கல்வியை கற்பிப்பதற்கு முயலும் பொழுது அந்த பரிபூரண நிலை முழுமையாக அவர் உள்மனதிலிருந்து வெளிக்கொண்டு வரப்படல் வேண்டும். தரமற்ற ஆசிரியர்கள் நியமனம் பெறும் பட்சத்தில் அவர்களுக்கு அதிபர்கள் கல்வியூட்ட வேண்டிய நிலை உருவாகின்றது. உதாரணமாக, ஆங்கிலம் கற்பிப்பதற்கு வரும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் ஆங்கில அறிவு

குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர், சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் இதில் குடும்ப சூழல் காரணமாக அதிகளவு அறிவை பெற்றிருப்பதனால் ஒரு இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. எந்த ஒரு பாடமாக இருந்தாலும் நம்பிக்கையுடன் அதனை கற்பிக்க முடியாமல் இருக்கும் பொழுது மாணவர்கள் ஆசிரியரில் நம்பிக்கை இழப்பதுடன் பல்வேறு விதமாக விமர்சனங்கள் செய்யவும் முயல்வர். இத்தகைய சூழ்நிலை ஏற்படும் பொழுது பாடசாலை நிர்வாகத்தில் குறிப்பாக அதிபருக்கு பல பிரச்சினைகள் ஏற்படும். சிறப்பான பயனுறுதியுடைய பாடசாலையாக எடுத்துச் செல்வதற்கு முடியாத ஒரு நிலை ஏற்படும். ஆகவே ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கலில் அதிபர் முக்கிய கவனமெடுக்க வேண்டும். பல்வேறு பயிற்சித்திட்டங்களுக்கும் தகுதி அடிப்படையில் ஆசிரியர்களை பயிற்றுவித்து பாடவிதானங்கள் முழுவதனையும் பாடசாலை காலங்களில் முடிவுற கற்பித்தல் வேண்டும். குறிப்பாக நிர்வாகம் இத்தகைய செயற்பாடுகளில் முக்கிய கவனம் எடுத்தல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கு கற்பித்தலைத் தவிர மேலதிகமாக வேலைப்பளுக்கள் சுமத்தப்படுகின்றன. உதாரணமாக, பத்திரங்கள் நிரப்பல், படங்கள் வரைதல் போன்றன இதன் விளைவாக ஆசிரியர்கள் தமது பாடவிதானத்தில் கூடிய கவனம் செலுத்தமுடியாமல் காணப்படுகின்றனர். போக்குவரத்தும் இன்னொரு பிரச்சினையாக காணப்படுகின்றது. மேலும் உணவு விடயத்தில் அவர்கள் குறிப்பாக பெண்கள் கவனயீனம் கூடவாக இருப்பதனால் பல்வேறு வகையான வருத்தங்களுக்கு உட்படுகின்றனர். இலங்கையில் குறிப்பாக பாடவிதானங்களின் நேரசூசியில் தொடர்ச்சியாக வகுப்புகள் மாறி படிப்பிக்க வேண்டிய சூழ்நிலை தோன்றுகின்றது. ஐந்து நிமிடத்துக்கு உட்பட்ட நேரத்தில் தான் அவருடைய ஓய்வு காணப்படுகின்றது. இலங்கையில் கற்கும் சுற்றுச்சூழலும், கற்பித்தலும் மகிழ்வூட்டுவதாக இல்லை. அனுபவம் மிக்க ஆசிரியர்கள் புதிதாக ஆசிரியத்தொழிலில் இணைந்து வருபவர்களை நன்கு தூண்டுவதில்லை என கல்வியியலாளர்கள் தங்களுடைய ஆய்வுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இன்னொரு வகையான ஆய்வுக் கட்டுரையில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வகுப்பறைக் கற்பித்தல் மிகவும் அழுத்தத்தைக் கொடுக்கும் இடமாகும். ஒரு வகுப்பறையை விட்டு வெளியேறியதன் பின்பு பின்வரும் பயிற்சிகளை செய்வது நன்மை தரும்.

- ☆ வகுப்பறையால் வெளியே சென்று உமது ஆசிரியர் அறையிலுள்ள யன்னல் வழியாக வெளியே பார்க்கவும். ஒரு நிமிடத்துக்கு ஏதாவது ஒன்றை மிகவும் அவதானமாகப் பார்க்கவும். பின்பு அதனைப் பற்றி விபரமாக ஆராய்வதற்கு முயலவும்.
- ☆ எழுந்து நின்று நீட்டி விரிந்து, வளைந்து ஒரு சில உடற்பயிற்சியினைச் செய்யவும்.
- ☆ உமது கண்களை மூடிக்கொண்டு உமது அபிமான, விரும்பிய, விருப்பத்துக்குரிய, அன்புக்குரியதைக் கற்பனை பண்ணவும்.
- ☆ உமது கண்களை இறுக மூடிக்கொண்டு வேண்டுமென்றே உமது தலையிலிருந்து கால் நுனிவரை, தசை நார்களை ஒவ்வொன்றாக தளர்த்தி வரவும்.
- ☆ உமது வாழ்க்கையில் கிடைத்த அதிஉயர்ந்த அடைவுமட்டத்தை மீள்நிலைப்படுத்தி பரிசீலிக்கவும், அந்த நேரத்தில் கண்களை இறுக மூடிக்கொள்ளவும்.
- ☆ உமது பாத அணியை முற்றாக கழற்றவும். பின்பு ஒவ்வொரு விரலாக அசைத்து, அதன் பின்பு எல்லா விரல்களையும் ஒன்றாக அசைக்கவும்.

பாடசாலையில் ஆசிரியத்துவத்தின் பங்களிப்பு சிறப்பாக அமையுமானால் அதன் விளைவு மாணவர்களூடாக அவர்களுடைய குடும்பத்தை சென்றடையும். பிள்ளைகளே தங்கள் தாய் தந்தையருக்கு வேண்டிய புதிய கருத்துக்களை பரிமாற்றம் செய்து குடும்ப கல்வி தரத்தையும், அறிவையும் விருத்தி செய்ய முடியும்.

ஆசிரியர் இன்னொருவருடைய ஆளுமையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றார். பாடவிதானங்களை மட்டும் கற்பிப்பது மட்டுமல்லாது முழுமையான ஒரு மொத்த பண்பினை வளர்க்கும் ஒருவராக கருதப்படுகின்றார். இத்தகைய நிலையில் ஆசிரியத்துவம் காணப்படும் பொழுது பல வருடங்களாக அதிகளவு மூலவளங்கள் கல்விக்கு முதலீடு செய்யப்பட்ட பொழுதிலும் முழுமையாக வெற்றியீட்டியதாக தெரியவில்லை. ஏன் பணத்தை செலவு செய்கின்றோம் என்பதற்கு கூடிய விளக்கங்கள் தேவைப்படுகின்றன. எங்களின் கல்வி அமைப்பில் நீண்ட தூர நோக்கம் (*Vision*) காணப்படுவதில்லை. திட்டமிடப்படும் பொழுது பல்துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்றவர்கள் உள்ளடக்கப்பட்டு கருத்து பரிமாற்றங்கள் செய்யப்படல் வெண்டும். எமது நாடு கல்வியில் எவ்வாறு எங்கே போகப்போகின்றது என்பதனை பாடசாலை மட்டத்தில் நிர்வாகிகள் மட்டத்தில் தொழில் புரியும் காவலாளியிலிருந்து சகலருக்கும் தெரிந்திருத்தல் வேண்டும். எமது கல்வி அமைப்பின் தூரநோக்கு புதுமைகாண் பிரஜை ஒன்றை உருவாக்குதல் *(Create an innovative citizen)*.

தற்போதைய எமது சமுதாய அமைப்பின் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் சொந்த அபிவிருத்தி திறன் கொண்டவராகவும், புதுமை காண் தரத்தைக் கொண்டவராகவும் தன்னைத் தொடர்ந்து தக்கவைக்கக் கூடியவராகவும் காணப்படல் வேண்டும். மனிதநேயம், தரம், பண்புகள் குறிப்பாக சகிப்புத்தன்மை, ஏனையோரை மதிப்பது, அணியுடன் இணைந்து செயற்படுவது போன்றவை நபருடன் இணைந்து காணப்படல் வேண்டும். அறிவினை நன்கு ஊட்டி பதியச் செய்வதன் மூலம் பலரில் நானும் ஒருவன் என்ற உணர்வை அவரால் உணர்ந்து கொள்ளமுடியும். இதனூடாக நாம் எதிர்நோக்கும் பல பிரச்சனைகளை பல மட்டங்களில் புரிந்துணர்வு மூலம் வெற்றி கொள்ள முடியும். இத்தகைய அணுகுமுறைகள் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு ஊட்டப்படுவதில்லை. அதற்கு முன்பாக ஆசிரியர்களுக்கு பல பட்டறைகள் வசதியுடன் இத்தகைய அம்சங்கள் கருத்துக்கள் முதலில் பயிற்றப்படல் வேண்டும். அதனை தொடர்ந்து அவர்கள் மாணவர்களுக்கு இத்திறன்களை ஊட்டுவதன் மூலம் கல்வித்துறையின் புதிய நீண்ட தூரநோக்கை அறிந்து கொள்ளலாம்.

தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற முழுக்கல்வி அமைப்பும் பூரணத்துவமானது என்று கூறமுடியாது. அரசாங்கமும் கல்வி உயர் அதிகாரிகளும் இணைந்து கல்வித்துறைக்கு ஒரு தெளிவான தூரநோக்கை உருவாக்க வேண்டும். ஒரு சில ஆசிரியர்கள் நல்ல சேவையை வழங்கும் பொழுது அவர்களை மட்டும் மதிப்பீடு செய்து கௌரவிப்பதற்கு ஒரு நல்ல ஒழுங்கு முறை அவசியமாகும். ஆசிரியர்களுக்கு இன்று முக்கியமாக தேவைப்படுவது இதுவாகும். இதனால் அவர்கள் தூண்டப்பட்டு மேலும் சேவையில் அர்ப்பணிப்பு அதிகரிக்கும்.

அரசியல் தலையீடுகள் இருந்தாலும் அதனை ஒரு முக்கிய காரணியாக கொள்ள முடியாது. மாணவர்கள் தங்களுடைய போட்டி பரீட்சைகளில் பெருமளவுக்கு ஊகித்து பல வருடங்களாக வந்த வினாத்தாள்களை படித்து பரீட்சையில் சித்தி பெறுகிறார்கள். இதனால் தனியார் கல்வி கற்பிக்கும் நிலையங்கள் அதிகளவுக்கு செல்வாக்கு செலுத்தக்கூடியதாக அமைகின்றது. இதனைத் தான் எமது கல்வி உலகம் எதிர்பார்க்கின்றதா? என்ற கேள்வி முக்கியமானதாக உள்ளது. குறிப்பாகக் கணிதபாடத்தில் கேத்திரகணிதம் **(Geomatry)** என்ற பிரிவு அதிகளவுக்கு மாணவர்கள் மத்தியில் பிரபல்யமானதாக இருப்பதில்லை. ஆனால் மாணவர்கள் அதிஉயர்ந்த தரத்தை "A" பிரிவை பெற்றதும் பெற்றோர்கள் சந்தோசமடைகின்றார்கள். அதில் முக்கியமான சில பகுதிகளை மாணவர்கள் புறக்கணிக்கின்றார்கள் என்பதனை பெற்றோர் புரிந்து கொள்வதில்லை. இதற்கு பரிகாரம் என்ன?

ஆசிரியர்களின் நடிபங்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பகாலங்கள் ஆசிரியர்கள் தமது தொழிலை ஒரு முழுச்சேவையாக

கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று ஆசிரியசேவை ஒரு தொழிலாக கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் அவர்கள் ஒரு வருமானத்தை எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறு வரும் பொழுது அங்கு தொழில்சார் ஒழுக்கவியல்களை கொண்டிருக்க வேண்டும். வருமானத்தை மட்டும் எதிர்பார்த்து இருக்கும் தொழிலாக அமையும் பொழுது மாணவர்கள், பெற்றோர்கள் அதிகாரிகளிடம் பலவகையான முரண்பாட்டு விளைவுகளை எதிர்நோக்குகின்றது. முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் உதவி செய்வதனையே முக்கிய நோக்கமாக கொண்டிருந்தனர்.

பாடசாலை முடிந்ததும் இலவச வகுப்புக்களை மாணவர்களுக்கு நடாத்தி அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுத்தனர். மேலும் ஆசிரியர்கள் மென்மையானவர்களாகவும், நேரத்துக்கு வருபவர்களாகவும், மிகவும் எளிமையான உடையணிந்து தூய்மையான வர்களாக காணப்பட்டனர். மாணவர்களுக்கு ஒரு முன் உதாரணமாக செயற்பட்டார்கள். ஆனால் இன்று ஏழை, மருத்துவர், பொறியிலாளர் போன்றோரின் நிலைக்கு தமது தொழிலை ஆசிரியர்கள் மாற்றி இருப்பதனால் மாணவர்கள் தம்முடைய தேவைகள் முழுவதனையும் ஆசிரியர்கள் நிறைவேற்றமாட்டார்கள் என்ற எண்ணத்தில் இருக்கின்றார்கள். தமது வேலை நேரத்தை மிகவும் இறுக்கமாக கணித்து செயல்படுகின்றார்கள். தாமும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர் போன்ற ஒருவர் என தம்மை கணித்துக்கொள்கின்றார்கள் என்று பலரும் கருதுகின்றார்கள்.

ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வாண்மை விருத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை இப்பொழுது தோன்றியிருக்கின்றது. அவ்வாறு செய்யாவிடின் நாட்டின் அபிவிருத்தியில் வளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு குறைவாகவே காணப்படும். சுயமாக ஆசிரியர்களால் எதனையும் செய்யமுடியாது. ஆகையால் தீர்மானங்களை எடுக்கும் பொழுது உயர் அதிகாரிகள் இவற்றை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அதிகளவு எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருப்பதனால் அவர்களுக்கான வாண்மை அபிவிருத்தி செலவு அதிகமாகக் காணப்படும் என்ற ஒரு கருத்தும் நிலவி வருகின்றது. இருந்தாலும் அவர்களுக்கும் வெளிநாடுகளில் சென்று தங்கள் அறிவை வளர்க்க உதவுதல் வேண்டும். ஏனைய உயர் உத்தியோகத்தர்கள் போன்று சமநிலையில் அவர்களை பார்க்க வேண்டும். மறுபுறம் பெரும்பாலான ஆசிரியர்களை தங்கள் வாண்மை விருத்தியை அதிகரிப்பதில் அதிகளவுக்கு அக்கறையின்மையுடையவர்களாக காணப்படுகின்றனர்.

எமது சமூக அமைப்பில் ஆசிரியர்கள் ஒரு முக்கிய பிரிவாக காணப்படுகின்றனர். சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாக அவர்களுடைய கல்விச் செயற்பாட்டிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அவர்கள் கொள்வனவு செய்யும் பொருட்களும், அவர்களின் பிள்ளைகள் எதிர்நோக்கும் போட்டிகளும், ஏனையோருக்கு அமைந்தது போலவே காணப்படுகின்றது. பொருளாதார பிரச்சனைகளை எதிர்நோக்கும் அவர்களுக்கு தகுந்த வருமானம் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு கிடைக்கும் வருமானங்களும் இதரசேவைகளும் போதியதாக காணப்படுமிடத்து அவர்களால் வழங்கப்படும் வெளியீடுகளும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. கல்விக்கு நாம் மிகவும் முக்கிய இடம் கொடுக்க வேண்டும். அறிவு சார்ந்த சமூகத்திலிருந்து நாம் இப்பொழுது மெய்அறிவு சார்ந்த சமூகத்திற்கு மாறிக்கொண்டிருக்கின்றோம். இதற்கு கல்வி தான் முக்கிய இடத்தைப் பெறப்போகின்றது. எம்மிடம் நல்ல திறமையான இளம் சந்ததியினர் உள்ளனர். வருங்கால தலைவர்களாக வரவிருப்பவர்களை உருவாக்குவதில் ஆசிரியரின் வகிபாகம் முக்கியமானது. உலக திறமைகளுடன் ஒப்பிடும் பொழுது நாங்கள் எங்கிருக்கின்றோம் என்ற கேள்வியை உங்கள் சிந்தனைக்கு விடுகின்றேன்.

# பாடசாலைக் கலாசாரம்



**கலாநிதி. த. கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

***பாடசாலைக் கலாசாரமும் நிறுவனக் கவிவு நிலையும் : ஒரு முன்னோட்டம்.***

பாடசாலை என்பது ஒரு கட்டடம் அன்று; அதற்கும் மேலாக அது ஆசிரியர்களதும் மாணவர்களதும் கற்றற் செயற்பாட்டை செப்பமாய் உருவமைக்கும் ஒரு சமூகமும் கலாசாரமும் ஆகும். இந்த உண்மை பல சந்தர்ப்பங்களில் கவனத்திற் கொள்ளப்படாமையினாலேயே தேசிய ரீதியான கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பாடசாலைகளில் அடிப்படை மாற்றங்கள் எவற்றையும் ஏற்படுத்தாதிருக்கின்றன. பாடசாலை பொருத்தமான கலாசாரப்பண்பைக் கொண்டிருக்குமெனின், அங்கு உவப்பான கவிவு நிலையும் (Climate) காணப்படும். பாடசாலைக் கவிவு நிலை, பாடசாலைக் கலாசாரம் என்பன குறித்த அம்சங்களை நன்கு விளங்கிக்கொண்டு பாடசாலைத் தலைமைத்துவம் செயலாற்றும் போதே நிறுவன இலக்குகளைப் பாடசாலை எய்த முடியும்.

***பாடசாலைக் கவிவு நிலை.***

ஒரு பாடசாலைக் கட்டடத்தில் நிலவும் முழுச்சுற்றுச் சூழலின் இயல்புகளே பாடசாலையின் கவிவு நிலை என பொதுவாக வரைவிலக்கணம் கூறப்படும். ஒரு நிறுவனத்திலுள்ள முழுச்சுற்றுச் சூழலைச்சுட்டும் நிறுவனக் கவிவு நிலையானது நான்கு பரிமாணங்களைக் கொண்டது. அவையாவன :

உயிர் வாழ்க்கைச் சூழல் *(Ecology)*
சமூகச் சூழல் *(Milieu)*
சமூகத்தொகுதி *(Social system)*
கலாசாரம் *(Culture)*

***உயிர் வாழ்க்கைச் சூழல்*** என்பது நிறுவனத்திலுள்ள பௌதிகக் காரணிகளையும் சாதன வசதிகளையும் குறிப்பிடுவதாகும். உதாரணமாக, பாடசாலைக் கட்டடங்களின் விஸ்தீரணம், வடிவமைப்பு, வசதிகள், வயது, நிலைமைகள் போன்றவற்றை உயிர்வாழ்க்கைச் சூழல் உள்ளடக்கும். அத்தோடு, நிறுவனத்திலுள்ளோர் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தையும் உயிர்வாழ்க்கைச் சூழல் என்பது குறிப்பிடுகின்றது. நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற மேசைகள், கதிரைகள், கரும்பலகைகள் போன்றனவும் பாடசாலைத் தொழில்நுட்பத்திற்கான உதாரணங்களாகும்.

***சமூகச் சூழல்*** என்பது நிறுவனத்தின் சமூகப் பரிமாணம் ஆகும். ஒரு நிறுவனத்திலுள்ள மக்களோடு தொடர்புபடுகின்ற சகல விடயங்களும் சமூகச்சூழல் என்பதனுள் அடங்கும். உதாரணமாக, ஒரு நிறுவனத்திலுள்ளோர் எத்தனைபேர், அவர்கள் எவ்வாறானவர்கள் என்பன போன்ற வினாக்களுக்கு விடையாக அமையும் அம்சங்கள்யாவும் நிறுவனத்திலுள்ளோருடன் தொடர்புபடுபவை ஆகும். சாதியம், இனம், ஆசிரியர் சம்பளப்படிநிலை, மாணவர்களின் சமூகப்பொருளாதார மட்டம், ஆசிரியர்களின் கல்வி மட்டம், பாடசாலையோடு சம்பந்தப்பட்ட மூத்தோர்களதும் மாணவர்களதும் ஒழுக்கமும் கட்டுப்பாடும், ஊக்கம், தொழிற்திருப்தி மட்டம் என்பனவும் நிறுவனத்திலுள்ளோரின் மற்றும் பல இயல்புகளும் நிறுவனத்தின் சமூகச் சூழலைப் பிரதிபலிப்பவை ஆகும்.

சமூகத் தொகுதி என்பது நிறுவனத்தின் ஒழுங்கமைப்புச் சார்ந்ததும் நிர்வாகம் சார்ந்ததுமான கட்டமைப்பைக் குறிப்பிடுவதாகும். உதாரணமாக, பாடசாலையொன்று எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது, அங்கு தீர்மானங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன, இத்தீர்மானங்களை மேற்கொள்பவர்கள் யார், பாடசாலையிலுள்ளோரிடையே காணப்படும். தொடர்பாடற் கோலங்கள் யாவை, எவ்வாறான குழு அமைப்புகள் உள்ளன என்பன போன்ற பல்வேறு விடயங்களும் சமூகத்தொகுதி என்பதில் உள்ளடங்குவன. எனவே சமூகத்தொகுதி என்பதை ஒழுங்கமைப்பு எனலாம்.

கலாசாரம் என்பது சமூகக் குழுவொன்றின் இயங்குநிலையைக் குறிப்பதாகும். அக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைத் தொகுதிகள், விழுமியங்கள், நடைமுறைகள், நியமங்கள் என்பன இதில் அடங்கும். இச் சமூகக் குழுவானது, செயற்பாடுகள் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது குறித்த பொதுவான சில எடுகோள்களின் அடிப்படையிலேயே இயங்கும். சாத்தியமானவை எவை சாத்தியமல்லாதவை எவை என கலாசாரமே வரையறை செய்வதால், குறித்த கலாசாரமொன்றைக் கொண்ட மக்கள் ஒரேவிதமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கமுயல்வர்.

உயிர்வாழ்க்கைச்சூழல், சமூகச்சூழல், சமூகத்தொகுதி, கலாசாரம் ஆகிய நான்கு பரிமாணங்களும் ஒன்றோடொன்று இடைத்தொடர்புடையனவாய் இருப்பதோடு, நிறுவனக் கவிவு நிலையைத் தோற்றுவிப்பனவாயும் உள்ளன. பாடசாலைக் கவிவு நிலையை செப்பனிட்டு உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற முதன்மையான இச் சூழற்காரணிகளிடையே உள்ள தொடர்புகளைக் கீழேயுள்ள உரு காட்டுகின்றது.



### பாடசாலைக் கலாசாரம்.

கலாசாரம் என்பது ஒரு சமூகக்குழுவின் இயக்கத்தைக் குறிக்கும் என்ற வரைவிலக்கணம் பாடசாலைக் கலாசாரத்துக்கும் பொருந்தும். பெரிய சமுதாயத்துள் சமூக மயமாக்கற்செயன்முறை இடம்பெறுவது போலவே, பாடசாலையிலும் மாணவர்களும் புதிய ஆசிரியர்களும் பாடசாலைச் சூழமைவுக்குப் பொருத்தப்பாடடையச் செய்யப் படுகின்றனர். பாடசாலையின் பொதுவான நடைமுறைகளைப் பின்பற்றி நியமங்களையும் விழுமியங்களையும் பேணும் வகையில் பாடசாலைக் கலாசாரத்தை அவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

சில நிறுவனக் கலாசாரங்கள் மிகவும் வன்மையாகக் கட்டுப்பாடுகளை விதிப்பனவாக இருக்கும். இவை ஒரு தனிநோக்கத்தினாலும் பெருமளவுக்கு நியமமான நடைமுறைகளாலும் வழிநடத்தப்படுவனவாகவும் இருக்கும். ஆனால் பாடசாலைக் கலாசாரங்கள் தளர்வான பிணைப்புகளையுடைய தொகுதிகளாக விபரிக்கப்படும். பட்டும் படாததுமான தொடர்புகளை உடையவையும் அதிகம் விளங்கிக்கொள்ளப்பட முடியாதவையுமான தொகுதிகளே "தளர்வான பிணைப்புகளையுடைய தொகுதிகள்" எனப்படுகின்றன. பாடசாலைக் கலாசாரமும் ஒரு தளர்வான பிணைப்புடைய தொகுதியாக விபரிக்கப்படுவதற்கு ஆசிரியர்கள் தமது சகபாடிகளிலிருந்து ஓரளவேனும் தனிமைப்பட்டிருப்பதும் பகுதிக் காரணமாகின்றது. அத்தோடு, ஆசிரியர்கள் வெவ்வேறு அளவிலான பாடநிபுணத்துவத்தோடு கூடிய வாண்மையாளர்கள் என்பதும்கூட பாடசாலைக் கலாசாரத்தின் வேறுபட்ட தன்மைக்குக் காரணமாகும். எனவே ஆசிரியர்களின் நம்பிக்கைகளுக்கு முரணாக அமையக்கூடிய நிருவாக நடவடிக்கைகளைக் கட்டளையிடும் முறையிலோ அல்லது அதிகாரமுறையிலோ அதிகம் செயற்படுத்துவதோ அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவதோ கடினமானதாகும்.

பாடசாலைக் கலாசாரங்கள் தளர் பிணைப்புடைய தொகுதிகளாக விபரிக்கப் படுகின்றபோதிலும், எல்லாப் பாடசாலைகளினதும் கலாசாரம் இவ்வாறு இருப்பதாகக் கூறமுடியாது. சமுதாய எதிர்பார்ப்புகள், பாடசாலை அங்கத்தவர்களின் நம்பிக்கைகள், நிர்வாக நடைமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் பாடசாலைக்குப் பாடசாலை அவற்றின் கல்விசார் நடவடிக்கைகள் தனித்துவமிக்கவையாகவும் வெறுபட்டிருப்பதையும் நாம் காணலாம். துலக்கமாகத் தெரியக்கூடியதும் உயர் விழுமியங்களையும் நியமங்களையும் பேணுவதுமான கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலைத் தலைமைத்துவத்தின் வகிபாகம் அளப்பரியது. ஆசிரியர்கள் ஒருவரோடொருவர் பேதமுற்று, ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் நிலையிலிருந்து, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு பிணைப்புடையவர்களாய் கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலைக்கு மாற்றுவதும் தலைமைத்துவத்தின் பொறுப்பேயாகும்.

#### முகாமைத்துவ கலாசாரம்

ஒரு பாடசாலை தனது இலக்குகளை உரியவாறு எய்துவதற்கு அப்பாடசாலையின் கலாசார அம்சங்கள் நன்கு கட்டியெழுப்பப்பட்டிருக்கவேண்டியது அவசியமாகும். பாடசாலையுடன் தொடர்புடைய சகல பணியாளர்களினதும் பணிகள், கடமைகள், உரிமைகள், சேவைகள் என்பன நன்கு வரையறை செய்யப்படும் வகையிலேயே அப்பாடசாலையின் கலாசார அம்சங்களும் அமைவதனால், பாடசாலையின் கலாசார விருத்திக்கு அதனை நிர்வகிக்கின்ற முகாமைத்துவ முறையின் கலாசாரமும் முக்கியமானது. பொதுவாக ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவ கலாசாரம் உயர்வாகப் பேணப்படுவதற்கு அங்கு பின்வரும் கலாசார அம்சங்கள் காணப்படவெண்டியது அவசியமாகும்.

1. நிறுவனமானது உரியவாறு ஒழுங்கமைக்கப் பட்டிருத்தல்.

2. தலைமைத்துவமானது முதல் நிரை முகாமையாளர் என்ற நிலையில் முழுமையாக அதிகாரத்தை கொண்டிருப்பதுடன் நிறுவனத்தின் பருமனையொட்டி பொருத்தமான வகையிலே அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட்டிருத்தல்.

3. நிறுவனத்தில் அடங்கும் பணியாளர்கள் தம்மிடையே பொருத்தமான முறையிலே மேலிருந்து கீழ்நோக்கியும் கீழ்லிருந்து மேல்நோக்கியும் சமாந்தர நிலையிலும் தொடர்புகொள்ளக்கூடியதாக இருத்தல். அதாவது கருத்துக்களும் அனுபவங்களும் உரியவாறு பரிமாறப்படக்கூடியதாக இருத்தல்.

4. நிறுவனத்தில் அடங்கும் பணியாளர்கள் அனைவரும் தமது கடமைகளை சிறப்பாக ஆற்றும் வகையில் தம்மை அற்பணிக்கும் நிலையில் காணப்படல்.

5. நிறுவனத்தில் அடங்கும் ஆளணியினர் தத்தமக்குரிய துறையிலே தொழில்விருத்தி பெறக்கூடியவாறு வழிவகைசெய்யப் பட்டிருத்தல்.

இந்த அம்சங்கள் ஒரு நிறுவனத்திலே எவ்வளவுக்கு எவ்வளவு சிறப்பாகப் பேணப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அங்கு முகாமைத்துவ கலாசாரம் உயர்வாகப் பேணப்படும். இவ்வாறு முகாமைத்துவ கலாசாரப்பண்பு நிறுவனத்தில் விருத்தியுறும் போது அந்நிறுவனம் தனக்கேயுரித்தான விழுமியங் களையும் நியமங்களையும் பெற்றுக்கொள்ளும். இந்நியமங்களும் விழுமியங்களும் உரியவாறு உருவாகும் போது இந்நிறுவனம் பற்றிய எண்ணக்கரு சமூகத்தில் விருத்தியடைவதுடன் அதன் சமூகப் பயன்பாட்டுத்தன்மையும் அதிகரிக்கமுடியும். இவற்றின் அடிப்படையிலே நிறுவனத்தின் பொதுவான எதிர்பார்ப்புகளும் அந்நிறுவனத்தில் அடங்கும் பணியாளர் கூட்டத்தின் பொதுவான எதிர்பார்ப்புகளும் பணியாளர் ஒவ்வொருவரினதும் தனியாள் எதிர்பார்ப்புகளும் ஒன்றிணைய முடியும்.

ஒரு நிறுவனத்திற் காணப்படும் மனப்பான்மை அல்லது ஒற்றுமை உணர்வு, பணியாளரின் தொழில்விருப்பும் தொழிற்திருப்தியும், பணியாளாரின் தொழிவிருத்திக்கு உதவும் வழிவகைகள், நிறுவனம் பற்றிய சமூக மதிப்பீடு போன்றவை அந்நிறுவனத்தின் நியமங்கள் (Norms) ஆகவும் நிறுவனமானது முழுமையாக சமுதாய விருத்திக்குதவக்கூடியதாக இருத்தல். நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் நற்பண்புகள் ஆகியன அதன் விழுமியங்கள் *(Values)* ஆகவும் கொள்ளப்படும்.

இவ்வகையில் நிறுவனம் ஒவ்வொன்றும் சமுதாய, கலாசார பிரதிபலிப்புக் களங்களாக அமையும்போது அவை நாட்டின் கலாசார விருத்திக்கும் உதவமுடியும். அதே வேளை நிறுவனங்களை நிர்வகிக்கின்ற யாப்புகள் விதிமுறைகள், பிரமாணங்கள், பணிப்புகள், சுற்றுநிருபங்கள், மரபுரீதியான கட்டுப்பாட்டு முறைகள் போன்றனவும் நிறுவனத்தின் கட்டமைப்புக்கு உதவுவதுடன் அதன் கலாசார விருத்திக்கும் உதவுவனவாய்க் கொள்ளலாம்.

எனவே பாடசாலை நிறுவனமும் அதன் இலக்குகளை ஒட்டியதாகவும் பணியாளரின் திருப்திகளை ஒட்டியதாகவும் செயற்படும் போதே அதன் கலாசார பண்பும் பேணப்படுகின்றதெனக் கொள்ளமுடியும். பாடசாலை என்பது ஒரு "புதுமை காண் உயிர்ப்புத்தொகுதி" ஆகும். பாடசாலையின் தொழிற்பாடு செயலூக்கமுடன் இயக்க முள்ளதாக இருத்தலையும் பொருத்தமான சமூக உறவுகளை கொண்டிருத்தலையும் "உயிர்ப்பு" என்ற பதம் குறித்து நிற்கின்றது. இதேபோல "புதுமைகாணல்" என்பது ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோரது பிரச்சனைகளை யொட்டி ஏற்ற வழிமுறைகளையும் அணுகு முறைகளையும் கண்டறிதலை குறிக்கும். இவ்வாறாக, பாடசாலை என்பது ஒரு புதுமைகாண் உயிர்ப்பு தொகுதியாக இருத்தலால் பாடசாலையின் கலாசாரப் பண்புகள் புதுமைகாணலுக்கும் உயிர்ப்புநிலைக்கும் வழிசெய்வதாக அமையவேண்டும்.

1980களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், இலங்கையின் பெரும்பாலான பாடசாலைகளில் பொருத்தமான கலாசார பண்புகள் காணப்படவில்லை எனவும் இப்பாடசாலைகள் தமது இலக்குகள் பற்றியே அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தன. உயர்கலாசாரப் பண்புகள் பாடசாலைகளில் உருவாகாமைக்கு அங்கு முகாமைத்துவ கலாசாரமின்மையே முக்கிய காரணமாகவும் குறிப்பிடப்பட்டது. இதன் பேறாக அக்காலத்தில் வெளிவந்த கல்வி முகாமைத்துவ சீர்திருத்தங்கள் தொடர்பான அறிக்கைகள் பாடசாலைகளில் கலாசார விருத்தியை ஏற்படுத்தக்கூடிய முகாமைத்துவ அணுகு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தன.

***பாடசாலை கலாசாரத்தை செப்பனிடுவதற்கான பொறிமுறைகள்.***

ஒரு பாடசாலையில் பொதிந்துள்ள விழுமியங்களுடனும் நம்பிக்கைகளுடனும் பழக்கப்படுத்திக் கொள்வதனூடாகவும் பாடசாலை கலாசார பண்பை புதிய திசைகளில் வடிவமைப்பதனூடாகவும் கலாசார மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக பாடசாலை முன்னேற்றத்தை பாடசாலைத் தலைவர்கள் ஏற்படுத்தலாம். ஆனாலும் விளங்கிக்கொள்ளல், பொறுமைபேணல், மனிதத்தொடர்பு பேணும் திறன்கள், தொடர்பாடல் செய்யுமாற்றல் போன்றவற்றை வேண்டிநிற்கும். நீண்ட காலச் செயற்பாடு இதுவாகும். கலாசாரத்தை மாற்றுவதென்பது உள்ளம், உடல், ஆன்மா என்பவற்றின் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளலை உள்ளடக்குவதோடு பின்வரும் செயற்பாடுகளையும் உள்ளடக்கும்.

- பாடசாலையில் ஏற்கனவேயுள்ள கலாசாரத்தை அறிந்து கொள்ளல்.
- தொடர்பாடலுக்கான இணைப்புகளை நிறுவுதல்.
- ஆசிரியர் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.
- புதுப்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- தலைமைத்துவப்பண்பை அநுட்டானம் செய்தல்.
- விரும்பப்படும் நடத்தைகளை உருவாக்கி முன்னுதாரணமாக விளங்கல்.
- பொருத்தமான பணியாளர்களை பணிகளுக்கமர்த்தல்.

ஒரு பாடசாலையின் ஏற்கனவே நிலவும் கலாசாரத்தை அறிந்துகொள்ளல் என்பது அப்பாடசாலையின் நாயகர்களாகவும் நாயகியர்களாகவும் விளங்கியவர்கள் சார்பாகவும் பாடசாலைக்குப் பெருமைசேர்க்கும் அம்சங்கள் சார்பாகவும் பாடசாலையின் சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள்,கலாசார வலையமைப்புக்கள் என்பன சார்பாகவும் பாடசாலை கலாசாரத்தை ஆராய்ந்து அறிந்துகொள்ளலாகும். பாடசாலைக்காற்றிய கருமங்களாலும் பங்களிப்புகளாலும் சமூகத்தில் பாடசாலையின் பெறுமதியை எடுத்துகாட்டியதன் காரணமாக மதிப்பளிக்கப்படுவோரே பாடசாலையின் நாயகர்ளும் நாயகியர்களுமாவார். ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நடத்தைக்கான எல்லைகளை வகுக்கும் பாடசாலை வாழ்க்கையின் நடைமுறை ஒழுங்குகளே பாடசாலையின் சடங்குகளாகும். அதே வேளை பாடசாலையில் பெறுமதி அளிக்கப்படுபவற்றை பாடசாலை விழாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. பாடசாலையின் கலாசாரத்தை செப்பனிடுதலிலும் வியாக்கியானம் செய்தலிலும் ஆதரவழித்தலிலும் பல்வேறு தரப்பினரின் வகிபாகங்களை அறிந்துகொள்ளல் மூலமே கலாசார வலையமைப்பை விளங்கிக் கொள்ளலாம். பாடசாலை கலாசாரத்தையும் முக்கியஸ்தர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு, பாடசாலையின் செயற்கருமங்கள் செய்யப்படும் முறைகள் குறித்து அவை ஏன்

அவ்வாறு செய்யப்படுகின்றன எனவும் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளின் பின்னணியாக அமையும் அர்த்தங்கள் யாவையெனவும் வினாக்களையெழுப்பி விடை காணவேண்டும். இதற்காக பாடசாலைகுறித்த "கதைகளைச்" சொல்லக்கூடியவர்களுடன் பாடசாலை நிகழ்வுகளுக்கு விளக்கம் கூறி அகக்காட்சியை வழங்கக்கூடிய முதன்மையாளர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

அடுத்து பாடசாலையிலுள்ள முறை சார்ந்ததும் முறைசாராததுமான தொடர்பாடல் தொகுதியினூடாக நடைமுறையிலுள்ள கலாசாரத்தின் யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு, புதிய கலாசார மாற்றங்களை வடிவமைக்க முடியும். முறைசாராக் கலந்துரையாடல்களினூடாகவும் பின்னூட்டல் நேர்முகங்களினூடாகவும் அபிப்பிராயப் பெட்டிகளில் சேகரிக்கப்படும் கருத்துகளினூடாகவும் பாடசாலைக் கலாசாரத்தை நாடி பிடித்துப் பார்க்கமுடியும். நிறுவனத்தின் சகலமட்டங்களிலுள்ள மக்களும் பரந்த சமுதாயத்துடன் தொடர்பாடலுக்கான இணைப்புகளை வழங்கக்கூடியவர்களாக இருக்கலாம் என்பதை பாடசாலைத் தலைவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

பாடசாலைக் கலாசாரத்தை செப்பனிடுவதற்காக மேற்கொள்ளப்படும் மாற்றம் ஆசிரியர்களின் சமூக, உள நலங்களைப் பாதிக்காது பார்த்துக்கொள்ளவேண்டியதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். இவ்வகையில், ஆசிரியர் தேவைகளை அறிந்து, பாடசாலையின் சாதனைகளை ஆவணப்படுத்தி, அந்த ஆவணங்களில் அச்சாதனைகளுக்கான ஆசிரியர்களின் பங்களிப்புகளையும் குறித்துக்கொள்ளவேண்டும். சாதனையாளர்களாக ஆசிரியர்களை விளங்கச் செய்வதற்கு வேண்டிய வளங்களையும் ஊக்கல்களையும் அவர்களுக்கு வழங்கி, கல்விசார் நிபுணத்துவத்தை வளர்த்துக்கொள்வதற்கும் பாடசாலைத் தலைமைத்துவம் உதவவேண்டும்.

இன்று ஒரு பாடசாலையானது கற்றுக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயமாக உருவகிக்கப்படுகிறது. இவ்வாறு, கற்றுக்கொண்டிருக்கும் சமுதாயமாக பாடசாலை உருவாகுவதற்கு, பாடசாலையிலுள்ள ஒவ்வொருவரும் கற்றலில் நாட்டமுள்ளோராகவும் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்போராகவும் விளங்க வேண்டும். ஆசிரியர்களின் நலனும் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் மாணவர்களின் கற்றலிலும் நன்மை விளைவிக்கும். ஒவ்வொருவரும் தம்மைப் புதுப்பித்தலுக்கும் சிந்தனைத் தெறிப்புச் செய்தலுக்கும் வழிசெய்யக்கூடிய வகையில் வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களைப் பாடசாலைத் தலைமைத்துவம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். புதிய வகுப்புகளுக்குக் கற்பித்தல், புதிய நெறிகளில் கற்பித்தல், ஏனைய ஆசிரியர்களுக்குக் கற்பித்தல், பணியாளர் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல், தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெளியாரிடமிருந்து நிதிபெறல் போன்ற சவாலுக்குரிய கருமங்களில் ஆசிரியர்களை ஈடுபடுத்தும் போது, ஆசிரியர்கள் தம்மைப் புதுப்பித்தலுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

சுயமதிப்பீட்டுக்கும் புதுமைகாணலுக்கும் வழிகாணக்கூடிய ஓர் உயர்கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல் தலைமைத்துவத்தின் வகிபாகமாகும். பாடசாலை அதிபரே ஒரு முதன்மையான கற்போனாக விளங்கித்தானே வழிகாட்டக்கூடிய ஒரு கற்றுக்கொண்டிருக்கும் சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளலாம். பாடசாலையின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும் அதிபர் ஒருவர் தனது பாடசாலையின் நடைமுறை விவகாரங்களைப் பரிசீலித்து, அவ்விவகாரங்கள் குறித்து, ஆசிரியர் குழாமின் உதவியுடன், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். துணிகரமாகச் செயலில் இறங்குதல், பிறரின் கருத்துகளைச் செவிமடுத்தல், தவறுகள் ஏற்படலாம் என்பதை ஏற்றுக்கொள்ளல், ஒப்படைக்கப்பட்ட பணிகளை குறித்த பணியாளர்களே நிறைவேற்றுவர் என

பணியாளர்களிடம் நம்பிக்கை கொள்ளல், நகைச்சுவை உணர்வுடையவராயிருத்தல், ஏனையோரை வலுவூட்டி இயங்கச் செய்தல், தொடர்ச்சியான முன்னேற்றத்தில் நம்பிக்கைகொள்ளல் போன்ற பல்வேறு தலைமைத்துவப் பண்புகளையும் பாடசாலை அதிபர்கள் அநுட்டானம்செய்து கொள்வதனூடாக தனது பணியாளர்களிடமும் தலைமைத்துவப் பண்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

விரும்பப்படும் நடத்தைகளை உருவாக்கி முன்னுதாரணமாக அதிபர் ஒருவர் விளங்க வேண்டுமாயின், பாடசாலை குறித்த சிறந்த தூரநோக்கை அப்பாடசாலை கொண்டிருக்கச் செய்வதோடு, அத்தூரநோக்கின் வழியே பிறரையும் திசைப்படுத்துபவராகவும் விளங்க வேண்டும். ஒரு பாடசாலையின் தூரநோக்கு ஆசிரியர்கள் தமது சக்தியை மாணவர்களுடனும் பெற்றோருடனும் பகிரந்து கொள்ள வேண்டும் என்பதை உள்ளடக்குமாயின், அதிபரும் தனது சக்தியை ஆசிரியரிகளுடன் பகிர்ந்து கொள்ள முன்வரவேண்டும். பாடசாலையின் தூரநோக்கில் சகலரும் கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்பது உள்ளடக்கப் பட்டிருக்குமாயின், மாணவர்கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை முதியோர் கல்விக்கும் கொடுக்கவேண்டும்.

பாடசாலையின் குறித்த பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தும்போது பொருத்தமான பணிகளில் பொருத்தமான ஆசிரியர்களை அமர்த்துவதும் முக்கியமானது.

ஆசிரியர்களின் ஆற்றல்களையும் இயல்புகளையும் அறிந்துகொண்டு, அவர்களை குறித்த பணிகளில் ஈடுபடுத்தவேண்டும். அப்பணிகளில் அமர்த்தப்பட்டோர் பிறருடன் இணைந்து செயற்படக் கூடியவராகவும், ஆக்கத்திறனுடையவராகவும் தலைமை தாங்கி வழிநடத்தக் கூடியவராகவும் உள்ளனரா எனப் பரிசீலிப்பதும் கூட அதிபருக்கான ஒரு முக்கிய கடமைப் பொறுப்பாகும்.

தொகுத்துநோக்கும் போது, பாடசாலைக் கலாசாரமானது அப்பாடசாலையில் எவ்வகையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பதிலும் அவை எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது தெளிவாகின்றது. இவ்வகையில் பாடசாலைத் தலைவர்களாக விளங்குகின்ற அதிபர்கள் தமது பாடசாலைகளில் வியாபித்திருக்கின்ற கலாசாரப் பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களிடையேயான இணக்கக் குறைவு, ஆசிரியர்கள் தனிமைப்பட்டிருத்தல், ஒன்றாக வேலை செய்வோம் என்ற வகையில் சக ஆசிரியர்களைத் தமது கூட்டாளிகளாக ஏற்கப்பின்நிற்றல் ஆகிய பாடசாலை முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்கும் தடைகளையும் கவனத்திற்கொண்டு, பாடசாலைக் கலாசாரத்தைச் செப்பனிடும் பொறுப்பு பாடசாலைத் தலைவர்களாகிய தமது பொறுப்பு என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஏற்கெனவே உள்ள கலாசாரத்தை விளங்கிக்கொள்வதன் மூலமும் கலாசார இணைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசிரியர் தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலமும், பாடசாலையின் தூரநோக்கை, தம்மை முன்னுதாரணப்படுத்தி தெளிவுபடுத்து வதனூடாகவும் பாடசாலையின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நோக்கியதாகப் பாடசாலைக் கலாசாரத்தை அதிபர்கள் செப்பனிடலாம். இவ்வாறு செப்பனிடப்பட்ட உயர்வான பாடசாலைக் கலாசாரம் அப்பாடசாலையின் உயர் கல்வி நிலைக்கு வழிகோலும்.

## References.


*Edmonds, R.R (1982).Programmes for school improvement : An overview. Phi Detta Kappan, 64 (4), 4 – 11.*

*Erickson, F.(1987). Conceptions of school calture : An overview. Educational Administration Quarterly, 23 (4), 11 – 24.*

# பொதுத் தேவைகளுக்கான காணித் தேவைப்பாடும் கொள்வனவு முறைகளும்



**அ.க.நடராசா**
*சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,*
*வதிரி,*
*கரவெட்டி.*

பொருளாதார ரீதியில் காணி என்பது மூலதனத்தின் பிரதான அம்சம் ஆகும். விவசாயத்துறை கைத்தொழில்துறை என்பவற்றுக்கு காணி பிரதானமாகும். பல வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் கூடுதலான காணிகள் அரசுக்கு சொந்தமானதாகும். அரசு தனது வளர்ச்சித் திட்டங்களுக்கும் பொதுத் தேவைக்குமாக காணிகளை ஒதுக்கி வைத்துக் கொண்டே மக்களின் குடியிருப்புக்காகவும் விவசாயத்துக்குமாக காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. நமது நாட்டில் வன்னிப் பிரதேசத்திலும் காடுகள் அடர்ந்த மற்றைய மாகாணங்களிலும் இவ்வாறான நடைமுறைகளைக் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் நீண்டகாலமாகவே செறிந்து வாழ்கிறார்கள் அவர்கள் குடியிருப்பு விவசாயம் என்பவற்றுக்கு காணிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். டச்சுக்காரர் ஆட்சி செய்த காலத்தில் காணிச் சொந்தக்காரர் தங்களது காணிகளைக் கோவைப்படுத்தியதாகவும் பின்னர் ஆங்கிலேயரின் வருகையுடன் அவைகள் கோவைப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளவற்றை ஆரம்பத்தில் "தோம்பு" என அழைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தன. பின்னர் காணிச் சொந்தக்காரர் நொத்தாரிசு மூலம் உறுதி எழுதும் முறையும் அதைப் பதிவு செய்யும் நடவடிக்கையும் 1866 ம் ஆண்டு தொடக்கம் இருந்து வந்துள்ளது. இதன் பிரகாரம் காணி உறுதி எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டு உரியவர்கள் தமது உரித்தை நிலை நாட்டக் கூடியதாக உள்ளது.

ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் கிறீஸ்தவ கல்லூரிகளை நிறுவி கல்வியையும் தங்களது மதத்தையும் வளர்த்து வந்தார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்களும் இந்துமதப் பற்றாளர்களும் அக்காலத்தில் தங்களது காணிகளில் பல இந்துக் கல்லூரிகளைக் கட்டி யாழ்ப்பாணத்து மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டார்கள். அக்காலத்தில் காணிகளின் விலை மிகக் குறைவு. பல நிலச்சுவாந்தார்கள் இருந்தார்கள் அவர்கள் காணிகளை நல்ல இடங்களில் நன்கொடையாகக் கொடுத்திருந்தார்கள். அவ்விடங்களில் கல்லூரிகள் பொதுஸ்தாபனங்கள் கட்டப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அரச காணிகள் மிகவும் குறைந்த அளவேயுள்ளது. அதுவும் உவர்க் காணிகளே அதிகம். வல்லை வெளி, முள்ளி வெளி, கண்டல்காடு, மணல்காடு போன்றவற்றைக் கூறலாம். இக்காணிகள் பொதுத் தேவைகளுக்கு பயன்படா. தற்போது அரச தனியார் நிறுவனங்களுக்கு புதிய கட்டடங்களுக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது. அதற்கு காணிகள் தேவைப்படுகின்றன. யாழ்ப்பாண மக்களுக்கு சொந்தக் காணிகள் பெரிய அளவில் இல்லை. ஒரு சிலருக்கே கூடுதலான நிலப்பரப்பு உள்ளது. சிலருக்கு குடியிருப்புக்கோ விவசாயத்துக்கோ காணிகள் போதாது உள்ளது. தற்கால அரசியல் சூழ்நிலை காரணமாக மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதால் வெளிநாட்டிலிருந்து அவர்கள் அனுப்பும் பணத்தினால் பெறுமதி இங்கு

கூடுதலாக இருப்பதாலும் பணத்தை மக்கள் காணிகளில் முதலீடு செய்வதால் காணிகளின் விலை குறிப்பிட்ட இடங்களில் மிக வேகமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

தற்போது

1. புதிய தொழில் துறைகளுக்கான காணிகளின் தேவைப்பாடு அதிகரித்துக் காணப்படுகிறது.
2. ஏற்கனவே தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த அரச, தனியார் காரியாலயங்களுக்காக கட்டடங்கள் அமைப்பது
3. பழைய காரியாலயங்கள் கல்லூரியின் விரிவாக்கத்திற்கு தேவையான காணிகள்.

இந்த வகையில் ஏற்கனவே இயங்கி வந்த காரியாலயம், கல்லூரிகள் அவற்றின் விரிவாக்கத்திற்கு காணிகள் தேவைப்படுகின்ற போது அவைகள் அமைந்துள்ள இடத்திற்கருகே தான் காணிகள் தேவைப்படுகின்றன. அருகில் உள்ள காணிச் சொந்தக்காரர்கள் தாமாக முன் வந்து நன்கொடை யாகவோ அல்லது பணத்தைப் பெற்று அறுதியாகவோ கொடுக்க வேண்டும் இல்லையேல் பொதுத் தேவைக்காக காணியை அரசு சுவீகரிக்க வேண்டும்.

அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டிடம் கட்டித்தரலாம் காணியைத் தாருங்கள் என கேட்கிறார்கள் காணிக்கு பணத்தைக் கொடுக்க பின்நிற்கிறார்கள். இந்த வகையில் சில இடங்களில் மக்கள் காசைத் சேர்த்து காணிகளை வாங்கி பொதுத் தேவைக்காகவோ கல்லூரிகளுக்கோ, அரச காரியாலயங்களுக்கோ கொடுத்துள்ளார்கள். கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள காணிகளை அறுதியாக கொடுக்கத் தவறும் பட்சத்தில் பொதுத் தேவை கருதி அரசாங்கம் உரிய காணியை கையகப்படுத்த முடியும்.

காணிச் சுவீகரித்தல் சட்டம் பிரிவு 44 அத்தியாயம் 460 ப்படி திருத்தப்பட்ட 28ம் இலக்க 1964ம் படி உரிய படிமுறைப்படி பிரதேச செயலரால் முன்மொழியப்பட்டு அரச அதிபரின் சிபார்சுக்கமைவாக குறித்த சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக காணி சுவீகரிக்கப்படும் ஏற்கனவே 1957 - 1958ம் ஆண்டு காலப்பகுதியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக வீட்டுடன் காணி சுவீகரிக்கப்பட்டது. தற்போது இராச கிராமக் குடியிருப்பு, துன்னாலை குடியிருப்பு, பொலிகண்டி மீனவர் குடியிருப்பு போன்ற தேவைகளுக்காக தனியார் காணிகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. அரசாங்க மதிப்பீட்டா ளரின் மதிப்பின் பிரகாரம் அதற்கான இழப்பீட்டுத் தொகையை உரிய சொந்தக்காரருக்கு அரசு வழங்கும். ஒரு காணிக்கு பலர் உரிமை கோருமிடத்து உரிய பணத்தை அரசு நீதிமன்றத்தில் வைப்பிலிடும் உரியவர்கள் தமது உரித்தை நீதிமன்றில் நிரூபித்து குறித்த பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள். ஏற்கனவே இக்கல்லூரிக்காக சுவீகரிக்கப்பட்ட காணியில் பல காணிச் சொந்தக்காரர்கள் இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றில் இருந்து இன்றும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே காணியின் தேவைப்பாடு கூடிக் கொண்டு வருவதாலும் குறிப்பிட்ட இடத்திலே தான் பொதுத் தேவைகளுக்கு காணி தேவைப்படுவதால் அவ்விடங்களில் காணிகளின் விலை உச்சக் கட்டத்தில் இருப்பதாலும் உரிய தேவைகளுக்கு காணிகளைப் பெற முடியாதுள்ளது. மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு பொதுத் தேவைக்கு தேவைப்படின் உரிய இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டு காணிகளைக் கையளிக்கலாம். ஏதிர்காலச் சந்ததியினருக்கு அது அனுகூலமாக இருக்கும் அவர்கள் காணிகளை கையளித்தவர்களை எக்காலத்திலும் நினைவு கூருவார்கள்.

# ஆசிரியர்களுக்கான சுய முகாமைத்துவம் – முன்னேற்றத்துக்கான வழிமுறை



**மா.சின்னத்தம்பி,**
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியற்துறை
யாழ் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

பாடசாலைகள் சமூகத்தின் நம்பிக்கைக் குரியனவாக திகழ வேண்டும், சமூக முன்னேற்றங்களில் பாடசாலை இடம்பெற வேண்டும், சமூக மற்றும் குடியியல் நிறுவனங்கள் தம் செயற்பாடுகளில் பாடசாலைகளுக்கு உரிய இடத்தையும் முன்னுரிமையையும் வழங்க வேண்டும் .குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமது பிள்ளைகளின் கல்வி,ஒழுக்கம், நடத்தை, ஆளுமை தொடர்பாக பாடசாலைகள் மீது அதிக எதிர்பார்க்கைகளைக் கொண்டிருக்க வேண்டும், சமூகமட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களில் பாடசாலைகள் இணைக்கப்பட வேண்டும் என்பதில் மாகாண அல்லது மாவட்ட திட்டமிடலாளர்கள் ஊக்கங்காட்டுதற் குரியதாக தமது வல்லாண்மையை விருத்தி செய்திருப்பதாக நம்ப வேண்டும், சமூக கலாசார வைபவங்களில் பாடசாலைகளுக்கு உயரிய மதிப்பு வழங்கப்பட வேண்டும், தொழிற்றுறையினர் தமது மனித வள எதிர் பார்க்கைகள் தொடர்பாக கலந்தாலோசனை செய்வதற்குரிய தராதரத்தையும் சமூக நற்புகழை (Image) யும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய பல்வகை அளவீடுகள் ஒரு பாடசாலையின் மேன்மையையும் வெற்றியையும் வெளிப்படுத்துகின்றன. இந்த வெற்றியை உருவாக்குவதில் மையவிசையாளர்கள் ஆசிரியர்கள்தான் என்பதை உணர்த்தல் அவசியம். பாடசாலை வளங்கள், கட்டமைப்பு, நிர்வாகம், முகாமைத்துவம் போன்ற எல்லாவற்றினதும் விளைதிறனை உறுதிப்படுத்த ஆசிரியர்கள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் இடையறாது செயற்பட வேண்டும், பாடசாலையென்ற செயலமைப்பு( System) ஒன்றின் துணைச் செயலமைப்பு (Sub system) ஆசிரியர்கள், ஆசிரிய அணி (Team of Teachers) யினர் அதிகூடிய பயன் விளைவை எல்லா நிலைகளிலும் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு தனிப்பட்ட ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் சுயமுகாமைத்தவம் அல்லது சுயமேலாண்மை பற்றிய எண்ணம், விளக்கம், செயற்பாங்கு விருத்தி செய்யப்படுவது அவசியம்.

## சுயமுகாமைக்கான தேவை

## (Need for Self -management) .

ஆசிரியர் தன்னைத்தானே எவ்வாறு வழிப்படுத்திக் கொள்கிறார் என்பது விஷேடமான தேர்ச்சியாகவும் திறனாகவும், ஆளுமை அம்சமாகவும் வெளிப்படுகின்றது.

தனிமனிதனாக கல்விகற்கும் ஒரு இளைஞன் ஆசிரியத் தொழிலை ஏற்றவுடன் தொழில் மயப்பட்ட மனிதனாகிவிடுகிறான். தொழில் செய்யும் நிறுவனமான பாடசாலையின் குறிக்கோள்களும் எதிர்பார்க்கைகளும் தொழிற்பாடுகளும் ஆசிரியராகிவிட்ட தனி மனிதனின் ஆற்றல்களை (ability) மாற்றிஅமைக்கின்றன. பலர் தமது ஆற்றல்களை

முழுமையாகப் பயன்படுத்துகின்றனர்: வெற்றியடைகின்றனர்.வேறு சிலர் ஆற்றல்களில் ஒரு குறிப்பிட்ட அளவை மாத்திரம் (தமது ஆற்றல் மட்டத்தை விட குறைவாக) தொழில் சார்ந்து பயன்படுத்துகின்றனர்.இத்தகைய பல்வகை வேறுபாடுகளை ஆசிரியர்களிடையே நிர்ணயிக்கும் முக்கிய அம்சம் அவர்களது தனிமனித ரீதியான ஆற்றலை முகாமை செய்யும் மட்டங்களிலான வேறுபாடுகளேயாகும்.

1.நேர் விளைவு:

ஒழுங்கான சுயமுகாமைத்துவத் தேர்ச்சிகளை நன்கு வளர்த்துக் கொள்பவர்களிடம் பின்வரும் நன்மைகள் வந்து சேரும்.

- ⇨ உடல் பலவீனங்கள் அகன்று ஆரோக்கியமானவர்களாக தென்படுவர்.
- ⇨ உளரீதியில் தன்னம்பிக்கையும் தெளிவும் கொண்டு நிதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவர்.
- ⇨ சகபாடிகள் மற்றும் மேலாளர்கள் பார்வையில் மதிக்கப்படும் நபர்களாக அங்கீகரிக்கப்படுவர்.
- ⇨ மாணவர்கள், சிற்றூழியர், பெற்றோர் ஆகியோர் இவரது அறிவுறுத்தல்கள், கட்டளைகள்,

ஆலோசனைகள் என்பவற்றை உண்மையாகவே செவிமடுத்து ஏற்றுக்கொள்வர். இதனால் பிறரை முகாமை செய்தல் எளிதாகி விடுகின்றது.

2. எதிர் விளைவு:

நடைமுறை வாழ்வில் பல ஆசிரியர்கள் சுயமுகாமைத்துவம் தொடர்பில் அதிக சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர் கொள்கின்றனர். தனிப்பட்ட முறையில் இடைவிடாமல் தொடர்ந்தும் வரும் தேவைகளினால் துரத்தப்படுகின்றனர், முன்னுரிமைகளை ஒழுங்குபடுத்த முடியாது திண்டாடுகின்றனர், மேலதிக தகவல்கள் செய்திகள் மற்றும் அறிவுறுத்தல்களால் துன்பப்படுகின்றனர், தொழில்குடும்பம் தொடர்பான மட்டுப்பாடற்ற எதிர்பார்க்கைகளினால் பரபரப்புக்குட்பட்டு சமநிலை குலைந்து காணப்படுகின்றனர்.

இதனால் தன்னைப் பற்றி உள்நோக்கிச் சிந்திக்க முடிவதில்லை, உள்ளே புதைந்திருக்கும் விசேட ஆற்றல்களை துல்லியமாக இனங்கான முடிவதில்லை .இதனால் இனம்புரியாத அகநிலைகலந்த (தனக்குள்ளேயே) துன்ப உணர்வினால் அழுத்தப்படுகின்றனர். இந் நிலையை தொடரந்து இருக்க அனுமதிக்க முடியாது. தொடர்ந்து செல்லும் இத்தகைய துன்பியல் எதிர்நிலை தனிமனிதன் என்ற ரீதியில் தோல்வியையும் விரத்தியையும் உருவாக்கிவிடும். பாடசாலை மட்டத்தில் விரும்பப்படாத அல்லது முதன்மையானவர்களாக கருதப்படாத மனிதர்களில் ஒருவராக கணிக்கப்படும் நிலை உருவாகிவிடும் இவர் செயற்படும் சூழல் கூட எரிச்சலூட்டுவதாகிவிடும்.

இதை எந்தவொரு ஆசிரியனும் அனுமதிக்கக் கூடாது என்பது முக்கியமானது.

இதற்குமாறாக ஒவ்வொரு ஆசிரியரும் தம்மைத்தாமே ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும் தன்மீது தானே கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தன்னைத்தானே இரட்டை வேடத்திற்குட்படுத்தி வழிகாட்ட வேண்டும் அதாவது ஆசிரியன் தனக்குத்தானே மேலாளர்,அதேபோல் மேலாளருக்குக் கட்டுப்படும் பணியாளர், இந்த இருவருமே (கற்பிதமான மனிதர்கள்) கவனமாகவும் உண்மை ஈடுபாட்டுடனும் பணியாற்ற உடன்படுதலும் அதன்படி ஒழுகுதலும வேண்டும்.

**சுயமுகாமை-எண்ணக்கரு**

***(Self -Management Concept)***

பொதுவாக இன்று எல்லா ஆசிரியர்களும் எல்லா நாட்களிலும் பரபரப்பாகவே பணியாற்றுகின்றனர்.சுய தேவைகள், பாடசாலைகளில் ஆற்ற வேண்டிய பணிகள், குடும்ப அங்கத்தவர்களுக்காக (சகோதரர்,பிள்ளைகள், பெற்றோர், மனைவி, கணவன்) நாளாந்தம் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு மிகு கடமைகள்,கற்பிக்கும் பாடசாலையினது ஆனால் நேரடியாக தன் தொழில் சாராததுமான பணிகள், சமூக நிறுவனம் சார் கடமைகள் போன்ற பலவற்றினாலும் தினமும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் இத்தகைய செயல்கள் பலவற்றிலும் முழுமையான விளைதிறன் காணப்படுவதில்லை என்பதை புறாச் (Bouch), கொஷல் (Ghoshal) போன்ற ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். திட்ட ஒழுங்கு முறையற்ற பரபரப்பு மிகுந்த பல்வகைச் செயல்களில் விளைதிறன் காணப்படுவதில்லை என்பது அனுபவ முடிவாகும். தெளிவான நோக்கம் கொண்டவர்கள் (Purposeful-action-takers) மாத்திரமே தமது சத்தியையும் வளங்களையும் உரிய தேவைகளுக்கு மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அதிகளவு வேலைகளில் பரபரப்பாக ஈடுபடுபவர்கள் சுயமுகாமைத்திறன் கொண்டவர்களாவதில்லை; பதிலாக நோக்கம் செறிந்த செயல் வல்லாளர்களாகச் செயற்படுபவர்கள் மட்டுமே அதிகம் சாதிக்க முடிகிறது. அவர்கள் சுயமுகாமை கொண்டவர்களாகின்றனர். இந்த நிலைமை தொடர்பாக பின்வரும் அம்சங்கள் கவனத்திற்குரியன.

♣ பரபரப்புடன் காணப்படுதல் விளைதிறன் கொண்டதாக அமையமாட்டாது எவரும் வழமையான நாளாந்த வேலைகளுள் மூழ்கி விடலாகாது. வளமையான வேலைகள் தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியரும் தனது ஆற்றல் தனக்குரிய நேரஅளவு என்பனவற்றுககு அமைய ஒழுங்குமுறையில் திட்டமிடல் (Systematic Planning) வேண்டும். புத்தாக்க முனைப்புடன் சிந்திக்க (Creative Thinking) வேண்டும்.

♣ பாடசாலை என்ற நிறுவனத்தின் சூழ்நிலைகளை தமது ஒழுங்கின்மைகளுக்காக குற்றம் சாட்டித் திருப்தி காணாதீர்கள். அநாவசியமான விடயங்களில் உங்கள் நேரத்தை விரயமாக்காதீர்கள்; ஒவ்வொரு வெற்றியும் தற்செயலாக நிகழ்வதில்லை. திட்டமிட்ட உயர் கவனங்கள் தான் வெற்றிகரமான செயலாற்றல்களை உருவாக்குகின்றன.

♣ உங்கள் குறிக்கோளிற்கு அமைவானவற்றை துல்லியமாக இனங்கண்டு கொள்ளுங்கள். உங்கள் சகபாடி உங்கள் பகுதித் தலைவர் நிறுவனத்தின் தலைவர் எவரும் உங்களது தடைக் காரணிகள் ஆகிவிடாது எச்சரிக்கையுடன் எப்போதும் இருங்கள்குறிக்கோளுக்கு அமைவாக உங்களை நீங்கள் வழிப்படுத்திக் கொண்டேயிருங்கள்

நேர் முறையில் திட்டமிடுதல்

♣ சுய முகாமைத்திறன்கள் என்பது தனிப்பட்டவர்கள் கவனமாகத்திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் விருத்தி செய்யக் கூடியனவாகும். இதற்கு பின்வரும் படிமுறைச் செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

♣ உங்களைப்பற்றி நீங்களே சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள்; உங்களுக்கு உரித்தான தனிநபர் உபாயத்திட்டம் ( Personal Strategic plan ) ஒன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள் ; மற்றவர்களிலிருந்து வேறுபடுத்தக் கூடியதான மூன்று அல்லது நான்கு முன்னுரிமைகளைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்; உங்கள் கற்பித்தல், உங்கள்

உயர்கல்வி உங்கள் தொழில் உயற்சிக்கான புதிய கற்கைகள், உங்கள் நன்மதிப்பை உயர்த்தும் புதிய செயல்கள் போன்றவற்றை முன்னுரிமைகளாகத் தீர்மானித்தல் விரும்பத்தக்கது. இவற்றை பாடசாலைகளின் தவணை அல்லது மாத அடிப்படையில் தீர்மானிப்பது நல்லது அது சாத்தியமானதுமாகும்.

♣ உள்ள நேரம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு வாரத்திற்குரிய நேரப் பயன்பாட்டை பதிவு செய்து கொள்ளுங்கள். இந்தப்பதிவு உங்கள் பார்வையில் மிகவும் நேர்மையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒரு நாளில் ஒவ்வொரு மணித்தியாலமும் எவ்வாறு செலவிடப்பட்ட தென்பதை நன்கு பரிசீலனை – மதிப்பீடு செய்தல் வேண்டும். இதில்

- ★ கற்பித்தல், கூட்டங்கள், தொடர்பாடல், சமூகக் கடமைகள் போன்றவற்றில் எவற்றில் அதிக மணித்தியாலங்கள் செலவிடப்பட்டுள்ளதென கணித்தல் வேண்டும்.
- ★ உங்கள் முன்னுரிமைகளின் அடிப்படையில் ஒவ்வொன்றுக்கும் என்ன சதவீதமான நேரம் செலவிடப்பட்டுள்ளது என்பதைக் கணித்தல் அவசியம்.
- ★ உங்கள் நேரம் செலவிடும் செயல்களிடையே ஒத்த தன்மை, தொடர்ச்சி என்பன காணப்படுகின்றனவா என மதிப்பிடலின்றியமையாதது.
- ★ எந்த விடயங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட்டு வருகின்றன என கண்டறிதல் அவசியம்.
- ★ எந்த விடயங்களை மாற்றிக் கொள்ளலாம் , எந்த விடயங்களை மேம்படுத்திக் கொள்ளலாம் என தீர்மானித்தல் வேண்டும்.

♣ உங்கள் அனுபவத்தில் உங்கள் பெறுமதி வாய்ந்த நேரம் பல விடயங்களினால் அல்லது பல நபர்களினால் விரயமாக்கப்படுவதுண்டு. உங்கள் குறிக்கோள் தொடர்பாக தவிர்க்க முடியாதவை எவை என்பதையும் ஏன் சிலவற்றை சகித்துக் கொள்கிறீர்கள் என்பதையும் அவற்றுக்கு மாற்று வழிமுறைகள் யாவை என்பது பற்றியும் தீர்மானிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பழகிக் கொள்ளுங்கள் .

உங்கள் நேரத்தை வீணடிக்கும் உங்கள் பழக்கங்கள், செயல்கள் நபர்கள் பற்றிய பட்டியல் ஒன்றை நிதானமாக தயாரித்துக் கொள்ளுங்கள். அடிக்கடி அதனை ஆழமாக அவதானித்து வாருங்கள். உங்களை மாற்றுவதற்கான தூண்டுதல்களை அது உங்களில் வளர்த்து விடும். 1997ல் வொரன் ( Warren ) மற்றும் ரொல் ( Toll ) இது பற்றி குறிப்பிட்டுள்ளனர். அது கீழே தரப்படுகின்றது.

எமது நேரத்தை அரித்தெடுக்கும் நச்சுப் பூச்சிகள் 20

1. அடிக்கடி தடைப்படுத்தும் கைத்தொலை பேசிகள்.
2. தீர்க்கமான முடிவுகள் மேற்க்கொள்ளத் தெரியாமை
3. அவசியமில்லாத ஆனால் நீண்ட நேரம் எடுக்கும் கூட்டங்கள்.
4. முன்னுரிமைகளை அடிக்கடி இடமாற்றும் பழக்கம்
5. குறிக்கோள், முன்னுரிமையில்லாமை நாளாந்த வேலைத்திட்டமிடல் இல்லாமை.
6. தனிப்பட்ட நபர்களிலான ஒழுங்கீனங்கள்
7. ஒழுங்கின்றி காணப்படும் உங்கள் மேசையும் உங்கள் அறையும்.
8. சரியாக வேலையை பிறருக்கு பகிர்ந்து கொடுக்கத் தெரியாது இருத்தல்.

9. சீரற்ற முறையில் - குப்பைத் தொட்டிபோல் - பேணும் ஆவணங்கள் ( அறிக்கைகள், கடிதங்கள், கொடுப்பனவுச் சிட்டைகள் )

10. பொருத்தமான உபகரணம் அல்லது பொருட்கள் வைத்திராமை.

11. பலரை எப்போ தும் பின்தொடர்ந்து செல்லுதல் ( பயனற்ற நபர்களுடன் சேர்ந்து திரிதல் )

12. இயலாதவற்றுக்கும் சம்மதம் தெரிவிக்கும் பலவீனமான பழக்கம். " இல்லை என்று சொல்லத் தெரியாமை"

13. ஒரு வேலையை நிறைவு செய்யாமலே பிறிதொரு வேலைக்கு அல்லது பல வேலைகளுக்கு தாவுதல். சுயஅலைக்கழிவு முறை இதுவாகும்.

14. திருத்தமற்ற தொடர்பாடல் மற்றும் நம்பகமற்ற தகவல்களினடிப்படையில் செயலாற்றுதல் இதில் முயற்சியும் வளமும் விரயமாகிவிடும்

15. அளவுக்கதிகமாக - பொருத்தமற்ற வகையில் - சமுக விழாக்கள் கூட்டங்களில் பங்கேற்றேல்

16. பொறுப்பு மற்றும் அதிகாரம் தொடர்பாக தெளிவேதும் இன்றி பிறருக்கு பகிர்ந்து வழங்குதல்.

17. உங்கள் வேலை - தொழில் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றி நன்கு அறிந்திராமையும் அதற்கு அமைவாக உங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளாமையும்.

18. மற்றவர்களின் செயல்கள் பற்றி அளவுக் கதிகமாகக் கண்காணித்தலும், குறை காணுதலும் , கவனம் செலுத்துதலும்.

19. திட்டமிடாமலே ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் கால் பதித்தல் (லயன்ஸ் கிளப் போன்ற கனவான் அமைப்புக்களின் தேவை தெரியாமல் இணைதல்).

20. தனிப்பட்ட முறையில் பலவீனம் நிறைந்த சுயஒழுக்கமும் ,சுய ஒழுங்கும் காணப்படுதல். உணவு உண்ணும் நேரம், காசு வரவு செலவுத் திட்டம், பதிலெழுதும் பழக்கம், பயணம் செய்யும் ஏற்பாடு போன்றவற்றில் எவ்வித ஒழுங்கான நடைமுறையும் இல்லாமை.

ஒவ்வொரு ஆசிரியரும் இத்தகைய 20 வகையான உங்கள் எதிரிகளை இனங்காணுங்கள். சில மணித்தியாலங்கள் செலவிட்டு எவருடைய தலையீடுமின்றி இவற்றைப் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் படிக்கும் மேசையின் முன் இதனை ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். தினமும் ஒரு தடவையேனும் இதனை வாசியுங்கள். உங்களிற்க்குள்ளேயே ஒரு உழுதல் ( Self-Tilling) நிச்சயம் நிகழும். காலக்கிரமத்தில் உங்களை அது புரட்டிப் போட்டுவிடும். பலவீனங்கள் கீழே அமிழ்ந்து விடும். பலமும், திறமையும், மகிழ்வும் நிறைவும் மேற்க்கிளம்பி வருவதை உணர்வீர்கள், முயன்று பாருங்கள்.

### தயார் செய்தல்

நீங்கள் உங்களை இதற்கு ஏற்றவாறு தயார் செய்து கொள்ளவேண்டும். என்ன செய்யலாம்?

♣ வாய்ப்பிருந்தால் நேரமுகாமைத்துவம் பற்றிய கற்கை நெறியொன்றை பயிலுங்கள். (தொலைக்கல்வி முறையிலும் தற்போது பயிலமுடியும்).

♣ மூன்று முன்னுரிமைகளை தெரிவு செய்து கொள்ளுங்கள். அவை

1. உங்கள் குறிக்கோள்களில் தெளிவு பெறுங்கள் - தீர்க்கமான செயல் சார் குறிக்கோள்களைத் தீர்மானியுங்கள்.

2. எதிர்காலத்திற்கான திட்டமொன்றை தயாரியுங்கள். எதிர்வரும் மூன்று மாதம், ஆறு மாதம், ஒன்பது மாதம், பன்னிரண்டு மாதம் என்ற கால இடைவெளிக்குரிய

முதன்மையான செயலாற்றங்களை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

3. உங்களுக்கு சொந்தமான மாதங்கள் , நாட்கள் என்பவற்றை மணித்தியாலங்களாக மாற்றப் பழகுங்கள்.

*சுய பாதுகாப்பு (Self security)*

♣ உங்கள் உடல் நலன் முக்கியமானது; உங்கள் உணர்வுகளில் சமநிலை அவசியமானது; உங்கள் உளநலன் இன்றியமையாதது; உங்கள் விழுமியங்கள் பேணப்பட வேண்டியன; உங்கள் நன்மதிப்பு உறுதிப் படுத்தப்படல் வேண்டும்; தொடர்ந்து இருக்கும் மகிழ்ச்சி அவசியமானது. இவற்றை ஒவ்வொரு ஆசிரியனும் உறுதிப்படுத்தும் போது சுயபாதுகாப்புக் கிடைத்து விடுகிறது. இதற்காகவே சுயமுகாமைத்திறன்களை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

♣ முகஸ்துதிக்காக உங்களுக்கு முரண்பாடான சூழலுக்குள் உங்களைத் திணித்துக் கொள்ளாதீர்கள். புதிய சூழலுள் புதிய நிறுவனத்தினுள், புதிய பதவி நிலையினுள் நுழைவதானால அவை பற்றி நன்கு விசாரித்து அறியுங்கள். அவற்றை உங்கள் இயல்பு வசதி ஆற்றல் என்பவற்றுடன் பொருத்திப் பாருங்கள். உங்களில் மாற்றங்கள், நம்பிக்கைகள் ஏற்பட்ட நிலையில் அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த தாமதம் பல சமயங்களில் உங்களைப் பாதுகாக்கும்; சூழ்நிலைகளும் மாறலாம்; அவ்வாறாயின் அவை மாறிய பின் பொருந்திக் கொள்ளுங்கள்.

♣ உங்கள் இலட்சியம், உங்கள் மதிப்பு, உங்களைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்பவற்றிடையே நடைமுறைச் சாத்தியமான வழிகளில் சமரசம் உருவாக்கிக் கொள்ளுங்கள்.

இந்த மூன்று அம்சங்களிலும் மாறுதல்கள் ஏற்படமுடியும் என்பதையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

♣ உங்களுக்கு ஒரு நண்பரை ( your inner friend ) உருவாக்கிக் கொள்ளுங்கள். அவரை உன்னதமான வராகவும் மேன்மையாவராகவும் வளர்த்துக் கொள்ளுங்கள். அவருடன் உங்கள் மாற்றங்கள் பற்றி மானசீகமாக கலந்துரையாடுங்கள். தாழவுணர்ச்சியைக் கலைத்து விடுங்கள். மேலான உணர்வு கொண்ட தன்நம்பிக்கையாளராக மெல்ல மெல்ல வளர்த்துக் கொள்ளுங்கள். இது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

♣ சுயநம்பிக்கையை வளர்க்கும் ஏராளமான நூல்களும் குறுந்தட்டுக்களும் (CD's) கிடைக்கின்றன. அவற்றை பயன் படுத்துங்கள். தன்நம்பிக்கை மிக்க மனிதரிடம் இடைக்கிடை தொலைபேசியின் ஊடாக வேனும் உரையாடுங்கள். அத்தகைய சம்பாசனைகளின் போது மிக வெளிப்படையாக இருங்கள். மகிழ்ச்சியுடன் இணைந்த தன்நம்பிக்கை வளரும். இது உங்களை பாதுகாக்கும் கவசமாகி விடும்.

♣ நல்ல நண்பர்களிடம் உங்கள் பலவீனங்கள் பற்றியும் குறைபாடுகள் பற்றியும் கேட்டறியுங்கள். அவை பற்றி அவருடன் மிக வெளிப்படையாக கலந்துரையாடுங்கள். பின்பு அவற்றை பகுப்பாய்வு செய்து படிப்படியாக குறைத்துக் கொள்ளுங்கள் இது உங்களை வலிமைப்படுத்தும்.

♣ அடிக்கடி உங்கள் பலம் ( Strength ) வெற்றிகள் (Successes ) சாதனைகள் ( Achievements) பற்றி நினைத்து பெருமைப்படுங்கள். இது சுயமான - உள்நோக்கிய பாராட்டுதல்களாக அமையட்டும். இத்தகைய உணர்வுகளும் மகிழ்ச்சியும் உங்களை வல்லாண்மைப் படுத்தும்.

♣ உங்கள் சுயபாதுகாப்பு என்பது பின்வருவன வற்றுடன் இணைந்ததாகும்.

- ⇨ உங்கள் குடும்பம்.
- ⇨ உங்கள் தொழில்
- ⇨ உங்கள் பொழுது போக்குப் பழக்கம.
- ⇨ உங்கள் தொழிலிட சகபாடிகள்.
- ⇨ சுயமுன்னேற்றம் பற்றிய உங்கள் ஆர்வம்.
- ⇨ உங்கள் நிதிநிலை வசதிகள்
- ⇨ உங்கள் வசிப்பிடம் மற்றும் சூழல்
- ⇨ உங்கள் உடல் ஆரோக்கியம்.
- ⇨ உங்கள் நெருங்கிய நண்பர்கள்

இந்த ஒன்பது உயிர்ப்புக்கள் (Nine lives ) தொடர்பாக எப்போதும் ஈடுபாட்டுடனும் நிதானத்துடனும், எச்சரிக்கையுடனும், உண்மையுடனும் வாழப்பழகிக் கொள்ளுங்கள். உங்கள் சுய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு விடும்.

முடிவுரை

ஆசிரயர்கள் ஒவ்வொருவரும் உதவி ஆசிரியராக இளம் வயதில் பாடசாலைகளில் சேர்வதுண்டு. ஆனால் மூன்று, நான்கு தசாப்பத கால வாழ்வின் பின் ஒரு சிரேஷ்ட ஆசிரியராக இளைப்பாறுதல். போதுமானதன்று; அது நிறைவானதுமல்ல.

ஆசிரியத் தொழிலில் நிலைக்குத்தாக காணப்படும் பல்வேறு பதவி உயர்வுகள், நிதிரீதியிலான நன்மைகள், அதிகாரமற்றும் அந்தஸ்து ரீதியிலான மேலுயர்ச்சி என்பவற்றை நிச்சயம் பெற்றுக் கொள்ள வேண்டும். சுய முகாமைத்துவ திறன்களை மேம்படுத்திக் கொள்வதனாலேயே இதனை பெற முடியும்.

நீங்கள் முயன்றால் ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர் போன்றவற்றைப் பெற்று அதிபர் சேவையில் நுளைய முடியும்.

ஆசிரியர் கல்வி தொடர்பான உயர் படிப்புகள், திறன் விருத்திகள் என்பவற்றை பெற்று ஆசிரியர் சேவையில் தரம் 1ம் கட்டத்தை அடைய முடியும்; தேசிய பரீட்சைகளில் பிரதம பரீட்சகராக வரமுடியும். தேசிய பாடத்திட்ட எழுத்தாளர் அணியில் இடம் பெற முடியும்; இத்தகைய தொழிண்மை முன்னேற்றங்களை பெறமுடியும்.

இதைவிட சிறந்த பாட நிபுணராக, பாடநூல்கள், கல்வி நூல்கள் எழுதும் நூல் ஆசிரியராக விரும்பி வரவழைக்கப்படும். சிறப்பு பேச்சாளராக உங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.

இவை எல்லாவற்றையும் வழங்கக் கூடிய இயலுமையை தரவல்லது. சுயமுகாமைத்துவ தேர்ச்சிகள் என்பதை ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் புறம்பாக பள்ளியில் நிதானமான நல்ல ஆசிரியராகவும் குடும்பத்தில் பிள்ளைகளை முன்னேற்றும் நல்ல தந்தை அல்லது தாயாகவும், நலல் கணவனாகவும், மனைவியாகவும் சமூக சீராளனாகவும் திகழ்வது முக்கியமானது. இது ஆசிரியத்தொழிலில் இருப்போருக்கு மிகவும் எளிதானதாகும்.

இவற்றை புரிந்து கொண்டு உங்கள் விழிப்புணர்வை உயர்த்தி உயர்ந்த தன்நம்பிக்கையுடன் சிறந்த சுய முகாமையாளர்களாக ஒவ்வொரு ஆசிரியரும் மாறவேண்டும். ஒவ்வொரு ஆசிரியனும் குதூகலமான வாழ்வு தரும் வகையில் முன்னேறுவதற்கு சுய முகாமைத்துவ தேர்ச்சியை பயன்படுத்தும் போதுதான் ஆசிரியத் தொழில் நிறைவான தொழில் வண்மையாகத் திகழும்.

# The Place of Literature in Learning



**MR. V. SIVARAJASINGAM**

*(Retired Assistant Commissioner of Official Languages Department)*

*Education is intellectual and moral training. Acquisition of Knowledge by way of learning is one aspect of education. According to Spencer Education has for its object the formation of character. In the words of sir.Pon.Ramanathan "Education is the training of boys and girls to lofty ideals of character". What is meant by lofty characters? The instruments of knowledge namely in five senses and the mind, tend to deviate, owing to evil associations, form the right path of life and duty divined by sages. If we could save them from such deviation and keep them in the noble path designed by sanctified sages then we are said to possess lofty character.*

*In the process of learning, the mind of the learner sometimes becomes exhausted and weary. In order to relieve the learner from weariness and apathy, the educational material may be presented with the ingredient of entertainment. This entertainment assumes the form of Literature. Any form of utterance that elevates and exhilarates the mind and feelings and evokes pleasure may be said to be Literature. Literature is the essence and squint-essence of thoughts and ideas of noble minds and intellectual luminaries. These soul stirring thoughts and lofty sentiments are enshrined in book. It is through the reading of books that we can approach these supernatural souls.*

*Form the time books began to be published we started reading. The reading materials contained in the books we come across are of a variegated order. Not all books attract our attention. What attracts us most is the type that suits our taste. Even though what we read does not concern our personal literary tastes, it mostly affects us directly.. Infact it sometimes affects the whole of what we are. This can be seen if we examine conscientiously the reading of our adolescent period we will be able to observe that we had been attracted by the works of a particular writer. For example the writer of this essay was completely carried away by the writings of Thomas Hardy and the poems of John keats. This was due not because our sensitivity was keener in adolescent period but because the underdeveloped personality of the reader had been invaded by stronger personality of the poet or the novelist. Initially one author takes possession of the reader's mind for a time; then another author invades the reader's mind. in this manner several authors get*

hold of the reader's mind in due course and finally we see certain Qualities of the first author to be to be absent in another author. We begin to weigh and consider the authors in the light of the presence or absence of the Qualities. Thus we become critical. This critical sensibility urges us to read more to find more different thoughts. It is our growing critical power that urges us to read more widely.

What ever books we read they have an impact on our minds. The books that we read affect our behaviour towards our fellow men, affects our patterns of life. When we read in fiction of characters or personalities behaving in certain ways we can be influenced to behave in the same way. Now as we gradually grow up and read more and more and read a great variety of authors we get multifarious views of life.

In our reading there are mainly two levels, the higher and the lower levels; the serious reading and the light reading. It's commonly assumed that we gain the experience of the other people's lives only by improved or advanced reading. This experience we get when we apply ourselves to writers like Shakespeare and Milton, Dante and Goethe Emerson and Carlyle and other eminent writers. The rest of our reading is for amusement or purely for pleasure. For reading for amusement or for pleasure we commonly collect books from contemporary literature. But it is disheartening to note that greater part of contemporary literature is spurious and profligate. Most of the writings belonging to the contemporary period seem to have no regard for moral values of the traditional literature or at least they are of the opinion that the moral and literacy standard sustained in the writing of our forefathers are anachronistic if not insipid and inconsistent. No complaint is hereby lodged against contemporary writers. Only regret is registered regarding some modern writing which seem to repudiate the most fundamental and essential beliefs regarding humanitarianism.

In the reading of books we must realize what we like is different from what we ought to like. If what we read is to be of some moral value, then we should read not what our taste persuades us to read, but what is needed to attain standard values that would make our life sublime. Biographies of great personalities would make ideal reading. Experiences contained in them provide enough food for thought. Almost inconsciously we begin to emulate their lives

"Live of great men all remind us

We can make our life sublime"

-The psalm of life

# மாணவர்களின் சுயகற்றற்றிறன் விருத்தியில் பாடசாலை நூலகம்



**திருமதி. இரஞ்சிதமலர் அருளானந்தன்**
B.A, Dip.in.Education,
Dip.in.Lib.Sc,
M.Phil.in.Education.

கல்வி என்பது அறிவை உபயோகிக்கும் கலையைப் பெறுவதாகும். ஒழுங்குபடுத்தப்பட்டதும் திட்டமிடப் பட்டதுமான முறையில் அறிவைப் பெற்றுக் கொள்வது கல்வியாகும். உடல், அறிவு, உணர்வு ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைத்து முழுவளர்ச்சி பெறச் செய்வதே கல்வியின் நோக்கமாகும். மனிதனது சகலவிதமான பூரண வளர்ச்சிக்கும் அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாக அமைகிறது. அறிவும் ஞானமும் இணையுமிடத்து மனிதனிடத்தில் ஒரு பூரணத்துவத்தைக் காணமுடிகின்றது. அறிவு, திறன், நடத்தை இம் மூன்றும் ஒருங்கு சேர்த்து இயங்கும் போது தனிமனிதன் ஆளுமையை வளர்த்துத் தனக்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நற்குடிமகனாகின்றான்.

எந்த ஒரு நாட்டிலும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் பாடசாலைகளே முக்கிய பங்கு வகிக்கின்றன. வெறும் ஏட்டுக் கல்வியால் அன்றி சுயகல்வியால் தான் இப்பணி முழுமை பெறமுடியும் என்பது உணரப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியின் கற்றல்- கற்பித்தலில் 'அறிதல்' சிறப்புற அமைவதற்கு சுயகற்றற் சூழலை உருவாக்கும் தளமாகப் பாடசாலை நூலகங்கள் அமைகின்றன.

### பாடசாலை நூலக வரலாறு.

இலங்கையில் பாடசாலை நூலகங்களின் வரவாறு அமெரிக்க மிஷன், மெதடிஸ்த மிஷன்களின் பாடசாலைக் கல்விமுறை வளர்ச்சியோடு இணைந்தே காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மத்திய பாடசாலைகள், தருமவிடுதிப் பாடசாலைகள், வட்டுக்கோட்டை செமினரி ஆகியனவற்றில் கல்வியைப் போன்று நூலகவசதியும் இலவசமாக வழங்கப்பட்டது.

கல்வி கற்பது மனிதனின் ஜனநாயக உரிமை என்ற கருத்து வலுப்பெற்று வருகின்ற உலகச் சூழலில் இலங்கையில் 1945 ம் ஆண்டு இலவசக்கல்வியும் பின் தாய்மொழி மூலம் கல்வியும் அறிமுகமாகின. காலப்போக்கில் அந்நிய மொழிமூலம் கல்வி என்பது படிப்படியாகக் குறைந்து தாய்மொழி மூலம் கல்வி தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கேற்ற வகையில் புதிய கல்வித்திட்டங்களைக் காலத்திற்குக் காலம் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்துகிறது. அரசுக்கும் கல்விக்கும் இடையே உள்ள தொடர்பு ஒன்றிலொன்று சார்ந்திருப்பதாகும். கல்வி சிறந்த ஆட்சியை உருவாக்கும். சிறந்த ஆட்சிக்கு முறைக்கு அது தரும் கல்வி முறையே குறியீடாகும். 1939 ம் ஆண்டு 31 ம் இலக்க கல்விச் சட்டத்தின் மூலம் மத்திய மகா வித்தியாலயங்களின் அபிவிருத்தியில் பாடசாலை நூலகங்கள் உள்ளடக்கப்பட்டன. இந்த வகையில் யாழ்பாணக் குடாநாட்டில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டன.

1960 இல் இலங்கைப் பாடசாலை வளர்ச்சியில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக நூலகங்கள் தொடர்பான முதலாவது சட்டம் இயற்றப்பட்டது. 1961 இல் அமைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு 1962 இல்

33 தலைப்புக்களில் தனது சிபாரிசுகளை சமர்ப்பித்தது. அத்தலைப்புகளில் 9 வது தலைப்பு பாடசாலை நூல்நிலையங்கள் பற்றியதாகும். 1964 இல் வெளியிடப்பட்ட Proposal For National System Of Education என்ற ஆவணத்தில் நூலகங்கள் பற்றிய பல்வேறு விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

இலங்கைக்கான யுனெஸ்கோவின் நூலக அமைப்பு ஆலோசகராக நூலகவியல் நிபுணர் செல்வி எவிலின்இவான்ஸ் 1967 – 1970 வரை பணிபுரிந்தார். இவர் இலங்கையில், தேசிய நூலகம் அமைக்கவும் பாடசாலை நூலகங்களை புனரமைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதே ஆண்டில் கல்வித் திணைக்களம் சகல மத்திய மகா வித்தியாலயங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையானது நூலகங்களை நிர்வகிப்பதற்கான ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

1969 இல் இலங்கைக்கல்வி நூற்றாண்டினை குறிக்கும் முகமாக இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் பாடசாலை நூலகங்கள் இருக்க வேண்டுமென்ற கருத்து மேலோங்கியது. இக் கல்வி நூற்றாண்டை முன்னிட்டு இலங்கை முழுவதிலும் 100 சுயபாஷா பாடசாலைகளிலிருந்து 200 ஆசிரியர்களைத் தெரிவு செய்து ஐந்து நாள் நூலகப்பயிற்சி தமிழ், சிங்கள மொழி மூலம் நடத்தப்பட்டது. இந்த நூலகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு 100 பாடசாலைகளிலும் கல்வி நூற்றாண்டு நினைவாக நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்கூறிய நூலகப்பயிற்சியை வடமராட்சிப் பாடசாலைகளில் ஒன்றான யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரான திரு.ஆ.இராஜரத்தினம் அவர்களும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1977ல் 700 பாடசாலை நூலகங்கள் இருந்ததாகவும் 1982ல் 3,800 பாடசாலை நூலகங்கள் இருந்ததாகவும் தெரிய வருகிறது. 1999 ல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தில் நூல் நிலையங்களில் மொழி, இலக்கியம் சார்ந்த நூல்களைக் களஞ்சியப்படுத்தல், வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களை கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வகையில் பாடசாலைக் கல்வி விருத்தி பெற வேண்டுமாயின் அறிவுத்தேடலை ஊக்குவிக்கும் நூலகங்கள் பாடசாலைகளில் சிறப்பாக செயற்படுவது அவசியமாகும்.

**பாடசாலை நூலகங்களின் நோக்கம்.**

வாசிப்பு என்பது ஒரு பழக்கம். இது பாடசாலைக்கல்வி, பாடசாலை நூலகம் மூலம் வளர்ச்சியடைவதாகும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். பண்பாட்டுத்தகவல் மையங்களாகவும் மாணவர், ஆசிரியர் ஆள்வளத்தின் அறிவுசார் கற்றலுக்குரிய தகவல் அறிவுக்கூடமாகவும் பாடசாலை நூலகங்கள் செயற்படல் வேண்டும். மாணவர் மட்டத்தில் சுயகற்றல், தேடிக்கற்றல், கற்றலுக்காகக் கற்றல் போன்ற அறிவுச் சீர்மியங்கள் மட்டமான நிலையிலேயே காணப்படுகின்றன. இதனை ஓரளவுக்காவது நிறைவு செய்வதற்கு பாடசாலை நூலகம் துணைசெய்கிறது. வாழ்க்கை நீடித்த கல்விக்குத் தொடர்ந்து கற்றலின் அவசியத்தை வலியுறுத்திப் பாடசாலை நூலகங்கள் மாணவரின் அறிவுத்திறன், செயற்திறன் வளர்ச்சிகளுக்கு முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

தனியார் கல்வி நிலையக் கற்றலிலே இன்றைய மாணவர் அதிகளவு நாட்டம் கொண்டுள்ளனர். அவர்களை நூலகப்பயன்பாட்டிற்கு வழிப்படுத்தி ஆர்வத்தைத் தூண்டுவது ஆசிரியரதும் நூலகரதும் முக்கிய கடமையும் பொறுப்புமாகும். பாடசாலை நூலகத்தின் நூலகர் அறிவின் பக்கம் மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பாரிய பொறுப்புடையவராக இருப்பது அவசியமாகும். “அறிவுச் சாதனங்களைச் சேகரித்தல், ஒழுங்குபடுத்திப் பேணுதல், பயன்பாட்டுக்கு உள்ளாக்குதல், வழிப்படுத்தல் நூலகத்தின் சேவை ” என்றார் அறிஞர் தோமஸ் லண்டோ. இவரின் கூற்றுப்படி நூலகமானது சுயகற்றல் ஆற்றலை முன்னெடுக்கும் களமாக அமைவது சிறப்பாகும்.

**பாடசாலை நூலகத்தின் பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.**

* பாடசாலையிலுள்ள சகல மாணவர்களுக்கும் அவரவர் கல்வித்தரம் அறிவாற்றலுக்கு ஏற்ற வகையில் நூல்களை வழங்குதல்.
* பாடவிதானத்தோடு தொடர்புடைய நூல்களையும் அடிப்படை வாசிப்பிற்கு உதவக்கூடிய நூல்களையும் வழங்குதல்.
* மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்.
* மாணவரின் ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக்க நூல்களை வழங்கி உதவுதல்.
* ஆசிரியர்களுக்கு, கற்பிக்கும் பாடங்களுடன் தொடர்பான நூல்கள், கைநூல்கள், வழிகாட்டிகள் மேலதிக வாசிப்பு நூல்களையும் ஆசிரியத் தொழிலின் விருத்திக்கு உதவும் நூல்களையும் வழங்குதல்.
* பாடத்துறை சார்ந்த விளக்கங்கள், ஆவணங்களை வழங்குவதோடு கட்புல செவிப்புல சாதனங்கள் ரீதியான அறிவு, நயப்பு, இரசனைகளை வளர்க்க உதவுதல்.
* மாணவருக்குத் தேவையான தகவல்களை வழங்குதல், நூல்களின் முக்கிய சிறப்புக் கருத்துக்களை எடுத்துரைத்தல், கலந்துரையாடல், விமர்சன அமர்வுகளை நடாத்துதல்.

**மாணவரும் நூலகமும்.**

பாடசாலை நூலகங்கள் மூலவளங்களின் களமாகவும், படிக்கும் களமாகவும் அமைவதன் மூலம் மாணவரது சுயகற்றல் திறனை மேம்படுத்த வாய்ப்பு உண்டாகும்.

ஆரம்பக்கல்வி முதல் உயர்வகுப்புவரை 6வயது முதல் 19வயது வரை ஒரு பிள்ளையின் இளமைப்பருவத்தில் 13 ஆண்டுகள் பாடசாலையிலேயே செலவிடப்படுகின்றன. இப்பருவத்திலே கற்றலில் ஆர்வம் (Interest to Learn), அறிவைக் கொள்ளப் பழக்குதல் (Coaching), நுண்மதி (Intelligence), நடத்தை (Behaviour), உளப்பாங்கு (Attitude), அறிவாற்றல் திறன் (Intellectual Skills) என்பவற்றை வளர்த்து நெறிப்படுத்துவதற்கு உரமிடுவது பாடசாலை நூலகப்பயன்பாடாகும்.

யுனெஸ்கோவின் நூலவியல் நிபுணர் செல்வி. எவிலின் இவான்ஸ் தமது நூலகங்கள் பற்றிய அவதானிப்பு அறிக்கையிலே "வாசிக்கும் பழக்கம் பாடசாலையிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை நூலகங்கள் நாட்டின் தேசிய கல்விக் கொள்கையில் முதன்மை பெற வேண்டும்" எனவும் கூறியுள்ளார்.

1997 புதிய கல்விச் சீர்திருத்தத்தில், செயற்பாட்டு அறை (Activity Room) அமைப்பில் நூலகத்திற்கு இடம் ஒதுக்குதல் (புத்தகமூலை) காணப்படுகிறது. மற்றும் க.பொ.த உயர்தரத்தில் வரையறுக்கப்பட்ட மூன்று பாடங்களையும் ஓர் உளச்சார்புத் தேர்வையும் பல்கலைக்கழக நுழைவுக்கு மாணவர்கள் எடுக்க வேண்டும். பாடக் குறைப்பானது மாணவர்கள் மேலும் ஆழ்ந்து கற்பதற்கும் வாசிப்புத்திறன்களை வளர்ப்பதற்கும் எனக் காணப்படுகின்றது. (Provision and Improvement of School Libraries) எனவே பாடசாலை நூலகப் பயன்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளமை சுயகற்றலை வழிப்படுத்துவதாகவும் முக்கியப்படுத்துவதாகவும் அமைகிறது.

வரலாற்றுக் காலம் முதலே சுயமுயற்சியின் மூலம் அறிவாற்றலைப் பெற்றுக்கொள்வது மிகவும் உயர்ந்த செயலாக மதிக்கப்பட்டு வந்துள்ளது. நூல்களில் வாசித்த விடயங்களைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதை வாசிப்பதுடன் தொடர்புடைய செயற்பாடாகச் செய்யலாம். குழுக்கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படுமாயின் வாசித்த அறிவு தெளிவு பெற வாய்ப்புண்டு. ஒரு மாணவன் தனது பாடசாலைக் காலத்திலே சுயமாகக் கற்கும் திறனையும், சமூக இயங்கியல் பற்றிய உணர்வினையும் பெற்றுக்கொண்டால் பிற்கால வாழ்க்கையை வழிதவறிச் செல்ல விடாது வளம்படுத்த முடியும்.

**நூலகத்தின் உள்ளீடுகள்.**

பாடசாலை நூலகங்களில் மேலதிக வாசிப்பு, சுயகற்றல் செயற்பாடுகளுக்கு உசாத்துணைப்பிரிவு அவசியமாகும். இப்பிரிவில் மாணவர் பயன்பாட்டிற்கு உரியவை, ஆசிரியர் பயன்பாட்டிற்கு உரியவை, ஆய்வுக்குரியவை என்னும் உள்ளீடுகளுடன் பொது அறிவுக்கான தகவல்களைத் தரும் ஆவணங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**பாடசாலை நூலகத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவை.**

* அகராதிகள்
* கலைக்களஞ்சியங்கள்
* அரச வெளியீடுகள்
* ஆண்டு நூல்கள்
* வழிகாட்டிகள்
* கலைச்சொல் அகராதிகள்
* நூலுருவில் உள்ளவை :-
  - தனிநூல்கள்
  - பருவ இதழ்கள்
  - கையெழுத்துப் பிரதிகள்
  - துண்டுப்பிரசுரங்கள்
  - கைந்நூல்கள்
  - சிறுபிரசுரங்கள்
  - அறிக்கைகள்
* நூலுருவில் அல்லாதவை :-
  - கட்புலசெவிப்புல சாதனங்கள்
  - நுண்படச் சுருள்கள்
  - இசைத்தட்டுக்கள்
  - ஒலி நாடாக்கள்
  - வரைபடங்கள்
  - தேசப்படங்கள்
  - சலனப்படங்கள்
  - புகைப்படங்கள்
  - சுவரொட்டிகள்
  - ஓவியம், சிற்பங்கள்
* சர்வதேச நிறுவன வெளியீடுகள்.

இவற்றுடன் கருமூலம் கொண்டவை, தகவல் தருபவை, புத்துயிர் தருபவை, உயிர்ப்புத் தருபவை, ஆய்வுப்பொருள் கொண்டவை, விளக்கம் தருபவை, தொடக்க நிலையிலுள்ளவை, அறிக்கை நிலையிலுள்ளவை போன்ற வெளியீடுகளும் உள்ளடக்கப்படலாம்.

**நிறைவுரை.**

நவில் தொறும் நூல்நயம், மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு, தாம் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்னும் திருக்குறள் வரிகளும், மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார் என்ற சிறுபஞ்சமூலத்தின் வரிகளும் சுயகற்றலை வலியுறுத்துகின்றன. அறிவு வளர்ச்சிக்கு நூலுணர்வை முன்னெடுக்க வேண்டியது பெரும் பணியாகும். சிந்தனை என்பது மனித இனத்தின் தனித்துவமான உரிமைச் சிறப்பாகும். இதனையே நூலக உணர்வு என்கிறோம். நூலக உணர்வு பாடசாலைக் கல்விக் காலத்திலிருந்து ஆரம்பித்துச் செயற்படும் சுயகற்றல் முயற்சியாகும்.

சிந்திக்கும் ஆற்றல் மிக்க குடிகளை உருவாக்குவதில் நூலகம் அளப்பரிய சேவை செய்கின்றது. சிந்திக்கும் ஆற்றல் மிக்க நற்குடிகள் சுயகற்றல் மூலமே உருவாக்கப்படுகின்றனர். பயனுறுதிமிக்க சமூகக் கட்டமைப்பின் உருவாக்கத்திற்குப் பாடசாலைக் கல்வி முறையில் பாடசாலை நூலக சேவையினையும் அதன் பயன்பாட்டினையும் வளர்த்து அறிவுத்திறன் மிக்க சமூகத்தை எழுச்சி பெறச்செய்வது பாடசாலைகளாகும். இத்தகைய பாடசாலைகளில் "சுயகற்றலை" மேம்படுத்தி, சுயகற்றலுக்கு அடித்தளமிடுவது பாடசாலை நூலகங்களேயாகும்.

**Good Libraries Make Good Schools.**

**துணை நூல்கள்.**


1. கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் ஒரு விளக்கநிலை நோக்கு.
2. இலங்கைப் பாடசாலை நூலகங்கள் - Unesco Report - 1967.
3. கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்.
4. நூலகவியல் - மலர் - 2, இதழ் -3
5. 1997 Reforms in General Education, NEC.
6. Hand book for School Libraries.
7. கல்வி நிறுவன நூலகங்கள்.

# அன்புள்ள மாணவனுக்கு...



திரு.ஐ.சண்முகலிங்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்.

அன்புள்ள மாணவனுக்கு!
ப்ரிய மாணவ
உன் கடிதம் கிடைத்தது
யாவும் வாசித்து மகிழ்ந்தேன்
பெரியதோர் பதவியிலிருப்பதாய்
எழுதி இருந்தாய்
உன் வளர்ச்சியின்
ஏணிப்படிகளாக இருந்த
எங்களையும் நினைவில் கொண்டு
நலம் விசாரித்தாய்

ப்ரிய மாணவ
பள்ளிப்பருவத்திலிருந்தே
உனை நான் அறிவேன்
அறிவிற்கான தேடலும்
அகன்ற பார்வையும்
பெரியோரை - மனிதரை
மதிக்கும்
பண்பும் கொண்டவன் நீ
துடுக்குத்தனம் இருந்தாலும்
துடிப்படக்கி வளர்ந்தவன் நீ
கண்ணியவானாய்
கண்டோரைக் கவரும் இளைஞனாய்
அண்மையில்
எங்கோ உனைக் கண்டதான
மங்கிய நினைவு.

ப்ரிய மாணவனே
உன் வளர்ச்சியில் மகிழ்கிறேன்
உளம் பூரிக்க வாழ்த்துகிறேன்.
அத்தோடு
நான் அடிக்கடி சொல்வதையும்
ஞாபகப் படுத்துகின்றேன்.

ப்ரய மாணவனே
பதவிகள் கண்களை மறைக்கும்
பகட்டுகளை நாடச செய்யம்
வேர்களை மறந்து
உல்லாச கனவுகளை விதைக்கும்
அன்பான மாணவனே!
வேர்களை மறக்காதே
நீ வந்த வழிகளை மறக்காதே
உன் சகோதரர்கள்
பஞ்சத்தாலும் பசியாலும்
துன்பத்திலும் துயரத்திலும்
சிதறித் தவிப்பதை மறக்காதே!

எங்கள் மொழி
எங்கள் நாடு
எங்கள் வளமான பாரம்பரியம்
இவற்றில் காலூன்றி நின்று!
வானத்தை நோக்கிப் பறந்து செல்
மீண்டும்
மீண்டும்
பூமிக்கு வந்து
உன் சகோதரர்களைக் கட்டித்தழுவி
கவலைகளை பகிர்ந்து கொள்
சந்தோஷக் கணங்களில் -
கண்களில் நீர் வரச் சிரி

ப்ரிய மாணவனே
எப்போதும் -
எவ்விடத்தும்
உன்வேர்களை மறந்து விடாதே

அன்புடன் ....
.........................



# க.வீ. மேதையா?

**இமயமென்னாசானின் இம்மியென் மாணாக்கன்.**
**"ஆதங்கன்"- (அவர் இட்ட பெயர்) 1970இல் .**
**வ.அ.தங்கமயில்**
**நில அளவையாளன்.**

ஆன்மா எத்தகைய நித்தியமோ அத்தகைய அறிவு சம்பந்தத்தால் தோன்றும், இலக்கிய இலக்கண தருக்க ஞானம் (இந்திய அறிவு விடயத்தில் தோன்றும் காட்சி , அனுமான, பிரமாண தவறற்ற அறிவு - ஞானம்) நித்தியம். இதை இருவகைப்படுத்துவர். நிருவிகற்பம், சவிகற்பமென. விசேடணமின்றித் தோன்றும் ஞானம் நிர்விகற்பமாயமைய விசேடணத்தோடாய ஞானம் சவிகற்பம் என்ப. பண்டிதர் வீரகத்தி எனின் - அது விசேடனத்தோடு கூடிய ஞானம் - சவிகற்பம் என்பது பிரத்தியட்சப் பிரமாணமா யமைய, அவர் தம் நூல்களை ஆயும் நடுவு மனத்தார்பால் "அனுமிதி ஆராய்ச்சியால் தோன்றும் ஞானம்". அது வன்னியின் வியாப்பியமான புகை உடைத்து இம்மலை எனும் வழி "இம்மலை தீயுடைத்து" எனும் உணர்வுதான்; பண்டித வீரகத்தி ஒருமா மேதை என்பது.

***அவரை இனங்கண்டிருப்பார்களா?***

ஒரு பொருளில் ஸ்தூல, சூக்கும, காரண, மகாகாரண மூல பிரகிருதிகள் இருப்பது போல இலக்கிய இலக்கண தருக்க ஞான உணர்வு எனும் ஐந்தும் பண்டிதர் க.வீ. பால் சமமாக இருந்தமையை இனங்கண்டவர்கள் எத்தனை பேர் என்பது அனுமானிக்க முடியாதவை. இதுவரை முயன்றிலர். யாரும் முயன்றிருப்பின் அவர் தடம் தெரிந்திலர். ஏனெனின் GREAT MINDS AGREE, எனும் தடத்திலர். அதனால் வியந்திருப்பர் ஆயினும் அவர் தடத்தில் நின்று உணர்ந்திலர். ஆக "AGAPE MINDS AGGRESS" ஆகுவர். அபக்குவர் விலகுவர் என்று *96.12.08* ல் அவர் பற்றிய ஆய்வுக்குறிப்புக்களை தொடர இன்று(*13.10.2008*) மழை பெய்கின்றது - அதன் விளைவு

"ஓருலகம் கண்ட ஓர் ஒப்பிலிக்கு ஓதரிய
பாருலகம் காண நாம் பாவெழுதின் - காருலகே
மேதினியில் காட்டும் மழைபொழிந்து, வாணியும்
ஓதிடுவள் தம்மகவை ஓர்ந்து

என்றெழுதியதும் *96.10.20* திற்குத் தள்ளப்பட்டு அன்றைய சிந்தனையுள் நீந்துகின்றேன்.

"நீத்தார்க்கு விண்ணப்பம்" நாலாறு திங்கள்முன்
யாத்தார் கவிதையால்; யாசித்தார்! - ஆத்தாளும்
பூத்தாள், நவராத்திரிப் பூசனையைத் தேவுலகில்
ஏத்தென்றாள் சென்றார் கவீ.

"கண்ணைத்தா அன்றாகில் என்னையெடு" என்றோதல்
பண்ண, நாவாழ் தேவி, பக்தா வந்திங்குன் - எண்ணம்
குறைவற ஓதென்றாள். கூர்மதியால் நீயெம்
இறையெவரும் பண்டிதரா மாறு.

வேலவனே ஔவைக்கு வால்காட்டும் வித்துவமோ
சாலப் பொருந்தாத சாத்திரம்காண் - காலத்தால்
பூத்த தமிழ்வித்வப் பாவல்லோர் இங்குண்டு
கூத்தேன்? "பராக் கென்றார்" கூய்!

இத்தனை வீர மிலக்கணம் தர்க்கமோ
டித்தரையின் **ஏறுநடை வீரகத்தி** - நித்திரையிற்
போனாரோ? நிற்கதியாய்ப் போகுவதோ நற்ற மிழெம்
கோனார்போல் ஏற்று கொடி.

"விட்டகுறை தொட்டகுறை வீரகத்தி புத்திரர்நாம்"
திட்டமுறத் தீந்தமிழின் திட்பநுட்பம் - முட்டறுக்கும்
இந்நூ லிலக்கண மித்தரையி லெம்மிறையின்
செந்நெறியிற் செப்பிற் சுகம்.

ஆனதினால் அன்பர்காள் ஆனமட்டும் நாமவரின்
"மோனத்து ராகம் மனம் கொண்டு" - வானுயர
ஆக்குவோம் காப்போம் அரண் செய் தவர்மொழிபோல்
நீக்கமற ஓருலகின் நின்று.

"சீருறவே யெண்ணங்கள் சீர்திருத்தி மன்னுயிர்போல்
ஓருலகை யுய்ப்போ முணர்ந்து"

என்று நிதர்சனம் காண முனைகுவமாக.

குறிப்பு :- சகலகலா வல்லி மாலை "மூலபாடம் - ஓர் அலசல் (திருகாளிதாசன்[கவீ ]) என்பதை 10.10.96 இல் மறைந்த அறிஞர் க.வீரகத்தி அவர்களை வணங்கி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது என சென்னை "புலமை" Vol 22 - December 1996 N: யினை வெளியீடு செய்தது எனின் அவர்தம் தகைமையை உணர்ந்தும் உளர் போலும்.



# அன்னையின் அற்புதக் கீதம்

சி.வே.ஞானசம்பந்தன்.
BA(Hons)

வாழ்க்கைப் பயணத்தில் பள்ளி வாழ்வு என்றும் பசுமையானது; இனிமையானது; அழகானது; சுவாரசியமானது; அற்புதமானது; எண்ணுந்தோறும் இன்பம் பயப்பது; என்றோ பழகிய இனிய முகங்களை எண்ணிப் பார்க்கிறேன். அசாத்தியங்களைச் சாத்தியமாக்கும் ஆசான்களை நினைவு கூர்கின்றேன். என் நண்பர்களுடன் இணைந்து ஓங்கி ஒலி எழுப்பும் இனிய கீதத்தை மீட்டிப்பார்க்கிறேன்.

பாடசாலைக் கீதம் பாடசாலையின் கலாசாரத்தை எடுத்தியம்புவது: மிகுந்த மரியாதைக்குரியது. பாடசாலை மீது பற்றையும் மதிப்பையும் உண்டுபண்ணுவது. செவியில் பாய்ந்து தேன் பாய்ச்சுவது.

எமது பாடசாலைக் கீதத்தை இயற்றியவர் பண்டிதர் க. வீரகத்தி. இவரின் ஆளுமை பல தளங்களைக் கொண்டது. இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த பரிச்சயம் உடையவர். பல நூல்கட்கு உரை எழுதியவர். நூற்பதிப்புத் துறையில் ஈடுபட்டவர். பத்திரிகைப் பணியில் ஈடுபட்டவர். பல நூல்களை எழுதியவர். கவிதா ஆற்றல் மிக்கவர். எல்லாவற்றுக்கும் மேலாக வித்தை வழங்கும் ஆசிரியப்பணியில் இருந்தவர். கனதியான மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர்.

இப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளை இப் பாடசாலை அன்னைக்கு வாழ்த்துக் கூறி அன்புப்பரிசாக இப்பாமாலையைச் சூட்டினார்.

இக் கீதம், கீர்த்தனையைப் போன்று பல்லவி- அனுபல்லவி- சரணம் என்ற அமைப்பைக் கொண்டது. இப் பாடலில் பொருளினை வார்த்தைக் கோலங்களால் முழுமையாகக் கூறிவிட முடியாது.

முதல்நிலை

வாழ்க வாழ்க வாழ்கவே - எங்கள் கலைக்
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே

பல்லவி : கலைக்கூடமாகிய நாம் கல்வி கற்கும் வித்தியாலயம் என்றென்றும் சிறந்து வாழ்க.

நடுநிலை

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்றுக் குருகுலபீடம்

அனுபல்லவி : உவமையில்லாக் கலையின் ஊற்றாக அமைந்து குருகுல பீடமாக, நெல்லியடியின் மத்தியில் அமைந்து மத்திய மகா வித்தியாலயமாக மிளிர்கின்றது.

*சரணங்கள்:*

1. கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கணல்தெறித்து வீறுகொள்ளும் ஆண்மையோங்கு நெஞ்சமும்
எண்ணில்லாத இலட்சியங்கள் சூழுமிதய வேகமும்
விண்முகட்டிற் பாயவைக்கும் விந்தையறிவு நிலையமாய்

*அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற வசீகரமான, கவர்ச்சியான பார்வை, அனல் சிந்தும் வீறுகொண்ட ஆளும் தன்மை கொண்டு ஓங்கி நிற்கும் நெஞ்சம், அளவற்ற உயர் இலட்சியங்களை சுமந்து நிற்கும் இதயம் என்பவற்றுடன் ஆகாய முகடு வரை செல்லக் கூடியதான விந்தை அறிவினையும் ஊட்டும் நிலையமாகத் திகழ்கின்றது.*

2. இன்பவாழ்வு பூக்கும்வண்ணம் இனியகலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரியபண்பு நெறிகளும்
ஆக்கிஎம்மில் ஆற்றலேற்றும் அறிவு நீர்வீழ்ச்சியாய்

*இனிய வாழ்வு பூத்துக் குலுங்கும் வண்ணம், இனிய கலை, மேலான ஞானம் - என்றும் எங்கும் உண்மையினையே நாடிச்செல்லும் மெய்ஞ்ஞானம் என்பவற்றைத்தந்து, அன்பின் வழி வெற்றியைப் பெறும், உயரிய பண்பட்ட மார்க்கங்களை எமக்குக் காட்டி எம்மை மிக்க ஆற்றல் உள்ளவர்களாக உருவாக்கும் அறிவாகிய நீர் வீழ்ச்சியாக உயர்ந்து நிற்கின்றது.*

3. கல்விப்பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெள்ளமெள்ளச் சொரிந்து நிற்கும் மேன்மைமிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரியல் வாழும்செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சிகாண அருள்வழங்கும் வாணியாய்

*கல்வியாகிய பண்ணையினை உயர்வடையச் செய்ய நாளும் களை நீக்கி அறிவாகிய நீரை மெல்ல மெல்லச் சொரிந்து, என்றும் உழைக்கும் மேன்மை மிக்க ஆசான்கள், செல்வம் என்றும் போற்றும் எங்கள் உயிருடன் கலந்து வாழும் செந்தமிழின் முட்டறுத்து- சிறப்புற்று ஓங்கி அருளைப் பொழிகின்ற வாணியாகத் திகழ்கின்றாள்.*

4. என்றும் உரியர் பிறர்க்கு என்ற இனியகொள்கை அழகிலே
அன்புநெறியிற் பணிகள் ஆற்றி அருமைத்தமிழின் நிழலிலே
தென்புபெற்றுத் தெய்வஒளியில் திசைகடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய்

*பிறர்மீதுள்ள அன்பின் காரணமாக உடலையே ஈந்து உதவும் இனிய தமிழர்களின் கொள்கையில், அன்பின் வழியாக நிறைந்த பணியாற்றி அருமைமிக்க தமிழின் நிழலில், வலிமை பெற்று தெய்வ ஒளியின் திசைகள் கடந்து நிற்கும் புகழில், இன்பத்தைக் காட்டும் இனிய வாழ்வினை வழங்கும் இணையில்லாத அமைதியைத் தரும் நிலையமாக ஓங்கிநிற்கின்றது.*

5. வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கமென்று வாகைசூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன்பாதம் சூடுவோம்
அத்தம் கருணை வெள்ளம்மூழ்கி அமரகீதம் பாடுவோம்

*முயற்சியை எப்போதும் கைவிடாது உறுதியுடன் வாழ்வில் முன்னேறுவோம். இவ்வுலக வாழ்வினை மிகச் சிறப்புடன் அமைத்து சொர்க்க பூமியாக்கி வெற்றிக் களிப்படைவோம். "இறைவனே எம்மை எப்பொழுதும் காப்பாற்றுவீராக" என இறைஞ்சி இறைவன் பாதங்களைப் பணிந்து நிற்போம். அவ் இறைவனின் கருணையாகிய வெள்ளத்தில் மூழ்கி அவன் புகழ் கூறும் பாடல்களைப் பாடுவோம்.*

மேற்கூறிய அர்த்தங்களைத் தாண்டியும் பல அர்த்தப்பாடுகளை இக் கீதம் எடுத்தியம்புகின்றது. கீதம் நயக்கும் தோறும் அவை மேற்கிளம்பும்.

விந்தை அறிவு நிலையமாய், அறிவு நீர்வீழ்ச்சியாய், அருள் வழங்கும் வாணியாய், இணையில் சாந்தி நிலையமாய் கல்லூரி அன்னையைக் காண்கின்றோம்.

"சாந்தி நிலையம்", "என்பும் உரியம் பிறர்க்கு" எனும் தொடர்கள் ஆழ்ந்த பொருளை உடையது. கடைசி சரணத்தில் மனித வர்க்கத்துக்கே உரியவாழ்வியலைக் கூறியுள்ளார்.

"கல்விப் பண்ணை வளர நாளும்....." எனத் தொடங்கும் மூன்றாவது சரணத்தின் இரண்டாவது அடி, "மெள்ள மெள்ளச் சொரிந்து நிற்கும்..." என அமைந்துள்ளது. அங்கு "மெள்ள மெள்ள" என்ற தொடர் இலக்கியத்தில் பயின்று வருவதாக இருப்பினும் இப் பாடலில் இந்த இடத்தில் "மெல்ல மெல்ல" என அமைவதே சாலப் பொருத்தமெனக் கருதுகின்றேன். பாடலாசிரியர் "மெல்ல மெல்ல" என்ற சொற்றொடரையே கையாண்டிருக்க வேண்டும். இன்று அது "மெள்ள மெள்ள" என மாற்றம் அடைந்திருக்கலாம். ஆனால் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் இது பயின்று வருவது என்பதும் குறிப்பிடத்தக்கது. இக் கீதம் நீண்ட தன்மையது என்ற கருத்திருப்பினும் அனைத்து வரிகளும் அற்புதமானவை.

இனி, இப் பாடலில் இசை பற்றி நோக்குவோம். இக்கீதத்துக்கு இசையமைத்தவர் பற்றி முயன்றும் அறியமுடியவில்லை.

இராகம் : சம்கரந்தனப்பிரியா.

தாளம் : திஸ்ர லகு.

இந்த இராகத்தின் தாய் இராகம் 22 வது மேள எண்ணைக் கொண்ட கரஹரப் பிரியா.
இந்த இராகத்தின்,
ஆரோகணம் - ஸ ரி க ப த ஸ்
அவரோகணம் - ஸ் த ப க ரி ஸ
சுரஸ்தானங்கள் :
ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

இதுவொரு பாஷாங்க இராகமாகும். அன்னியஸ்வரமாகிய அந்தரகாந்தாரம் இங்கு ஐந்து இடங்களில் ஒலிக்கின்றது.

"கனல் தெறித்து", "என்றும் எங்கும்", "மெள்ள மெள்ள", "அன்பு நெறியில்","வையவாழ்வு". எனும் இடங்களில் அந்தரகாந்தாரம் ஒலிக்கின்றது.

ஒருவித வீர உணர்ச்சிகொண்ட இராகம் மனவுறுதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் இராகம். மிகப்பொருத்தமான இராகத்தில் இக் கீதம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திஸ்ரலகு - தகிட, தகிட என அமையும். இது பாடலில் விறுவிறுப்பை ஏற்படுத்தும்.

இராகம், தாளம், பாவம் மூன்றும் இணைகின்ற பொழுது அங்கு ஓர் கலை பிறக்கின்றது. மாணவர்கள், கீதத்தின் பொருள் உணர்ந்து இராகத்துடன் கலந்து இசைவுபட இசைக்க வேண்டும். பாடசாலைக் கீதத்தின் முழுஅர்த்தப்பாடுகளையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள். இந்த அடிப்படையில், சரியாக கீதத்தை இசைப்பதற்கு கீழ்வரும் குறிப்பினைத் தருகிறேன். இக் குறிப்பினை தயாரிக்க வழிகாட்டிய எனது நண்பன், பாடசாலையின் பழைய மாணவன் சங்கீதபாட ஆசிரியர் திரு அ. கிருஷ்ணானந்தன் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதனிலை

ஸ்ாஸ் தாத பாத ஸ்ா , // ஸ்ாஸ் ஸ் ஸ்ா
வாழ்க வாழ்க வாழ்க வே எங்கள் க லைக்

தாப தஸ்ா // பதப பதப க்ா ரி ஸ்ா ,//
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ் க வே .

(வாழ்க)

நடுநிலை
பாப த ஸ்ா ரீக் க்கா // ரீக் ரீஸ் ரீ ;, //
நெல்லி யடி மத்ய மகா வித்தி யால யம்.
ரிக்ப் க்ாக் ஸ்ரிக் ஸ்ாஸ் // பதப க்ரீ ஸ்ா;: , //
நிகரி லாத கலையின் ஊற்றுக் குருகு லபீ டம் . .

(வாழ்க)

தா , (தாத) தாத பதப தாத // தாத காக பாப தா, //
கண் விழித்த கமலம் அன்ன கவர்ச்சி பொங்கு பார்வை யும் .

காக பாப தாத ஸ்ாஸ் // பதப க்ாரி ஸ்ாஸ் ஸ்ா , //
கனல் தெறித்து வீறு கொள்ளும் அண்மை யோங்கு நெஞ்ச மும்

பாப தாஸ் ரீக் க்ாக் // ரீக் ரிரிஸ் ரீக் ரீ , //
எண்ணி லாத லட்சி யங்கள் சூழு மிதிய வேக மும்

ரிக்ப் கர்க் ஸ்ரிக் ஸ்ாஸ் // பதப க்க்ரி ஸ்ாஸ் ஸ்ா ,//
விண் மு கட்டிற் பாய வைக்கும் விந்தை யறிவு நிலைய மாய்

(வாழ்க)

இவ்வாறே ஏனைய சரணங்களும் அமையும்.

# மதுரைப் பண்டிதர் சச்சிதானந்த மாமேதை

காலம் இப்பூவுலகில் ஞானிகளையும் மேதைகளையும் பிரசவிக்கின்றது. இந்த ஞானிகளும் மேதைகளும் வளமான உள்ளங்களில் ஞான விதைகளைத் தூவி மறைகின்றனர். அவர்கள் மறையும்போது அவர்கள் விதைத்த விதைகள் முளையிட்டு வேர்விட்டு ஞான விருட்சங்களாக நாடெங்கும் நிழல் பரப்புகின்றன. இவ்வுலகில் இவ்வாண்டில் மறைந்த மதுரைப் பண்டிதர் அமரர்.க.சச்சிதானந்தம் அவர்கள் தமது அறிவினாலும் ஆளுமைத்திறத்தாலும் தமிழ்மொழிமீது கொண்ட அடங்காத பற்றாலும் பன்மொழி வன்மையாலும் வானளாவ உயர்ந்து நிற்கின்றார். பண்டிதர் அவர்கள் கொண்ட பன்மொழிப் புலமை, வான சாஸ்திர வண்மையும் எழுத்தாற்றலும் எளிமையும் கற்றோர் மத்தியில் அவரையோர் ஒப்பற்ற மாமேதையாக உயர்த்தி நிற்கின்றன. எமது கல்லூரியில் அறிவுசார் நிகழ்வுகளில் காலத்திற்குக்காலம் அவராற்றிய பங்களிப்புக்கள் என்றென்றும் நினைவுகூரத்தக்கன.



அந்தவகையில் 2006 ஆம் ஆண்டில் எமது பாடசாலையின் நவோதயவார மொழித்திறன் விருத்தித்தின நிகழ்வில் அவர் எமது மாணவர்கள், ஆசிரியர்களுக்காக ஆற்றிய உரை பெருஞ்சிறப்பு மிக்கதாகும். பண்டிதர் சச்சிதானந்தம் அவர்கள் அமரத்துவமடைவதற்கு சிறிது காலத்துக்கு முன்னர் எமது கல்லூரியில் மொழிவிருத்தி தொடர்பாக ஆற்றிய உரையின் குறிப்பினை தனது கைபட எழுதி எமக்களித்திருந்தார். அதன் உள்ளடக்க உயர்வுகருதியும் பண்டிதர் அவர்களது சொந்தக் கையெழுத்துப் பிரதியினை அப்படியே ஆவணப்படுத்த எமது கல்லூரிச் சமூகம் விரும்பியதன்பேரில் அதனை அப்படியே இங்கு பிரசுரிக்கின்றோம்.

தமிழ் மொழியின் சிறப்புக்களை ஏனைய மொழிகளுடன் ஒப்பிட்டு ஏழு அம்சங்களில் விளக்கியுள்ள அமரர் ஏழாவது சிறப்பில் "பாரதியின் புத்தம்புதிய கலைகள்...." பாடலைத் தொடங்கி முற்றுப்பெறாது முடித்துள்ளமையானது அமரரது விண்ணுலகப் பயணத்தோடு எமது சிந்தனையைத் தொடர வைக்கின்றது.

## மொழி விருந்து

இன்றைய நாள் மொழி விருந்து தினமாகும். அதற்கு பதிலாக நீட்டங்களைப் பேச வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளேன். இதில் மொழி விருந்து என்ற பரந்த ஒரு விடயத்தில் எதை மொழி விருந்தாக எடுத்துப் பேச வேண்டும் என்பது எனக்கு பல விடயப் பரப்புகளில் மனதை அசைய வைக்கிறது. குழந்தைகளின் மொழி விருந்து பற்றிய உரையைப் பரப்பா அல்லது மொழி வாக மொழிகள் எவ்வாறு தம் வளர்ச்சியடைந்தன என்ற மொழியியல் பரப்பா? அன்று மனைவர்கள் கல்வியால் மொழியின் வளர்ச்சியை என்று நினைப்பது கடினமாக இருக்கிறது. அதிலும் பதிலாக நீட்டங்களுக்கு ஏற்பமாகப் பேசுவது மேலும் கடினமாயிருக்கிறது. எனினும் இப்பேச்சை ஒழுங்கமைப்பவர் தமிழ்மொழியின் தனிச் சிறப்பைப் பேசும்படி பணித்தார்கள். அதன்படி அதையே பேசுகின்றேன்.

தமிழ்மொழியின் சிறப்புகளில் தலையாயது:

(1) அது ஒரு செம்மொழி (Classical Language) யாகும். வடமொழி, இலத்தீன், கிரேக்கம், அரேபியம், சீனம் போன்ற செம்மொழிகளில் தமிழும் ஒன்று.

(2) செம்மொழிகளாகிய இலத்தீன், கிரேக்கம், வடமொழி (ஆரியம்) என்பன ஏட்டு வழக்கிலேயே உள்ளன. அவை இன்று பேச்சு வழக்கிலிருந்து அழிந்துபோயின. ஆனால் தமிழோ செம்மொழியாகவும், பேச்சுவழக்கில் உள்ளதாகவும் வழங்கின்றது. அதனால் கன்னித்தமிழ் என்று புகழப்படுகின்றது.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் இருப்பதுபோல்
ஆரியம் போல் உலகவழக்கழிந்தொழிந்து
சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே என்றார் [illegible] சுந்தரனார்.

மூன்றாவது, தமிழ் பல மொழிகள் பிறப்பதற்குத் தாயாக உள்ளது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, கோண்டா, கொண்டு போன்ற பலமொழிகளுக்குத் தாயாக உள்ளது.

கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத்தே உதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும் என்று
மீனாட்சிசுந்தரனார்

நான்காவதாக, தமிழ்மொழி ஒலிமொழி ஃ Phonic language. அதாவது ஒரு எழுத்துக்கு ஒரு ஒலி உச்சரிப்பே உள்ளது. அதனால், ஒலிப்படியே வரிவடிவமாகிய எழுத்தும் உள்ளது. உதாரணமாக எழுத்து என்றால் எ, ழு, த், து என்ற ஒலிகளைக் கொண்டும் எழுதி, எழுதியபடி உச்சரிக்க எழுத்து என்ற சொல் ஒலியாகவுள்ளது. ஆனால், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளை எழுத்து ஒன்று உச்சரிப்பு ஒன்றுமாக இருக்கிறது.

Pieaget என்பதை பியாஜே என்று உச்சரிக்க வேண்டும்.

Buffet என்பதை பியுபே என்று உச்சரிக்க வேண்டும். சில எழுத்துக்கள் உச்சரிக்கப்படுவதில்லை. அவற்றை Silent letters என்று சில எழுத்துக்கள் உச்சரிக்கப்படுவதில்லை.

Psychology - P உச்சரிக்கப்படுவதில்லை.

ஐந்தாவதாக அது அழுத்தம் வைத்துப் பேசாத மொழி Not Accented - ஆங்கிலத்தில் ஒரே எழுத்தும் ஒரே உச்சரிப்பும் உடையவைகள் அழுத்தம் வைப்பதால் வேறுபடும்.

Conduct என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அழுத்த வேறுபாட்டால் வேறுபடும். அதனை எழுத்து கூடும் உச்சரிப்பும் ஒன்றே.

Cónduct நடவடிக்கை Con என்பதை அழுத்திக் கொண்டு, His cónduct is bad என்று சொல்ல வேண்டும். He conducted himself well - என்று கூற

வேண்டும். தமிழில் அவ்வாறு அமைந்த சொற்கள் பெருமை
வேறு சொல்லுடையது
Romeo and Juliet என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்
தைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது
Business என்ற சொல்லுக்கு உரைபெயர்ப்பை
இது ஒரு நின்று அமைக்கும் தொழில் என்று எழுதி
யிருந்தார். அது என்ன அலை இருந்த
அதேபோல என்று சிந்தித்துப் பார்த்தேன்
வியாபாரம் என்பது Business
ஆங்கிலச் சொற்றொடருக்கு என்பதற்கு Business என்று
சொல்ல வேண்டும் இப்படி அமைந்த இருமைகளை
தமிழில் இல்லை.
அதாவது: தமிழ் ஒரு இனியமொழி.
யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம் என்றான் பாரதி. தமிழ் இனிது
என்று கூறுவது எங்கள் மொழியின் மீது கொண்ட
அபிமானத்தால் அல்லது வெறும் பாரம்பரியமாக என
று ஆராய்ந்து பார்க்கவேண்டும். காக்கைக்கும் தன் குஞ்சு
பொன்குஞ்சு என்பார்கள். அதன் ஒவ்வொருவருக்கும் தங்கள்
மொழி இனிய மொழியாகத் தோன்றும். தமிழ் ஆனால்
தமிழ்மொழியின் மொழியமைப்பு ஒலிகள் இலகுவாக
உச்சரிக்கக்கூடிய ஒலியமைப்பைக் கொண்டது
இதை நான் எழுதிய மந்தகாசியம் என்ற
நாவலில் விலாக எழுதியுள்ளேன். அதை இங்கே
விரிவாக இங்கு கூறுகிறேன்.
அதாவது ஒலிக்கக்கூடிய வாயால் ஒலி விடுத்தல்
உறுப்புகள் அமைந்திருக்கின்றன. அதனால்
பேசும்போது நினைக்கும் ஒலிகள் வருகின்றது
ஒரு உயிரெழுத்தோடு மெய்யெழுத்து இணை
க்கும் போது இப்படி Cluster என்று சொல்வார்கள்
அவ்விடத்தில் Strong ஆக ஒன்று உச்சரிக்கும்

மூன்றில் மூன்று மெய்யெழுத்துக்கள் அடுத்தடுத்து இருக்கின்றன
அதன் பின்னர் இரண்டு எனக் கிளவி மெய்யெழுத்துக்கள்
உள்ளன. எனவே 'ப' என்ற உயிரெழுத்துக்கு 5 மெய்யெழு
த்துக்கள் அக்கமும் பக்கமும் உள்ளன. இந்த உச்சரிப்பு
வேறு எ மொழியிலில்லை

ஏழாவது புதிய விஞ்ஞானத் தொழில்நுட்பங்களை எடுத்துக்
கூறக்கூடிய நுண்மொழியாகவுள்ளது
ஒரு காலத்திலே இதை யாரியாமல் மேடைகளில்
கற்றவர் தமிழில் விஞ்ஞானம் வராது என்று கூறினார்
கள். அதையே பாரதி

புத்தம் புதிய கலைகள். பஞ்ச
பூதத்தின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே. அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை. அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும். அந்த
மே



# "சச்சி" எங்கள் சர்வகலாசாலை

வை. க. தவமணிதாசன்.

வைகைக்கு அணிந்துரை வழங்கி
வாழவைத்த வள்ளலே என் கவிதையை
கைவை யாமலே அங்கீகரித்த காளமேகமே
வைகையாக்கவே குளிர்வித்த வாண்மையால்
மெய்யாய் எமை இழந்தது வாய் ஏங்குமிம்
மேதினியில் மீண்டொருக்கால் வாராயோ
ஐயகோ சச்சி எனும் சர்வகலாசாலையல்லவா
சாலையோரமெலாம் நடமாடிச் சாய்ந்ததோ

நெஞ்சில் எங்கள் நினைவுகளைச் சுமந்து
நெடுந்தூரம் கால்நடையாய்ப் பயணிப்பார்
வஞ்சமிலா நின் குமிண்சிரிப்பால் வரிந்து
வாழ்வித்த எம் - பேராசிரியப் பெரியோய்
தஞ்சமென வந்ததுமே தளராது தாங்கி
தருவார்த்தை தந்தருளிய தேவே, திருவே
பஞ்சமோதமிழுக்கு பாருலகியில் நீரில்லா
பாடாகிப் போயிடுமோ வாழ்வீர் எம்நெஞ்சில்.

வெட்டவெளியிலும் பட்டப்பகலிலும்
கொட்டும் மழையிலும் கொடுகும் குளிரிலும்
எட்ட நடக்காது இயல்புநடையோடு
ஏறு நடந்திருக்கும் எழிலை பார்த்தீரா
மட்டரக மனிதர் எள்ளி நகைத்திடினும்
மன்னவனாய் வீதிஉலா வருதல் கண்டீரா
கட்டுக்கடங்காத களிப்பு மிக வோங்கும்
கண்ணில் பல்கலை வேந்தைக் காண்போமா.

இன்மொழி பேசும் எம் பன்மொழிப் புலவ
தன்பிள்ளை போலத் தடவி வளர்த்தாய்
என் மாணவன் என்றிடத் தளராத பெருமை
இதயத்தில் கொண்டதாய் இறுமாப்புமெலழும்
கும்பளையில் நீவிர் துயில் கொண்ட சேதி
நம்பமுடியலையா நல்லாசான் போதித்த
கம்பன் தமிழையும் காதல் தமிழையும்
எம்மில் விதைத்த வித்தகவினோதத் தமிழன்

ஷேக்ஸ்பியர் கூடத் தங்களிடம் தானோ
சிரம்தாழ்த்தி ஆங்கிலத்தை சேவித்தாரோ
வெள்ளை வேட்டிக்குள் விவேகத்தை
வித்தகத்தை விநோதத்தை எவ்வாறு
அள்ளிச் சொருகினை ஐயனே ஆச்சரியம்
மெத்த மிகுமிவ் வேளையில் எங்கள்
வள்ளலை வாழ்வினில் காண்போமாகினும்
வளமாணவர் நெஞ்சினில் வாழ்வீர்காண்

சச்சி ஐயனுக்கோர் குறியீடு நிதமும்
சரித்திரத்தைக் கூறிவரும் சான்று
உச்சி வகிடெடாது தோள்தொட
உருசிவரும் தலைமுடி அழகன்
சலவைக்குப் போகாத சால்வைவேட்டி
சதா வெள்ளைவெளேரெனும் சங்காய்
நிலவை இழந்துவிட்ட நிலம்போல்
நினை இழந்து தவிக்கும் நும்உறவாம்

நீங்கள் போகுமிடமெலாம் நாமும்
நிதமும் பின்தொடர்ந்தோம் தமிழ் மூச்சு
வாங்கும் செந்தமிழ்த் தோப்பல்லவா
வாஞ்சையுடன் பாயிருத்திப் படிப்பிப்பீர்கள்
ஏங்காத் தமிழனாய் தமிழுக்குமாய்
இவ்வுலகுவந்துதித்த இணையிலான்
இறுவையில் தோணிக்கல்லில் கும்பளையில்
அணுகிய போதெல்லாம் ஆட்கொண்டதேவே!

# காரைக்காலம்மையார் அருளிச்செய்த பதிகங்களின் திறனாய்வு

**உ.பிரணவதர்சன்**
மாணவன்,
தரம் : 12 - உயிரியல்.

இன்னிசைப்பா மழையால் பக்தி உலகையும், தமிழ் இலக்கியச் சோலையையும் செழிப்புறச் செய்த மாதரசி ஊனமொன்றறியா ஞான மெய்ப்பூமியில் தோன்றிய புனிதவதியின் பனுவல்கள் பற்றிச் சிந்தித்தல் ஈண்டு நோக்கமாகும்.

***நூலாசிரியரின் அறிமுகம்.***

காவேரி நதிபாயும் சோழ வள நாட்டில் சிறந்து விளங்குவது "காரைக்கால்" எனும் ஒப்பற்ற ஊர். இவ்வூரில் பரமதத்தன் என்ற வணிகப் பெருமகனோடு வாழ்க்கை நடத்தி வந்த புனிதவதி, சிறுபராயம் முதற்கொண்டே சிவபிரான் மீது அன்பு செலுத்தி வந்த அழகிய இளநங்கையாக விளங்கினார். அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட அற்புத நிகழ்ச்சி, அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றிவிட்டது. கணவனாற் கைவிடப்பட்ட பின்னர் தமது இளமையழகு தமக்குத் தேவையற்றவை எனக்கருதிய புனிதவதி முழுமையாக இறைவன்பால் நாட்டம் செலுத்த விரும்பினார். அத்தகைய தமது நோக்கத்திற்கு தமது இளமையழகு பொதிந்த உடல் தடையாக உள்ளதாகக்கருதிய அவர் இறைவனிடம் பேய் வடிவை இரந்து பெற்றார்.

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது, இனி
இவனுக்காக
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதிகழித்து இங்கு
உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு
அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் ............."

எனும் பாடல் இச் செய்தியைச் செம்மையுறச் சொல்லி நிற்கிறது.

காரைக்காலம்மையார் சங்க மருவிய காலத்துப் பிற்பகுதியைச் (கி.பி 6ம் நூற்றாண்டு) சார்ந்தவர். திருக்கோவில்களில் நாயன்மார்களுள் இவர் மட்டுமே அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பவர். திருக்கையிலாய மலையில் இறைவன் திருவுருவத்தையும், திருவாலங்காட்டில் இறைவனின் நர்த்தனத்தையும் காணும் சிறப்பை பெற்றவர். அம்மையாரின் வானிறைந்த நீடு புகழை
"பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்"
என்று சுந்தரர் திருத்தொண்டர் தொகையில் பாடுவார்.

***நூலின் கட்டமைப்பு.***

அம்மையாரின் பாடல்களை அவதானிக்கும் போது ஒருவகை வளர்ச்சிப்போக்கை இனங்காண முடிகின்றது. அவர் முதன் முதற் பாடியதாகக் கொள்ளப்படும் அற்புததிருவந்தாதியில், சங்க மருவிய காலத்தில் பெருவழக்காயிருந்த வெண்பா யாப்புப் பயன்படுத்த பட்டுள்ளது. ஆயினும் கட்டுப்பாடு கொண்டதாக அமைந்து அறநெறி பற்றிய விதிகளையும் விலக்குகளையும் கூறுவதற்காக அக்காலச் சூழலிற் பயன் படுத்தப்பட்ட அவ்வடிவம் தமிழிற் சைவபக்தி இலக்கியத்திற்கு வித்திட்ட காரைக்காலம்மையாராலும், வைணவப்பக்தி இலக்கியத்திற்கும் கால்கோள்லிட்ட முதலாழ்வார் மூவராலும்

தமது பக்தியுணர்வைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. எனினும், பக்தி அனுபவத்தை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு வெண்பா வடிவத்தின் போதாமையை உணர்ந்த அம்மையார் புதியதோர் இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தி பக்தியுணர்வைப் புதிய முறையில் புலப்படுத்த விரும்பினார்.

அதற்காகக் கட்டளைக்கலித்துறையும், வெண்பாவும் கலந்த திருவிரட்டை மணிமாலையை அவர் அறிமுகப்படுத்தினார். மேலும், தமது பக்திப்பெருக்கை விரிவாக உணர்த்தும் முகமாக விருத்தப்பாவினைத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களிற் பயன்படுத்தினார். இருப்பினும், அம்மையாரின் பாடல்களிற் கவிச்சுவை மேலோங்கியிருப்பது அற்புததிருவந்தாதியிலாகும். அம்மையார் தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில் அறிமுகப்படுத்திய விருத்தம் என்ற வடிவமே பின்னாளில் பல்லவர் காலத்து நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் தமது பக்தியுணர்வைப் புலப்படுத்துவதற்காக இசையமைதியோடு பயன்படுத்தப்பட்டது. இவ்விருத்தப்பா சோழர் காலத்தில் திருத்தக்க தேவரால் முதன்முதற்காவியம் (சீவகசிந்தாமணி ) பாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டு, கம்பரின் கை வண்ணத்தில் தனது உயர் எல்லைகளை தொட்டது.

பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களிற் பொதுவாகக் காணத்தகும் ஓர் அம்சம் பதிகங்களின் இறுதியில் இடம் பெறும் திருக்கடைக்காப்பு அல்லது முத்திரைக் கவியாகும். இந்த அம்சம் முதன்முதலிற் காரைக்காலம்மையாரின் பாடல்களிலேயே இடம்பெற்றுள்ளது. “செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே”, “காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற் பேய்தன் பாடல் பத்தும் பாடியாடப் பாவம் நாசமே” என்றும் வருவன அத்தகையன. இத்தகைய திருக்கடைக்காப்பினை முதலாழ்வார் மூவர் திருவந்தாதிகளிற் காண்பதற்கில்லை. இவ்வகையில் அம்மையாரே இவ்வம்சத்திலும் முன்னோடியாக விளங்குகின்றார்.

பன்னிரு திருமுறைகளிலே அம்மையார் மட்டுமே இசைத்தமிழ்ப்பா பாடிய பெருமைக்குரியவர். இவரது பதிகங்கள் பதினோராம் திருமுறையில் வகுக்கப்பட்டுள்ளது. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 22 பாக்களையும், திருவிரட்டை மணிமாலை 20 செய்யுள்களையும், அற்புதத்திருவந்தாதி 101 பனுவல்களையும் கொண்டு விளங்குகின்றது. அம்மையார் இறைவனை இயற்றமிழாலும், இசைத்தமிழாலும் பாடிப்பரவி உள்ளார். பாடல்களில் இந்தாளம், நட்டபாடை ஆகிய பண்களை பயன்படுத்தியுள்ளார். பாடல்களில் ஆடலரசனின் ஆடற்சிறப்பையும், ஈசன் ஆடும் சுடலையின் சிறப்பையும் செதுக்கியுள்ளார். இவ்வகையில் காரைக்காலம்மையாரின் பங்களிப்பு தமிழ் இலக்கிய உலகிற்கும், பக்தி இலக்கிய வரலாற்றுக்கும் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது.

***திருமுறையின் இலக்கியப்போக்கு.***

இலக்கியம் என்பது உணர்ச்சி, கற்பனை, கலைவடிவம் இவற்றை துறந்து விளங்குதலில்லை என்ற கருத்து அம்மையாரின் திருமுறை இலக்கியங்களுக்குப் பொருந்தும். புலவரின் உணர்ச்சியும் மனநிலையும் கலவாமல் எந்த இலக்கியமும் அமைவதில்லை.

காரைக்காலம்மையாரின் பாக்களில் அவர்தம் பெண்மனத்தை இரு இடங்களில் கண்டுகொள்ளலாம். இயல்பாக மகளிருக்குப் பொன்னின் மேல் ஆசை, இவர் கவிதைகளில் அது வெளிப்படுகிறது. இறைவன் பொன்னணிபூணாமல் நஞ்சரவம் சூட்டிக்கொண்டது வேண்டுவதில்லை என்பார்.

“பொன் கண்டாற பூணாதே கோள நாகம் பூண்டானே
என் கண்டாய் நெஞ்சே இனி.” (திரு : இர : 45)

இதே கருத்தை அற்புதத்திருவந்தாதியிலும் கூறியுள்ளார்.

“அரவமொன் றாகத்து நீ நயந்து பூணேல்
பரவித் தொழுதிருந்தோம் பன்னாள்
..........................
பொன்னாரம் மற்றொன்று பூண்.”

இங்கெல்லாம் அம்மையாரின் தன்னுணர்வு மிக்கொளிர்வதைக் காணலாம். காரைக்காலம்மையார் இறைவன் உமையம்மையாருக்குத் தன்னுடலில் ஒரு கூறு கொடுத்தமைக்குரிய காரணம் வினவுவார் போன்று புனைந்த பாடல் கற்பனைச் சிறப்பிற்கு ஒரு காட்டாகும்.

"விருப்பினால் நீ பிரிய இல்லாயோ – வேறா
மஞ்சுபோல் பால் விடையாய் நீ பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள்" (அற் : 94)

அம்மையார் இசைத்தமிழ்ப்புலவர் சிவாலய வழிபாடுகளில் இசைத்தனித்துவம் பெற்று மிளிர்வதையும், இறைவன் இசைக்கருவிகளைத்தாங்கி நிற்பதுவும் இசையின் பெருமையை பறை சாற்றும். அம்மையாரின் பதிக மழையில் இசைப்பாடல் ஒன்று காண்போம்.

"துத்தங்கைக்கிள்ளை விளரி தாரம்.
உழையிளி யோசை பண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்றோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோட்டு மெங்கள்
அப்பனிடந்திரு ஆலங்காடே" (திரு : 10)

அம்மையார் உடலழகை வெறுத்துப் பேய்க் கோலத்தை விரும்பிப்புனைந்தவர். எனினும் இயல்பான நகைச்சுவையுணர்வு கொண்டவராக அவர் திகழ்ந்தார் என்பதை அவர் பாடலில் காணலாம். கற்பனை கலந்த நகைச்சுவை அவர் பாடல்களுக்குச் சுவை சேர்க்கின்றது. சிவபிரான் உலகமெல்லாம் இரந்து பிச்சை வேண்டப்புகும் போது, அவன் தனது பாம்பினை விட்டுச்செல்ல வேண்டும் எனவும் அல்லாவிடின் அச்சத்தினாற் பெண்கள் வந்து பிச்சையிட மாட்டார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

"நீயுலக மெல்லாம் இருப்பினும் நின்னுடைய
தீய அர வொழியச் செல்கண்டாய் – தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடவரவம் மேலாட மிக்கு"

இன்னொரு பாடலில், இறைவன் மீது ஆடுகின்ற அரவம் இருப்பதனால், அன்பர்கள் யாரையும் அது அவனோடு சேரவிடாது. அது மாத்திரமன்றி, அவனது மார்பில் தலையோடுகளாலும், எலும்புகளாலும் அமைந்த மாலை காணப்படுகின்றது. மேலும், எருதிலும் விரும்பி ஏறுகின்றான். அதனால், இறைவனை அன்பால் அடைவது எவ்வாறு என நகைச்சுவையுணர்வுடன் வினவுகிறார்.

"அன்பா லடைவதெவ் வாறுகொல் மேலதோ ராடரவம்
தன்பா லொருவரைச் சாரவொட் டாதது வேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள் கோத்தவை ஆர்த்து வெள்ளை
என்பா யினவு மணிந்தங்கோ ரேறுகந் தேறுவதே."

இவ்வாறு பல்வேறு பாடல்களிலும் நகைச்சுவையுணர்வைக் கற்பனைத் திறனுடன் புலப்படுத்தியுள்ளார். பிற்காலத்தில் அப்பர், சுந்தரர் ஆகியோர் நகைச்சுவையுணர்வு கலந்து பாடுவதற்கு முன்னோடியாக அம்மையாரின் பாடல்கள் அமைந்தன எனலாம்.

**நெஞ்சப் போக்கு.**

இறைவனை நினைத்து உருகி, அவனை அடையப் பெறும் பாக்கியத்தை வேண்டியே அடியார்கள் பாடுவதுண்டு. அவ்வகையில் பாமழை பொழிந்துள்ளார். கொன்றை மலர் மாலையையணிந்த சிவபிரான் திருவடிகளை யன்றிப் பிறிதொன்றையுங் கருதாத ஒரு நெறிய மனமுடையவர் காரைக்காலம்மையார்.

சிவனது குஞ்சித பாதம் காணுதலே வாழ்வின் நோக்கம் என சிந்தையில் தெளிந்தவர். இதை அவரது எழில் கொஞ்சும் பாடலில் காணலாம்.

"ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைந்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கட் கதிர் முடியான் பொங்கொளி சேர்
அங்கையாற் காளாம் அது"

முன்பும் இறைவனின் திருவுருவத்தைத் தாம் காணாமலேயே ஆட்கொள்ளப்பட்டமை பற்றியும், பின்னரும் அவனது திருவுருவத்தைத் தாம் காணும் பாக்கியத்தைப் பெறவில்லை என்பதை தவிப்போடு குறிப்பிடுகின்றார். இறைவனது உருவம் எத்தகையது என்பார்க்குத் தாம் என்ன கூறுவது என்ற தமது தடுமாற்றத்தை எடுத்துரைக்கிறார். இதனை அவரது உருக்கமும், பக்தியும் கவிந்த பாடலில் காணலாம்.

"அன்றும் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ னும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது" (திரு : 61)

சிவபிரானைத் தாம் காணநேரும் போது, அவனைத்தம் கண்கள் நிறைய நோக்கியும், கையாரக் கூப்பியும், சிந்தை முழுவதும் சிந்தித்தும் தாம் மகிழ்வார் எனக்கூறுகின்றார். இதனை அவரது பக்தி மணம் கமழும் பாடலில் காணலாம்.

"கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தா லெண்ணியும் - விண்ணோன்
எரியாடி யென்றென்று மின்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்."

***தத்துவக் கருத்துக்கள்.***

மெய்யியல் வளர்ச்சியின் கனியாய் திகழ்வது சைவசித்தாந்தம். இதில் இறைவனின் இயல்புகளும், மெய்ப்பொருள் உண்மைகளும் விபரிக்கப்பட்டுள்ளதை காணலாம். காரைக்காலம்மையாரின் பதிகங்களில் தத்துவக்கருத்துக்கள் உயிரோட்டமாக இழையோடி உள்ளது. இறைவன் அம்மையப்பராய் விளங்கி உயிர்களுக்கு அருள்வதாய் உரைப்பது சைவசித்தாந்தம். இதனை "தந்தையாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்" என்ற பாடலில் சிவஞான சித்தியாரில் கூறப்பட்டுள்ளது. அம்மையாரின் பாடலிலும் இக்கருத்தை காணலாம்.

"இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் - இறைவனே
எந்தாய் யெனவிரங்கு மெங்கள் மேல் வெந்துயரம்
வந்தா லது மாற்றுவான்."

இறைவன் அட்ட மூர்த்தியாய் உலகெங்கும் ஒன்றாய், வேறாய் உடனாய் வியாபித்திருப்பதை சிவஞானசித்தியார் "உலகெலாம் வேறாய் உடனாய்" என்று தொடங்கும் பாடலில் கூறியுள்ளார். இக்கருத்துக்கள் அம்மையாரின் பாடலில் பொங்கி பிரவாகிப்பதை காணலாம்.

"அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே ..... அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன். (அற் : 20)

இவ்வுலகில் உயிர்களைத் தோற்றுவித்தவன் ஈசன், அவ் உயிர்களினை அருளாட்சி செய்வதும் அவனே, ஈற்றில் அவற்றின் மலபந்தங்களை அறுத்து ஆனந்தப் பெருவாழ்வாகிய முக்தி நெறியை அளிப்பவன் ஈசன் எனும் கருத்தைப் பாடலில் வடித்துள்ளார். இவ் அற்புதத்தை காண்போம்.

"அருளே யுலகெலா மாள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப் பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு."

இறைவன் பல்வேறு வடிவந்தாங்கி உயிர்களுக்கு அருள் புரிகின்றார் இதனை சிவஞானசித்தியார்

"ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்
அன்றிய அவ்வேடம் எல்லாம் அருள் புரி தொழில் என்று ஓரார்
கொன்றது வினையைக்கொன்று கின்ற அக்குணம் ஓரார்."

எனும் பாடலில் அருளி உள்ளார். இதனை அம்மையார் தனது பாடலிலே

"ஏதொக்கும்? ஏதொவ்வாது ஏதாகும் ஏதாகாது
ஏதொக்கும் என்பதை யாரறிவார் - பூதப்பால்
வில்வேட னாகி விசயனோ டேற்ற நாள்
வல் வேடனான வடிவு"

என்ற பாவிலே வடித்துள்ளார்.

அன்பெனும் வலையில் அகப்படும் மாமலை நம் ஈசன் ஒரு சமயம், ஏழு நெடுங்கடலையும் உலை நீராக்கி , உலகில் உள்ள பதார்த்தங்கள் எல்லாவற்றையும் அதனுள் இட்டு ஒரு சமையல் நடந்தது. சமைக்கப்பட்ட அத்தனை பொருளும் எம்பிரான் கைக்கொண்ட பிச்சைப்பாத்திரமான கபாலத்தில் இடப்பட்டது. அத்தனை பொருளும் கபாலத்தில் இடப்பட்டும் அக்கபாலம் நிறையவில்லை. ஆனாலும் தாருகாவன ரிஷிபத்தினிகள் அன்பு மீதூர சிறிது பலி இடக்கபாலம் நிறைந்தது. கற்பனையும் தத்துவமும் நிறைந்த அம்மையின் கவியாற்றலை என்னவென்று சொல்லி புகழ்வது. இத்தகைய அற்புதத்தை உரைத்த அம்மையின் பாடலைக் காண்போம்.

"ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணாதிடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக்கலம்"

உண்மைப்பக்தி இதுவே. அம்மையார் திருவருளால் இந்த பக்தி நமக்குத் தித்திக்கட்டும்.

*நிறைவுரை:*

இன்னும் ஆராய வேண்டியவை பலவிருக்க சுண்டி விடும் தூம் பஞ்சுத்தூள் அனைய யான் எனது சிற்றறிவினால் பதிகநோக்கில் ஆராயப்பட்டவை இவை. ஆசிரியர் அறிமுகம், நூல் கட்டமைப்பு, திருமுறையின் இலக்கியப்போக்கு, நெஞ்சப்போக்கு, தத்துவக்கருத்துக்கள் எனும் தலைப்புகளில் கருத்துக்கள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

*உசாத்துணை நூல்கள்.*


1. சைவசமய விளக்கங்களும் ஆய்வுகளும் - பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம்.
2. மானுடம் பாடாத மகளிர் - கலாநிதி துரைமனோகரன்.
3. இளைய தலைமுறையினருக்கு பன்னிரு திருமுறைகள் திரட்டு - சி. வ இரத்தின சிங்கம்.


- சுபம் -

# உலகமயமாக்கல்

**ப.அருணன்**
*மாணவன்*
13 A1

உலகமயமாக்கல் என்பது நாடுகளின் அரசியல் எல்லைகளைக் கடந்து முதலீடு, நிதி, வர்த்தகம், உழைப்பு போன்றவற்றின் மீது கட்டுப் பாடுகளை நீக்கி உலக நாடுகளை ஒரு சந்தையின் கீழ்க் கொண்டு வருதல் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் சந்தையானது சுயமாக ஒழுங்குபடுத்தப்படும் சந்தையாக காணப்படும். இச்சந்தையானது விரிவாக்கப்பட்டதாக அமைவ தோடு வர்த்தகம், முதலீடு போன்றவற்றை அதிகரித்து உற்பத்தியை விரிவாக்குகின்றது.

உலகமயமாக்கல் என்ற சிந்தனையானது பொருளாதார சிந்தனைக் கோட்பாட்டு அடிப்படை யாக இருப்பதை மறுக்க முடியாது. போட்டிச் சந்தை முறைமையானது பொருளா தாரத்தின் அருமையான வளங்களை வினைத் திறனாக ஒதுக்கீடு செய்து நாடுகளின் வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லும். இதன் அடிப்ப டையில் போட்டிச் சந்தை நெருங்கிய ஓர் சந்தை அமைப்பை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்துவதன் மூலம் அருமையான வளங்களை வினைத் திறமையாக ஒதுக்க முடியும் என்ற வாதம் உலகமயமாக்கலுக்கு அடிப்படையாக அமைந்து ள்ளது. பழைய புதிய பொருளியலாளர்கள் உலக மயமாக்கல் சிந்தனையின் மூலகர்த்தாக் களாக அமைகின்றனர். உலகமயமாக்ககலானது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கு சேர்க்கும் ஓர் செயற்ப்பா டாகும். இது பின்வருமாறு நோக்கப்படலாம்.

- பொருளாதார ரீதியான உலகமயமாக்கல்.
- சமூக கலாச்சாரரீதியான உலகமயமாக்கல்
- அரசியல் ரீதியான உலகமயமாக்கல்.

பொருளாதார உலகமயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினது பொருளா தாரங்களை ஒருங்கிணைக்கும் ஓர் நடவடி க்கையாகும். வர்த்தக கட்டுப்பாடுகளை நீக்குதல், மூலதனம் மற்றும் ஊழிய அசைவிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் போன்ற விடயங்களில் ஏற்படுகின்ற தாராளத் தன்மையை குறிக்கின்றது. அதாவது உலக நாடுகளை ஒரே சந்தையின் கீழ் கொண்டு வரு வதே ஆகும்.

சமூக கலாச்சார உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளின் தனித்துவமான கலாச் சாரம் சமூக அமைப்புக்களை சிதைத்து உலகம் பூராகவும் ஒரு கலாச்சாரம் சமூக அமைப்பை ஏற்படுத்துவதாகும்.

அரசியல் சார்ந்த உலகமயமாக்கல் என்பது அரசியல் ரீதியில் உலக நாடுகளை தனிப் பெரும் ஓர் அரசியல் சிந்தனையின் கீழ் ஒன்றிணை த்தல் ஆகும். அரசியல் ரீதியான சிந்தனை ஒன்றிணைப்பு பொருளாதார சமூக உலகமய மாக்கலிற்கு அடிப்படையாக அமைகின்றது.

இவ் உலகமயமாக்கல் செய்முறையை தூண்டிய காரணியாக பின்வருவன காணப் படுகின்றன.

1. பல்தேசியக் கம்பனிகளின் தோற்றம் - இன்று உலகமயமாக்கலின் வர்த்தக நிறுவனங் களின் செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன. உற்பத்தி சந்தைப்படுத்தல் ஆகிய வற்றின்

பெரும்பாலான பங்கை வகிக்கின்றன.

2. பொருளாதார ஒருங்கிணைப்புகளின் உருவாக்கம்.

   eg:- SARRC, NAFTA, ASEAN

3. Euro நாணயத்தின் தோற்றம் வளர்ச்சியை பல நாடுகள் ஒன்றிணைவின் முக்கியத்துவத்தை உணரச்செய்தல்.

4. நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்பு.

5. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கலப்பு பொருளாதார பின்னடைவுகள் சந்தைப் பொருளாதார செயல் நெறிக்கு கட்டுப்படச் செய்து உலகமயமாக்கலில் இணைகின்றன.

6. மூன்றாம் மண்டல நாடுகளில் அரசின் தலையீடுகள் குறைந்தமை - குறிப்பாக வர்த்தக முதலீடுகள் போன்றவற்றின் அரசின் தலையீடுகள் குறைந்தமை.

7. போட்டிச் சந்தையின் நன்மைகள்

8. உலகவங்கி சர்வதேச நாணயநிதியம், உலக வர்த்தகஅமைப்பு, அபிவிருத்தி அடைந்த நாடுகளில் முகவர் நிறுவனங்கள் என்பவற்றின் கொள்கைகளும் ஏனைய நாடுகள் மீது விதிக்கும் நிபந்தனைகளும் சீர்திருத்தங்களும்.

மேற்கண்ட காரணிகள் உலகமயமாக்கல் செயற்பாட்டிற்கு ஏதுவாக அமைந்தன. இவ் உலகமயமாக்கலால் அபிவிருத்தியடைந்த நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் நன்மையினை அனுபவிக்கின்றன. அந்த வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அனுபவிக்கும் நன்மைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

* பிராந்தியங்கள் கடந்த நிலையிலும் பண்பாட்டு ஒருமைப்பாடு ஒன்று ஏற்படுகின்றது. உதாரணமாக புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் இடையில் T.V, Internet என்பனமூலம் ஓர் ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் அறிந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் குரல் கொடுக்கின்றனர். இங்கே எல்லோரும் தமிழர்கள் என்ற ஒருமைப்பாடு ஏற்படுகிறது. இதைவிட அபிவிருத்தயடைந்த நாடும் பல்வேறு நன்மைகளை அனுபவிக்கின்றது. அதாவது

- நவீன வங்கி முறை அறிமுகப்படுத்தப்பட்டமை
- நவீன தொழில்நுட்பங்களை மூன்றாம் மண்டல நாடுகள் பெற்றுக் கொள்ள முடிதல்.
- நவீன போக்குவரத்து வசதிகளை ஒரு நாடு பெற்றுக் கொள்ள முடிதல்.

* மிகைஉற்பத்திகளை ஏற்றுமதி செய்து வருமானங்களை திரட்டுதல் போன்ற நன்மைகளை அனுபவிக்கின்றன. இவ் உலகமயமாக்கலின் மூலம் மூன்றாம் மண்டல நாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது.

♣ கிடைத்தற்கரிய மூலவளங்களை இழத்தல்
♣ குழந்தைநிலை கைத்தொழில்கள் அழிவடைதல்.
♣ வருமான ஏற்றத்தாழ்வு ஏற்படுத்தியுள்ளது.
♣ தொழில் மற்றும் வருமான பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்படல்.
♣ குற்றச் செயல்களின் பெருக்கம்.
♣ உள்நாட்டு கலாச்சார சீரழிவு.
♣ சூழல் மாசடைதல்.
♣ பாதுகாப்பு இன்மையும் நிச்சயமற்ற தன்மையும்.
♣ வேலையின்மை உழைப்பு சுரண்டல், தங்கியிருக்கும் நிலை, பணவிரயம், பொருளாதாரம் உறுதியற்ற நிலை என்பனவாகும். இத்தகைய சவால்களை எதிர்கொள்ளும் போது பல்வேறு அனுகூலங்களை பெறமுடிகிறது.

* உற்பத்திகளையும் காரணிச் சந்தைகளையும் உலகளாவிய முறையில் ஒருங்கிணைக்கும் செயற்பாடு புதியதொன்றல்ல என்பதுடன் பொருளாதார அபிவிருத்தியில் தவிர்க்க முடியாத

ஒரு பகுதியாகவும் மாறியுள்ளது. வர்த்தக பெருக்கம் - உற்பத்திப் பெருக்கம் - வேலைவாய்ப்பு பெருக்கம்.

* இலங்கையின் வரலாற்றில் பெரும் பகுதியில் இது சர்வதேச வர்த்தக வலைய அமைப்பில் முக்கியமான தொருபங்கினைக் கொண்டிருக் கின்றது.

* உலகளாவிய நுகர்வோர் தளத்தையும், மூலவளத்தயைும் அடைவதற்கு அனுமதிப்பதன் மூலம் உலகமயமாக்கல் நாடுகளுக்கு நன்மையளிக்கிறது. அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பெறலாம்.

* இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாரிய சந்தைகளை அடைவதன் மூலம் உற்பத்திகளில் பொருளாதார அளவுத்திட்ட சிக்கனங்களிலிருந்து அவை இலாபங்களை அடைகின்றன.

* அதிக நவீன தொழில்நுட்ப அறிவையும் கைத்தொழில் அறிவையும் பெறலாம்.

* தரமான பொருட்களை பெறமுடிதல்.

* பூகோளம் கிராமமாக மாறும் போது வளர்முக நாடுகளில் உள்ள பின்தங்கிய சமூக நிலைமைகளை ஒழித்துவிடும்.

- இது செயல்திறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகளை இனம்கண்டு கொள்ளவும் மிகக் கூடியளவு உற்பத்தியாற்றல் மிக்க நடிவடிக் கைகளின் மூலம் பதிலீடு செய்துகொள்ளவும் முடிகிறது.

- வளர்முக நாடுகள் தமது சேமிப்புகளையும் கடன்பெறும் வாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

மேலும் இவ் உலகமயமாக்கலினால் பல்வேறு பிரதிகூலங்களும் ஏற்படுகிறது.

-பொருளாதாரம் ஒன்றிலொன்று தங்கியிரு த்தலும் அதனால் ஏற்படும் பலவீனங்களும் .

* சர்வதேச நிதிச்சந்தைகளின் நிச்சயமற்ற தன்மையினால் ஆபத்துக்களின் அளவு அதிகரிக்கின்றது.

குறைந்த தரமுடைய தொழில்நுட்பத்தை கொண்ட நாடுகள் உலக சந்தையை அடைய முடிதல்.

-பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், தகவல்தொடர்பு என்பவற்றில் அதிகரித்தல் இவை தேசிய பொருளாதாரங்களின் உள்ளார்ந்த விரிவாக்கத்திற்கு தடையாக உள்ளன.

-வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்தல்

-சுதந்திரமான பொருளாதாரக் கொள்கை களை பின்பற்றுவதற்கு அமைய நாடுகளின் நிபந்தனைகள் தடையாக உள்ளன.

-தேசிய அரசின் முக்கியத்துவம் குறைக்கப்படுவது பல்துறைகளின் அரசின் பங்குப் பணிகளை பாதிக்கும்.

உலகமயமாக்கலின் செயன்முறைகள் தனியே மூலதன தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யாது சமூக தேவைகளையும் இணைத்த வகையில் அமைதல் அவசியமானது. பின்தங்கிய பக்கச்சார்பான சமூகமுறைகள் அகற்றப்படுவ துடன் வர்த்தக கொள்கைகளும் மீளமைப்பு செய்யப்படல் வேண்டும். உலக வர்த்தக அமைப்பு ஐரோப்பிய யூனியன் போன்றவற்றின் ஆதரவுடன் வளர்முக நாடுகளினது தொழிலாளர்களையும் அவர்களை பாதுகாக்கும் வகையிலும் உலகவர்த்தக கொள்கைகளை வடிவமைப்பதுடன் ஊடாக இந்த நாடுகள் உலகமயமாக்கலினால் எதிர்கொள்ளும் சவால்களை ஓரளவுக்கேனும் வெற்றி கொள்ள முடியும்.

உசாத்துணை நூல்கள்:-

அபிவிருத்தி பொருளியல் இதழ் 3

பொருளாதார அபிவிருத்தி கொள்கை

( வே.கருணாகரன் பக்கம் 76-80)

# மது விலக்கு.

செல்வராசா மயூரா
மாணவி
தரம் : 9 A

மனிதன் வாழ்வாங்கு வாழுதலை வள்ளுவன் எடுத்தியம்பி உள்ளான். மக்களை மாக்களாக மாற்றும் வல்லமை கொண்டது "மது" எனலாம். அது மனித சிந்தனையை, அவன் பேசும் வார்த்தைகளை,அவனது செயற்பாடுகளை தவறான வழியில் திசை திருப்பக் கூடிய ஆற்றல் மிக்கது.

சமூக சீர்கேடுகளுக்கு முதன்மைக் காரணி மது எனலாம். மதுவை உட்கொள்பவன் தன்னிலையை மறக்கின்றான் தான் எங்கு நிற்கின்றான் என்பதையும் என்ன பேசுகின்றான் என்பதையும் கூட உணரத் தவறுகின்றான். எனவேதான் அவன் மனம் போனபோக்கிலும், வாயில் வந்தபடியும் வார்த்தைகளை பிரயோகம் செய்கின்றான்.

இச்செயலானது அவனுக்கு சமூகத்தில் அகௌரவத்தையும்,அவமானத்தையும் ஏற்படுத்துகிறது.

மதுப்பிரயோகம் உடல் ரீதியாக நோக்கும் போது நரம்புத்தளர்ச்சி போன்ற பாரதூரமான உடலியல் கோளாறுகளை ஏற்படுத்தக் கூடியதாகவே உள்ளது. எனவே நோயை விலைகொடுத்து வாங்குவதாகவே மது பாவனை அமைகிறது.

பொருளாதார ரீதியாக நோக்கும் போது ஒருவனது உழைப்பின் பெரும்பங்கை அது விழுங்கி விடுகிறது. இது அவனது வீட்டுப் பொருளாதார நிலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியதொன்றாகவே உள்ளது.

அண்மையில் அரசினால் வெளியிடப்பட்ட சிகரட் மீதான ஒரு ரூபா விலை அதிகரிப்பு மூலம் இலங்கை அரசுக்கு நூற்றைம்பது கோடி ரூபா வருமானம் கிடைக்கும் எனக்கூறப்பட்டுள்ளது. அவ்வாறு எனில் மது பாவனை மூலம் மக்களின் உழைப்பு எவ்வளவு தூரம் விரயம் செய்யப்படுகிறது என்பதை நாம் உணரக்கூடியதாக உள்ளது.

மதுவின் செயற்ப்பாடானது எமது சுயசிந்தனை ஆற்றல் என்பவற்றை மாற்றக் கூடியவை. என்பதனாலே சர்வதேச விளையாட்டுக்களில் கூட சட்டரீதியாக தடை செய்யப்பட்ட "ஊக்க மருந்துகளை" சில வீரர்களும், வீரங்கனைகளும் உட்கொள்கின்றனர் இது அவர்களுக்கு நரம்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளத்திலே ஆவேசத்தையும் மிருக உணர்வையும் ஏற்படுத்துகின்றது. இதனை உட்க் கொண்டவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்றதும் பின்னர் வைத்திய பரிசோதனைகளின் மூலம் அது கண்டு பிடிக்கப்பட்டதும் அவர்களுக்கு வழங்கப பட்ட பரிசும், கௌரவமும் மீளப் பெறப்படுகின்றது.

எனவே இவ்வாறு பெற்ற கௌரவத்தை இழக்கின்ற சம்பவம் நிகழும் போது போட்டியில் தோற்றுப் போனவர்களை விட இவனே அதிக வேதனையை அனுபவிக்க நேரிடுகிறது.

எனவே தான் குடி குடியைக் கெடுக்கும் என்கிறார்கள். "குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு" என்பார்கள்.

குடி குடியைக் கெடுக்கும் என்று படித்து படித்துச் சொன்னாலும் இந்தக் குடிகாரன் அதனை செவி மடுப்பதாக தெரியவில்லை. குடிகாரனுடைய எக் கருத்துக்களும் ஒரு சபையிலே கருத்தூன்றி செவிமடுக்கப்பட மாட்டாது.

குடியின் கொடுமையை நாம் சமூக மட்டத்தில் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தல் வேண்டும். இதன் மூலம் ஓரளவேனும் குடியைக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கொடிய குடியை மறந்து தம் குடியை மனதில் கொண்டு திருந்தி வரக் கூடியவர்களுக்கு சமூக மட்டத்தில் கௌரவம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

மதுவுக்கென செலவிடும் பணத்தை வங்கிகளின் சேமிப்புக் கணக்குகளில் இடுபவர்க ளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் நோக்குடன் அவர்களுக்கு விசேட வரிச்சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

இத்தனையும் செய்தும் இவன் திருந்தா விட்டால் அவனை இறைவனாலும் காப்பாற்ற முடியாது. இதனால் இக் கேடுகெட்ட மது பாவனை க்கு எதிராக நாம் போர்க்கொடி ஏந்துவோம்.

"குடிபற்ற வாழ்வே நிறைவான செல்வம்"

## Motto

*"Let Knowledge radiate; Culture burgeons"*

## The vision of the college

*"Blossoming as Higher college,*

*to shape a fitting society for the twenty – one century,*

*which combines knowledge, creative skills, personality and human dignity"*

## Mission Statement

*"A unique college, fulfilling at both national and Inter-national levels,*

*the contemporary and future educational needs*

*with efficient field and resourceful facilities,*

*to uphold the happy life of people in vadamaradchi and catchments areas."*

# கல்லூரிக் கீதம்

இராகம் : சம்கரந்தனப்பிரியா தாளம் : திஸ்ரலகு

முதல்நிலை

வாழ்க வாழ்க வாழ்கவே - எங்கள் கலைக்
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே

நடுநிலை

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம்

(வாழ்க)

இறுதிநிலை

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சியொங்கு பார்வையும்
கனல்தெறித்து வீறுகொள்ளும் ஆண்மையோங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழுமிதய வேகமும்
விண்முகட்டிற் பாயவைக்கும் விந்தையறிவு நிலையமாய்

(வாழ்க)

இன்பவாழ்வு பூக்கும்வண்ணம் இனியகலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரியபண்பு நெறிகளும்
ஆக்கியெம்மில் ஆற்றலேற்றும் அறிவு நீர்வீழ்ச்சியாய்

(வாழ்க)

கல்விப்பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெள்ளமெள்ளச் சொரிந்து நிற்கும் மேன்மைமிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சிகாண அருள்வழங்கு வாணியாய்

(வாழ்க)

என்பும் உரியம் பிறர்க்கு என்ற இனியகொள்கை அழகிலே
அன்புநெறியிற் பணிகள் ஆற்றி அருமைத்தமிழின் நிழலிலே
தென்பு பெற்றுத் தெய்வஒளியில் திசைகடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய்

(வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கமென்று வாகைசூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன்பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம்மூழ்கி அமரகீதம் பாடுவோம்

(வாழ்க)

கவீ.

திருப்பிப்பாருங்கள்.




நடராசா ஜெயக்குமார்
தரம் 12 கணிதம்.

முகாமைத்துவத்திலிருந்து கீழ் மட்டம் வரை சகலரும் தேர்ச்சிகளை இற்றைப்படுத்தி *(Up to date)* விருத்திசெய்துகொள்வதற்குரிய கற்றல் அமைப்பாக *(Learning Organization)* பாடசாலையை மாற்றிடவேண்டும்.

– நவீன பாடசாலைக் கல்வி அபிவிருத்தியை நோக்கி –

I.C.T.Unit - J/ Nelliady Madhya Maha Vidyalayam